ஸ்ரீ:

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

திருமங்கையாழ்வார் அருளிச்செய்த

பெரிய திருமொழி.

[நான்காம் ஸம்புடம்.]

ஏழாம் பத்து — திவ்யார்த்ததீபிகை

பெருமாள்கோவில் ப்ரதிவாதிபயங்கரம்

அண்ணங்கராசார்ய ஸ்வாமிகளால்

எல்லார் தமக்கும் இன்பம் பயக்குமாறு

எளிய நடையில் தெளிய எழுதப்பட்ட

"திவ்யார்த்ததீபிகை" என்னும் உரையுடன்,

சென்னை:

M. R. கோவிந்தஸாமி நாயுடுவால்,

மாடல் அச்சுக்கூடத்தில் அச்சிட்டு

வெளியிடப்பட்டது.

ப்ரமோதூத ஸ்ரீ கார்த்திகை மீ

1930

ஸ்ரீ:
ஆழ்வார் திருவடிகளே சரணம்.

பெரிய திருமொழி.

ஏழாம்பத்து—முதல் திருமொழி,

கறவா மடநாகு.

[இதுவும் திருநறையூர்த் திருப்பதிகம்.]

கறவாமடநாகு தன்கன் றுள்ளினாற்போல் *
மறவாதடியேன் உன்னையே யழைக்கின்றேன் *
நறவார்பொழில்சூழ் நறையூர்நின்றநம்பி! *
பிறவாமை யெனைப்பணி எந்தைபிரானே! (க)

நறவு ஆர் பொழில் சூழ்	தேன்மிக்க சோலைகளால் சூழப்பட்ட
நறையூர்	திருநறையூரில்
நின்ற	நித்யவாஸம் பண்ணுகிற
நம்பி	ஸ்வாமிந்!,
கறவா	பால்சுரவாத
மட நாகு	இளம்பசுவை
தன் கன்று	அதுதன்னுடைய கன்றானது
உள்ளினால் போல்	நினைத்துக் கதறுமாபோலே
அடியேன்	அடியேன்
மறவாது	ஓயாமல்
உன்னையே அழைக்கின்றேன்	உன்னையே சொல்லிக் கூப்பிடாநின்றேன்;
எந்தை பிரானே	எனக்குத்தந்தையான பெருமானே!
எனை	என்னை
பிறவாமை	(இனி ஸம்ஸாரத்தில்) பிறவாதபடி
பணி	செய்தருளாய்.

* * *—திருநறையூர்ப் பெருமானே! உன்னை இடைவிடாது அநுபவிப்பதற்கு இடையூறான ஸம்ஸார ஸம்பந்தத்தைக் கழித்தருளாய் என்கிறார். கன்றுக்குட்டியானது தனது தாய்ப்பசு பால் சுரவாவிடில் அதனையே நினைத்துக் கதறுமாபோலே பேறுபெறாத அடியேன் ஓயாது உன்னையே சொல்லிக் கதறுகின்றேன்; இன்னமும் எத்தனைகாலம் மாறிமாறிப் பல பிறப்பும் பிறந்து அநர்த்தப் படுவேன்? பட்டதெல்லாம் போதாதோ? இனி எனக்குப்பிறவி நேராதபடி கடாக்ஷித்தருளாய் என்றாராயிற்று.

பிள்ளையமுதனார் என்னுமாசிரியர் இப்பாட்டின் முதலடிக்குப் பொருள் சொல்லப் புகுந்து, "கறவா மடநாகு—கறவாத மடநாகானது, தன்கன்று உள்ளினாற் போல்—தன் கன்றை நினைக்குமாபோலே" என்று பொருள் சொல்லப் பார்த்து, இவ்வர்த்தம் இரண்டாமடியோடு சேராமையாலும் வேறு வகையாகப்

பொருள் சொல்ல ஸ்புரியாமையாலும் சிறிது வருத்தப்பட்டார்; (நாகானது தன் கன்றை நினைக்குமா போலே என்றால் நாகின் ஸ்தானத்திலே ஆழ்வாரான தம்மையும் கன்றின் ஸ்தானத்திலே எம்பெருமானையும் கொள்ளவேண்டி வருகையாலே இது அஸங்கதமென்று பிடிபட்டார்.) அவ்வளவிலே, பட்டரிடத்தில் பொருள்கேட்ட ஒருவர் அவ்வமுதனார் கோஷ்டியிலே இருக்கக்கண்டு அவரை நோக்கி "இவ்விடத்திற்கு பட்டர் நிர்வஹிப்பது எங்ஙனே?" என்று கேட்க; 'நாகு' என்பதை இரண்டாம் வேற்றுமைத் தொகையாகக் கொண்டு, கறவாமட நாகைத் தன் கன்றுள்ளினாற்போல் என்று பட்டர் நிர்வஹிக்கும்படி என்றாராம். 'நாகுதன்—நாகினுடைய, கன்று—கன்றானது, உள்ளினாற் போல்—தாயையே நினைத்துக் கத்துமா போலே' என்றுரைப்பது முண்டு. நாகு—இளம்பெண்மாடு. பால்சுரவாத பசுவின் ஸ்தானத்திலே அருள்புரியாத எம்பெருமான் கொள்ளப்பட்டான்; கத்துகின்றகன்றின் ஸ்தானத்திலே தம்மைவைத்துக் கொண்டார்.

உன்னை மறப்பதற்கு ஹேதுவான இந்நிலத்தில் பிறந்துவைத்தும் மறவாதே, இயற்கையான அடிமையை உணர்ந்து உன்னையே அழைக்கின்றேனென்பது இரண்டாமடி.

நறவு—தேனுக்கும் வாஸனைக்கும் பெயர். பிறவாமை எனைப்பணி= பிறப்பது என்பதும் (எம்பெருமானை) மறப்பது என்பதும் பரியாயம் போலுமாதலால், இனியொருகாலும் உன் திருவடிகளை நான் மறவாதிருக்கும்படி அருள்புரியவேணுமென்றவாறு. .... (க)

வற்றாமுதுநீரோடு மால்வரையேழும் *
துற்றாக முன்துற்றிய தொல்புகழோனே !*
அற்றேனடியேன் உன்னையே யழைக்கின்றேன் *
பெற்றே னருள்தந்திடு என்எந்தைபிரானே ! (உ)

வற்றா முது நீரோடு	ஒருகாலும் வடியாத கடல்களையும்
மால்	பெரிய
வரை ஏழும்	குலபர்வதங்களேழையும்
முன்	முன்பொருகால்
துற்று ஆக	ஒருகபளமாக
துற்றிய	வாரிவிழுங்கின
தொல் புகழோனே	சாச்வதமான கீர்த்தியையுடையவனே !,
அற்றேன் அடியேன்	உனக்கே உரியேனாய்த் தீர்ந்திருக்கிற அடியேன்
உன்னையே அழைக்கின்றேன்	உன்னையேசொல்லிக் கூப்பிடுகின்றேன்;
பெற்றேன்	இப்படி உன்னையே அழைக்கும்படியான பாக்கியத்தைப் பெற்றேன்;
என் எந்தை பிரானே !—;	
அருள் தந்திடு	கிருபைசெய்தருளவேணும்.

* * *—கீழ்ப்பாட்டில் "மறவாதடியே னுன்னையே அழைக்கின்றேன்" என்றதும் மிகையன்றோ; பிரளய காலத்தில் உலகங்களை யெல்லாம் திருவயிற்றில் வைத்துக் காத்தருளினையே, அப்போது ஆரேனும் கூப்பிட்டோ காத்தரு

ளிற்று? ப்ரஜைகளின் நோயையறிந்து பரிஹரிக்கும் மாதாவைப் போலே நீயே முற்பட்டன்றோ காத்தது. அப்படி உன் பேறாகக் காத்தருள வேண்டியிருந்தும், நானும் உன்னை நோக்கிக் கூப்பாடு போடுவதைக் கண்டாகிலும் இரங்கியருள லாகாதோ? என்கிறார்.

முதலடியில் கடல்களையும் மலைகளையுஞ் சொன்னது மற்றுமுள்ள சராசரங்களெல்லாவற்றிற்கும் உபலக்ஷணமென்க; "மஞ்சாடுவரையேழுங் கடல்களேழும் வானகமும் மண்ணகமும் மற்றுமெல்லாம், எஞ்சாமல் வயிற்றடக்கி ஆலின்மேலோரிளந்தளிரிற் கண்வளர்ந்த வீசன்" என்றாரிறே.

துற்று—கபளம். இத்தனை பிரபஞ்சங்களையும் ஒரே கவளமாக உட்கொண்டானென்கை. "அண்டமெலா முண்டையென்ப ரறியாதார் ஆங்கவை நீ, உண்டருளுங் காலத்தில் ஒரு துற்றுக்கு ஆற்றாவால்" என்றார் ஐயங்கார் திருவரங்கக் கலம்பகத்தில். உண்ட வுலகமெல்லாம் ஒரு கவளத்துக்கும் போதவில்லையாம். தோல்புகழோனே! = இப்படியே பலகாலும் ஆச்ரித ரக்ஷணம் பண்ணிப் பண்ணிப் படைத்தபுகழ் எல்லையற்ற தென்கை. அற்றேன்— வேறொருவர்க்கும் உரியேனாகாதபடி உனக்கே அற்றுத்தீர்ந்தவன் என்றபடி. .... (உ)

தாரேன்பிறர்க்கு உன்னருளென்னிடைவைத்தாய் *
ஆரேனதுவே பருகிக் களிக்கின்றேன் *
காரேய்கடலே மலையே திருக்கோட்டி
யூரே * உகந்தாயை உகந்தடியேனே. (ங)

(திருவுறையூர்ப்பெருமானே!)

உன் அருள்	உனது திருவருளை
என்னிடை	அடியேன்பக்கலிலே
வைத்தாய்	நிலைநிறுத்தினாய்;
	(இனி இவ்வருளை)
பிறர்க்கு	வேறொருவர்க்கும்
தாரேன்	விட்டுக் கொடுக்கக் கடவேனல்லேன்;
கார் எய் கடலே	மேகங்கள் படியப்பெற்ற திருப்பாற்கடலையும்
மலையே	திருமலையையும்

திருக் கோட்டியூரே	திருக்கோட்டியூரையும்
உகந்தாயை	திருவுள்ளமுவந்து இருப்பிடமாகக் கொண்டிருக்கிறவுன்னை
அடியேன் உகந்து	அடியேன் விரும்பி
ஆரேன்	பர்யாப்தி பெறாதவனாகி
அதுவே	அவ்வருளையே
பருகி	அநுபவித்து
களிக் கின்றேன்	ஸந்தோஷப்படுகின்றேன்.

* * *—அடியேனுடைய ப்ரார்த்தனையைத் தலைக்கட்டி யருளாமல் நீ உபேக்ஷிக்குமளவிலும் உன்னையே தொடர்ந்து நான் கூப்பிடும்படியாக இவ்வளவு அருள் என்மேல் செய்து வைத்திருக்கின்றாய்; இப்படிப்பட்ட அருளுக்கு மற்று ஆரேனும் இலக்காக வல்லாருண்டோ? இவ்வருள் பெற்றவன் நானொருவனே யாவன்; இப்படிப்பட்ட அருளை நீ வேறொருவரிடத்தில் செய்வதாயிருந்தாலும் நான் ஸம்மதிக்க மாட்டேன்; உன்னுடைய கிருபையை அநுபவித்து ஒருகாலும்

பர்யாப்தி பெறுதவனாகி மேன்மேலும் அபிநிவேச முடையனாய் அதையே அநுபவித்துச் செருக்குற்று யமாதிகள் தலையிலே அடியிட்டுத் திரியும்படி யானேன் என்கிறார்.

பின்னடிகட்குப் பெரியவாச்சான்பிள்ளை வியாக்கியான ஸ்ரீ ஸூக்தி காண்மின்:-"ஸௌபரி பலவடிவு கொண்டாப்போலே அநேகம் வடிவுகொண்டு அவ்வோவிடங்கள் தோறும் இனி இதுக்கு அவ்வருகில்லை யென்னும்படி வர்த்தியா நின்றான்" என்று. அதாவது— ஸௌபரி என்கிற ஒரு மாமுனிவன் நீர் நிலையிலிருந்து கொண்டு தவம்புரியா நின்றவளவில் அங்கு மீன்க ளெல்லாங்கூடிக் களித்து விளையாடா நின்றமையைக் கண்ணுற்று 'நாமும் இப்படி குடும்ப வாழ்க்கையிற்கூடி நின்று சிற்றின்பம் நுகர்ந்து களிக்கவேணும்' என்று ஆவல்கொண்டு மாந்தாதா என்னும் பிரபுவுக்குப் பலபெண்களிருப்பதாக வுணர்ந்து அவனிடஞ் சென்று தனக்குக் கன்னிகாதானஞ் செய்யுமாறு வேண்ட, அரசன் இவருடைய கிழத்தனத்தையும் குரூபத்தையுங் கண்டு இசையகில்லாமல் 'பெண் கொடுக்க முடியாதென்று நம் வாயாற் சொன்னால் முனிவர் முனிந்து சபித்துவிடக்கூடும்; பெண்களிருப்பிடத்திற்கு இவரை யனுப்புவோம்; இவரைக்கண்டு பெண்கள் காமுற்றார்களாகில் விவாஹம் செய்து கொள்ளட்டும்; இல்லையாகில் அவர்களே மறுத்து விடட்டும்; நம் தலையில் பழிவேண்டா' என்றெண்ணி முனிவரைப் பெண்களிருக்குமிடத்தேற அனுப்ப, முனிவர் அங்குச் செல்லும்போதே தமது தவவலிமையால் திவ்ய ஸுந்தரமான ரூபத்தை யேன்று கொண்டுபோய் அவர்கள் முன்னே நின்றவளவில் அங்கிருந்த ஐம்பது கன்னிகைகளும் 'நானே இவரை மணந்து கொள்வேன், நானே இவரை மணந்து கொள்வேன்' என்று போட்டி போட்டுக்கொண்டு மேல்விழுந்தவாறே முனிவர் அத்தனை பெண்களையும் மணந்து கொள்ள விரும்பித் தமது தவ வலிமையால் ஐம்பது வடிவமெடுத்து அப் பெண்களனைவரையும் விவாஹஞ் செய்துகொண்டு மகிழ்ந்திருந்தா ரென்று இதிஹாஸமுண்டு; அது போலவே எம்பெருமானும் ஆச்ரிதர்களான அஸ்மதாதிகளை அநுபவிப்பதற்காகப் பலபல திவ்யமங்கள விக்ரஹங்களைப் பரிக்ரஹித்துப் பலபல திவ்யதேசங்களிலே ஸந்நிதி பண்ணியிருக்கிறானென்க. முதலடியில், தாரேன் என்றது—தரவொட்டேன் என்றபடி. .... (௫)

புள்வாய்பிளந்த புனிதா! என்றழைக்க *
உள்ளேநின்று என்னுள்ளங்குளிரு மொருவா! *
கள்வா! கடல்மல்லைக்கிடந்த கரும்பே! *
வள்ளாலுன்னை எங்ஙனம்நான் மறக்கேனே? (௬)

புள் வாய் பிளந்த	பகாஸுரனுடைய வாயைக்கிழித்தெறிந்த	என்று அழைக்க	என்று நான் கூப்பிட்ட வளவிலே
புனிதா	பரமபவித்திரனே!	உள்ளே நின்று	என்னுள்ளே பொருந்தி

என் உள்ளம் குளிரும் ஒருவா	என் மனத்தில் தாபம் தணிக்கவல்ல அத்விதீயனே!
கள்வா	ஒருவருமறியாமல் பெருநன்றிகள் செய்பவனே!
கடல்மல்லை கிடந்த கரும்பே	திருக்கடன்மல்லையில் பள்ளிகொண்டிருக்கிற பரமபோக்யனே!
வள்ளால்	உதாரனே!
உன்னை	இப்படிப்பட்டவுன்னை
நான் எங்ஙனம் மறக்கேன்	நான் எப்படிமறப்பேன்? [ஒருநாளும் மறவேன்.]

* * *—'விரோதிகளை நிரஸிப்பதையே ஸ்வபாவமாகக் கொண்டவன் நீ' என்றுணர்ந்தும் திருநாமங்களை நான் வாயாரச் சொல்லவிரும்பிப் 'புள்வாய் பிளந்தபுனிதா!' என்றழைத்தேன்; அவ்வளவிலே நீ என்னுள்ளத்தே வந்து புகுந்து ஸ்தாவரப்ரதிஷ்டையாக நிலைநின்று ஸகலதாபங்களையும் ஆற்றிக் குளிர்ச்சியை யுண்டாக்கினாய் என்கிறார் முன்னடிகளில்.

கிருஷ்ணாவதாரத்தில் கம்ஸனால் கண்ணனைக் கொல்லுமாறு ஏவப்பட்ட அசுரர்களில் பகாஸுரனென்பவன்; கொக்கின் வடிவெடுத்து வந்தவன்; இவன் யமுனைக்கரையில் கண்ணபிரானை விழுங்கிவிட அவனது நெஞ்சில் கண்ணன் நெருப்புப்போல எரிக்கவே, அவன் பொறுக்கமாட்டாமல் கண்ணனை வெளியே உமிழ்ந்து மூக்கால் கொத்த நினைக்கையில் கண்ணன் அவன் வாயலகுகளைத் தனது இருகைகளினாலும் பற்றிக் கிழித்திட்ட வரலாறு அறிக.

புனிதனென்றது பரிசுத்தனென்றபடி. விரோதிகளைக் களைந்தொழிக்க வேண்டில் அதற்கு வேறு யாரையும் ஏவிவிடாமல் தானே கைதொட்டுக் களைந்தமையாகிற பரிசுத்தியை நினைக்கிறது.

[கள்வா!.] பிறர் அறியவொண்ணாதபடி காரியஞ்செய்பவனைக் கள்வனென்பது; எம்பெருமானும் இராப்பட்ட மூட்டையைப் போலே உள்ளே பதிகிடந்து ஸத்தையையிழுத்துக்கொண்டு போருமவனாகையாலே கள்வனெனப்படுகிறான். கச்சிமாநகரில் அட்டபுயகரத்துக்கருகில் திருக்கள்வனூர் என்பது ஒரு திவ்யதேசம்; அவ்விடத்து எம்பெருமானது திருநாமம் கள்வன்; அவனை விளிக்கிறாராகவுமாம்; "உலகமேத்துங் காரகத்தாய்! கார்வானத்துள்ளாய்! கள்வா!" என்பர் திருநெடுந்தாண்டகத்திலும். ஐயங்கார் நூற்றெட்டுத் திருப்பதியந்தாதியில் பேசும் பாசுரங்காண்மின்:—(85.) "பண்டேயுன் தொண்டாம் பழவுயிரை யென்னதென்று, கொண்டேனைக் கள்வனென்று கூறாதே—மண்டலத்தோர், புள்வாய் பிளந்த புயலே! உனைக் கச்சிக், கள்வாவென்றோதுவதென் கண்டு." என்று. (அதாவது) ஒருவர்க்கு உரிய பொருளைத் தன்னதாகக் கொள்வது கள்ளமெனப் படும்; ஆகவே அநாதியாக உனக்கே உரியதாய்க்கிடந்த உயிரை நான் என்னுடையதென்று கொண்டிருக்கிறேனாதலால் என்னைக் கள்வனென்று சொல்லத் தகும்; உலகத்திலுள்ள பொருள்களியாவும் நின்னுடையனவேயாதலால் வெண்

* முமுக்ஷுப்படி—முதல்ப்ரகரணம்.

ணைய் கொள்ளுதல் முதலிய தொழில்களைச்செய்யினும் உன்னைக் கள்வனென்று கூறுதல் தகாது; இவ்வாறு இருக்க, உலகத்தார் இத்தன்மையை ஆய்ந்து அறியாமலே என்னை யானே திருடிக்கொண்ட பெருந்திருடனாகிய என்னைத் கள்வனென்னாமல் ஸர்வஸ்வாமியான உன்னைக் கள்வனென்கின்றனரே, இஃது என்ன பேதைமை! என்று சமத்காரந் தோன்றக் கூறியவாறு.

கடன்மல்லைக் கிடந்தகரும்பே=இப்படிப்பட்ட விளிகள் ஆழ்வார் திருவாக்கில் நின்றுதானே வெளிவரும்; எம்பெருமானை நோக்கி இங்ஙனே விளிக்கவல்லார் மற்று ஆரேனுமுண்டோ? ஆழ்வாருடைய ஹ்ருதயம் பரிபக்குவமாயிருக்கையாலே இப்படிப்பட்ட இன்சொல் வெளிவரப் பெறுகின்றது. "கரும்பே! என்றது-கைதொட்டு நெருக்குதலால் வரும் செவ்வியழிகையின்றிக்கே யிருக்கை" என்பது பெரியவாச்சான்பிள்ளை யருளிச்செயல்.

வள்ளால்—'வள்ளல்' என்பதன் ஈற்றயல் திரிந்தவிளி. ஆச்ரிதர்கட்குத் தன் வடிவை முற்றூட்டாக அநுபவிக்கக் கொடுக்குமவனே! என்கை. மஹோபகாரகனாயிருக்கிறவுன்னை, உன்னாலே உபகாரங் கொண்டிருக்கிற நான் ஒருபடியாலும் மறக்கமுடியாதென்றாராயிற்று. .... (௪)

> வில்லேர் நுதல் வேல்நெடுங்கண்ணியும் நீயும் *
> கல்லார் கடுங்கானம் திரிந்தகளிறே! *
> நல்லாய்! நரநாரணனே! எங்கள்நம்பி! *
> சொல்லாயுன்னை யான்வணங்கித் தொழுமாறே. (௫)

வில் ஏர் நுதல்	வில்போன்ற நெற்றியையும்	நரநாரணனே	நரநாராயணாவதாரம் செய்தருளினவனே!
வேல் நெடு கண்ணியும்	வேல்போன்று நீண்ட கண்களையுமுடையளான பிராட்டியும்	எங்கள் நம்பீ	எங்கள் குறைதீர்க்கவல்ல பரிபூர்ணனே!,
நீயும்	நீயுமாக	உன்னை	இப்படிப்பட்டவுன்னை
கல் ஆர் கடு கானம்	கற்கள் நிறைந்த கொடிய காட்டிலே	யான்	அடியேன்
திரிந்த	ஸஞ்சரித்த	வணங்கி தொழும் ஆறு	திருவடிகளிலேவிழுந்து ஸேவிக்கும்முறைமையை
களிறே	மதயானைபோன்றவனே!,	சொல்லாய்	அருளிச் செய்யவேணும்.
நல்லாய்	ஆச்ரிதவத்ஸலனே!		

* * *—ஸ்ரீராமாவதாரத்தில் பிராட்டியுந் தானுமாகக் கானகமுலாவினபடியைப் பேசுகிறார் முன்னடிகளில். வில்போல் வளைந்த நெற்றியையும் வேல்போற் கூரிய கண்களையுமுடையளாய் உனக்குங் கூட ஆகர்ஷகமான ஸௌகுமார்யத்தை யுடையளான ஸீதாபிராட்டியும், அவள் தானும் தானுக்குத் தானுக்கென்னும்படியான ஸௌகுமார்யத்தையுடைய நீயும் துஷ்ட ஜந்துக்கள் நிறைந்த ஸஞ்சார யோக்யமல்லாத காட்டிலே, ஒரு மதயானை பிடியோடே கூடக் களித்துலாவுமாபோலே உலாவினவனே! என்கை. கீழ்ப்பாட்டில் வள்ளால்! என்ற

ஸம்போதநத்தை விவரிக்கிறது போலும் இது: நித்யஸூரி ஸேவ்யமான திருமேனியை எல்லாப் பிராணிகளும் கண்டு அநுபவிக்குமாறு ஸர்வஸ்வதாநம் பண்ணினவனே! என்றவாறு.

நல்லாய்!=‘நல்லாள்’ என்பதன் ஈறு திரிந்த விளி; ஆச்ரித வத்ஸலனே! என்கை. [நர நாரணனே!.] முன்னொருகாலத்தில் குருசிஷ்யக்ரமத்தை உலகத்தில் அனைவர்க்கும் விளக்குதற் பொருட்டு ஸ்ரீபதரிகாச்ரமத்தில் நரனென்னும் சிஷ்யனும் நாராயணனென்னும் ஆசாரியனுமாகத் திருமால் தானே திருவவதரித்துத் திருமந்திரத்தை வெளியிட்டருளினமை உணர்க. “நர நாரணனாயுலகத்தறநூல் சிங்காமை விரித்தவனெம்பெருமான்” என்பர் மேல் பத்தாம் பத்திலும். “ஸம்ஸாரிகள் தங்களையும் ஈச்வரனையும் மறந்து ஈச்வர கைங்கர்யத்தையு மிழந்து இழந்தோமென்கிற இழவுமின்றிக்கே ஸம்ஸாரமாகிற பெருங்கடலிலே விழுந்து நோவுபட, ஸர்வேச்வரன் தன்க்ருபையாலே இவர்கள் தன்னையறிந்து கரைமரஞ் சேரும்படி தானே சிஷ்யனுமாய் ஆசார்யனுமாய் நின்று திருமந்த்ரத்தை வெளியிட்டருளினன். சிஷ்யனாய் நின்றது சிஷ்யனிருக்கு மிருப்பு நாட்டாரறியாமையாலே அத்தை யறிவிக்கைக்காக.” என்ற முமுக்ஷுப்படி திவ்யஸூக்தியுங் காண்க.

சொல்லாய்=கடற்கரையிலே விபீஷணாழ்வானுக்கும் திருத்தேர்த்தட்டிலே அர்ஜுநனுக்கும் சோதிவாய் திறந்து அருளிச்செய்தது போலே அடியேனுக்கும் ஒன்றருளிச் செய்யவேணுமென்கிறார். .... (௫)

பனியேய் பரங்குன்றின் பவளத்திரளே! *
முனியே! திருமூழிக்களத்து விளக்கே! *
இனியாய் தொண்டரோம் பருகின்னமுதாய
கனியே! * உன்னைக் கண்டுகொண் டுய்ந்தொழிந்தேனே! (௬)

பனி எய்	பனிமிக்கிருந்தன்ன
பரம் குன்றின்	சிறந்த ஹிமவத்பர்வதத்தினன்ன திருப்பிரிதியிலெழுந்தருளியிருக்கிற
பவளம் திரளே	பவளங்கள் திரண்டாற்போன்ற அழகியவனே!
முனியே	(அடியாருடைய நன்மைகளைச்) சிந்திக்குமவனே!
திருமூழிக் களத்து	திருமூழிக்களமென்னும் திருப்பதியில்
விளக்கே	விளக்குப்போல் விளங்குமவனே!
இனியாய்	பரமபோக்யனே!
தொண்டரோம்	தொண்டரான அடியோங்கள்
பருகு	பானம்பண்ணுதற்கு உரிய
இன் அமுது ஆய	இனிய அமுதமானவனே!
கனியே	கனிபோன்றவனே!
உன்னை கண்டு கொண்டு	உன்னை ஸேவித்து
உய்ந் தொழிந்தேன்	உஜ்ஜீவிக்கப்பெற்றேன்.

* * *—பனி மிகுந்திருந்துள்ள இமயமலையில் திருப்பிரிதியென்னுந் திருப்பதியிலே எல்லார்க்கும் விருப்பவுரியனாய்க் கொண்டு ஸந்நிதிபண்ணி யிருக்குமவனே! என்பது முதலடியின் கருத்து. இப்பெரிய திருமொழியில் இரண்டாந் திருப்பதிகத்தில் மங்களாசாஸநஞ் செய்யப்பெற்ற திருப்பதி இது.

முனியே!—மநநம் பண்ணுமவனே! என்கை. இச்சேதநர் அறிந்த போதோடு அறியாதபோதோடு வாசியற எப்போதும் இவர்களுக்கு ஹிதத்தைச் சிந்திக்குமவனே! என்றவாறு.

திருமூழிக்களத்து விளக்கே!—திருமூழிக்களத்திலே வந்து உன்னுடைய ஸ்வரூப ரூபகுணங்களுக்கு நீயே ப்ரகாசகனாய்க் கொண்டு நிற்கிறவனே! என்கை: திருமூழிக்களம்—மலைநாட்டுத் திருப்பதிகள் பதின்மூன்றனுள் ஒன்று; நம்மாழ்வாராலும் போற்றப்பெற்ற தலம்.

இனியாய்!—'இனியான்' என்பதன் ஈறு திரிந்தவிளி. 'இனியாய தொண்டரோம்' என்பது வழங்கிவரும் பாடம்; அது வியாக்கியானத்திற்குச் சேராது. .... (சு)

கதியேலில்லை நின்னருளல்ல தெனக்கு *
நிதியே! திருநீர்மலை நித்திலத்தொத்தே! *
பதியே பரவித்தொழும் தொண்டர்தமக்குக்
கதியே! * உன்னைக்கண்டுகொண் டுய்ந்தொழிந்தேனே. (எ)

நிதியே	நிதிபோன்றவனே!
திருநீர்மலை	திருநீர்மலையி லெழுந்தருளியிருக்கிற
நித்திலம் தொத்தே	முத்துமாலைபோன்றவனே!
எனக்கு	அடியேனுக்கு
நின் அருள் அல்லது	உன்னுடையகிருபையைத் தவிர்த்து
கதி இல்லை	வேறொருபுகல் இல்லை;
பதியே பரவி தொழும் தொண்டர் தமக்கு கதியே	திவ்யதேசங்களையே ஏத்தித்தொழுகின்ற பாகவதர்களுக்குக் கதியானவனே!
உன்னை கண்டுகொண்டு உய்ந்தொழிந்தேன்.—	

* * *—உன்னுடைய திருவருளைத் தவிர்த்து வேறொன்றும் எனக்குப் புகலாவதில்லை; எனக்கு வைத்தமாநிதியும் நீயே; திருநீர்மலை முதலான திருப்பதிகளில் ஸேவை ஸாதிப்பவனும் நீயே; * விண்ணகரம் வெஃகா விரிதிரை நீர் வேங்கடம் மண்ணகரம் மாமாடவேளுக்கை, மண்ணகத்த தென்குடந்தை தேனார் திருவரங்கம் தென்கோட்டி, தண்டியூரரங்கம் பெய்யாப் பச்சிபேர் மல்லை, சீரார் திருவேங்கடமே திருக்கோவலூரே மதிட்கச்சியூரகமே பேரகமே யென்றிப்படி திவ்ய தேசங்களே யாத்திரையாகப் போது போக்கித் திரியும் என்னோடொத்த பக்தர்கட்குக் கதியாயிருக்கும் பெருமானே! உன்னைக் கண்டு கொண்டு உஜ்ஜீவிக்கப் பெற்றேனென்கிறார்.

கதி—[illegible] என்னும் வடசொல் விகாரம். நிதி—[illegible] என்னும் வடசொல் விகாரம். திருநறையூர் நம்பிபக்கல் ஈடுபட்டுப் பேசுகிறவர் திருக்கோட்டியூர் திருமூழிக்களம் திருநீர்மலை முதலிய திருப்பதிகளைப் பேசுவதனால்—அந்தந்தத் திருப்பதிகளின் விருப்பை எம்பெருமான் இவர்க்குக் காட்டித் தந்தருளி ஆச்வஸிப்பிக்கிறனென்பது தோன்றும்.

நித்திலம்—வடமொழியில், 'நிஸ்தலம்' என்கிற சொல் முத்து என்னும் பொருளதாகக் கவிகளால் ப்ரயோகிக்கப் படுகின்றது; "[illegible]—அதிவித்ரும மஸ்த நிஸ்தலாளீருசம்" என்று வரதராஜ ஸ்தவத்திலே கூரத்தாழ்வானும் ப்ரயோகித்தருளினர். அந்த நிஸ்தல மென்னும் வடசொல்லே தமிழில் நித்திலமென்று திரிந்திருப்பதாகக்கொள்க. இது தனியே ஒரு தமிழ்ச்சொல் என்பர் சிலர். "திருநீர் மலையிலே வந்து, முத்து மாலையை உடம்பிலே அள்ளி எறட்டுக் கொள்ளுமாபோலே குளிர உடம்பிலே எறட்டு அணைத்துக் கொள்ளலாம்படி யிருக்கிறவனே!" என்பது பெரியவாச்சான்பிள்ளை வியாக்கியான ஸ்ரீஸூக்தி.

மூன்றாமடியில். 'பதியே!' என்று தனியே ஒரு விளியாகவும் கொண்டு உரைப்பர்; ஆச்ரிதர்க்கு வாஸஸ்தாநமாயுள்ளவனே! என்கை. .... (எ)

அத்தாவரியேயென்று உன்னை யழைக்க *
பித்தாவென்று பேசுகின்றார் பிறரென்னை *
முத்தே! மணிமாணிக்கமே! முளைக்கின்ற
வித்தே! *உன்னை யெங்ஙனம் நான் விடுகேனே? (அ)

அத்தா	ஸ்வாமியே!
அரியே	(விரோதிவர்க்கங்களை) ஹரிக்குமவனே!
என்று	என்று இப்படிப்பட்ட திருநாமங்களைச் சொல்லி
உன்னை அழைக்க	நான் உன்னை அழைக்குமளவில்
பிறர்	அயலார்
என்னை	இப்படி அழைக்கிற என்னைநோக்கி
பித்தா என்று பேசுகின்றார்	'அடா பித்தனே!' என்று சொல்லுகிறார்கள்;
முத்தே	முத்துப்போன்றவனே!
மணி மாணிக்கமே	சிறந்த மாணிக்கம் போன்றவனே!
முளைக்கின்ற வித்தே	முளைக்கின்றவிதைபோலே பயனளிப்பவனே!
உன்னை	இப்படிப்பட்ட வுன்னை
நான்	அடியேன்
எங்ஙனம் விடுகேன்	எவ்விதமாக விட்டொழிவேன்?.

* * *—அடியேன் ப்ராக்ருத ஜனங்களைப்போலே 'உண்டியே உடையே' என்று கூப்பிடுமவனல்லேன்; எப்போதும் பகவத் விஷயத்திலீடுபட்டு 'அத்தா! அரியே!' என்றிப்படி பகவந் நாமங்களைச் சொல்லிக் கூப்பிடுவதே எனக்குப் போது போக்காயிருக்கின்றது. "[illegible]—கிம்பாஜநே க்ராமே ஹாஸ்ய: கௌபீநவாக் நர:" [கோமணங்கட்

டாத வூரில் கோமணங்கட்டுமவன் பைத்தியக்காரன்] என்னும் பழமொழிப் படியே * உண்டியே உடையே உகந்தோடு மிம்மண்டலத்தவர்கட்கு நான் பைத்தியக்காரனாகத் தோற்றுகின்றேன் ; உன்னை நான் அத்தா ! என்றழைத்தவாறே என்னை அவர்கள் பித்தா ! என்றழைக்கின்றனர் ; இப்படிப்பட்ட ப்ராக்ருத ஜனங்களின் பரிஹாஸத்திற்கு அஞ்சி உன்னை விட்டுவிடலாமென்று பார்த்தாலோ, உன்னுடைய போக்யதையில் ஈடுபட்டிருக்குமடியேன் ஒருபடியாலும் விடமாட்டுகின்றிலேனே என் செய்வேனென்கிறார். "பேயரே யெனக்கியாவரும் யானுமோர் பேயனே........அரங்கா வென்றழைக்கின்றேன், பேயனா யொழிந்தே னெம்பிரானுக்கே" என்ற பெருமாள் திருமொழி இங்கே நினைக்கத்தகும்.

அத்தா—அத்தன் என்பதன் விளி ; ஸ்வாமிந் ! என்றபடி. அரி—ஹரி. முளைக்கின்ற வித்தே !—ஜகத்காரண பூதனே ! என்றவாறு. .... (அ)

தூயாய்! சுடர்மாமதிபோல் உயிர்க்கெல்லாம் *
தாயாயளிக்கின்ற தண்டாமரைக் கண்ணா ! *
ஆயா ! அலைநீருலகேழும் முன்னுண்ட
வாயா ! * உன்னையெங்ஙனம் நான்மறக்கேனே? (கூ)

தூயாய்	பரிசுத்தனானவனே !	ஆயா	கோபாலனே !
சுடர்	ஒளிவிடுகின்ற	அலை நீர் உலகு ஏழும்	அலைகடல் சூழ்ந்த ஸப்த லோகங்களையும்
மா மதி போல்	பூர்ணசந்திரன்போலே	முன்	முன்னொருகால்
உயிர்க்கு எல்லாம்	ஸகலப்ராணிகளுக்கும்	உண்ட வாயா	அமுதுசெய்த திருப்பவளத்தை யுடையவனே !
தாய் ஆய் அளிக்கின்ற	தாய்போன்று அருள்புரிகின்ற	உன்னை	இப்படிப்பட்ட வுன்னை
தண் தாமரை கண்ணா	குளிர்ந்த செந்தாமரைப் பூப் போன்ற திருக்கண்களை யுடையவனே !	நான் எங்ஙனம் மறக்கேன்	நான் எப்படிமறப்பேன் ?.

* * *—தூயாய் ! என்று திருவுள்ளத்திலுள்ள பரிசுத்தியைச் சொன்னபடி. அநுகூலர் ப்ரதிகூலர் என்னும் வாசிபாராதே எல்லார் திறத்திலும் நன்மையையே சிந்திக்கையாகிற திருவுள்ளத் தூய்மையை யுடையவனே ! என்றபடி. இப்படியாகில், கம்ஸ சிசுபால ராவணாதிகளைக் கொன்றது ஏனென்னில்; விளக்கிலே விட்டில் பூச்சிகள் விழுந்து முடியுமாபோலே அவர்கள் விழுந்து மாண்டுபோனவளவால் எம்பெருமானது திருவுள்ளத்தூய்மைக்கு ஒரு குறையுண்டோ? அவர்களும் அடிபணிந்து வாழ்ந்து போகவேணு மென்று இவன்தான் செய்த க்ருஷிகளுக்கு எல்லையில்லையே.

[சுடர்மாமதிபோல் இத்யாதி.] பூர்ண சந்திரன் ஸகலதாபங்களையும் தணிக்குமாபோலே ஸகல ப்ராணிகள் விஷயத்திலும் தாய்போன்று குளிர அருள்செய்கின்ற திருக்கண்களை யுடையவனே !. "திங்களுமாதித்தியனு மெழுந்தாற்

போல் அங்கணிரண்டுங்கொண் டெங்கள்மேல் நோக்குதியேல் எங்கள்மேற் சாபமிழிந்தேலோ ரெம்பாவாய்'' என்றது காண்க.

ஆயா !—உன்னுடைய விபூதியானவர்களிலே சிலர் 'இவன் என்னுடைய பிள்ளை' என்று அபிமானிக்கலாம்படி இடைப்பிள்ளையாய் வந்து பிறந்தவனே !. [அலைநீர் இத்யாதி.] ஆபத்து கரைபுரண்டால் எல்லாரையு மொக்கக் காத்தருளு மியல்வினனே ! இப்படி ஆபத்பந்துவான வுன்னை அடியேன் எங்ஙனே மறக்க வல்லேன் ? ஒருநாளும் மறவேன். .... (௯)

வண்டார் பொழில்சூழ் நறையூர்நம்பிக்கு * என்றும்
தொண்டாயக் கலியனொலிசெய் தமிழ்மாலை *
தொண்டீர் ! இவைபாடுமின் பாடிநின்றாட *
உண்டேவிசும்பு உந்தமக்கில்லை துயரே. (௧௦)

தொண்டீர்	பக்தர்களே !,	தமிழ் மாலை இவை	இத்தமிழ்ப்பாசுரங்களை
வண்டு ஆர் பொழில் சூழ் நறையூர் நம்பிக்கு	வண்டுகள்நிறைந்த சோலைகளால் சூழப்பட்ட திருநறையூரி லெழுந்தருளியிருக்கும் பெருமானுக்கு	பாடுமின்	பாடுங்கோள் ;
என்றும்	எக்காலத்தும்	பாடி நின்று ஆட	(அப்படி) பாடியாடப் பெறில்
தொண்டு ஆய்	அடிமைபூண்டு	உந்தமக்கு	உங்களுக்கு
கலியன்	திருமங்கையாழ்வார்	துயர் இல்லை	ஸம்ஸாரதுன்பங்கள் இல்லையாய்விடும் ;
ஒலி செய்	அருளிச்செய்த	விசும்பு உண்டு	பரமபதம் கிடைக்கும்.

* * *—மது வெள்ளத்திலே வண்டுகள் படிந்து கோலாஹலம் செய்யப் பெற்ற சோலைகளாலே சூழப்பட்ட திருநறையூரில் நிற்கிற ஸமஸ்த கல்யாணகுண பரிபூர்ணனை பெருமானுக்கு அடிமைப்பட்டுத் திருமங்கையாழ்வார் திருவாய் மலர்ந்தருளின இத்திருமொழியைத் தொண்டர்காள் ! வாயாரப் பாடுங்கள்; பாடி யாடுங்கள்; இங்ஙனேயாகில் உங்களுடைய ஸம்ஸாரதாபங்க ளெல்லாம் தொலைந்து பரமபத ப்ராப்தியுமுண்டாம் என்று பயனுரைத்துத் தலைக்கட்டினாராயிற்று.

அடிவரவு:—கறவா வற்று தாரேன் புள் வில் பனி கதி அத்தா துயாய் வண்டார் புள்ளாய்.

முதல் திருமொழி உரை முற்றிற்று.

ஜீயர் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஏழாம்பத்து—இரண்டாந் திருமொழி,

புள்ளாயேனமுமாய்.

[இதுவும் திருநறையூர்த் திருப்பதிகம்.]

புள்ளாயேனமுமாய்ப் புகுந்து * என்னையுள்ளங்கொண்ட
கள்வாவென்றலும் என்கண்கள் நீர்கள் சோர்தருமால் *
உள்ளேநின்றுருகி நெஞ்சமுன்னை யுள்ளியக்கால் *
நள்ளேனுன்னையல்லால் நறையூர்நின்ற நம்பியோ! (க)

ஓ நறையூர் நின்ற நம்பீ!

புள் ஆய் ஏனமும் ஆய் புகுந்து	'ஹம்ஸரூபியாயும் வராஹரூபியாயும் என்னுள்ளேபிரவேசித்து
என்னை உள்ளம் கொண்ட கள்வா என்றலும்	என் உள்ளத்தைக் கவர்ந்து கொண்ட கள்வனே!' என்று சொன்னவுடனே
என் கண்கள்	என்து கண்களில் நின்றும்
நீர்கள் சோர்தரும்	கண்ணீர் பெருகுகின்றது;
ஆல்	அந்தோ!;
நெஞ்சம்	என் மனமானது
உன்னை	எம்பெருமானுன உன்னை
உள்ளியக்கால்	அநுஸந்திக்கப் புகுந்தால்
உள்ளே நின்று உருகி	உள்ளே பிடித்து நீராக உருகிப்போவதனால்
உன்னை அல்லால்	(இப்படிப்பட்ட அன்புக்கு இலக்கான) உன்னைத் தவிர்த்து (வேறொருவரையும்)
நள்ளேன்	நேசிக்கமாட்டேன்.

* * *—எம்பெருமான் 'பிறப்பிலி' என்று பேர் பெற்றிருக்கச் செய்தேயும் 1. "அஜாயமாநோ பஹுதா விஜாயதே" என்றும் 2. "உயிரளிப்பான் எந்நின்ற யோனியுமாய்ப் பிறந்தாயிமையோர் தலைவா!" என்றும் சொல்லுகிறபடியே பலவகைப்பட்ட யோநிகளிலும் பிறந்தருளுகிறான்; நாம் கருமத்தாலே பிறக்கிறோம், அவன் கருணையாலே பிறக்கிறான் என்னுமிவ்வளவே வாசி. அப்படி பிறந்தருளாநின்றாலும், சிறந்தவையென்று கொண்டாடப்படுகிற தேவமநுஷ்யாதி யோநிகளிலே பிறக்குமளவோடு நிற்கலாகாதா? மிக்க இழிவான பசு பக்ஷி யோநிகளிலும் வந்து பிறக்க வேணுமா? இப்படியும் ஒரு நீர்மையுண்டோ? என்று சிந்தித்து நெஞ்சு உருகவும் கண்கள் பனிமல்கவும் பெற்றேன்; ஆச்ரிதர்க்குக் காரியஞ் செய்யவேணு மென்று திருவுள்ளத்தில் தோன்றிவிட்டால் ஜந்ம நிகர்ஷங்களையும் கணிசியாதே எந்தப் பிறவியில் வேணுமானாலும் மனமுவந்து பிறந்தருள்கின்ற உன்னையல்லது வேறொருவரை நேசிக்கமாட்டேன்; இப்படிப்

1. புருஷ ஸூக்தம். 2. திருவிருத்தம். 1.

பட்ட திருக்குணங்களைத் திருநறையூரி லெழுந்தருளியிருக்கு மிருப்பிலே விளங்கக் காட்டிக்கொண்டு என்னை அடிமை கொள்ளப் பெறுவதே! என்று உள் குழைந்து பேசுகிறாராயிற்று.

'புள்ளாயேனமுமாய்ப் புகுந்து' என்றது—ஹம்ஸரூபியாயும் வராஹரூபியாயும் திருவவதரித்த நீர்மையை என்னெஞ்சிலே தோற்றுவித்து என்றவாறு. நான்முகனிடமிருந்து வேதங்களைக் கொள்ளைகொண்டு கடலில் மூழ்கி மறைந்து உலகமெங்கும் பேரிருளை மூட்டி நலிந்த மதுகைடபர்களைக், கடலினுள் புக்குக் கொன்று வேதங்களை மீட்டுக் கொணர்ந்து, பாலையும் நீரையும் பிரிக்கவல்ல ஹம்ஸரூபியாய் அவ்வேதங்களைப் பிரமனுக்கு உபதேசித்த வரலாறும், முன்னொருகால் பூமியைப் பாயாகச் சுருட்டியெடுத்துக்கொண்டு கடலில் மூழ்கிப்போன ஹிரண்யாக்ஷனைத் தேவர் முனிவர் முதலியோரது வேண்டுகோளால் திருமால் மஹாவராஹமாகத் திருவவதரித்துக் கொன்று பூமியைக் கோட்டாற் குத்தியெடுத்துக் கொண்டுவந்து பழையபடி விரித்தருளின வரலாறும் இங்கு அறியத்தக்கன.

என்னையுள்ளங் கொண்ட கள்வா!—இரண்டவதார சேஷ்டிதங்களையும் எனக்குத் தெரிவித்து அம்முகத்தாலே எனது நெஞ்சை எனக்குந் தெரியாமலே அபஹரித்துக் கொண்டவனே! என்று நான் வாய்விட்டுச் சொன்னவாறே ஆநந்த பாஷ்பம் அருவிசோரத் தொடங்கிற்றென்கிறார். ஆல்—ஆநந்த மிகுதியைக் காட்டுவதோரிடைச்சொல்.

கள்ளேன்—எதிர்மறைத் தன்மை வினைமுற்று. .... (க)

ஓடா வாளரியி னுருவாய்மருவி * என்றன்
மாடேவந்து அடியேன் மனங்கொள்ளவல்ல மைந்தா! *
பாடேன் தொண்டர்தம்மைக் கவிதைப் பனுவல்கொண்டு *
நாடே னுன்னையல்லால் நறையூர்நின்ற நம்பீயோ! (உ)

ஓடா	நாட்டில் எங்கும் நடையாடாத
ஆள் அரியின் உரு ஆய்	நரஸிம்ஹரூபியாய்
என்றன் மாடே வந்து மருவி	என்பக்கல்வந்து பொருந்தி
அடியேன்	அடியேனுடைய
மனம்	மனத்தை
கொள்ள வல்ல மைந்தா	கவர்ந்து கொள்ளக் கூடிய மிடுக்கையுடையவனே!

ஓ நறையூர் நின்ற நம்பீ!—;

பனுவல் கவிதை கொண்டு	இலக்கணம் வழுவாத கவிகளைக்கொண்டு
தொண்டர் தம்மை	நீசர்களை
பாடேன்	பாடுவது தவிர்க்தேன்;
உன்னை அல்லால்	உன்னைத் தவிர (வேறொருவரைக் கவிபாட)
நாடேன்	முயலமாட்டேன்.

* * *—ஹம்ஸாவதாரத்திலும் வராஹாவதாரத்திலும் தமது நெஞ்சு ஈடுபட்டு உருகினபடியைக் கீழ்ப்பாட்டில் அருளிச் செய்தார்; நரஸிம்ஹாவதாரத்தி லீடுபாட்டை இப்பாட்டி லருளிச்செய்கிறார். உலகத்தில் எங்கும் கண்டறியாத

புதியதொரு பிறவி பிறப்பதே!; மநுஷ்யனாகவாவது சிங்கமாகவாவது அவரித்தாலாகாதோ? நரங்கலந்த சிங்க மென்று புதிதாகவொரு பிறவியைக் கற்பித்துக் கொண்டு அதிலே பிறந்த நீர்மை என்சொல்! என்று தமது திருவுள்ளம் ஆழ்ந்தமையை முன்னடிகளி லருளிச்செய்கிறார்.

“தாழ்ந்த ஜந்மத்திலே வேணுமாகில் பிறக்கிறாய்; நாட்டார் பிறக்கும் பிறவிகளைப் பிறக்கலாகாதோ?” என்பர் பெரியவாச்சான் பிள்ளையும்.

அடியேன் மனங்கொள்ளவல்ல மைந்தா!—பண்டு நரசிங்க மூர்த்தியாய்த் தோன்றினவன்று ப்ரஹ்லாதாழ்வானுடைய உள்ளத்தைக் கொள்ளைகொண்டா யென்பது உனக்கு ஒரு மிடுக்கு அல்ல; கல்நெஞ்சனான என்னுடைய உள்ளத்தைக் கொள்ளை கொண்டதுவே உனக்குப் பெருமிடுக்குக் காண்! என்பது உள்ளுறை.

இப்படிப்பட்ட அற்புத சக்திவாய்ந்த உன்னையல்லது மற்றொருவரையும் என் நாவினால் பாட முயலவும் மாட்டேனென்கிறார் பின்னடிகளில். ‘**தொண்டர்**’ என்றது கூழாட்பட்டு நிற்பவர்களை. “கவிதைப்பனுவல்” என்றதை “பனுவல் கவிதை” என மாற்றி அந்வயித்துக்கொள்க. சாஸ்த்ரோக்தமான லக்ஷணங்களில் குறையற்ற கவித்துவமென்றபடி. .... (உ)

எம்மானு மெம்மனையும் என்னைப்பெற் றொழிந்ததற்பின் *
அம்மானு மம்மனையும் அடியேனுக் காகிநின்ற *
நன்மான வொண்சுடரே! நறையூர்நின்றநம்பீ! * உன்
மைம்மான வண்ணமல்லால் மகிழ்ந்தேத்த மாட்டேனே. (ங)

எம்மானும்	என் தகப்பனும்	மானம்	பெருமைபொருந்திய
எம் அனையும்	என் தாயும்	ஒண்	அழகியதான
என்னை பெற்று	என்னைப் ப்ரஸவித்துவிட்டு	சுடரே	தேஜஸ் ஸ்வரூபியே!,
		நறையூர் நின்ற நம்பீ!—;	
ஒழிந்ததன் பின்	நீக்கினபின்பு	உன்	உன்னுடைய
		மை மானம்	மைபோன்ற
அடியேனுக்கு	அடியேனுக்கு	வண்ணம் அல்லால்	திருமேனிநிறத்தையல்லது (வேறொன்றையும்)
அம்மானும்	தகப்பனும்		
அம்மனையும்	தாயும்	மகிழ்ந்து	மனமுவந்து
ஆகி நின்ற	தானேயாய்நின்ற	ஏத்த மாட்டேன்	துதிக்கமாட்டேன்.
நல்	விலக்ஷணமாய்		

* * *—மாதாபிதாக்களிற் காட்டிலும் பரம உபகாரகனான வுன்னை எவ்வகையாலும் மறக்கவல்லேனல்லே னென்கிறார். மாதாபிதாக்கள் காமப்ரேரிதராய்ப் ப்ரஜைகளை உத்பத்திபண்ணி விடுவர்கள்; பிறகு ‘யௌவநவிரோதி’ என்று உபேக்ஷித்தொழிவர்கள்; அவர்கள் கைவிட்டகாலத்தும் கைவிடாதே உடனிருந்து காத்தருள்பவன் எம்பெருமானேயாதலால் “மாதா பிதா ப்ராதா நிவாஸஶ்

ரணம் ஸுஹ்ருந்நாராயண:" என்றும் "சேலேய் கண்ணியரும் பெருஞ் செல்வமும் நன்மக்களும், மேலாத் தாய்தந்தையும் அவரேயினி ஆவாரே" என்றும் ஸகலவிதபந்துவுமாக அப்பெருமானே கொள்ளவுரியன் என்கிற உறுதியை வெளியிடுகிறார். "பெற்றார் பெற்றொழிந்தார் பின்னும் நின்றடியேனுக்கு, உற்றனாய் வளர்த்து என்னுயிராகி நின்றானை,.......எத்தால் யான்மறக்கேன் இது சொல்லென் ஏழைநெஞ்சே!" என்பர் மேல் எட்டாம்பத்திலும்.

நான்மானவொண்சுடரே!—விலக்ஷணமாய் அளவிறந்த ஒள்ளிய சுடரையுடையவனே!, என்றவாறே 'இப்படிப்பட்ட திருவுருவம் பரமபதநாதனுக்கேயன்றோவுள்ளது' என்று சிலர் நினைக்கக்கூடுமென்றெண்ணி உடனே 'நறையூர் நின்றநம்பீ!' என்கிறார். .... (௩)

சிறியாயோர் பிள்ளையுமாய் உலகுண்டோ ராலிலைமேல்
உறைவாய்! * என்நெஞ்சினுள்ளே யுறைவாய், உறைந்ததுதான் *
அறியாதிருந் தறியேன் அடியேன், அணிவண்டுகிண்டும் *
நறைவாரும் பொழில்சூழ் நறையூர்நின்ற நம்பீயோ! (௪)

அணி வண்டு	அழகிய வண்டுகள்
கிண்டும்	குடையப்பெற்றதும்
நறை வாரும்	{ தேன் பெருகப்பெற்றதுமான
பொழில்	சோலையாலே
சூழ்	சூழப்பட்ட
நறையூர், நின்ற நம்பீயோ!—;	
சிறியாயோர் பிள்ளையும் ஆய்	} மிகச் சிறுகுழந்தையாய்
உலகு உண்டு	உலகங்களை உட்கொண்டு

ஓர் ஆல் இலை மேல்	} ஒரு ஆலந்தளிரிலே
உறைவாய்	பொருந்தியிருந்தவனே!
என் நெஞ்சின் உள்ளே உறைவாய்	} எனது நெஞ்சுக்குள்ளே வஸிப்பவனே!
உறைந்தது தான்	{ (நீ இப்படி என்னெஞ்சினுள்ளே) வாஸஞ்செய்தருள்வதை
அடியேன்	அடியேன்
அறியாதிருந்தறியேன்	} தெரிந்துகொள்ளாமலிருக்கவில்லை.

* * *—உலகங்களையெல்லாம் பிரளயங்கொள்ளப்புகுந்தவாறே அனைத்தையும் திருவயிற்றடக்கி மிகுஞானச் சிறுகுழவியாய் ஒரு சிற்றாலந்தளிரிலே துயில் கொண்டாய் என்பதைக் கேட்டார்வாய்க் கேட்டிருந்தேன்; அந்தத் திருவுருவத்தோடு இன்று என்னெஞ்சினுள்ளே வந்து உறைகின்றபடியை நன்கு தெரிந்து கொண்டேன்; மற்றையாரைப் போலே நான் நன்றியுணர்வு கெட்டவனல்லேன்; இப் பெருநன்றியைச் சிந்தியாமல் ஒருபொழுதும் நானிருப்பதில்லை என்கிறார்.

ஆலிலைமேலுறைவாய் என்னெஞ்சினுள்ளே உறைவாய்—ஆலிலைபோலே என்னெஞ்சையும் உரிய இடமாகக் கொண்டாய் என்றவாறு, ஆலிலையை இகழ்ந்திட்டு என்னெஞ்சை இடமாகக் கொண்டாய் என்றவாறு கருத்துக் கொள்ளலாம்.

அணிவண்டுகிண்டும் நறைவாரும்பொழில்சூழ் நறையூர்நின்றநம்பீயோ—பரமபோக்யமான திருநறையூர்ப்பதி உனக்கு இருப்பிடமாக அமைந்திருக்கச்

செய்தேயும் அதனையும்விட்டு என்னெஞ்சிலே உறைகின்றாயாதலால் உன்விஷயத்திலே அடியேன் சாலவும் க்ருதஜ்ஞனாயிராநின்றேனென்றவாறு.

சிறியாய்—'சிறுமை' என்னும் பண்புப்பெயரில் மைவிகுதி கெட்டு, 'று' என்பதிலுள்ள உகரம் இகரமாகத் திரிந்து சிறுமையென்னும் பொருளையே காட்டும். ஆய என்பது 'ஆய்' எனத் தொக்கிநின்றது. .... (௪)

நீண்டாயை வானவர்கள் நினைந்தேத்திக் காண்பரிதால் *
ஆண்டாயென்று ஆதரிக்கப்படுவோய்க்கு நானடிமை
பூண்டேன்* என்னெஞ்சினுள்ளே புகுந்தாயைப் போகலொட்டேன் *
நாண்டா னுனக்கொழிந்தேன் நறையூர்நின்ற நம்பியோ! (௫)

நறையூர் நின்ற நம்பியோ!—;

நீண்டாயை	நெடுமாலாகிய உன்னை
வானவர்கள்	பிரமன் முதலியதேவர்கள்
நினைந்து	தியானித்து
ஏத்தி	தோத்திரம்பண்ணி
காண்பு அரிது	காண்பதானது அஸாத்யமான காரியம்;
ஆண்டாய் என்று ஆதரிக்கப் படுவோய்க்கு	'எம்பெருமானே!' என்று (தேவர்களால்) ஆதரித்துத் துதிக்கப்படுகின்ற உன்விஷயத்தில்
நான் அடிமை பூண்டேன்	நான் அடிமைத்தொழில் செய்யப் பெற்றேன்;
என் நெஞ்சின் உள்ளே புகுந்தாயை	எனது மனத்தினுள்ளே புகுந்திருக்கிற உன்னை
போகல் ஒட்டேன்	இனி வேறோரிடம் போகவொட்டேன்;
உனக்கு	உன்விஷயத்திலே
நாண் தான் ஒழிந்தேன்	வெட்கமற்றவனானேன்.

* * *—'நீண்டாயை' என்றது—ஸ்வரூபம் ரூபம் குணம் விபூதி இத்யாதிகளில் ஒவ்வொன்றுமே எல்லைகாணவொண்ணாதபடி அபரிச்சின்னனாயிருக்கிறவுன்னை என்றபடி. பிரமன் முதலிய தேவர்கள் ஞானசக்திகளிற் சிறந்தவர்களாயிருந்தாலும் கொக்கு கடலைக்கண்டாற்போலே உன் ஸ்வரூப ரூபகுண விபூதி விஸ்தாரங்களைக் கண்டு வியர்த்து சிந்திக்கவும் பேசவும் மாட்டாதே திகைத்து நிற்பர்கள்; எல்லைகண்டு பேசமுடியாமற் போனாலும் ஸ்வரூபஸத்தைக்காக ஏதேனும் பேசவேணுமே; 'ஆண்டாய்' [ஸ்வாமிந்!] என்று பேசுவர்களாம்; இப்படி வானவர்களால் ஆதரித்துப் பேசப்படுகிற வுன்விஷயத்திலே நான் நித்ய கைங்கரியஞ்செய்வதாக ஒருப்பட்டேன்; நீயும் இஃதறிந்து என்னெஞ்சினுள்ளே வந்து புகுந்துகொண்டாய்; இனி நீ பெயர்ந்து போகப் பார்த்தாலும் "திருவாணை நின்னாணை கண்டாய்" என்னுமாபோலே ஆணையிட்டாகிலும் தடுப்பனேயன்றி உன்னை விட்டுக்கொடுக்க ஸம்மதிக்கக் கடவேனல்லேன்; என்று சொன்ன ஆழ்வாரை நோக்கித் திருநறையூர் நம்பி, "ஆழ்வீர்! நீர் அடிக்கடி அடியேன் அடியேன் என்கிறீர்; சேஷி செய்தபடி செய்யக் கண்டிருப்பதன்றோ சேஷபூதர்க்கு உரியது; 'ஒட்டேன்' என்று நிர்ப்பந்திக்கை உம்முடைய ஸ்வரூபத்துக்குச் சேராதே" என்ன, 'நாண்தான் உனக்கொழிந்தேன்' என்கிறார். "மடலெடுக்க நினைப்பார் 'இது ஆம், இது ஆகாது' என்றுபார்த்தோ காரியஞ் செய்வது?" என்பது பெரியவாச்சான் பிள்ளை வியாக்கியானம். வெட்கமற்று

வெளிப்புறப்பட்ட நான் என்ன அடைவிலே நிற்கமுடியும் என்றவாறு. (மடலெடுத்தது திருநறையூர் நம்பி விஷயத்திலேயிறே; "நம்பிநறையூரர், என்னிலைமைகண்டு மிரங்காரேயாமாகில், மன்னுமடலூர்வன் வந்து" என்ற பெரிய திருமடல்தனியன் காண்க.) .... (ரு)

எந்தாதை தாதையப்பால் எழுவர் பழவடிமை
வந்தார் * என்நெஞ்சினுள்ளே வந்தாயைப் போகலொட்டேன் *
அந்தோ! என்னாருயிரே! அரசே! அருளெனக்கு *
நந்தாமல் தந்தவெந்தாய்! நறையூர்நின்ற நம்பீயோ! (சு)

என் ஆர் உயிரே	எனது அருமையான உயிர் போன்றவனே!
அரசே	என்னை ஆள்பவனே!
எனக்கு	என் திறத்தில்
அருள்	கிருபையை
நந்தாமல்	குறைவின்றி
தந்த	செய்தருளின
எந்தாய்	எம்பெருமானே!

நறையூர் நின்ற நம்பீயோ!—;

எம் தாதை	நானும் என் தகப்பனும்
தாதை	அவன் தகப்பனும்
அப்பால்	அவனுக்கு முன்புண்டான
எழுவர்	ஸப்த புருஷர்களும்

(ஆகப் பத்துத்தலைமுறையாக)

பழவடிமை வந்தார்	இயற்கையான அடிமையைச் செய்து வந்தவர்கள்;
என் நெஞ்சின் உள்ளே	எனது மனத்தினுள்ளே
வந்தாயை	வந்து சேர்ந்த உன்னை
போகல் ஒட்டேன்	இனி வேறிடம் போகவொட்டேன்.

* * *—தாம் அனேக வம்சபரம்பரையாகப் பகவத்விஷயத்திலே தொண்டுபட்டிருக்கும்படியை முதலடியில் வெளியிடுகிறார். நம்முடையவர்கள் இதையொரு ஏற்றமாகச் சொல்லிக் கொள்வதுண்டு; "ஏழாட்காலும் பழிப்பிலோம் நாங்கள்", "எந்தை தந்தை தந்தை தந்தை தம்மூத்தப்பனேழ்படிகால் தொடங்கி வந்து வழிவழியாட் செய்கின்றோம்" இத்யாதிகள் காண்க. நான், என்னுடைய தகப்பனார், அவருடைய தகப்பனார், அவர்க்கு அப்பால் எழுவர் என்றிப்படி பாரம்பரியமாக அநந்யார்ஹ சேஷத்வத்தில் ஊன்றியிருப்போம் நாம்; இப்படி அடிமைச் சுவடு நன்கறியப் பெற்றிருக்கிற அடியேன் என்னெஞ்சினுள்ளே வந்து சேர்ந்திருக்கிற தேவரீரை இனி வேறிடம்போகவொட்டுவேனோ? என்கிறார்.

'போகவொட்டேன்' என்று ஆழ்வார் சொல்லச் செய்தேயும் எம்பெருமான் போகப்புக்கமைதோன்ற நின்றானும்; அந்த நிலைமையைக் கண்டு 'அந்தோ!' என்கிறாராம். ஐயோ! உனக்குப் பெறாப் பேறாகக் கிடைத்த இவ்வஸ்துவையும் இழக்கப்பார்க்கலாமோ? என்றவாறு. இன்றளவும் என்விஷயத்திலே அருளைக் குறையறச் செய்துவருகின்ற நீ இன்று அருட்குறை தோன்றுமாறு அகலநினைப்பது வேண்டா வென்கை.

என் ஆருயிரே!—உன்னையொழிய ஜீவியாதபடி என் ஸத்தையை நிர்வஹித்துக்கொண்டு போருகிறவனே! என்றபடி. .... (சு)

மன்னஞ்ச வாயிரந்தோள் மழுவின்றுணித்த மைந்தா ! *
என்னெஞ்சத் துள்ளிருந்து இங்கினிப்போய்ப் பிறரொருவர் *
வன்னெஞ்சம் புக்கிருக்கவொட்டேன் வளைத்துவைத்தேன் *
நன்னெஞ்ச வன்னமன்னும் நறையூர்நின்ற நம்பீயோ ! (எ)

நல் நெஞ்சம்	(அடியார் திறத்தில்) நல்ல ஹ்ருதயத்தை யுடையனான
அன்னம்	அன்ன மென்னடை யாளான பிராட்டி
மன்னும்	பொருந்தி வாழ்கிற
நறையூர், நின்ற நம்பீயோ!—;	
மன் அஞ்ச	க்ஷத்ரியர்களெல்லாரும் அஞ்சும்படியாக
ஆயிரம் தோள்	(கார்த்த வீரியார்ஜுநனுடைய) ஆயிரந் தோள்களையும்
மழுவின்	கோடாலிப்படையினால்
துணித்த	அறுத்தொழித்த
மைந்தா	மிடுக்கனே!
என் நெஞ்சத்துள்	எனது நெஞ்சினுள்ளே
இருந்து	இருந்து வைத்து
இனி	இனிமேல்
இங்கு போய்	இங்கு நின்றும் வேறோரிடம்போய்
பிறர் ஒருவர்	வேறொருவருடைய
வல் நெஞ்சம்	கடினமான நெஞ்சிலே
புக்கு இருக்க	புகுந்திருக்க
ஒட்டேன்	ஸம்மதிக்கமாட்டேன்;
வளைத்து வைத்தேன்	தடை செய்கின்றேன்.

* * *—“என்னெஞ்சினுள்ளே வந்தாயைப்போகவொட்டேன்” என்று நிர்ப்பந்தித்த ஆழ்வாரை மீறிக்கொண்டு புறப்பட்டுப் போகநினைத்த எம்பெருமான் அதற்குறுப்பான தன்மிடுக்கைக் காட்டினான்; ‘அந்தமிடுக்கில் ஒருகுறையுமில்லை, நானறிவேன் பிரானே!’ என்று தாமறிந்த மிடுக்கொன்றை விரித்துரைக்கின்றார் முதலடியில். உலகத்திலே எவரும் அழிப்பவரில்லாமையால் கொழுத்துத் திரிந்து கொடுமையியற்றிவந்த க்ஷத்ரியவம்சங்கள் பலவற்றை நாசஞ்செய்யும் பொருட்டு நாராயணமூர்த்தி ஜமதக்நி முனிவரது மனைவியான ரேணுகையினிடம் இராமனாய்த் திருவவதரித்துப் பரசு என்னுங் கோடாலிப்படையை ஆயுதமாகக் கொண்டு அதனாற் பரசுராமனென வழங்கப்பெற்றமை யறிக.

ஆயிரம் புஜங்களை யுடையவன் கார்த்தவீரியார்ஜுநன்; இவன் ஒரு காலத்தில் ஸேனையுடனே வனத்திற் சென்று வேட்டையாடிப் பரசுராமரது தந்தையான ஜமதக்நி முனிவரது ஆச்ரமத்தையடைந்து அவரநுமதியால் அங்கு விருந்துண்டு மகிழ்ந்து மீளுகையில், அவரிடமிருந்த காமதேநு அவர்க்குப் பல வளங்களையும் எளிதில் சுரந்தளித்தமைகண்டு அதனிடம் ஆசைகொண்டு அப் பசுவை அவரநுமதியில்லாமல் வலியக்கவர்ந்து போக, அதனையறிந்த அப்பார்க்கவராமர் பெருங்கோபங்கொண்டு சென்று கார்த்தவீரியனுடன் போர்செய்து அவனது ஆயிரந் தோள்களையும் தலையையும் தமது கோடாலிப் படையால் வெட்டி வீழ்த்தி வெற்றிபெற்றனரென்ற வரலாறு முதலடிக்கு அறியத்தக்கது.

ராஜலோகமெல்லாம் அஞ்சும்படி அவர்கட்கு வேர்ப்பற்றான ஸஹஸ்ரபாஹு வர்ஜுநனுடைய தோள்களாயிரத்தையும் மழுவினால் துணித்த மிடுக்கனே!, நீ செய்ய நினைக்குங் காரியத்திற்கு ஒரு இடையூறு நேருமென்று நினைப்பவனல்லே னடியேன்; உன்னுடைய மிடுக்குக்கு இசையாதவனு மல்லேன்; அந்த மிடுக்கை விதேயனான அடியேனிடத்திலே உபயோகிக்க வேண்டா வென்பதே வேண்டு கோள் என்பது உள்ளுறை.

பிறரோருவர் வன்னெஞ்சம் புக்கிருக்கவொட்டேன்= தம்முடைய நெஞ்சு தவிர மற்றையோருடைய நெஞ்சு எல்லாம் வல்நெஞ்சு என்றும் தம்முடைய நெஞ்சு ஒன்றே மெல்நெஞ்சு என்றும் நினைத்திருக்கிறாராழ்வார். உண்மையில், பகவத் விஷயத்தில் இத்தனை உருக்கம் மற்றையோர்க்கு இல்லையிறே. **வளைத்து வைத்தேன்**= ஏழைகளாயிருப்பவர் செல்வர் மாளிகை வாசலைப் பற்றிக்கொண்டு ‘யாம் வேண்டுகின்றவற்றை நீ தந்தாலன்றி உன்னைவிட மாட்டோம்’ என்ற உறுதியுடன் அவர்களை வளைத்துக்கொண் டிருப்பதுபோலவும், பரதாழ்வான் சித்திரகூடத்தேறப் போந்து இராமபிரானை வளைத்துக் கொண்டாற் போலவும்.

நன்னெஞ்ச வன்னமன்னும் நறையூர்= ‘நன்னெஞ்சம்’ என்ற விசேஷணத்தின் ஸ்வாரஸ்யத்தை நோக்கி ‘அன்னம்’ என்பதற்கு * அன்னநடைய அணங்காகிய பெரிய பிராட்டியார் என்று பொருளுரைக்கப்பட்டது. “நீர் குற்றங் கண்டு கைவிடப் பார்க்குமன்றும் ‘நகஸ்சிந்நாபராத்யதி—ந கச்சிந்நாபராத்யதி’ என்னுமவளன்றோ அருகே யிருக்கிறாள்” என்பது பெரிய வாச்சான் பிள்ளை வியாக்கியான வருளிச்செயல். பெரிய திருமடலில் “இரும்பொழில் சூழ் மன்னுமறையோர் திருநறையூர் மாமலைபோல், பொன்னியலுமாடக் கவாடம் கடந்துபுக்கு, என்னுடைய கண்களிப்ப நோக்கினேன்” என்றபின் நாச்சியாரைப்பற்றிப் பேசுங்கால், “மன்னுமரதகக் குன்றின் மருங்கே ஓர், இன்னிள வஞ்சிக் கொடியொன்று நின்றதுதான், அன்னமாய் .... அன்ன திருவுருவம் நின்றது” என்று பிராட்டியை அன்னமாக அருளிச்செய்தது காண்க. .... (எ)

எப்போதும் போன்மலரிட்டு இமையோர் தோழுது * தங்கள்
கைப்போது கோண்டிறைஞ்சிக் கழல்மேல் வணங்கநின்றாய் *
இப்போதென்னெஞ்சினுள்ளே புகுந்தாயைப் போகலோட்டேன் *
நற்போது வண்டுகிண்டும் நறையூர்நின்ற நம்பீயோ! (அ)

நல் போது — நல்ல புஷ்பங்களிலே
வண்டு கிண்டும் — வண்டுகள் குடையப் பெற்ற
நறையூர், நின்ற நம்பீயோ!—;
இமையோர் — நித்யஸூரிகள்
எப்போதும் — எக்காலத்திலும்
பொன் மலர் இட்டு — நல்ல பூக்களை ஸமர்ப்பித்து

தொழுது — வணங்கி
தங்கள் — தங்களுடைய
கை போது கொண்டு இறைஞ்சி — புஷ்பம் போன்ற கைகளினால் அஞ்ஜலிசெய்து
கழல் மேல் — திருவடிகளிலே
வணங்க நின்றாய் — ஆச்ரயிக்குமாறு நிற்பவனே!

இப்போது — இன்று
என் நெஞ்சின் உள்ளே — எனது மனத்துள்ளே
புகுந்தாயை — வந்துபுகுந்தவுன்னை
போகல் ஒட்டேன் — வேறிடம் போகவொட்டேன்.

* * * — தேவரீரை வணங்கி வாழ்த்தி வழிபாடு செய்யுமவர்கள் பல்லாயிரவர் குறையற்றிருக்கச் செய்தேயும் அவர்கட்குக் காட்சிகொடுத்துக் கொண்டிருக்கு மிருப்பிற்காட்டிலும் என்னெஞ்சிலே வந்து புகுந்திருக்குமதுவே சிறப்பு என்று திருவுள்ளம்பற்றி இமையோர்களையும் விட்டு என்னெஞ்சிலே புகுந்தருளிற்று ; இனி நான் போகவொட்டேன்—என்கிறார்.

போன்மலர்— பொன்போல் விரும்பத்தக்கமலர் என்றபடி. 'தொழுது இறைஞ்சி, வணங்க' என்ற ஒருபொருட் பன்மொழிகள் மனமொழி மெய்களாகிற த்ரிகரணங்களி னுடையவும் வ்ருத்தியைச் சொல்லுகின்றன வென்னலாம். கைப்போது கொள்ளுதல்— அஞ்ஜலி செய்தல். (அ)

ஊனே ராக்கைதன்னை யுழந்தோம்பி வைத்தமையால் *
யானாயென்றனக்காய் அடியேன் மனம்புகுந்த
தேனே ! * தீங்கரும்பின்தெளிவே ! என்சிந்தைதன்னால் *
நானே யெய்தப்பெற்றேன் நறையூர்நின்ற நம்பீயோ ! (கூ)

யான் ஆய் — எனக்கு அந்தராத்மாவாய்
என் தனக்கு ஆய் — எனக்கு விதேயனாய்க் கொண்டு
அடியேன் மனம் புகுந்த — அடியேனுடைய மனத்தினுட் ப்ரவேசித்த
தேனே — தேன்போல் இனியவனே !
தீம் கரும்பின் தெளிவே — இனிமையான கரும்பின் சாறுபோன்றவனே !
நறையூர் நின்ற நம்பீயோ !—;
ஊன் ஏர் ஆக்கை தன்னை — மாம்ஸமயமான சரீரத்தை
உழந்து — (பலவகைகளாலும்) சிரமப்பட்டு
ஓம்பி வைத்தமையால் — பேணிவைத்துக் கொண்டிருந்ததனால்
என் சிந்தை தன்னால் — என்னுடைய மனத்தினால்
நானே எய்த பெற்றேன் — (இப்போது உன்னை) நானே வந்தடையப்பெற்றேன்.

* * * — "விவிக்தா தேஹஸம்பத்திரீச்வராய நிவேதிதும்। பூர்வமேவ க்ருதா ப்ரஹ்மந்! ஹஸ்தபாதாதிஸம்யுதா — விவிக்தா தேஹஸம்பத்திரீச்வராய நிவேதிதும்—பூர்வமேவ க்ருதா ப்ரஹ்மந்! ஹஸ்தபாதாதி ஸம்யுதா" என்று சாஸ்திரங்களில் சொல்லப்பட்டுள்ளது ; எம்பெருமானுக்கு வழிபாடுகள் செய்தற்காகவே இந்த கரணகளேபரங்கள் தந்தருளப்பட்டன வென்பது அதன் கருத்து ; அப்படி பகவத் கைங்கரியத்திற்கே உபகரணமான உடலை நான் பெற்றிருந்தாலும் கீழ்க்கழிந்த காலமெல்லாம் பாழே கழிந்தனவாதலால் அவ்வுடலைக் கொண்டு ஒரு பயனும் பெறாதொழிந்தேன் முன்பெல்லாம் ; இவ்வுடலை ச்ரமப்பட்டுப் போஷித்து வந்ததற்குத் தக்கபயன் இன்று பெற்றேனென்கிறார்.

“ஊனேறாக்கை தன்னை உழன்றோம்பி வைத்தமையால் நானே எய்தப்பெற்றேன்” என்று அந்வயிப்பது. மாம்ஸம் மல்கும்படி சரீரத்தைப் பலபரிச்ரமங்கள் பட்டு வளர்த்து வந்தேனாதலால் அதன்பலனை இன்று ஸம்பாதித்துக்கொண்டேனென்கை. “𑌶𑌰𑍀𑌰𑌮𑌾𑌦𑍍𑌯𑌂 𑌖𑌲𑍁 𑌧𑌰𑍍𑌮𑌸𑌾𑌧𑌨𑌮𑍍— சரீரமாத்யம் கலு தர்மஸாதநம்” என்கிறபடியே தர்மாநுஷ்டாநத்திற்கு இன்றியமையாத சரீரத்தைப் போஷிக்க வேண்டியது அவசியமே; இதுவரை நான் போஷித்து வந்தது பயன்பெறாதொழிந்தது; இப்போது அங்ஙனன்றியே பயன்பெற்றதாயிற்று என்று மகிழ்ந்து பேசினாராயிற்று. .... (௯)

நன்னீர் வயல்புடைசூழ் நறையூர்நின்ற நம்பியை *
கன்னீர மால்வரைத்தோள் கலிகன்றி மங்கையர்கோன் *
சொன்னீர சொல்மாலை சொல்லுவார்கள் * சூழ்விசும்பில்
நன்னீர்மையால் மகிழ்ந்து நெடுங்காலம் வாழ்வாரே.* (௰)

நல் நீர்	நல்ல நீரையுடைய
வயல்	கழனிகளாலே
புடை சூழ்	நாற்புறமுஞ் சூழப்பட்ட
நறையூர்	திருநறையூரில்
நின்ற	நித்யவாஸம் செய்தருள் நின்ற
நம்பியை	எம்பெருமான் விஷயமாக,
கல் நீர மால் வரை தோள்	ஒலிக்கின்ற அருவிநீரையுடைய பெரிய மலை போன்ற திருத்தோள்களையுடையவரும்
மங்கையர் கோன்	திருமங்கைநாட்டிலுள்ளார்க்குத் தலைவருமான
கலிகன்றி	திருமங்கையாழ்வார் (அருளிச்செய்த)
சொல் நீர	கொண்டாடிச் சொல்ல வேண்டுவதையே ஸ்வபாவமாகவுடைய
சொல் மாலை	இச்சொல்மாலைகளை
சொல்லுவார்கள்	கற்பவர்கள்
சூழ் விசும்பில்	பெரிய திருநாட்டில்
நல் நீர்மையால்	(நித்யகைங்கர்யமாகிற) சிறந்த ஸ்வபாவத்தோடு கூடி
நெடுங்காலம்	சாச்வதமாக
மகிழ்ந்து வாழ்வார்	பரமாநந்தங்கொண்டு வாழப்பெறுவர்.

* * *— நீர்வளம் பொருந்திய வயல்களால் சூழப்பட்ட திருநறையூரிலெழுந்தருளியிருக்கு மெம்பிரான் விஷயமாகத் திருமங்கை யாழ்வாரருளிச்செய்த இத்திருமொழியை ஓதுமவர்கள் நித்யவிபூதியிற் சென்று நித்யாநந்தமநுபவிக்கப் பெறுவர்களென்று பயனுரைத்தாராயிற்று.

கல்நீர— ‘நீர’ என்றது நீர்மையை [ஸ்வபாவத்தை] யுடைய என்றபடி. ‘நீர்மை’ என்னும் பண்புப் பெயரில் ஈறுபோயிற்று; அ— குறிப்புப் பெயரெச்ச விகுதி. ‘சொல் நீர’ என்பதிலும் இங்ஙனமே கொள்க. சொல்—கொண்டாடிச் சொல்லப்படுவதை, நீர—இயற்கையாகவுடைய என்றபடி. “இத்தையநுஸந்தித்தார்க்கு ‘இதொரு சப்தமே!’ என்று கொண்டாடுமிதுவே ஸ்வ

பாவமாம்படியிருக்கிற சொல்தொடையை" என்பது பெரியவாச்சான் பிள்ளை வியாக்கியான ஸ்ரீ ஸூக்தி. .... (௧௦)

அடிவரவு:—புள் ஓடா எம்மானும் சிறியாய் நீண்டாய் எந்தாதை மன் எப்போதும் ஊனேர் நன்னீர் சினவில்.

இரண்டாந்திருமொழி உரை முற்றிற்று.

ஜீயர் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஏழாம்பத்து — மூன்றாந் திருமொழி,

சி ன வி ற் செ ங் க ண்.

[இதுவும் திருநறையூர்த் திருப்பதிகம்.]

உரையவதாரிகை:— கீழ்த் திருமொழியில் "ஊனேராக்கைதன்னை உழக் தோம்பி வைத்தமையால்—நானே யெய்தப்பெற்றேன்" என்றாரே; அப்படி எய்தப்பெற்ற பெருமையைப் பாக்க அருளிச்செய்கிறாரித்திருமொழியில். *

சினவில்செங்க ணரக்க ருயிர்மாளச்
செற்றவில்லியென்று கற்றவர்தந்தம்
மனமுள்கொண்டு * என்றுமெப்போதும் நின்றேத்தும்
மாமுனியை மரமேழெய்த மைந்தனை *
நனவில்சென்றார்க்கும் நண்ணற்கரியானை
நானடியேன் நறையூர்நின்றநம்பியை *
கனவிற்கண்டேனின்று கண்டமையால் என்
கண்ணிணைகள் களிப்பக் களித்தேனே. (௧)

சினம் இல்	கோபத்துக்கு இருப்பிடமாய்	மனம் உள் கொண்டு	நெஞ்சிலே தியானித்து
செம் கண்	சிவந்தகண்களையுடையரான	என்றும் எப்போதும்	எக்காலத்திலும் எல்லா நிலைமைகளிலும்
அரக்கர்	ராக்ஷஸர்கள்	நின்று	நிலைநின்று
உயிர் மாள	உயிரிழந்து முடியும்படியாக	ஏத்தும்	தோத்திரம்பண்ணும்படியாகவுள்ளவனும்
செற்ற	சீறின		
வில்லி என்று	வில்லையுடையவனே! என்று	மா முனியை	(அடியார்திறத்தில் இன்னமும் என் செய்வோமென்று) நெடிய சிந்தனைகளைச் செய்பவனும்
கற்றவர்	அறிவுடையவர்கள்		
தம் தம்	தங்கள் தங்களுடைய		

ஏழ் மரம் எய்த	ஸப்தஸால விருக்ஷங்களை அம்பு எய்து துளைபடுத்தின
மைந்தனை	மிடுக்குடையவனும்
கனவில் சென்றார்க்கும்	கண்மலரப்பெற்றவர்களான சிறந்தஞானிகட்கும்
கண்ணற்கு அரியானை	கிட்டக் கூடாதவனுமான
கறையூர் நின்ற நம்பியை—;	
அடியேன் நான்	அடியேனாகிய நான்
கனவில்	மாநஸாநுபவத்தில்
இன்று கண்டேன்	இன்றுகாணப்பெற்றேன் ;
கண்டமையால்	காணப்பெற்றதனால்
என் கண் இணைகள்	எனது இரண்டு கண்களும்
களிப்ப	ஸந்தோஷிக்க
களித்தேன்	நானும் ஸந்தோஷித்தேன்.

* * *—திருநறையூர் நம்பியைக் கண்டுகளிக்கப் பெற்றேனென்கிறார். சில விசேஷணங்களால் நம்பியை விசேஷிக்கிறார் சினவிற் செங்கணென்று தொடங்கி. ஆச்ரித விரோதிகளை அழியச் செய்து பக்தர்களைப் பாதுகாத்தருள்பவனென்று கற்றவர்களால் கொண்டாடப் படுகின்றானென்பது முதல் விசேஷணத்தின் கருத்து. கண்ட காட்சியிலே மஹா கோபிஷ்டர்களென்று தோன்றும் படியான கண்களை யுடையரான ராவணாதி ராக்ஷஸர்களை யொழித்த வில்லாள னென்று ஒவ்வொரு அன்பரும் தங்கள் தங்கள் நெஞ்சிலே கொண்டு துதிப்பர்களென்க. மாமுனியை என்றது—ஆச்ரிதர்கட்கு எத்தனையோ நன்மைகள் செய்திருந்தும் ஒரு நன்மையும் செய்திலன்போல 'என்ன செய்வோம்!' என்றே நெடுகச்சிந்தித்துக்கொண்டிருப்பவனையென்றபடி. "ஒன்றுண்டு செங்கண்மால் யானுரைப்பது, உன்னடியார்க்கு என்செய்வனென்றே யிருத்தி நீ" என்ற பெரிய திருவந்தாதிப் பாசுரங்காண்க. முநி-மநநஞ்செய்பவன்;(அதாவது)சிந்தித்துக்கொண்டிருப்பவன் தன்னுடைய திறலில் நம்பிக்கை யற்றவர்களுக்கு அரியனசெய்தும் நம்பிக்கையுண்டாக்கு மியல்வினன் என்று காட்டுதற்காக 'மரமேழெய்த மைந்தனை' என்றார். ராமலக்ஷ்மணர்க்கும் ஸுக்ரீவனுக்கும் திருவடி மூலமாகத் தோழமை நேர்ந்த பின்பு, ஸுக்ரீவன் தன் வருத்தத்திற்குக் காரணங்கள் கூற, அது கேட்ட இராமபிரான் 'நான் உனது பகைவனான வாலியை எனது அம்பினால் அழித்து விடுகிறேன், அஞ்சாதே' என்று அபயப்ரதானஞ் செய்யவும் ஸுக்ரீவன் மனந்தெளியாமல் வாலியின் போராற்றலைப்பற்றிப் பலவாறு சொல்லி, முடிவில், வாலி மராமரங்களைத் துளைத்ததையும் துந்துபியின் உடலெலும்பை ஒரு யோஜனை தூரம் தூக்கியெறிந்ததையுங் குறித்துப் பாராட்டிக்கூறி 'இவ்வாறு போராற்றலமைந்தவனை வெல்வது கூடுமோ ?' என்று சொல்ல, அது கேட்ட இளைய பெருமாள் 'உனக்கு நம்புதல் இல்லையாயின் இப்போது என்னசெய்ய வேண்டுவது?' என்ன, ஸுக்ரீவன் 'இராமபிரான் நீறுபூத்த நெருப்புப்போலத் தோன்றினும் வாலியின் வல்லமையை நினைக்கும்போது சங்கை யுண்டாகின்றது ; ஏழு மராமரங்களையும் துளைத்து இந்தத் துந்துபியின் எலும்பையும் இருநூறு விற்கிடை தூரம் தூக்கி

யெறிந்தால் எனக்கு விச்வாஸம் பிறக்கும்' என்று சொல்ல, இராமபிரான் அதற்கு இசைந்து துந்துபியின் உடலெலும்புக் குவியலைத் தனது காற்கட்டை விரலினால் இலேசாய்த்தூக்கிப் பத்து யோஜனை தூரத்திற்கு அப்பால் எறிய, அதனைக் கண்ட ஸுக்ரீவன் 'முன்பு உலராதிருக்கையில் வாலி இதனைத் தூக்கி யெறிந்தான், இப்போது உலர்ந்து விட்ட இதனைத் தூக்கியெறிதல் ஒரு சிறப் பன்று' என்று கூற, பின்பு இராமபிரான் ஒரு பாணத்தை ஏழு மராமரங்களின் மேல் ஏவ, அது அம்மரங்களைத் துளைத்ததோடு ஏழுலகங்களையுந் துளைத்துச் சென்று அம்பறாத்தூணியை யடைந்ததென்ற வரலாறு இங்கு அறியத்தக்கது. (மராம்—ஆச்சாமரம்.)

நனவில் சென்றார்க்கும் நண்ணற்கு அரியானை = கனவுக்கு எதிர்த்தட்டானது நனவு எனப்படும்; தெளிவைச் சொன்னபடி. நல்ல தெளிவிலே யிருப்பவர்களான ஸநக ஸநந்தநாதிகளுக்கும் ஸ்வயத்நத்தாலே கிட்டுதற்கு அருமைப் பட்டிருப்பவனான எம்பெருமானை என்றபடி.

கனவில் கண்டேன் = இங்குக் கனவு என்றது ஸ்வப்நத்தையன்று; தெளிவற்ற மன நிலைமையைச் சொன்னபடி. தெளிந்தவர்களுங் காண முடியாத பெருமானைத் தெளியாத நான் கண்டுகொண்டேனென்கை. அவன் காட்டக் காண்கிறேனாகையாலே இது பொருந்தும். முந்துற நெஞ்சு கண்டது; பின்னைக் கண்களும் கண்டன; அதனால் களிப்படைந்தேன் என்றதாயிற்று. .... (க)

தாய்நினைந்த கன்றேயொக்க என்னையும்
தன்னையே நினைக்கச்செய்து * தானெனக்
காய்நினைந் தருள்செய்யுமப்பனை
அன்றிவ்வையகமுண் டுமிழ்ந்திட்ட
வாயனை * மகரக்குழைக்காதனை
மைந்தனை மதிட்கோவலிடைகழி
யாயனை * அமரர்க்கரியேற்றை என்
அன்பனையன்றி ஆதரியேனே. (உ)

தாய் நினைந்த கன்றே ஒக்க	தன் தாயாகிய பசுவை நினைக்கும் கன்றுபோல
என்னையும்	அடியேனையும்
தன்னையே நினைக்க செய்து	(எம் பெருமானுடைய) தன்னையே சிந்திக்கும்படி பண்ணி
(அதற்கு மேலே)	
தான் எனக்கு ஆய் நினைந்து	எனக்கு வேண்டிய நன்மைகளை யெல்லாம் தானே சிந்தித்து

அருள் செய்யும் அப்பனை	கிருபை பண்ணும் உபகாரகனும்,
அன்று	முன்பொருகாலத்தில்
இ வையகம்	இவ்வுலகத்தை யெல்லாம்
உண்டு	விழுங்கி (பின்பு)
உமிழ்ந்திட்ட	வெளிப்புறப்பட விட்ட
வாயனை	திருப்பவளத்தை யுடையவனும்,

மகரம் குழை காதனை	மகர குண்டலங்களைத் திருச்செவிகளில் அணிந்துள்ளவனும்	அரி ஏற்றை	சிங்கம் போலவும் காளை போலவும் செருக்குத் தோற்ற இருப்பவனும்
மைந்தனை	நித்யயுவாவும்	என் அன்பனை அன்றி	என்னிடத்தில் அன்புடையவனுமான திருநறையூர் நம்பியைத் தவிர்த்து
மதிள் கோவல் இடை கழி ஆயனை	திருமதில்களை யுடைய திருக்கோவலூரிடைகழியில் கோபாலனாய் நிற்பவனும்	ஆதரியேன்	(வேறொருவனை) ஆதரிக்கமாட்டேன்.
அமரர்க்கு	நித்யஸூரிகளினிடையே		

* * *—கன்றானது எப்போதும் தன் தாயையே நினைத்துக் கொண்டிருக்குமாபோலே உலகுக்கெல்லாந் தாயாகிய தன்னையே நான் நினைந்திருக்குமாறு செய்தவனென்கிறார் முதலடியில். 1. "பரந்த சிந்தை யொன்றி நின்று நின்ன பாத பங்கயம், நிரந்தரம் நினைப்பதாக நீ நினைக்கவேண்டுமே" என்கிறபடியே எம்பெருமானது அருளின்றியே அவனை நினைந்திருத்தல் அமையாதாதலால் 'என்னையும் தன்னையே நினைக்கச் செய்து' என்கிறார். நம்முடைய நினைவு மாறினாலும் தான் நினைவுமாறாதே 2. "அஹம் ஸ்மராமி மத்பக்தம் நயாமி பரமாம் கதிம்—அஹம் ஸ்மராமி மத்பக்தம் நயாமி பரமாம் கதிம்" என்றபடியே நம்மை நினைத்திருந்து அருள் செய்பவ னென்கிறது 'தானெனக்காய்நினைந் தருள்செய்யு மப்பனை' என்றதனால். அப்படி எங்கேனுங் கண்டதுண்டோ வென்ன, உலகமெல்லாம் பிரளயாபத்துக்குத் தப்பிப் பிழைக்கும்படி தானே அபேக்ஷா நிரபேக்ஷமாகப் பாதுகாத்தருளின செயல் திருஷ்டாந்தமாகப் போராதோ வென்று அதனை யெடுத்துரைக்கின்றார் அன்றிவ்வையகமுண் டுமிழ்ந்திட்ட வாயனை என்று.

அப்படி அவன் உதவி செய்தருளாதே நம்மை உபேக்ஷிப்பவ னென்றே வைத்துக் கொண்டாலும், விடக்கூடாத அழகு படைத்தவன் காண்மின் என்கிறார் மகரக் குழைக்காதனை என்பதனால். * மின்னு மணிமகர குண்டலங்கள் வில்வீச நிற்கு மழகுக்குத் தோற்றுப் பேசுகிறபடி. "பிரளயத்திலே தள்ளிலும் விடவொண்ணாத வடிவழகை யுடையவனை" என்பர் பெரியவாச்சான் பிள்ளையும். **மைந்தன்**—எப்போதும் யௌவனமேயா யிருப்பவன்.

மதிட்கோவ லிடைகழி யாயனை="பாவருந் தமிழாற் பேர்பெறு பனுவற் பாவலர் பாதி நாளிரவின், மூவரு நெருக்கி மொழிவிளக்கேற்றி முகுந்தனைத் தொழுத நன்னாடு" என்று புகழ்ந்து கூறும்படி முதலாழ்வார் [—பொய்கையார் பூதத்தார் பேயார்] மூவரும் ஒருவரை யொருவர் சந்தித்துத் திருவந்தாதிகள் பாடினதலம் திருக்கோவலூர் என்பது ப்ரஸித்தம். "நீயுந் திருமகளும் நின்றாயால், குன்றெடுத்துப்பாயும் பனிமறுத்த பண்பாளா!, வாசற்கடைகழியாவுள்புகாக் காமர் பூங்கோவல், இடைகழியே பற்றியினி" [முதல் திருவந்தாதி—86.] என்ற பொய்கையார் பாசுரத்தைத் திருவுள்ளம்பற்றிப் பெரிய

1. திருச்சந்த விருத்தம் 101. 2. வாராஹ சரமச்லோகம்.

வாச்சான் பிள்ளை வியாக்கியானத்தில்—"உகந்தார் நடுவே புகுந்து நெருக்கு மவனை" என்றருளிச் செய்யப்பட்டுள்ள வாக்கியம் அநுஸந்திக்கத் தக்கது. வடமொழியில் 'தேஹளீ' என்னப்படும் உலகவழக்கில் 'ரேழி' என்னப்படும் வருகிற ஸ்தாநமே இடைகழியாம். திருக்கோவலூ ரெம்பெருமானுக்கு தேஹளீசன்' என்பதும் ஒரு திருநாமம்.

அமரர்க்கு அரியேற்றை=வடநூலார் ஸிம்ஹः வ்ருஷப: என்னும் சொற்களை ச்ரேஷ்ட பர்யாயமாகப் பிரயோகிக்கும் முறைமை இங்கு உணரத்தக்கது.

வந்தநாள் வந்தென் நெஞ்சிடங்கொண்டான்
மற்றோர்நெஞ்சறியான் * அடியேனுடைச்
சிந்தையாய்வந்து தென்புலர்க்கென்னைச்
சேர்கொடானிது சிக்கெனப்பெற்றேன் *
கொந்துலாம் பொழில்சூழ் குடந்தைத்தலைக்
கோவினைக் குடமாடியகூத்தனை *
எந்தையை யெந்தைதந்தைதம்மானை
எம்பிரானை யெத்தால் மறக்கேனே? (௫)

வந்த நாள் வந்து	தானாகவே என்னை ஸ்வீகரிக்க எழுந்தருளின நாளிலே எழுந்தருளி
என் நெஞ்சு	எனது நெஞ்சை
இடம் கொண்டான்	இருப்பிடமாகக் கொண்டான்;
மற்று ஓர் நெஞ்சு அறியான்	வேறொருவருடைய நெஞ்சையும் தனக்கு இருப்பிடமாக நெஞ்சிலும் நினைக்கின்றிலன்;
அடியேனுடை	அடியேனுடைய
சிந்தை ஆய் வந்து	மநோரதங்களைத் தானுடையனாய் வந்து
என்னை	அடியேனை
தென்புலர்க்கு சேர் கொடான்	யமபடர்கையில் காட்டிக் கொடாதே விஷயீகரித்தருளினன்;
இது	இதனை
சிக்கென	திடமாக
பெற்றேன்	லபித்தேன்; (ஆனபின்பு.)
கொந்து உலாம் பொழில் சூழ்	பூங்கொத்துக்கள் நிறைந்த சோலைகளினால் சூழப்பட்ட
குடந்தைத் தலை	திருக்குடந்தையில் (எழுந்தருளியுள்ள)
கோவினை	ஸ்வாமியும்
குடம் ஆடிய கூத்தனை	குடக் கூத்தாடினவனும்
எந்தையை	எனக்குத் தந்தையும்
எந்தை தந்தை தம்மானை	என் முதுகுரவர்க்கும் ஸ்வாமியுமான
எம்பிரானை	(திருநறையூர்) நம்பியை
எத்தால்	எக்காரணம் பற்றி
மறக்கேன்	மறப்பேன் [மறக்கமுடியாது.]

* * *—எம்பெருமானை யடியேன் மறப்பதற்கு ஒரு ஹேதுவுமில்லையே, எப்படி மறப்பே னென்கிறார். 'வந்தநாள் வந்து என்னெஞ்சிடங் கொண்டான்'= எம்பெருமான் தம்முடைய நெஞ்சினுள் வந்து சேர்வதற்கு உறுப்பாகத் தாம் ஒரு முயற்சிசெய்து கைம்முதலுடையரா யிருந்தால் இன்னநாளிலே வந்து சேர்ந்தா

னென்று தாம் சொல்லக்கூடும்; அங்ஙனன்றியே எம்பெருமான் தானாகவே தன் பேருகவே வந்துசேரக் கண்டவராதலால் 'வந்தநாள் வந்து' என்கிறார்.—"ப்ரதம ஸ்வீகாரத்துக்கு முன்பு தாமிட்டது ஒரு பச்சையுண்டாய் அதுக்கு உபகரித்தானாகிலிறே இன்னா னென்னலாவது; அங்ஙனன்றிக்கேயிருக்கையாலே ப்ரதம ஸ்வீகாரத்தை 'வந்தநாள்' என்னு மித்தனையாய்த்துச் சொல்லலாவது" என்பது பெரியவாச்சான்பிள்ளை வியாக்கியான ஸ்ரீஸூக்தி. தானாகவே வந்து என்னை விஷயீகரித்து என்னெஞ்சைத் தனக்கு இருப்பிடமாகக் கொண்டருளின பின் திருவடி திருவனந்தாழ்வான் முதலானார் பக்கலிலும் போவானா யிருக்கின்றிலன்; அன்றியும், 'ஒழிவில் காலமெல்லா முடனாய் மன்னி வழுவிலா வடிமை செய்யவேண்டும்' என்று நான் கொண்டிருக்கும் மநோரதங்களைத் தான் உடையனாய்க் கொண்டு, யமபடர் கையிலே யகப்பட்டு நலிவுபடவேண்டிய பாவங்கள் பலவற்றையும் நான் செய்திருக்கச்செய்தேயும் என்னை அந்த நமன்றமர் கையிலே காட்டிக்கொடாமல் தானே நித்ய கைங்கரியங் கொள்ளா நின்றான். இப்பேறுதான் அவனுடைய நிர்ஹேதுகமான திருவருளடியாகக் கிடைத்ததாகையாலே இதற்கு ஒரு நாளும் குலைதல் இல்லை யென்னும்படி பெற்றேன் என்கிறார் முன்னடிகளில்.

எப்போதும் வஸந்தகாலமாகவே யிருந்துள்ள சோலைகளாலே சூழப்பட்ட திருக்குடந்தையிலே சாய்ந்தருளித் தன்னுடைய ஸர்வ ஸ்வாமித்வத்தை விளங்கக் காட்டிக் கொண்டிருப்பவனும், க்ருஷ்ணாவதாரத்திலே மன்றில் குடக் கூத்தாடித் தன் வடிவழகை ஸர்வஸ்வதானம் செய்தவனும், அடியேனுடைய குலத்துக்கெல்லாம் நாதனா யிருப்பவனுமான எம்பிரான் பக்கலிலே அடியேன் பரமோபகாரம் பெற்று வைத்து, இனி மறப்பதற்கு என்ன ப்ரஸக்தியுண்டு? ஒரு நாளும் ஒரு ஹேதுவாலும் மறவேன் என்கிறார் பின்னடிகளில்.

எத்தால் மறக்கேன்?— அவன் செய்தருளின உபகாரம் ஸ்வல்பமா யிருந்தால் மறக்கலாம்; பெற்ற உபகாரத்திற்கு ஏதேனும் கைம்மாறு செய்திருந்தாலும் மறக்கலாம்; ஒன்றுமில்லையா யிருக்க எங்ஙனே மறப்பது? .... (ங)

உரங்களாலியன்ற மன்னர்மாளப்
பாரதத்தொருதே ரைவர்க்காய்ச்சென்று *
இரங்கியூர்ந்தவர்க் கின்னருள்செய்யும்
எம்பிரானை வம்பார்புனல்காவிரி *
அரங்கமாளி யென்னாளிவிண்ணாளி
ஆழிசூழிலங்கை மலங்கச்சென்று
சரங்களாண்ட * தண்டாமரைக்கண்ணனுக்கன்றி
என்மனம் தாழ்ந்துநில்லாதே. (ச)

உரங்களால் இயன்ற மன்னர் மாள — மிடுக்கினால் மிக்க துரியோத னாதியரசர்கள் தொலையும்படி | பாரதத்து — பாரதயுத்தத்திலே
ஐவர்க்கு ஆய் சென்று — பஞ்சபாண்டவர்க்குத் துணையாயெழுந்தருளி

இரங்கி	(அவர்கள் விஷயத்தில்) மனமிரங்கி
ஒரு தேர் ஊர்ந்து	(அவர்களுடையதான) ஒரு தேரை ஸாரதியாயிருந்து நடத்தி
அவர்க்கு	அப்பாண்டவர்க்கு
இன் அருள் செய்யும் எம்பிரானை	பரம கிருபையைச் செய்தருளின ஸ்வாமியும்
வம்பு ஆர் புனல் காவிரி	புதுமைமிக்க தீர்த்தத்தை யுடைய திருக்காவேரியால் சூழப்பட்ட
அரங்கம்	திருவரங்கம் பெரியகோயிலை
ஆளி	ஆள்பவனும்
என் ஆளி	என்னையாள்பவனும்
விண் ஆளி	பரமபதத்துக்குத்தலைவனும்,
ஆழி சூழ்	கடல் சூழ்ந்த
இலங்கை	லங்காபுரியானது
மலங்க	வியாகுலமாகும்படி
சென்று	அங்கெழுந்தருளி
சரங்கள் ஆண்ட	அம்புகளை நடத்தின
தண் தாமரை கண்ணனுக்கு அன்றி	குளிர்ந்த தாமரைப் பூப் போன்ற திருக்கண்களை யுடையனுமான திருநறையூர் நம்பிக்கல்லது (மற்றொருவர்க்கு)
என் மனம்	என் மனமானது
தாழ்ந்து இல்லாது	நைச்சியம் வஹித்திருக்க மாட்டாது.

* * *— க்ருஷ்ணாவதார முகத்தாலும் ராமாவதார முகத்தாலும் மண்ணில் பாரங்களை நீக்கியருளின மஹாநுபாவனுக்கன்றி மற்றொருவன் விஷயத்திலே என்னெஞ்சு தாழாது என்கிறார். * மலைபுரைதோள் மன்னவரும் மாரதரும் மற்றும் பலர் குலைய நூற்றுவரும் பட்டழியப் பார்த்தன் சிலைவளையத் திண் தேர்மேல் முன்னின்று அருள் செய்தமையை முன்னடிகளிற் கூறுகின்றார்.

பாண்டவர் துரியோதனாதியர் என்ற இரு வகுப்பினரையும் ஸந்தி செய்விக்கத் திருவுள்ளம் பற்றின கண்ணபிரான் துரியோதனாதியரிடம் தூதாகச் சென்று 'பாண்டவர்களும் நீங்களும் பகைமை கொள்ளவேண்டா; ராஜ்யத்தில் இருவர்க்கும் பாகமுண்டு; ஆதலால் ஸமபாகமாகப் பிரித்துக்கொண்டு ஸமாதானமாக அரசாட்சி செய்து வாழுங்கள்; அதற்கு ஸம்மதியில்லாவிடில் தலைக்கு இரண்டிரண்டு ஊராகப் பாண்டவர் ஐவர்க்கும் பத்து ஊரைக் கொடுங்கள்; அதுவும் அநிஷ்டமாகில் பாண்டவர்கள் குடியிருக்கும்படி ஓரூரையாவது கொடுங்கள்' என்று பலபடி அருளிச்செய்ய, அந்தச் சொல்லுக்குச் சிறிதும் ஸம்மதியாமல் 'பராக்ரமமிருந்தால் போர்செய்து ஜயித்துக்கொள்ளட்டும், இந்தப்பூமி வீரர்க்கே உரியது' என்றிப்படி திரஸ்காரமாக மறுத்துச் சொல்லவே, தான் பாண்டவ பக்ஷபாதியாயிருந்து எதிரிகளைத் தோற்பித்தனனென்க. துரியோதனாதியர் போர்புரிய வந்தது தருமபுத்தியாலல்லாமல் 'வலிமையுடையோம் நாம்' என்கிற கொழுப்பினாலாதலால் 'உரங்களாலியன்ற மன்னர்' எனப்பட்டது. உரம்— வலி. 'உரங்கள்' என்ற பன்மை அவிவக்ஷிதம்; உரத்தினால் என்றபடி.

'சரங்களாண்ட' என்றது "வில்லாண்டான்றன்னை" என்றாற்போலே; 'சத்துருக்களைக் காட்டு, காட்டு' என்று விம்மிக் கிளம்புகின்ற அம்புகளை அடக்கியாள்பவனென்க. "சரங்களாண்ட தண்டாமரைக் கண்ணன்" என்ற சேர்க்கையினால்—தாமரைக் கண்களின் கடாக்ஷத்திற்கு இலக்காகி உய்ந்துபோகப் பெறாதே அம்புகட்கு இலக்காகி மாண்டுபோயினரே பாவிகள்! என்ற பரிதாபந்

தோன்றும். இப்படிப்பட்ட எம்பெருமான் விஷயத்திலே "ந நமேயம்—தாழமாட்டேன்" என்று மார்பு நெறித்து மாண்டொழிந்தனர் ஆஸுர ப்ரக்ருதிகள்; என் மனம் அங்ஙனன்றியே தாழ்ந்து நின்று உய்வுபெறும் என்றதாயிற்று. (௪)

ஆங்குவெந்நரகத் தழுந்தும்போது
அஞ்சேலென் றடியேனை யங்கேவந்து
தாங்கு * தாமரையன்னபொன்னாரடி
யெம்பிரானை உம்பர்க்கணியாய்நின்ற *
வேங்கடத்தரியைப் பரிகீறியை
வெண்ணெயுண் டுரலினிடையாப்புண்ட
தீங்கரும்பினை * தேனைநன்பாலினையன்றி
என்மனம் சிந்தைசெய்யாதே. (௫)

ஆங்கு வெம் நரகத்து	அப்படிப்பட்ட கொடிய நரகங்களிலே
அழுந்தும் போது	அழுந்தி நோவுபட நேர்ந்தகாலத்து
அங்கே வந்து	அவ்விடங்களில் வந்து
அஞ்சேல் என்று	பயப்படவேண்டாவென்று
அடியேனை தாங்கு	அடியேனைப் பாதுகாத்தருள்கின்ற
தாமரை அன்ன பொன் ஆர் அடி	தாமரைபோன்ற அழகு மிக்க திருவடிகளையுடையனும்
எம்பிரானை	எமக்கு உபகாரகனும்
உம்பர்க்கு அணி ஆய் நின்ற	மேலுலகங்கட்கெல்லாம் அலங்காரமாயிருக்கின்ற
வேங்கடத்து	திருமலையில் எழுந்தருளியிருக்கிற
அரியை	சிங்கம் போன்றவனும்
பரி கீறியை	குதிரையுருவாய் வந்த அசுரன் வாயைக் கிழித்தவனும்
வெண்ணெய் உண்டு	வெண்ணெயை (க் களவாடி) அமுது செய்து
உரலினிடை	உரலோடேகூட
ஆப்புண்ட	கட்டுண்டிருந்தவனும்
தீம் கரும்பினை	மதுரமான கருப்பஞ்சாறு போன்றவனும்
தேனை	தேன்போன்றவனும்
நன் பாலினை அன்றி	இனிய பால்போன்றவனுமான திருநறையூர் நம்பியையல்லது (மற்றொருவனை)
என் மனம்	எனது நெஞ்சானது
சிந்தை செய்யாது	நினைக்கமாட்டாது.

* * *— பலவகைகளாலும் கனக்கப் பாவங்களைப்பண்ணி அவற்றின் பலன்களை யநுபவிக்கக் கொடிய நரகங்களிலே சென்று நோவுபடுங்கால், 'தான் பண்ணின பாவங்களின் பலனைத் தான் அநுபவிக்கட்டும்; நமக்கு வந்ததென்ன?' என்றிராமல் அங்கே யெழுந்தருளி 'நாம் இருக்க நீ பாபங்களின் பலனை அநுபவிக்க ப்ராப்தியுண்டோ? அஞ்சாதே' என்று அபயப்ரதானம்பண்ணி ரக்ஷித்தருளு மெம்பிரானையே என்மனம் சிந்திக்கின்றதென்கிறார்.

நரகத்திலே அழுந்தும்போது அங்கே வந்து தாங்குவதாகச் சொல்லுகிறவிதற்குக் கருத்து என் எனில்;? * தென்னவன் தமர் செப்பமிலாதார் சேவதக்

குவார் போலப் புகுந்து பின்னும் வன்கயிற்றால் பிணித்தெற்றிப் பின் முன்னாக விழுப்பதாகிற யமதண்டனைகளை யநுபவித்துக் கொண்டிருக்கையில் எம்பெருமான் அங்கே வந்து காத்தருள்கின்றா னென்கிறதன்று; 'ஐயோ! நாம் எல்லையில்லாத பாவங்களைப் பண்ணிவிட்டோமே; வெவ்விய நரகங்களிலே சென்று கொடிய துன்பங்களை யநுபவிக்க நேருமே, என் செய்வோம்!' என்று கவலைப்பட்டு வருந்தியிருக்கு மிருப்பிலே வந்து அபயப்ரதானம் பண்ணும்படியைச் சொன்னவாறு.

உம்பர்க்கு அணியாய்நின்ற வேங்கடத்தரியை='உம்பர்' என்பது மேலுலகத்திற்கும் மேலுலகத்திலுள்ளவர்க்குப் பெயர். 'மேலுலகங்களுக்கு அலங்காரமாய் நின்ற' என்று பொருள்கொண்டு வேங்கடத்திற்கு விசேஷணமாக வுரைக்கலாம்; 'நித்யஸூரிகளுக்கு அலங்காரபூதனாய் நின்ற' என்று பொருள்கொண்டு வேங்கடத்தரிக்கு விசேஷணமாகவு முரைக்கலாம். முந்தின நிர்வாஹத்தில், திருவேங்கடமலை விண்ணுலகம்வரை ஓங்கியிருக்கின்றதென்கிற அதிசயோக்தி வெளியாம்; பிந்தின நிர்வாஹத்தில், நித்யஸூரிநிர்வாஹகனா யிருக்குமவன் அவர்களை விட்டு நம்போலியர்க்கு முகங்கொடுக்கத் திருமலையிலே வந்திருக்கிறானென்பது வெளியாம். அரி-ஹரி.

பரி கீறியை = கண்ணபிரானைக் கொல்லுமாறு கம்ஸனால் ஏவப்பட்ட அஸுரர்களில் கேசி யென்பவன் குதிரையி னுருவத்தோடு ஆயர்கள் அஞ்சி நடுங்கும்படி கனைத்துத் தூத்திக்கொண்டு கண்ணபிரான்மேற் பாய்ந்துவர, அப்பெருமான் தன் திருக்கையை நன்றாகப் பெருக்கி நீட்டி அதன் வாயிற் கொடுத்துத் தாக்கிப் பற்களையுதிர்த்து உதட்டைப்பிளந்து அதனுடம்பையும் இரு பிளவாக வகிர்ந்து தள்ளினனென்ற வரலாறு அறிக.

உரலினிடை ஆப்புண்ட தீங்கரும்பினை=ஒரு கரும்பு உரலினிடை ஆப்புண்டதென்கிறார்; உரலிலே கட்டுண்டவன் கண்ணபிரானல்லன்; ஒரு கரும்பு தான் கட்டுண்டது என்கிறார் போலும். உரலில் கட்டுண்ட நிலைமையிலே அவனுடைய ஸௌலப்யம் வெளியானபடியைத் திருவுள்ளம்பற்றி இங்ஙனே அருளிச்செய்கிறபடி. யசோதையானவள் கண்ணிநுண் சிறுத்தாம்பினால் கண்ணனை உரலோடிணைத்துக் கட்ட முடியாமல் வருந்தி நிற்குமளவிலே தன் திருமேனியைத் தானே சிறுக்கடித்துக்கொண்டு கட்டுண்டு தனது ஸௌசீல்ய ஸௌலப்யாதி குணங்களை வெளியிட்டுக்கொண்ட ஸௌலப்யத்திலே ஆழ்வாருடைய திருவுள்ளம் சென்றதாயிற்று. .... (௫)

எட்டனைப்போழுதாகிலும் என்று
மென்மனத்தகலா திருக்கும்புகழ் *
தட்டலர்த்த போன்னேயலர்கோங்கின்
தாழ்போழில் திருமாலிருஞ்சோலையங்

கட்டியை, கரும்பீன்ற வின்சாற்றைக்
காதலால்மறைநான்கும் முன்னோதிய
பட்டனை * பரவைத்துயிலேற்றை என்
பண்பனையன்றிப் பாடல்செய்யேனே. (கூ)

என் தனை பொழுது ஆகிலும்	என்னத்தனை கொடிப் பொழுதுங்கூட
என் மனத்து அகலாது	என் மனத்தைவிட்டுப் பிரியாமல்
என்றும்	எக்காலத்தும்
இருக்கும்	என்மனத்தே யிருக்கையினாலாகிய
புகழ்	கீர்த்தியையுடையவனும்
தட்டு அலர்த்த	தட்டைப்போலே விகஸிப்பிக்கப்பட்ட
பொன் ஏய் அலர்	பொன்போன்ற அலரை யுடைத்தான
கோங்கின்	கோங்குமரங்களினுடைய
தாழ் பொழில்	தழைத்த தோப்புகளையுடைய
திருமாலிருஞ் சோலை	திருமாலிருஞ்சோலையி லெழுந்தருளியிருக்கிற
அம் கட்டியை	மதுரமான கற்கண்டுபோல் போக்யனாயிருப்பவனும்,
கரும்பு ஈன்ற இன் சாற்றை	கரும்பில் நின்றுமுண்டான இனிய ரஸம்போன்றவனும்,
முன்	முற்காலத்தில்
காதலால்	அன்புடனே
மறை நான்கும்	நால்வேதங்களையும்
ஓதிய	(ஸாந்தீபினி பக்கலில்) அத்யயனம் பண்ணின
பட்டனை	பண்டிதனும்
பரவை	(திருப்பாற்) கடலில்
துயில்	கண்வளர்ந்தருளாநின்ற
ஏற்றை	பரமபுருஷனும்
என் பண்பனை அன்றி	எனக்கு எளியனுமான திருநறையூர்நம்பியைத் தவிர (மற்றொருவனையும்)
பாடல் செய்யேன்	பாடமாட்டேன்.

* * *—"ஒருமா கொடியும் பிரியான்" என்னுமாபோலே க்ஷணகாலமும் என்னெஞ்சை விட்டுப் பிரிகிறதில்லையென்னுமிதுவே காரணமாகப் பெரும்புகழோங்கப் பெற்றவனும் திருமாலிருஞ் சோலையில் பரமபோக்யமாக ஸேவை ஸாதிப்பவனும் கருப்பஞ்சாறு போலே ரஸமயனாயிருப்பவனும், க்ருஷ்ணாவதாரத்தில் ஸாந்தீபிநி யென்னுமோர் அந்தணன்பாலே நான்கு வேதங்களையுமோதிப் பாண்டித்யம் பெற்றவனும் திருப்பாற்கடலிலே துயில்கொள்பவனும் தனது திருக்குணங்களையெல்லாம் என்னை யநுபவிப்பித்தவனுமான திருநறையூர் நம்பியைத் தவிர்த்து மற்றொருவனையும் பாடமாட்டேனென்கிறார்.

எள் + தனை, எட்டனை; மிகச்சிறிய அளவுக்கு எள்ளை உவமை கூறுவதுண்டு; க்ஷணகாலமும் என்றபடி.

தட்டலர்த்த பொன்னேயலர்கோங்கு = திருமாலிருஞ் சோலை மலையை வருணிப்பவர்களனைவரும் அங்கே கோங்குமரங்கள் விசேஷமாயுள்ளனவாக வருணிப்பர்கள்; "கோங்குநின்று பொன்னரிமாலைகள் சூழ்பொழில் மாலிருஞ் சோலையதே" என்றார் பெரியாழ்வார்; "கோங்கலரும் பொழில் மாலிருஞ்

சோலை" என்றாள் சூடிக்கொடுத்த சுடர்க்கொடி. கோங்குமலர் பொன்போன்ற நிறமுடையது; மலர்ந்தால் பொன் தட்டுப்போல விருக்கும்; ஆகவே "தட்டலர்த்த பொன்னேயலர் கோங்கின்" எனப்பட்டது.

'மறைநான்கும் முன்னோதிய பட்டனை' என்பதற்கு "யோ ப்ரஹ்மாணம் விதயாதி பூர்வம் யோ வை வேதாம்ஶ்ச ப்ரஹிணோதி தஸ்மை" என்கிற சுருதியின்படியே நான்முகனுக்கு நான்மறைகளையும் உபதேசித்தவனை என்று பொருள் கொள்ளவுமாம். அப்போது, 'ஓதிய' என்பதற்கு 'ஓதுவித்த' என்ற பிறவினைப்பொருள் கொள்ளவேணும்.

பட்டன்—பட்டர் என்னும் வடசொல் விகாரம்.

பரவைத்துயிலேற்றை=பரந்திருப்பது பரவை; கடல்; இங்கே திருப்பாற்கடலை நினைக்கிறது. .... (௬)

பண்ணினின்மொழியாழ்நரம்பில்பெற்ற
பாலையாகி யிங்கேபுகுந்து * என்
கண்ணும்நெஞ்சும் வாயுமிடங்கொண்டான்
கொண்டபின்மறையோர்மனந்தன்னுள் *
விண்ணுளார்பெருமானை யெம்மானை
வீங்குநீர்மகரந்திளைக்குங்கடல்
வண்ணன் * மாமணிவண்ண னெம்மண்ணல்
வண்ணமேயன்றி வாயுரையாதே. (எ)

பண்ணின் — இராகங்களுக்குள்ளே
இன் — இனிமையான
மொழி — சொல்லையுடைய
யாழ் — வீணையினுடைய
நரம்பில் — தந்திகளில்
பெற்ற — உண்டான
பாலை ஆகி — பாலையென்கிற சிறந்த பண்போலே மிக இனியனாய்க்கொண்டு
இங்கே புகுந்து — என்னெஞ்சில் வந்து புகுந்து
என் கண்ணும் நெஞ்சும் வாயும் இடம் கொண்டான் — எனது அவயவங்களைத் தனக்கு இருப்பிடமாக அங்கீகரித்தான்;
கொண்டபின் — அப்படி அங்கீகரித்தபின்பு,—
மறையோர் — வைதிகர்களினுடைய
மனம் — மனத்தை
தன் உள் — தனது வாஸஸ்தானமாக வுடையவனும்
விண்ணுளார் பெருமானை — நித்யஸூரிகளுக்கு நாதனும்
எம்மானை — எனக்கு ஸ்வாமியும்
வீங்கு நீர் — நிரம்பிய நீரையுடையதாய்
மகரம் திளைக்கும் — மீன்கள் துள்ளிவிளையாடாநின்றுள்ளதான
கடல் — கடல்போன்ற
வண்ணன் — திருநிறத்தையுடையவனும்
மா மணி வண்ணன் — நீலமணி நிறத்தவனும்
எம் அண்ணல் — எமக்கு நாதனுமான திருநறையூர் நம்பியினுடைய
வண்ணமே அன்றி — ஸ்வபாவத்தையே யல்லது (மற்றொன்றை)
என் வாய் உரையாது — என்வாய் சொல்லமாட்டாது.

* * *—என்னுடைய மனமொழி மெய்கள் அவனையல்லது அறியா என்கிறார். எம்பெருமானுடைய விலக்ஷணமான இனிமைக்கு அநுரூபமான த்ருஷ்டாந்தமொன்று இப்பாட்டில் கூறுகின்றார்; "பண்ணினின்மொழி யாழ்நரம்பிற் பெற்ற பாலையாகி"=பாலை யென்றது ஒரு ராகம். வீணையின் தந்தியிலே பாலையென்னும் பண்ணை இசைத்தால் எவ்வளவு இனிமையாயிருக்குமோ அவ்வளவு இனிமையாக என்னுள்ளே புகுந்தானென்கை. "யாழ்நரம்பில் [illegible] பாலையாகி யென்று விசேஷிக்கவேண்டா" [illegible] ஸூக்தி.

இரண்டாமடியி லுள்ள 'கொண்டபின்' என்பதற்கு [illegible]; என் கண்ணிணையும் [illegible] இடம் கொண்டதுதான் [illegible] வாயானது [illegible].

இரண்டாமடியின் முடிவிலுள்ள 'மனத்துள்ளான்' என்பதற்கு 'மனத்திலே' என்று பொருளல்ல; அப்படியாகில் [illegible] மனம்—வைதிகர்களின் திருவுள்ளத்தை, தன்—தனக்கு உரிய, உள்—உள்ளாக இடமாகக் கொண்டவன் என்க.

'கடல்வண்ணன்' என்று சொல்லிவிடாமல் 'விண்குறிர்' என்றும் 'மகரந் திளைக்கும்' என்றும் கடலுக்கு இரண்டு விசேஷணங்களிட்டதன் கருத்தாவதெனில்; கடல் நீர்நிரம்பப் பெற்றிருப்பதுபோல எம்பெருமான் லாவண்யம் நிறைந்தவனென்றும், கடலில் மீன்கள் திளைக்குமாபோலே மீன்போன்ற திருக்கண்கள் திகழப்பெற்றவனெம்பெருமான் என்றும் கொள்க.

வண்ணமேயன்றி=திருமேனி நிறத்தைச் சொன்னதாகவுமாம்; ஆச்ரித வாத்ஸல்யம் முதலிய குணங்களைச் சொன்னதாகவுமாம். .... (௭)

இனியெப்பாவம்வந்தெய்தும்? சொல்லீர்
எமக்கிம்மையேயருள்பெற்றமையால் அடும்
துனியைத்தீர்த் தின்பமேதருகின்றதோர்
தோற்றத்தொன்னெறியை வையந்தொழப்படும்
முனியை வானவரால்வணங்கப்படும்
முத்தினைப் பத்தர்தாம்நுகர்கின்றதோர்
கனியை * காதல்செய்தென்னுள்ளங்கொண்ட
கள்வனை இன்றுகண்டுகொண்டேனே. (அ)

இம்மையே	இஹலோகத்திலேயே	எப் பாவம்	எவ்விதமான பாவம்
அருள் பெற்றமையால்	எம்பெருமானுடைய திருவருளைப் பெற்றேனாதலால்	வந்து எய்தும்	வந்து கிட்டக்கூடும்?
இனி	இனிமேல்	சொல்லீர்	சொல்லுங்கள்;
எமக்கு	எம்மை	அடும்	ஆத்மநாசியைவிளைக்கிற
		துனியை	கருமங்களை

தீர்த்து	தவிர்த்து
இன்பமே	நித்யாநந்தத்தையே
தருகின்றது	தருகின்ற
ஓர் தோற்றம் தொல் நெறியை	ஒப்பற்ற விலக்ஷணமாய் அநாதியான உபாயமா யிருப்பவனும்
வையம்	உலகத்தவர்களால்
தொழப்படும்	ஆச்ரயிக்கப்படுகின்றவனும்
முனியை	(அவர்களுடைய நன்மை களைச்) சிந்திப்பவனும்
வானவரால் வணங்கப்படும்	நித்யஸூரிகளால் வணங்கப்படுகின்ற

முத்தினை	முத்துப்போன்றவனும்
பத்தர் தாம்	பக்தர்களால்
நுகர்கின்றது	உட்கொள்ளப்படுகின்ற
ஓர் கனியை	ஒரு பழம்போன்றவனும்
காதல் செய்து	ஆசையுற்று
என் உள்ளம் கொண்ட	என் நெஞ்சைக் கொள்ளை கொண்ட
கள்வனை	கள்வனுமான பெருமானை

இன்று கண்டுகொண்டேன்—.

* * *—பாசுரந் தொடங்கும்போதே "இனி யெப்பாவம் வந்தெய்தும் சொல்லீர்" என்று கம்பீரமாகத் தொடங்குகிற படிக்கு நோக்கத்தக்கது. இனிப் பரமபதமென்று வேறொரு ஸ்தாநவிசேஷமுண்டென்றும் அங்குப்போய்ப் பெற வேண்டிய பேறு வேறொன்று இருக்கின்றதென்றும் தாம் கொண்டிலாமையைத் தெரிவிக்கின்றார் 'இம்மையே அருள் பெற்றமையால்' என்று. ஸகல பாபங்களும் தொலைந்து பெறவேண்டிய பேறு இப்பிறவிதன்னிலே இவ்வுலகந்தன்னிலே பெறப்பட்டதாதலால் இனி ஒரு பாவமும் என்னை வந்து அணுக ப்ரஸக்தியில்லை யென்கிறார்.

அருந்துயரைத் தீர்த்து—துயர் என்று துன்பத்திற்குப் பெயராயினும் துன்பத்திற்கு மூலகாரணமான கருமம் இங்கே பொருளாகக் கடவது; "அஹம் த்வா ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி" என்ற சரமச்லோகத்தின்படியே ஸகல பாபங்களையுந் தொலைத்தருளி நித்யமான ஆநந்தத்தைத் தந்தருளவல்ல ஸித்தோபாயமான எம்பெருமானைக் கண்டுகொண்டே னென்கிறார். "அம்ருதஸ்யைஷ ஸேது:" இத்யாதி ச்ருதிகளை உட்கொண்டு எம்பெருமானை 'நெறி' என்னுஞ் சொல்லாற் சொல்லுகிறார். தன்னையடைதற்குத் தானே மார்க்கமா யிருப்பானிறே எம்பெருமான். .... (அ)

என்செய்கே னடியேனுரையீர் இதற்கென்று
மென்மனத்தே யிருக்கும்புகழ் *
தஞ்சையாளியைப் பொன்பெயரோன்
நெஞ்சமன் றிடந்தவனைத் தழலேபுரை *
மின்செய் வாளரக்கன்நகர் பாழ்படச்
சூழ்கடல்சிறைவைத் திமையோர்தொழும் *
பொன்செய்மால்வரையை மணிக்குன்றினையன்றி
என்மனம் போற்றியென்னாதே. (கூ)

அடியேன்	பாதந்திரனான நான்
இதற்கு என் செய்கேன்	(அவன் பண்ணின மஹோபகாரமாகிய) இதற்கு என்ன கைம்மாறு செய்வேன்?
உரையீர்	சொல்லுங்கள்;
என்றும்	எக்காலமும்
என் மனத்தே	என்னுள்ளத்திலேயே
இருக்கும்	குடியிருப்பதனாலாகிய
புகழ்	கீர்த்தியையுடையவனும்
தஞ்சை ஆளியை	தஞ்சமாமணிக்கோயிலை ஆள்பவனும்
அன்று	நரஸிம்ஹாவதாரத்தில்
பொன் பெயரோன்	இரணியனுடைய
நெஞ்சம்	மார்பை
இடந்தவனை	பிளந்தொழித்தவனும்
தழலே புரை	நெருப்புப்போன்றவனாய்
மின் செய்	ஒளிவிடுகின்ற
வாள்	வாட்படையை யுடையனான
அரக்கன்	இராவணனுடைய
நகர்	நகரமாகிய இலங்கை
பாழ்பட	பாழாகும்படி
சூழ்	அந்நகரியைச் சூழ்ந்து கொண்டு அகழாயிருந்த
கடல்	கடலை
சிறை வைத்து	அணைகட்டினவனும்
இமையோர் தொழும்	தேவர்களால் ஆச்ரயிக்கப் படுமவனும்
பொன் செய் மால் வரையை	விரும்பத்தக்க பெரிய மலைபோன்றவனும்
மணி குன்றினை அன்றி	நீலமணிமயமான பர்வதம் போன்றவனுமான திருநறையூர் நம்பியைத் தவிர்த்து (மற்றொருவனை நோக்கி)
என் மனம்	என் மனமானது
போற்றி என்னாது	மங்களாசாஸநம் பண்ணமாட்டாது.

* * *—எம்பெருமான் செய்தருளின உபகாரத்திற்குப் ப்ரதியுபகாரம் பண்ணாமலிருக்க முடியவில்லை, பண்ணுவோமென்றாலும் அவனுக்கு நாம் பண்ணலாவதொரு உபகாரமில்லை என்று கொண்டு 'என்செய்கேனடியேனுரையீர்' என்கிறார். எனக்கென்ன ஒரு கைம்முதலில்லாதபடி ஸ்வரூபமே பிடித்து பாதந்திரனான நான் எதைச் செய்வேன் என்பது தோன்ற இங்கு 'அடியேன்' என்றது.

எப்போதும் என்னுடைய ஹ்ருதயத்தை விட்டுப் பிரியாமையால் வந்த புகழையுடையனாய், தஞ்சைமாமணிக்கோயிலிலே நித்ய ஸந்நிதி பண்ணியிருக்குமவனாய், ப்ரஹ்லாதாழ்வான் பக்கலிலே பக்ஷபாதாதிசயத்தாலே இரணியனது மார்பைப் பிளந்தொழித்தவனாய், நெருப்புப்போல் செம்பட்ட வுடம்பையுடைய இராவணனது இருப்பிடமான இலங்காபுரியைச் சுடுகாடாக்குவதற்குக் கடலிலே அணைகட்டி யெழுந்தருளினவனாய், இப்படிப்பட்ட அதிமாநுஷ சேஷ்டிதங்களுக்குத் தோற்றுத் தேவர்களால் வணங்கப்படுமவனாய், அப்படி வணங்கப் பெறுதலால் புகர் பெற்ற வடிவை யுடையனான எம்பெருமானையன்றி மற்றொருவனை என்மனம் வாழ்த்த விரும்பமாட்டாது. ஸம்ஸாரியான நான் நித்யஸூரிகள் பெறும் பேற்றைப் பெற்றேன்; பாதந்திரனாயிருக்கையாலே ப்ரத்யுபகாரம் பண்ணலாவது காண்கின்றிலேன், எதைச் செய்வேன்? சொல்லுங்கோள் என்றாராயிற்று. .... (௬)

தோடுவிண்டலர் பூம்பொழில்மங்கையர்
தோன்றல் வாட்கலியன்திருவாலி
நாடன் * நன்னறையூர்நின்றநம்பிதன்
நல்லமாமலர்ச்சேவடி சென்னியிற்
சூடியும் தொழுதுமெழுந்தாடியும்
தொண்டர்கட் கவன் சொன்னசொல்மாலை *
பாடல்பத்திவை பாடுமின்தொண்டீர்!
பாடநும்மிடைப் பாவம்நில்லாவே (௧௦)

தோடு	இதழ்களானவை
விண்டு	விரிந்து
அலர்	விகஸிக்கப்பெற்ற
பூ பொழில்	பூஞ்சோலைகளையுடைய
மங்கையர் தோன்றல்	திருமங்கை நாட்டிலுள்ளவர்கட்குத் தலைவரும்
திரு ஆலி நாடன்	திருவாலி நாட்டுக்குப் பிரபுவானவரும்
வாள்	வாளையுடையவருமான
கலியன் அவன்	அத் திருமங்கையாழ்வார்
நல் நறையூர் நின்ற நம்பி தன்	திருநறையூர் நம்பியினுடைய
நல்ல மா மலர் சே அடி	அழகிய சிறந்த திருவடித் தாமரைகளை
சென்னியில் சூடியும்	(தமது) தலைமேல் வணிந்துகொண்டும்
தொழுதும்	வணங்கியும்
எழுந்து	எழுந்திருந்து
ஆடியும்	(ப்ரீதிக்குப் போக்குவீடாகக்) கூத்தாடியும்
தொண்டர்கட்கு	பாகவதர்களுக்கு (உஜ்ஜீவனமாக)
சொன்ன	அருளிச்செய்த
சொல் மாலை	சொல் தொடையாகிய
இவை பத்து பாடல்	இந்தப் பத்துப் பாசுரங்களையும்
தொண்டீர்	எம்பெருமானடியார்களே!
பாடுமின்	நீங்கள் ஓதுங்கள்;
பாட	அங்ஙனம் ஓதவே
நும்மிடை பாவம் நில்லா	உங்களிடத்தில் பாவங்கள் நிற்கமாட்டா.

* * *—இத் திருமொழிகற்றார்க்குப் பயனுரைத்துத் தலைகட்டும் பாசுரம் இது. கீழ் ஆரம்பத்தில் "கண்ணுஞ்சுழன்று" என்ற திருமொழி தொடங்கி இத் திருமொழியளவாக நூறு பாசுரங்கள் கொண்ட பத்துத் திருமொழிகளால் திருநறையூர்த் திருப்பதியை மங்களாசாஸநம் செய்தாராயிற்று. திருநறையூர் நம்பிக்கு அஸாதாரணமாகவுள்ள ஒரு தன்மை இங்குத் தொனிக்கின்றது காண்மின்;—திருநறையூர்க்கு 'நாச்சியார் கோயில்' என்னுந் திருநாமமே மிகப்ரஸித்தமாக வழங்கிவருவது. திருவீதிப் புறப்பாடுகளில் நாச்சியார் முன்னே யெழுந்தருளவும் நம்பி பின்னே யெழுந்தருளவுமான ஒரு ஸம்ப்ரதாயமும் காண்கிறோமங்கு. எம்பெருமான் தன்னுடைய மேன்மையை அடக்கிக்கொண்டு தன்னடியார்க்கு மேன்மையைப் ப்ரகாசப்படுத்துகிற திருப்பதி இதுவாதலால், இத் திருப்பதியின் பாடலைத் தலைக்கட்டுகின்ற இப்பாசுரத்தில் எம்பெருமானுடைய அத்தன்மை விளங்க, பாசுரம் தொடங்கும்போதே (மற்ற பலச்ருதிப் பாசுரங்

களிற் போலல்லாமல்) ஆழ்வார் தம்முடைய திருப்புகழை முற்கொண்டு பேசுகிறபடி காண்மின். "தோடு விண்டலர் பூம்பொழில் மங்கையர் தோன்றல் வாட்கலியன் திருவாலி நாடன்" என்னுமளவும் ஆழ்வார் தம்முடைய திருநாம ஸங்கீர்த்தநமேயிறே.

"தொண்டர்க்கு அமுதுண்ணச் சொல் மாலைகள் சொன்னேன்" என்னுமா போலே பக்தர்களுக்கு அம்ருதமாக அருளிச் செய்யப்பட்ட இத்திருமொழியைக் கற்பவர்கள் பக்கலில் பாவமொன்றும் நில்லாது என்றதாயிற்று. (க0)

அடிவரவு:—சிலவில் தாய் வந்த உரங்கள் ஆங்கு எட்டனை பண்ணின் இனி என்செய்கேன் தோடு கண்.

மூன்றாந்திருமொழி உரை முற்றிற்று.

ஜீயர் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஏழாம்பத்து—நான்காந்திருமொழி,

கண்சோர வெங்குருதி.

உரையவதாரிகை:—இது திருச்சேறைத் திருப்பதி மங்களாசாஸநத் திருப்பதிகம். எம்பெருமானுக்கு அடிமைப்படுவதிற் காட்டிலும் பாகவதர்களுக்கு அடிமைப்படுதல் விசேஷம் என்கிற ஸகலசாஸ்த்ர ஸாரப்பொருளை ஸ்ரீஸாரநாதப் பெருமாளுடைய திருவருளால் ஸ்மரிக்கப்பெற்று, அந்த பாகவதபக்தி நிஷ்டையிலே தாம் ஊன்றினபடியை இத்திருமொழியில் வெளியிடுகிறார். இத்திருமொழிக்குத் திருச்சேறைத்திருப்பதி விஷயமாயினும் இப்போது இவர்க்கு உத்தேச்யம் திருச்சேறையன்று; அத்திருப்பதியிலெழுந்தருளியிருக்கிற எம்பெருமானும் உத்தேச்யனல்லன்; அத்திருப்பதியையோ அப்பெருமானையோ இடைவிடாது சிந்திக்கின்ற பாகவதர்களுண்டே, அவர்கள் தாம் உத்தேச்யர் என்பது சொற்போக்கில் வெளியாகின்றது. முடிவில் பயனுரைக்கும் பாசுரத்தில் "தண் சேறையம்மான் றன்னை" என்றருளிச் செய்ததற்கும் ஒரு குறையில்லை;—

ஒருவன் ஒரு வஸ்துவினிடத்தில் அன்பு வைத்தால் அவ்வன்பு அளவற்றதுமாயிருந்தால் அஃது அவ்வஸ்துவோடே நின்றுவிடாமல் அதனோடு ஸம்பந்த ஸம்பந்தம் பெற்ற வஸ்துக்களிலும் பெருகிச் செல்லுமென்பதை அனைவரும் தம் தம் அநுபவத்தாலறிவர். அப்படியே பாகவத பக்தியென்பது பகவத் பக்தியின் எல்லை நிலமாக உண்டாமது. பகவத் பக்தியின் உறைப்பையே பாகவத பக்தி வெளிப்படுத்தும். ஸ்வாமியினுடைய பாதுகைகளிலே நாம் ஆதரம் வைத்து

அவற்றைக் கண்களிலொற்றிக் கொள்வதும் தலைமேலணிந்துகொள்வதும் அலம்பித் தீர்த்தம் பருகுவதும் செய்கிறோம்; இதனால் நமக்கு ஸ்வாமியிடத்துள்ள பக்தி அபாரமானது என்பதேயன்றோ வெளியாகின்றது. அதுபோலவே, 'திருச்சேறையையும் அவ்விடத் தெம்பெருமானையும் பணிகின்ற பாகவதர்களே எனக்கு உத்தேச்யர்' என்று அருளிச்செய்கிற முகத்தால் அத்திருப்பதியினிடத்தும் அப்பெருமானிடத்தும் தமக்குள்ள பக்திப் பெருங்காதலே விளக்கப்பட்டதாமென்றுணர்க.

கீழ் இரண்டாம்பத்தில் திருக்கடன்மல்லைத் திருப்பதியை மங்களாசாஸநம் செய்த "நண்ணாதவாளவுணர்" என்னுந் திருமொழியிலும் இந்த பாகவத நிஷ்டை வெளியிடப் பட்டுள்ளமை இங்கு ஸ்மரிக்கத் தக்கது. .... *

கண்சோர வெங்குருதிவந்திழிய வெந்தழல்போல் கூந்தலாளை *
மண்சேர முலையுண்ட மாமதலாய்! வானவர்தங்கோவேயென்று *
விண்சேருமிளந்திங்க ளகடுரிஞ்சு மணிமாடமல்கு * செல்வத்
தண்சேறை யெம்பெருமான் தாள்தொழுவார்காண்மினென் தலைமேலாரே.

கண் சோர	கண்கள் சுழலமிட்டுத் தளரும்படியாகவும்	விண் சேரும் இள திங்கள்	ஆகாயத்தில் திரிகின்ற பாலசந்திரனுடைய
வெம் குருதி	வெவ்விய ரத்தமானது	அகடு	கீழ்வயிற்றை
வந்து இழிய	வெள்ளமிட்டுப் பெருகவுமாய்	உரிஞ்சு	அளாவுகின்ற
மண் சேர	மாண்டுபோம்படி	மணி மாடம்	திருமாளிகைகள்
வெம் தழல் போல் கூந்தலாளை	நெருப்புப்போல் செம்பட்ட மயிரையுடையவளான பூதனையினுடைய	மல்கு	நிறைந்திருக்கப்பெற்ற
முலை	(விஷங்கலந்த) முலையை	செல்வம்	வளம்மிக்க
உண்ட	உறிஞ்சியுண்ட	தண்	குளிர்ந்த
மா மதலாய்	இளம்பிள்ளையே!	சேறை	திருச்சேறையிலெழுந்தருளியிருக்கின்ற
வானவர் தம் கோவே	தேவாதிதேவனே!	எம்பெருமான்	ஸாரநாதப்பெருமானுடைய
என்று	என்று இவ்வண்ணமாகத் துதிசெய்து,	தாள்	திருவடிகளை
		தொழுவார் காண்மின்	வணங்குமவர்கள் தாம்
		என் தலை மேலார்	என்தலைமேல் வீற்றிருக்க வுரியார்.

* * *—சந்திரமண்டலத்தளவும் ஓங்கியிருக்கின்ற மாட மாளிகைகள் நிறைந்த திருச்சேறையி லெழுந்தருளியிருக்கும் எம்பெருமானை நோக்கி 'பூதனையைமுடித்த சிறுகுழந்தாய்!' என்றும் 'நித்யஸூரிகட்குத் தலைவனே!' என்றும் சொல்லி அவனுடைய பரத்வ ஸௌலப்யங்களைப் போற்றி உருகுகின்ற பாகவதர்கள் எவரோ, அவர்கள் என்தலைமேல் வீற்றிருக்கவுரியார் என்கிறார்.

கண்ணபிரானைத் தொட்டிற் பருவத்திலேயே முடிக்கவந்தவள் பூதனை; இவள் யசோதைப் பிராட்டியைப்போல வடிவெடுத்துவந்தாலும் உண்மையில் அரக்கியாதலால் செம்பட்ட மயிரையுடையளாயிருப்பள்; ஆகவே 'வெந்தழல் போற்கூந்தலாளை' எனப்பட்டது: "கஞ்சன்புணர்ப்பினில் வந்த கருநிறச் செம்மயிர்ப்பேயை" என்றார் பெரியாழ்வாரும். இப்பேய்ச்சி கண்ணபிரானை மகனாகப்பாவித்து முலைகொடுத்ததற்கிணங்க அவனும் இவளைத் தாயாகவே பாவித்து முலையுண்கிற பாவனையில் உயிரை உறிஞ்சியுண்டனனாதலால், கண்கள் சோர்ந்து ரத்தவெள்ளங்கொழிக்க நிலத்தில் வீழ்ந்து மாண்டொழிந்தன ளென்க.

மாமதலாய்!—பிள்ளைத்தனத்தில் குறையற்றவனே! என்றபடி. 'மதலை' என்பதன்விளி 'மதலாய்' என்றும்.

இத்திருமொழியின் பெரியவாச்சான்பிள்ளை வியாக்யான ப்ரவேசத்தில்—"பிள்ளையழகிய மணவாளரரையர் கரையே போகாநிற்க, "உள்ளே மாமதலைப் பிரானைத் திருவடிதொழுதுபோனாலோ?' என்ன; 'ஆர்தான் திருமங்கையாழ்வாருடைய பசைந்த § வளையத்திலே கால்வைக்கவல்லார்?' என்றருளிச் செய்தார்" என்றுள்ள ஸ்ரீஸூக்திகள் இங்கு அநுஸந்திக்கத் தக்கவை. இவ்வாக்கியத்தின் கருத்து யாதெனில்; பிள்ளையழகிய மணவாளரரையர் என்பவர் காரியவிசேஷமாய்த் திருச்சேறைவழியாய் ஓரிடத்திற் கெழுந்தருள நேர்ந்தவளவில் திருச்சேறைப்பதியினுட் புகாமல் வயல்வழியே போய்க்கொண்டிருந்தார்; அங்கு அவரைக் கண்டவொருவர் 'வயல்வழியே போவானேன்? திருப்பதியினுள்ளே புகுந்து ஸாரநாதப்பெருமாளை ஸேவித்துப் போகலாகாதோ?' என்று கேட்க; அதற்கு அரையர் சமத்காரமாக ஒரு உத்தரமுரைத்தார்; (யாதெனில்;) இத்திருப்பதி விஷயமாகப் பாசுரமுரைத்த திருமங்கையாழ்வார் "தண்சேறையெம் பெருமான் தாள்தொழுவார்காண்மின் என்தலைமேலாரே" என்றார்; அப்பாசுரத்தின்படி, திருச்சேறை யெம்பெருமானை ஸேவிப்பவர்கள் ஆழ்வாருடைய திருமுடியின்மே லேறவேண்டியதாகுமே; அது நமக்குப் பெருத்த அபசாரமாகுமே; அதற்கு அஞ்சியே உள்ளுப்புகாமல் கரையோரமே போய்விடுகிறேன் என்றாராம். இது ரஸோக்தியேயன்றி வேறில்லை. திருச்சேறை யெம்பெருமானை ஸேவிப்பவர்கள் பக்கலில் ஆழ்வார் வஹித்திருக்கும் ப்ரதிபத்தியை விளங்கக் காட்டினபடி. .... (க)

அம்புருவ வரிநெடுங்கண் அலர்மகளைவரையகலத் தமர்ந்து * மல்லல்
கொம்புருவவிளங்கனிமேல் இளங்கன்று கொண்டெறிந்த கூத்தர்போலாம் *
வம்பலரும்தண்சோலை வண்சேறை வானுந்து கோயில்மேய *
எம்பெருமான் தாள்தொழுவார் எப்பொழுதுமென்மனத்தே யிருக்கின்றாரே.

---

§ வளையம்—திருமுடியிலணியும் மாலை.

அம் புருவம்	அழகிய புருவத்தையும்
அரி நெடு கண்	செவ்வரி கருவரிபடர்ந்து நீண்ட கண்களையு முடையளான
அலர் மகளை	பெரியபிராட்டியாரை
வரை அகலத்து	மலைபோன்ற திருமார்பிலே
அமர்ந்து	பொருந்த வைத்துள்ளவனும்
மல்லல் கொம்பு உருவம் விளா	தழைத்த கிளைகளை வடிவமாகவுடைய விளா மரத்திலுள்ள
கனி மேல்	பழத்தின்மேலே
இள கன்று கொண்டு	(அஸுரவடிவாய் வந்த தொரு) சிறு கன்றைத் (தடியாக)க் கொண்டு
எறிந்த	வீசியெறிந்த
கூத்தர் ஆம்	நடையழகுடையவனும்,
வம்பு அலரும் தண் சோலை	பரிமளம்வீசுகின்ற குளிர்ந்த சோலைகளையுடைய
வண் சேறை	அழகிய திருச்சேறையிலே
வான் உந்து கோயில் மேய	ஆகாசத்தையளாவுகின்ற ஸந்நிதியில் நித்யவாஸம் செய்பவனுமான
எம்பெருமான்	ஸாரநாதப்பெருமானுடைய
தாள்	திருவடிகளை
தொழுவார்	ஸேவிப்பவர்கள்
எப்பொழுதும்	எக்காலும்
என் மனத்தே இருக்கின்றார்	என்னெஞ்சிலேயே வாஸஞ் செய்கிறார்கள்.

* * *—நான் திருச்சேறை யெம்பெருமானை மனத்திற் கொள்ளுமவனல்லேன்; அப்பெருமான் திருவடிகளைத் தொழுகின்றவர் எவரோ, அவர்களையே இடைவிடாது நெஞ்சிற்கொள்பவ னடியேன் என்கிறார்.

அழகிய திருப்புருவங்களோடும் நீண்ட திருக்கண்களோடுங் கூடின பெரிய பிராட்டியாரைத் திருமார்பிலே வைத்துக் கொண்டிருப்பவனும், முள்ளைக் கொண்டே முள்ளைக் களைவதுபோல, கன்றினுருவங் கொண்டுவந்த ஒரு அஸுரனைக் கொண்டு விளாமரமாய் நின்ற மற்றோரஸுரன்மேல் வீசியெறிந்து இரண்டையும் முடித்தவனும், அழகிய சோலைகளால் சூழப்பட்ட திருச்சேறையில் ஆகாசத்தளவும் ஓங்கியுள்ள ஸந்நிதியில் நித்யவாஸஞ் செய்தருள்பவனுமான எம்பெருமானுடைய திருவடிகளை ஸேவிப்பவர்கள் ஒருநொடிப்பொழுதும் எனது நெஞ்சைவிட்டுப் பிரியாதிருக்கின்றனர் என்றதாயிற்று.

“எப்பொழுதுமேன்மனத்தேயிருக்கின்றாரே” என்ற விடத்துப் பெரியவாச்சான்பிள்ளை வியாக்கியானத்தில்-“ நிதித்யாஸிதவ்ய:-நிதித்யாஸிதவ்ய: என்கிற விஷயத்துக்கு இடங்காண்கிறிலேன்” என்றருளிச் செய்துள்ள ஸ்ரீஸூக்தி பரமபோக்யம். பாகவதர்கள் ஆழ்வாருடைய திருவுள்ளத்தின் அவகாசத்தை ஆக்ரமித்துக் கொள்ளவே சிந்தனைக்கினிய பெருமானுக்கு அங்கு இடமில்லையாம்.

அம்புருவவரிநெடுங்கண் = ‘அம்—புருவம்’ என்று பிரிப்பதுதவிர, ‘அம்பு உருவம்’ என்று பிரிப்பதும் பொருந்தும்; ‘அம்புபோன்ற உருவத்தையுடைய’ என்று பொருளாய், கண்ணுக்கு விசேஷணமாகும். கண்களுக்கு அம்பை உவமையாகச் சொல்லுதல் கவிமரபு: “அம்பன்ன கண்ணாளசோதை” என்றதுங்காண்க.

மீதோடிவாளெயிறு மின்னிலக முன்விலகுமுருவினளை *
காதோடுகொடிமூக்கன் றுடனறுத்த கைத்தலத்தாவென்றுநின்று *
தாதோடுவண்டலம்பும் தண்சேறையெம்பெருமான் தாளையேத்தி *
போதோடுபுனல்தூவும் புண்ணியரே விண்ணவரில் பொலிகின்றாரே. (௫)

வான் எயிறு	ஒளி பொருந்திய கோரப்பல்லானது
மீது ஓடி	மேல்முகமாக வளர்ந்து
மின் இலக	மின்னல்போல் விளங்க
முன் விலகும் உருவினளை	முன்னேவந்து நின்ற உருவத்தை யுடையவளான சூர்ப்பணகையினுடைய
காதோடு	காதையும்
கொடி மூக்கு	கொடி மூக்கையும்
அன்று	அப்போது
உடன்	உடனே
அறுத்த	அறுத்துவிட்ட
கைத்தலத்தா	திருக்கையை யுடையவனே!
என்று நின்று	என்று நிலைநின்று,—
வண்டு	வண்டுகளானவை
தாதோடு	பூந்தாதுகளிலே
அலம்பும்	ஆரவாரம் செய்யப்பெற்ற
தண் சேறை	குளிர்ந்த திருச்சேறையிலுள்ள
எம்பெருமான்	ஸாரநாதப்பெருமாளுடைய
தாளை	திருவடிகளை
ஏத்தி	துதித்து
போதோடு	புஷ்பங்களையும்
புனல்	தீர்த்தத்தையும்
தூவும்	ஸமர்ப்பிக்கிற
புண்ணியர்	பாக்யசாலிகள்
விண்ணவரில்	நித்யஸூரிகளிற் காட்டிலும்
பொலிகின்றார்	மேம்பாடுடையார்.

* * *—சூர்ப்பணகையின் காதையும் மூக்கையுமறுத்த வீரனே! என்று சொல்லி எம்பெருமானுடைய திறலில் ஈடுபட்டு அவனது திருவடிகளையே துதித்து மந்த்ர புஷ்பங்கள் பணிமாறி அர்க்கிய பாத்ய ஆசமநீய தீர்த்தங்கள் ஸமர்ப்பிக்கும் பாகவதர்கள் நித்யஸூரிகளிற்காட்டில் சிறந்தவர்களென்கிறார். எவ்வகையான இடையூறுக்கும் நிலமன்றியே நலமந்த மில்லதோர் நாடாகிய பரமபதத்திலே யிருந்துகொண்டு பகவதாராதநம் செய்வதில் அருமையொன்று மில்லை; இருள்தருமா ஞாலமாகிய இந்நிலத்திலிருந்துகொண்டு பகவதாராதநம் செய்வதே அரிதாதலால் அங்ஙனஞ் செய்பவர்கள் நித்தியஸூரிகளிற் காட்டிலும் மேம்பட்டவர்களேயாகக் குறையில்லை யென்க. "பாற்கடல் பாம்பணைமேல் பள்ளி கொண்டருளும் சீதனையே தொழுவார் விண்ணுளாரிலுஞ் சீரியரே" என்ற திருவிருத்தமும் நோக்கத்தக்கது.

சூர்ப்பணகையின் பயங்கரமான உருவத்தைக் கூறுவது முதலடி. "முன் விலகு முருவினள்" என்பதற்கு இரண்டு வகையாகப் பொருள் கூறலாம்;— முன்னே ஸஞ்சரிக்கிற வடிவையுடையவள் என்றும்; கண்டவர்கள் விட்டு விலக வேண்டும்படியான (பயங்கர) ரூபத்தையுடையவள் என்றும்.

சூர்ப்பணகையின் காதையும் மூக்கையும் அறுத்தது இளைய பெருமாளுடைய தொழிலாயினும் இராமபிரான் ப்ரயோஜக கர்த்தாவாதலால் அவனுடைய தொழிலாகச் சொல்லுதலும் பொருந்தும். "ராமஸ்ய தக்ஷிணோ பாஹு:- ராமஸ்ய தக்ஷிணோ பாஹு:" என்கிற நியாயத்தாலும் பொருந்தும். (௩)

**தேராளும்வாளரக்கன் தென்னிலங்கை வெஞ்சமத்துப்பொன்றிவீழ *
போராளுஞ்சிலையதனால் பொருகணைகள் போக்குவித்தாயென்று * நாளும்
தாராளும்வரைமார்பன் தண்சேறையெம்பெருமானும்பராளும் *
பேராளன்பேரோதும் பெரியோரை யொருகாலும் பிரிகிலேனே. (௪)**

தேர் ஆளும்	தேர்களை நடத்தவல்லவனாய்
வாள்	வாட்படையையுடையவனான
அரக்கன்	இராவணனுடைய
தென் இலங்கை	அழகிய லங்காபுரியை
வெம் சமத்து	கொடிய போர்க்களத்தில்
பொன்றி வீழ	சிதறியழிந்துபோம்படி
போர் ஆளும் சிலை அதனால்	போரை நடத்தவல்ல வில்லினால்
பொரு கணைகள்	கொடிய அம்புகளை
போக்குவித்தாய்	பிரயோகித்தவனே !
என்று	என்று சொல்லி,
நாளும்	நாள்தோறும்
தார் ஆளும் வரை மார்பன்	மாலையை அணிந்தன்ன மலைபோன்றதிருமார்பை யுடையவனும்
உம்பர் ஆளும்	மேலுலகங்களை ஆள்பவனும்
பேராளன்	பெருமை பொருந்தினவனுமான
தண் சேறை எம்பெருமான்	திருச்சேறைப் பெருமானுடைய
பேர்	திருநாமங்களை
ஓதும்	ஓதுகின்ற
பெரியோரை	மஹாத்மாக்களை
ஒருகாலும்	ஒருபோதும்
பிரிகிலேன்	பிரியமாட்டேன்.

* * *—எம்பெருமானைப் பிரிந்து நெடுநாள் தரித்திருப்பினு மிருப்பேன்; பாகவதர்களைப் பிரிந்து ஒரு நொடிப்பொழுதும் தரித்திருக்ககில்லே னென்கிறார். தேர்வீரனான இராவணனுடைய படைவீடான இலங்காபுரியைப் பொடிபடுத்தின பெருவீரனே! என்று சொல்லித் திருச்சேறை யெம்பெருமானுடைய பல பல திருநாமங்களை வாயாரப்பாடும் பெருமையுடையார் எவரோ, அவரை ஒரு காலும் பிரியமாட்டே னென்றாராயிற்று.

கீதையில் "ஸ மஹாத்மா" என்றும் "மஹாத்மாநஃ" என்றும் அவன்றானே சொல்லிப் போந்தவர்களையாயிற்று இவர் 'பெரியோர்' என்கிறது. .... (ச)

வந்திக்கும்மற்றவர்க்கும் மாசுடம்பின் வல்லமணர் தமக்குமல்லேன் *
முந்திச்சென் றரியுருவாயிரணியனை மூரணழித்த முதல்வற்கல்லால் *
சந்தப்பூ மலர்ச்சோலைத் தண்சேறையெம்பெருமான்றாளை * நாளும்
சிந்திப்பார்க்கென்னுள்ளம் தேனூறி யெப்போழுதும் தித்திக்குமே. (ரு)

அரி உரு ஆய்	நரஸிம்ஹரூபியாய்
முந்தி சென்று	முந்துற வெளிப்பட்டு
இரணியன் மூரணை	இரணியாசுரனுடைய வலியை
அழித்த	பாழ்படுத்தின
முதல்வற்கு அல்லால்	ஜகத்காரணபூதனான எம்பெருமானுக்கல்லது,
மாசு உடம்பின்	அழுக்கேறின உடம்பை யுடையராய்
வல்	வலித்து வாது செய்பவர்களான
அமணர் தமக்கும்	ஜைநர்கட்கும்
வந்திக்கும் மற்றவர்க்கும்	'வந்தே' என்று சொல்லிக் கொண்டு திரிகிற பௌத்தர்கட்கும்
அல்லேன்	கூட்டுப்படக் கடவேனல்லேன்;
சந்தம் பூ மலர்	சந்தநப்புஷ்பங்களையுடைய
சோலை	சோலைகளையுடைத்தான
தண் சேறை	குளிர்ந்த திருச்சேறையிலுள்ள
எம்பெருமான்	ஸாரநாதப் பெருமானுடைய

தாளை	திருவடியை	என் உள்ளம்	என் மனமானது
நாளும்	நாள்தோறும்	தேன் ஊறி	அம்ருதம் சுரக்கப்பெற்று
சிந்திப்பார்க்கு	{ தியானம் செய்யும் பாகவதர் திறத்தில்	எப்பொழுதும்	இடைவிடாது
		தித்திக்கும்	தித்திக்கின்றது.

* * *—தமக்கு பாகவத பக்தி மிக்கிருக்கக் காண்கையாலே அது காரணமாகப் பகவத்பக்தி குறையற்றிருக்குமென்கிறாரிதில். ப்ரஹ்லாதாழ்வானைக் காத்தருளவேண்டி நரசிங்கமூர்த்தியாய்த் தூணில் தோன்றி ஹிரண்யாஸுரனுடைய மிடுக்கை யொழித்த முழுமுதற்கடவுளான எம்பெருமானுக்கு அநந்யார்ஹசேஷபூதனாயிருப்பேனத்தனையன்றி இப்படியிருக்ககில்லாத ஜைநர் பௌத்தர் முதலானோருடைய திரளிலே சேரக்கடவேனல்லேன் என்கிறார் முன்னடிகளில்.

இங்ஙனே உம்மால் திண்ணிதாகச் சொல்லக்கூடுமோ? எது கொண்டு இங்ஙனே நீர் சொல்லுகிறீர்? என்று கேட்பார்க்கு உத்தரமாகப் பின்னடிகளருளிச் செய்கிறார்;—பரமபோக்கியமான திருச்சேறையிலெழுந்தருளியிருக்கின்ற ஸாரநாதப் பெருமாளுடைய திருவடிகளைத் தினந்தோறும் சிந்திக்கின்ற பாகவதர்களை நினைத்த மாத்திரத்தில் என்னுள்ளமானது தேனூறித் தித்திக்கின்றதே, இஃது ஒன்றே போராதோ? ஜைந பௌத்தாதிகளின் திரளிலே புகுதற்குரிய விதி எனக்கு இருக்குமானால் இப்படிப்பட்ட ஸ்ரீ வைஷ்ணவ ப்ராவண்யம் எனக்கு உண்டாகக்கூடுமோ? பாக்ய விசேஷத்தால் இஃது உண்டாகக் காண்கையினால் முன்னடிகளிற்சொன்னபொருள் கல்வெட்டுக்காண்மின் என்கை.

'வந்திக்கும் மற்றவர்' என்றால் எங்ஙனே பௌத்தர்களைக் காட்டும்? என்னில்; பௌத்தர்கள் புத்ததேவதையின் விஷயமாகச் சில ஸ்தோத்ரங்கள் சொல்லுவர்கள்; அவற்றில் 'வந்தே, வந்தே' என்று மிகையாகக் காணப்படுதலால் 'வந்திக்குமவர்' என்ற சொல் பௌத்தர்களைக் குறிக்குமென்ப.

மாசுடம்பின் வல்லமணர்=உடம்பிலுள்ள அழுக்கைக் கழற்றலாகாதென்றும், மலங்களைத் தேஹத்திலேயே தரித்துக் கொண்டிருப்பதனால் தான் மோக்ஷமுண்டாகுமென்றும் அமணர்களின் கொள்கை யென்றுணர்க. 'பௌத்தர்களுக்கும் ஜைநர்களுக்கும் அல்லேன்' என்றது அவர்களைப்போலே பகவத் விமுகர்களாக ஒருகாலும் ஆகமாட்டேனென்றவாறு. .... (௫)

பண்டேனமாயுலகையன்றிடந்த பண்பாளா வென்று நின்று *
தொண்டானேன் திருவடியே துணையல்லால் துணையிலேன்சொல்லுகின்றேன் *
வண்டேந்தும் மலர்ப்புறவில் வண்சேறையெம்பெருமா னடியார்தம்மை *
கண்டேனுக்கிதுகாணீர் என்னெஞ்சும் கண்ணிணையும் களிக்குமாறே. (௬)

பண்டு அன்று	முன்பொருகால்	இடந்த	{ கோட்டாற் குத்தியெடுத்து வந்த
ஏனம் ஆய்	மஹாவராஹரூபியாய்	பண்பாளா	குணசாலியே!
உலகை	பூமியை		

என்று நின்று	என்றுசொல்லி நிலைநின்று
தொண்டு ஆனேன்	(உனது திருவடிகட்கு) அடிமையானேன்;
திரு அடியே துணை அல்லால்	(உனது) திருவடிகளே துணையாவதன்றி
துணை இலேன்	வேறு துணையுடையே னல்லேன்;
சொல்லு கின்றேன்	இது சத்தியம்;
வண்டு எந்தும்	வண்டுகளைத் தரிக்கின்ற
மலர்	பூக்களையுடைய
புறவில்	தோப்புகளையுடைத்தான
வண் சேறை	அழகிய திருச்சேறையி லுள்ள
எம்பெருமான்	ஸாரநாதப் பெருமாளுடைய
அடியார் தம்மை	பக்தர்களை
கண்டேனுக்கு என் நெஞ்சும்	ஸேவிக்கப்பெற்ற எனது மனமும்
கண் இணையும்	இரண்டு கண்களும்
களிக்கும் ஆறு	களிக்கும் விதம்
இது காணீர்	இதோ பாருங்கள்.

* * *—முன்பு வாராஹ கல்பத்தின் ஆதியிலே மஹாவராஹ மூர்த்தியாய், அண்டபித்தியிலே சேர்ந்திருந்த பூமியை அதில் நின்றும் ஒட்டு விடுவித்தெடுத்துக் கொணர்ந்த நீர்மையை யுடையவனே! என்று இடையறாதே சொல்லிக் கொண்டு அந்நீர்மையிலே தோற்று உனது திருவடிகட்கே அடிமையானேன்; உனது திருவடிகளே எனக்குத்தஞ்சம்; வேறொரு புகலை உடையேனல்லேன்; இங்ஙனே ஆணையிட்டுச் சொல்லக்கடவேன்.

இப்படி திண்ணிதாக அடியேன் விண்ணப்பஞ் செய்வது எது கொண்டென்னில்; வண்டுகள் மாறாத பசுமலரையுடைத்தான சோலைகளாற் சூழப்பட்ட திருச்சேறையிலெழுந்தருளியுள்ள பெருமாளுடைய அடியார்களைஸேவித்த மாத்திரத்தில் என்னுடைய நெஞ்சும் கண்களும் களிக்கிறபடியைக் காணுங்கோள்; இவ்வளவு பரிபாகம் பெற்றேனான பின்பு அந்த அத்யவஸாயம் திடமாயிருக்கத் தட்டுண்டோ வென்கிறார். .... (சு)

பைவிரியும்வரியரவில் படுகடலுள் துயில்மர்ந்தபண்பா வென்றும் *
மைவிரியும் மணிவரை போல்மாயவனே யென்றென்றும், வண்டார் நீலம் *
செய்விரியுந் தண்சேறையெம்பெருமான் திருவடியைச்சிந்தித்தேற்கு * என்
ஐயறிவுங்கொண்டானுக்கா ளானார்க்கு ஆளாமென் னன்புதானே. (எ)

படு கடலில்	ஆழ்ந்த திருப்பாற்கடலில்
பை விரியும் வரி அரவில்	விரிந்த படங்களையும் புள்ளிகளையுமுடைய திருவனந்தாழ்வான் மீது
துயில் அமர்ந்த	பள்ளிகொண்ட
பண்பா என்றும்	குணசாலியே! என்றும்,
மை விரியும் மணி வரை போல்	கருநிறம்மிக்க நீலமணி மயமான மலைபோன்ற (திருமேனியையுடைய)
மாயவனே என்று என்றும்	ஆச்சரியனே! என்றும் பலகால் சொல்லி,
வண்டு ஆர் நீலம்	வண்டுகள் படிந்த கரு நெய்தல்களானவை
செய்	கழனிகளிலே
விரியும்	மலரப்பெற்ற
தண் சேறை	குளிர்ந்த திருச்சேறையி லுள்ள

எம்பெருமான்	எம்பெருமானுடைய
திரு அடியை	திருவடிகளை
சிந்தித்தேற்கு என்	தியானம்பண்ணுகின்ற என்னுடைய
ஐ அறிவும் கொண்டானுக்கு	ஐம்புலன்களினறிவையும் தன் விஷயத்திலாக்கிக் கொண்ட அப் பெருமானுக்கு
ஆள் ஆனார்க்கு	ஆட்பட்ட பாகவதர்களுக்கு
என் அன்பு தான்	என்னுடைய ப்ரீதியானது
ஆள் ஆம்	உரியதாகும்.

* * *—இடைவிடாது எம்பெருமானை யநுபவிக்கப்பெறுதலால் விகஸித்த படங்களையுடையனும், ஸர்வேச்வரனுக்கும் வைத்த கண்மாறாதே கண்டுகொண்டிருக்க வேண்டும்படியான வரிகளை யுடையனுமான திருவனந்தாழ்வான் மேலே கடலில் திருக்கண் வளர்ந்தருளும் நீர்மையையுடையவனே! என்றும், அஞ்ஜன மலைபோலே குளிர்ந்து தாபஹாரமான வடிவையுடைய ஆச்சரியனே! என்றும் சொல்லிக்கொண்டு திருச்சேறை யெம்பெருமானுடைய திருவடியையே சிந்தித்துக் கொண்டிருக்கு மென்னுடைய ஸகலேந்திரிய வுணர்ச்சிகளையும் தன்வச மாக்கிக்கொண்ட அப்பெருமானுக்கு ஆட்பட்டவர் எவரோ, அவர்கள் திறத்திலேயே என்னுடைய அன்பு பெருகுகின்றது என்கிறார்.

தாம் எம்பெருமானை விட்டுப் பாகவதர்களையே பற்றுவதாக அநுஸந்திக்கு மித்திருமொழியில் 'தண்சேறை யெம்பெருமான் திருவடியைச் சிந்தித்தேற்கு' என்று சொல்லிக் கொள்ளுதல் தகுமோ வென்று சிலர் சங்கிப்பர்கள்; எம்பெருமானுடைய அடியார்களென்னுங் காரணத்தினால் பாகவதர்கள் உத்தேச்யர்களாக ஆகிறாப்போலே 'பாகவதர்கள் பற்றுந் தெய்வம்' என்னுங்காரணத்தினால் எம்பெருமானும் உத்தேச்யனாதல் கூடுமென்க. "திரிதந்தாகிலுந் தேவபிரானுடைக் கரிய கோலத் திருவுருக்காண்பன் நான், பெரியவண் குருகூர் நகர் நம்பிக்கு ஆளுரியனாய் அடியேன் பெற்ற நன்மையே" என்ற கண்ணிநுண் சிறுத்தாம்பும் அறிக.

"சிந்தித் தேற்கு என்" என்ற விடத்து, வடமொழியில் ஆர்ஷ ப்ரயோகங்களிற்போல உபபத்தி கூறவேண்டும்: 'சிந்தித்தேற்கு' என்பது 'சிந்தித்த எனக்கு' என்று பொருள்பட நின்றாலும், இங்கு அங்ஙனம் பொருள்படாது 'சிந்தித்த' என்று விசேஷண மாத்ரமாக நிற்கும்; திருமாலையில் "மழைக்கன்று வரை முனேந்தும்" என்ற பாசுரத்தில் "உழைக்கின்றேற்கு என்னை" என்ற பிரயோகமும் பிறவும் காணத்தக்கன. .... (எ)

உண்ணாதவெங்கூற்றம் ஓவாதபாவங்கள்சேரா * மேலை
விண்ணோரும்மண்ணோரும் வந்திறைஞ்சும் மென்தளிர்போ லடியினானை *
பண்ணாரவண்டியம்பும் பைம்பொழில்சூழ் தண்சேறையம்மான்றன்னை *
கண்ணாரக் கண்டுருகிக் கையாரத்தொழுவாரைக் கருதுங்காலே. (அ)

மேலை விண்ணோரும்	மேலுலகத்தவர்களான நித்ய ஸூரிகளும்
மண்ணோரும்	இம் மண்ணுலகத்தி லுள்ளாரும்
வந்து இறைஞ்சும்	கிட்டி வணங்கும்படியான
மென் தளிர் போல் அடியினானை	மெல்லிய தளிர்போன்ற [ஸௌகுமாரமான] திருவடிகளை யுடையனும்
பண் ஆர வண்டு இயம்பும் பை பொழில் சூழ் தண் சேறை அம்மான் தன்னை	பண்கள் நிரம்ப வண்டுகள் பாடப் பெற்ற சோலைகளாற் சூழப்பட்ட குளிர்ந்த திருச் சேறையில் எழுந்தருளி யிருப்பவனுமான ஸாரநாதப் பெருமானை
கண் ஆர கண்டு	கண்கள் நிறையும்படி ஸேவித்து
உருகி	மனம் நெகிழ்ந்து
கை ஆர	கைகளின் ஆசை தீரும்படி
தொழுவாரை	தொழாநின்ற பாகவதர்களை
கருதுங்கால்	சிந்தைசெய்த மாத்திரத்தில்,
வெம்	கொடிதான
கூற்றம்	யமதேவதையானது
உண்ணாது	நெருக்கமாட்டாது;
ஓவாத பாவங்கள்	இடைவிடாத பாவங்களானவை
சேரா	கிட்டமாட்டா.

* * *—விண்ணுலகத்தவர்களும் மண்ணுலகத்தவர்களும் ஈண்டித்தொழும் படியான திருவடிகளை யுடையனைக் கொண்டு திருச்சேறையி லெழுந்தருளி யிருக்கும் பெருமானைக் கண்ணாரக் கண்டும் கையாரத் தொழுதும் பரவசப்படு கின்ற ஸ்ரீ வைஷ்ணவர்களை நெஞ்சால் நினைத்தமாத்திரத்தில் ம்ருத்யுபயத்திற் கும் பாபபயத்திற்கும் ப்ரஸக்தி யில்லையாகுமென்கிறார்.

உண்ணாது வெங்கூற்றம்=ஸ்ரீ வைஷ்ணவர்களைச் சிந்திக்கின்றவர்களை யமன் உண்ணமாட்டான், என்றால் 'அவர்களுக்கு ஒருநாளும் சாவு இல்லை' என்று பொருளா? என்று சிலர் சங்கிப்பர்கள்; அது பொருளன்று; யமதண்ட னைக்கு அவர்கள் ஆளாகமாட்டார்கள் என்று பொருள் காண்க. அன்றியே, பாகவத பக்தர்கள் மரணத்தைப்பற்றின வருத்தத்தினால் கரையமாட்டார்கள் என்பதாகவும் கருத்துக்கொள்ள இடமுண்டு. "𑌪𑍍𑌰𑌾𑌯𑍋 𑌹𑍍𑌯𑌕𑍃𑌤𑌕𑍃𑌤𑍍𑌯𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 𑌮𑍃𑌤𑍍𑌯𑍋𑌰𑍁𑌦𑍍𑌵𑌿𑌜𑌤𑍇 𑌜𑌨𑌃। 𑌕𑍃𑌤𑌕𑍃𑌤𑍍𑌯𑌾𑌃 𑌪𑍍𑌰𑌤𑍀𑌕𑍍𑌷𑌨𑍍𑌤𑍇 𑌮𑍃𑌤𑍍𑌯𑍁𑌂 𑌪𑍍𑌰𑌿𑌯𑌮𑌿𑌵𑌾𑌤𑌿𑌥𑌿𑌮𑍍 = ப்ராயோ ஹ்யக்ருதக்ருத்யத்வாத் ம்ருத்யோருத்விஜதே ஜந:- க்ருதக்ருத்யா: ப்ரதீக்ஷந்தே ம்ருத்யும் ப்ரியமிவாதிதிம்." என்கிற ச்லோகம் இங்கு உணரத்தக்கது.

இவ்வுலகில் பலவகையான துக்கங்களுள்ளன. அவற்றுள் மரணதுக்கம் எல்லாவற்றினும் பெரிது. மரணகாலத்தில் சரீரம் அஸ்வாதீநமாய் விடுகிறது. மனம் கலக்கமுறுகின்றது. புத்தி ஸ்வாதீநமற்றுப் போகின்றது. இந்திரியங்கள் நிலைகுலைகின்றன; என்றிவை முதலான காரணங்களினால் மரணத்தைப் பற்றி மஹத்தான துக்கமுண்டாகிறது. இவ்வுலகத்தோடு அதுவரையிலிருந்த ஸம்பந்தமென்ன, பந்துமித்ர புத்ரகளத்ராதிகளோடு இருந்த ஸம்பந்தமென்ன, இன்னமும் தன்னுடையனவாகப் பாவித்த வீடு வாசல் முதலிய பலவகைப் பொருள்களோடு வைத்துக் கொண்டிருந்த ஸம்பந்தமென்ன, ஆகிய இவற்றை

யெல்லாம் விடநேருகின்றது. தாம் செய்யவேணுமென்று நினைத்துக் கொண்டிருந்த பலவகைக் காரியங்கள் குறைபட்டு நிற்கின்றன.—இத்யாதி காரணங்களாலும் மரணமென்றால் யாருக்கும் ருசிப்பதில்லை. ஆகையால் மரணமென்றால் பெரும்பாலும் மனிதர் துக்கமடைவது இயல்பு.

பரலோகமுண்டென்றும், பாப புண்யங்கட்குப் பலன் கிடைத்தே தீருமென்றும், ஸ்வர்க்க நரகங்கள் புண்ய பாப பலன்களென்றும் நம்பிக்கை யுள்ளவர்களுக்கு ஜீவித்திருந்த காலத்தில் தாம் செய்த பலவகைப் பாவங்களை நினைத்து அவற்றின் பலன்களை யநுபவிக்க நேரிடுமே யென்கிற அச்சத்தினால் மிக்க துக்க முண்டாகக் கூடியது. ஜீவித்திருந்த காலத்திலோவெனில், சிலர் உலக வியாபாரங்களில் மண்டிப் பரலோகத்தைப் பற்றி நினைக்க அவகாசமும் பெறாமல் விஷய ஸுகங்களுக்காகப் பாவஞ் செய்கிறார்கள். சிலர் பரலோகத்தையும் பாப புண்யங்களையும் ஈச்வரனையும் இல்லைசெய்து சரீர ஸுகத்திற்காக வேண்டியதெல்லாம் செய்யலாமென்று நினைத்துப் பாவஞ் செய்கிறார்கள். சிலர், நாம் நீண்டகாலம் ஜீவித்திருக்கப் போவதாகவும், கடைசி காலத்தில் பரலோகத்துக்கு வேண்டியதைச் செய்து கொள்ளப் பார்க்கலாமென்றும் நினைத்து உள்ளவரையில் ஸாம்ஸாரிக ஸுகத்துக்காகப் பாவச் செயலில் இழிந்து பிறகு மீள முடியாமல் நிற்கிறார்கள். ம்ருத்யுவோ நமது எண்ணங்களையும் காரியங்களையும் ஸமய ஸந்தர்ப்பங்களையும் கவனிக்காமல் வந்துவிடுகின்றது. ஆகையால் பெரும்பாலும் எல்லோருமே ம்ருத்யுவுக்கு அஞ்சி வருந்துகின்றனர். ஆனால், உண்மையான பக்தர்களும் உலகத்தின் போக்கை நன்றாய்க் கண்டறிந்தவர்களும், எப்போதும் பகவத் பாகவதர்களைச் சிந்தை செய்துகொண்டு ஆத்மாநந்தத்தில் ஆழ்ந்து கிடப்பவர்களும் மரணத்தைப்பற்றிச் சிறிதும் வருந்த மாட்டார்கள்; மரணத்தை அவர்கள் ஒரு உத்ஸவமாக நினைத்து ஸந்தோஷமே யடைவர்கள்.

ஸ்வதேசத்தையும் மாதா பிதாக்களையும் மற்றுமுள்ள உறவினரையும் விட்டுப் பரதேசம் போய்ப் பொருளீட்டும் ஒரு சிறுவன் தன் முயற்சி கைகூடி, மிக்க பொருள் திரட்டிக்கொண்டு தன் வீடு திரும்பும்போது சிறிதும் வருந்துவதில்லையன்றோ. பந்துக்களையும் ஸ்வதேசத்தையும் விட்டு நீண்டகாலம் பரதேசத்தில் வஸித்த அச்சிறுவன் தன்னில்லம் திரும்பி ஸ்நேஹமயியான மாதாவையும் பந்து பாந்தவர்களையும் எப்பொழுது பார்க்கப்போகிறோமென்று ஆவலோடு காத்திருந்தவன் அச்சமயம் நெருங்கும்போது மஹத்தான ஸந்தோஷத்தையே அடைகிறான். ஸாத்யமானவளவும் விரைவில் தன்னில்லம் போய்ச்சேர நினைக்கிறான். மதா பிதாக்களைக் கிட்டி அவர்களுடைய அன்புக்கு நாம் எப்பொழுது பாத்திரமாகப் போகிறோமென்று நினைக்கிறான். ஏனென்றால், அவன் பரதேசத்தில் நீண்டகாலமிருந்தாலும் தன் முயற்சியில் ஸித்திபெற்று நிரம்பிய பொருளைத் திரட்டியிருப்பதால் ஒருவகையான ஆத்ம ஸந்தோஷத்தை அடைந்திருக்கிறான்: இவ்விதமாகத் தான் திரும்பும்போது தகப்பனார் தன்னை மிகவும் புராட்டப் போகிறார் என்கிற நம்பிக்கை அவனுடைய மனத்தை உத்ஸாஹப்

படுத்திக் கொண்டிருக்கிறது. தன் முயற்கியில் ஸித்தியடைந்த புதல்வன் தன் தந்தையிடம் திரும்பிப் போகும்போது அடையும் ஆநந்தம் விலக்ஷணமாயிருக்கும். அதுபோல் உண்மையாகத் தன் நிலைமையை யறிந்த பக்தனானவன் இவ்வுலகத்தில் தன் கடமைகளை ஒழுங்குபடச் செய்து ஈச்வரனுடைய நியமனத்தால் ப்ராப்தபோகம் முடிந்து பிதாவான அவ்வீச்வரனுடைய ஸந்நிதானத்திற்குப் போகுங்காலம் கிட்டும்போது (அதாவது) இவ்வுலகத்தின் துக்கமயமான நிலைமையிலிருந்து முடிவாக விடுபடும்போது மஹத்தான ஆநந்தத்தை அடைகின்றான். அவ்வானந்தத்தை எதனோடும் ஒப்பிடமுடியாது. அப்படியே திருச்சேறை யெம்பெருமானைத் தொழுத பாகவதர்களைச் சிந்தை செய்பவர்களும் க்ருதக்ருத்யர்களாதலால் அவர்கள் ஒருகாலும் ம்ருத்யுவுக்கு அஞ்சி யிருக்கமாட்டார்கள்; பாவத்திற்கும் பயப்பட ப்ரஸக்தியில்லை—என்றதாயிற்று. .... (அ)

கள்ளத்தேன் பொய்யகத்தேனாதலால் போதருகால் கவலையென்னும் *
வெள்ளத்தேற்கென்கொலோ விளைவயலுள்கருநீலம் களைஞர்தாளால்
தள்ள . தேன்மணநாறும் தண்சேறையெம்பெருமான்றாளை * நாளும்
உள்ளத்தேவைப்பாருக் கிதுகாணீரென்னுள்ள முருகுமாறே. (கூ)

விளை வயலுள்	பயிர்தழைத்த கழனிகளில் (முளைத்திருக்கிற)
கரு நீலம்	கருநெய்தலை,
களைஞர்	களைபிடுங்குகிற உழவர்
தாளால்	(தங்கள்) கால்களாலே
தள்ள	ஒதுக்கித்தள்ள,
தேன்	(அதில்நின்று மொழுகின) தேனினுடைய
மணம் நாறும்	பரிமளம் வீசப்பெற்ற
தண் சேறை	திருச்சேறையில் எழுந்தருளி யிருக்கின்ற
எம்பெருமான்	ஸாரநாதப்பெருமானுடைய
தாளை	திருவடிகளை
நாளும்	நாள்தோறும்
உள்ளத்தே	நெஞ்சிலே
வைப்பாருக்கு	வைத்துச் சிந்தைசெய்கின்ற பாகவதர் விஷயத்தில்
என் உள்ளம் உருகும் ஆறு காணீர்	என்மனம் நீர்ப்பண்டமாக உருகும் விதத்தைப் பாருங்கோள்;
கள்ளத்தேன் பொய் அகத்தேன் ஆதலால்	ஆத்மாபஹாரக்கள்வனும் வஞ்ச நெஞ்சையுடையனுமாய் அடியே னிருப்பதால்
போதருகால்	ஒருநொடிப் பொழுதும் இடைவிடாதே
கவலை என்னும் வெள்ளத்தேற்கு	துக்கமாகிற பெருங் கடலில் அழுந்திக்கிடந்த எனக்கு
இது என் கொல்	இப்படிப்பட்ட பேறு எங்ஙனே உண்டாயிற்றோ ?.

* * *—பாகவதர்களை ஸேவிக்கப் பெற்றதனால் தமக்குண்டான எல்லை கடந்த ஆனந்தத்தைப் பேசி, அயோக்யனான எனக்கு இப்படிப்பட்ட ஆனந்தத்தை யநுபவிக்கும்படியான பாக்கியம் எங்ஙனே வாய்த்ததோ, தெரியவில்லையே! என்று தம்மில் தாம் விஸ்மயப்படுகிறார்.

நெற்பயிர்கள்விளையுங் கழனிகளிலே இடையிடையே கருநெய்தல்கள் முளைத்திருக்கும்; களைபிடுங்கித்திரியும் உழவர்கள் அவற்றைப் பிடுங்கியெறிய, அவற்றி

வின்றும் ஒழுகாநின்றதேனின் மணம் ஊரெங்கும் வீசுகின்றதாம்; இப்படிப் பட்ட போக்யதைபொருந்திய திருச்சேறையில் எழுந்தருளியிருக்கின்ற ஸார நாதப் பெருமாளுடைய திருவடிகளில் அன்புடையரான ஸ்ரீவைஷ்ணவர்கள் விஷயத்திலே என் உள்ளம் நீர்ப்பண்டமாக உருகுகின்றதே!; இப்படிப்பட்ட ஹ்ருதயபரிபாகத்திற்கு நான் உரியேனோ? நானோ ஆத்மாபஹாரக்கள்வன்; * வஞ்சக்கள்வன் மாமாயனை எம்பெருமானையும் வஞ்சிப்பவனாயிருக்கின்றேன்; இப்படியிருக்கையாலே மேன்மேலும் துக்கங்களையே அநுபவிக்கவுரியேன் நான்; அப்படியிருந்தும் ஒருதுக்கத்துக்கும் ஆட்படாமல், ஸ்ரீவைஷ்ணவர்களை ஸேவிப்பதும் அதனால் நெஞ்சு உருகப்பெறுவதுமாய்ச் சதிர்த்தேனே!, இஃது என்கொல்! என்கிறார்.

கள்ளத்தேன்-கள்ளத்தனமுடையேன். "𑌯𑍋𑌽𑌨𑍍𑌯𑌥𑌾 𑌸𑌨𑍍𑌤𑌮𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌮𑌨𑍍𑌯𑌥𑌾 𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌦𑍍𑌯𑌤𑍇। 𑌕𑌿𑌂 𑌤𑍇𑌨 𑌨 𑌕𑍃𑌤𑌂 𑌪𑌾𑌪𑌂 𑌚𑍋𑌰𑍇𑌣𑌾𑌤𑍍𑌮𑌾𑌪𑌹𑌾𑌰𑌿𑌣𑌾 = யோந்யதா ஸந்தமாத்மாநம் அந்யதா ப்ரதிபத்யதே-கிம் தேந ந க்ருதம் பாபம் சோரேணாத்மாபஹாரிணா?" என்ற ப்ரமாணம் இங்கு அநுஸந்திக்கத்தக்கது. பகவச்சேஷமான ஆத்மவஸ்துவை அங்ஙனம் உணரப்பெறாதவன் பெரிய கள்ளன்; அவன் எல்லாவகையான பாவங்களையும் செய்தவனாவன் என்பது இந்த ச்லோகத்தின் கருத்து. ஆழ்வார் தம்மை அப்படிப்பட்ட கள்வனாக அநுஸந்தித்துக் கொள்ளுகிறார். 'போதோருகால்' என்றபாடம் மறுக்கத்தக்கது.

போதருகால்—நிகழுங்காலமெல்லாம் என்றபடி.

கவலை—மறப்பும் துக்கமும். .... (சஅ)

பூமாண்சேர் கருங்குழலார்போல்நடந்து வயல்நின்றபெடையோடு * அன்னம்
தேமாவினின்னிழலில் கண்டுயிலும் தண்சேறையம்மான்தன்னை *
வாமான்தேர்ப்பரகாலன் கலிகன்றியொலிமாலைகொண்டுதொண்டீர் *
தூமாண்சேர் பொன்னடிமேல் சூட்டுமின் நுந்துணைக்கையால் தொழுதுநின்றே.

அன்னம்	அன்னப்பறவைகள்
வயல் நின்ற பெடையோடு	கழனிகளில் திரிகிற பேடைகளோடு கூட,
பூ மாண் சேர் கரு குழலார் போல் நடந்து	பூக்களணிந்து அழகு பெற்ற கறுத்த கூந்தலையுடைய இளம் பெண்களைப்போல நடந்து
(பின்பு)	
தே மாவின்	தேன் மாமரத்தினுடைய
இன் நிழலில்	இனிமையான நிழலில்
கண் துயிலும்	கண்ணுறங்கப்பெற்ற
தண் சேறை	திருச்சேறையிலெழுந்தருளியிருக்கிற
அம்மான் தன்னை	எம்பெருமான் விஷயமாக,—
வாம்மான் தேர்	ஓடிவருகின்ற குதிரைகள் பூண்ட தேரையுடையரான
பரகாலன் கலிகன்றி	திருமங்கையாழ்வார்
ஒலி	அருளிச்செய்த
மாலை கொண்டு	இச் சொல்மாலைகளைக் கொண்டு
தொண்டீர்	ஓ பக்தர்களே!,
தூ	பரிசுத்தமாய்
மாண் சேர்	மாட்சிமை தங்கியதாய்

பொன்	விரும்பத்தக்கதான	தொழுது நின்று	ஸேவித்திருந்து
அடி மேல்	(அப்பெருமானுடைய) திருவடிகளின் மேலே	சூட்டுமின்	சூட்டுங்கோள்.
நம் துணை கையால்	உங்களுடைய அஞ்ஜலிபந்தமான கைகளினால்		

* * *—கீழ் ஒன்பது பாசுரங்களிலும் பாகவத நிஷ்டையைப் பேசியிருந்தும், பயனுரைக்குமிப் பாசுரத்தில் "தண்சேறையம்மான் தன்னை" என்று எம்பெருமான்விஷயமாக இத்திருமொழி அருளிச்செய்யப்பட்டதென்று தலைக்கட்டுகிறார்—பாகவதர்களுக்கு உத்தேச்யன் என்கிற முறைமையால் எம்பெருமானும் தமக்கு உத்தேச்யன் என்கிற திருவுள்ளத்தைக் காட்டுதற்கு.

இத்திருமொழியைத் திருச்சேறைப் பெருமானுடைய திருவடிகளிலே உங்களுடைய கைகளால் கொண்டு சூட்டுங்கள் என்று தொண்டர்களை நோக்கிச் சொல்லுகிறார்—இத்திருமொழிகற்கைக்கு வேறொருபயன் வேண்டா; எம்பெருமானுடைய திருவடிகட்குத் தாமரைப்பூப்போல அலங்காரமாயிருக்கத்தக்க இத்திருமொழி ஸ்வயம்போக்யம் என்று காட்டினபடி. திருச்சேறைப் பெருமானை ஸேவிக்கப்போமவர்கள் * செண்பகமல்லிகையோடு செங்கழுநீரிருவாட்சியென்னப்படுகிற புஷ்பங்களை ஸமர்ப்பிக்கத் தேடவேண்டா; இத்திருமொழியை அநுஸந்தித்துக் கொண்டு செல்லுமளவிலே பூவிட்டதற்கும் மேலாக எம்பெருமானுடைய திருவுள்ளம் உவக்கும் என்பதை உய்த்துணர்க.

மூன்றாமடியில், வாம்—வாவும் என்றபடி; வாவுதல்—தாவுதல்; திருமங்கையாழ்வாருடைய குதிரைக்கு இட்ட விசேஷணம்: "செய்யுமெனெச்ச வீற்றுயிர் மெய்சேறலும்" என்ற நன்னூற் சூத்திரத்தால் எச்சத்து உயிர்மெய்கெட்டது.

மான்—குதிரைக்கும் பெயர். .... (௧௦)

அடிவரவு:—கண் அம்பு மீதோடி தோளும் வந்திக்கும் பண்டு பைவிரியும் உண்ணாது கள்ளத்தேன் பூமாண் தந்தை.

நான்காந்திருமொழி உரை முற்றிற்று.

ஜீயர் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:
ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஏழாம்பத்து—ஐந்தாந் திருமொழி,

தந்தைகாலிற் பெருவிலங்கு.

[திருவழுந்தூர் மங்களாசாஸநத் திருப்பதிகம்.]

தந்தைகாலில் பெருவிலங்கு தாளவிழ • நள்ளிருட்கண்
வந்தவெந்தைபெருமானார் மருவிநின்ற வூர்போலும் *
முந்திவானம் மழைபொழிய மூவாவுருவின் மறையாளர் *
அந்திமூன்று மனலோம்பு மணியார்வீதி யழுந்தூரே. (க)

வானம்	மேகமானது	தந்தை	தகப்பனாராகிய வஸுதேவருடைய
முந்தி	(யாகஞ் செய்வதற்கு) முன்னமே	காலில்	காலிலே (பூட்டப்பட்டிருந்த)
மழை பொழிய	மழை பெய்யப் பெற்றதும்,	பெரு விலங்கு தாள் அவிழ	பெரிய விலங்குப்பூட்டு இற்றுவிழும்படியாக
மூவா உருவின்	கிழத்தனமற்ற உருவத்தையுடையரான	நள் இருள் கண்	நடுநிசியிலே
மறையாளர்	பிராமணர்கள்	வந்த	திருவவதரித்த
அந்திமூன்றும்	முச்சந்தியும்	எந்தை பெருமானார்	எம்பெருமான்
அனல் ஓம்பும்	அக்நிஹோத்ரம் செய்யப் பெற்றதுமான	மருவி நின்ற	நித்யவாஸஞ் செய்யப்பெற்ற
அணி ஆர் வீதி	அழகுமிக்க திருவீதிகளையுடைய	ஊர் போலும்	திவ்யதேசமாகும்.
அழுந்தூர்	திருவழுந்தூரென்னுந் திருப்பதியானது,—		

* * *—இத்திருமொழியும் மேல்மூன்று திருமொழிகளுமாக நாற்பது பாசுரங்கள் திருவழுந்தூர்ப்பதி விஷயமாக அருளிச் செய்யப்படுமவை. தனது தவத்தின் வலிமையால் இரதத்துடன் வானத்திற் செல்லுந்தன்மையனான உபரிசரவஸு வென்னும் அரசன் தேவர்கட்கும் முனிவர்கட்கும் நேர்ந்தவிவாதத்தில் பக்ஷபாதமாய்த் தீர்ப்புச் சொன்னது காரணமாக முனிவர்களாற் சபிக்கப்பட்டுப் பூமியில் விழுகையில் அவனதுதேர் அழுந்தப்பெற்ற இடமாதல்பற்றி இத்தலத்திற்கு அழுந்தூர் என்று பெயர்வந்தது என்பர். 'தேரழுந்தூர்' எனவும் வழங்கப்பெறும்.

இத்தலத்திலெழுந்தருளியிருக்குமெம்பெருமானுடைய திருநாமம் 'ஆமருவியப்பன்' என்பதாதலால் "தந்தைகாலில் பெருவிலங்கு தாளவிழ நள்ளிருட்கண்வந்த வெந்தை பெருமானார் மருவிநின்றவூர்" என்று தொடங்குகின்றார்.

கம்ஸனால் விலங்கிடப்பட்டுச் சிறையிருந்த வஸுதேவதேவகிகளின் கால் விலங்குகள் கண்ணபிரான் திருவவதரிக்கும்போது இற்று முறிந்தொழிந்த வரலாறு அறியத்தக்கது.

[முந்திவான மித்யாதி.] இவ்வூரில் நித்யாக்நிஹோத்ரிகளான பிராமணர்கள் மலிந்திருப்பர்களென்கிறது. அந்தணர்கள் யஜ்ஞயாகங்கள் செய்தால் நன்றாக மழைபொழிந்து தேசங்கள் ஸுபிக்ஷமாயிருக்குமென்று சொல்லுவர்கள்; திருவழுந்தூரின் நிலைமை எப்படிப்பட்டதென்னில்; அந்தணர்கள் யாகஞ்செய்யத் தொடங்கு முன்னமே வானம் மழைபொழியப்பெறுகின்றதாம். இங்ஙனம் பேசுதல் சபலாதிசயோக்தியென்றாவது அத்யந்தாதிசயோக்தியென்றாவது அலங்காரசாஸ்த்ரிகளால் கூறப்படும். காரணமுண்டாவதற்கு முன்னமே காரியமுண்டாய்விடுவதாகச் சொல்லுவதன் கருத்து—காரணமுண்டானவுடனே ஒரு நொடிப்பொழுதும் தாமதியாமல் காரியமுண்டாய்விடுகிறது என்பதேயாம். இதனால், அவ்விடத்து அந்தணர்கள் செய்யும் யஜ்ஞங்கள் தவறாது பயனளிப்பனவென்றதாம்.

மூன்றாமடியின் பெரியவாச்சான் பிள்ளை வியாக்யானத்தில் "வானமானது முந்தி மழையைப் பொழியுமாய்த்து" என்றிருக்கும் ஸ்ரீஸூக்தியைக் கண்டவர்கள் "முந்திவானம் மழைபொழியும்" என்று மூலபாடத்தைக் கற்பித்தனர்; இது அந்வயிக்க அரிதாதலால் "முந்திவானம் மழைபொழிய" என்ற ப்ராசீந பாடமே கொள்ளத்தக்கது. இதில் வியாக்யானவிரோதமுமில்லை; வியாக்யானம் தாத்பர்யரீதியிற் செல்லுதலால்.

மூவாவுருவின் = அங்குள்ள ப்ராஹ்மணர்கள் வைதிககருமங்களை நேர்பட அநுஷ்டிக்கவல்ல சக்திவாய்ந்த யௌவநசாலிகள் என்கை. அந்திமூன்றும் = ப்ராதஸ்ஸவநம், மாத்யந்திநஸவநம், ஸாயம்ஸவநம் என்ற முப்போதும். (௧)

பாரித்தெழுந்த படைமன்னர்தம்மை மாள * பாரதத்துத்
தேரில்பாகனாயூர்ந்த தேவதேவனூர்போலும் *
நீரில்பணைத்தநெடுவாளைக்கு அஞ்சிப்போனகுருகினங்கள் *
ஆரல்கவுளோடருகணையும் அணியார்வயல் சூழழுந்தூரே. (௨)

நீரில்	தண்ணீரில்
பணைத்த	செழித்து வளர்ந்த
நெடுவாளைக்கு	பெரிய மீன்களுக்கு
அஞ்சி	பயப்பட்டு
போன	ஓடிப்போன
குருகு இனங்கள்	குருகு என்னும் பறவைக் கணங்கள்
ஆரல்	ஆரல் என்னுஞ் சிறுமீனை
கவுளோடு	கதுப்பிலேகொண்டு
அருகு அணையும்	பின்னையும் அணுகி வந்து சேரப்பெற்ற

அணி ஆர் வயல் சூழ் அழுந்தூர்	அழகுமிக்க கழனிகளால் சூழப்பட்ட திருவழுந்தூரானது,—
பாரித்து எழுந்த	(வெற்றி பெறவேணுமென்று) ஊக்கங்கொண்டு கிளர்ந்த
படை மன்னர் தம்மை மாள	ஆயுதபாணிகளான அரசர்கள் முடியும்படி
பாரதத்து	பாரதப் போரில்
தேரில்	(அர்ஜுநனுடைய) தேரிலே
பாகன் ஆய் ஊர்ந்த	ஸாரதியாயிருந்து கொண்டு நடத்தின

தேவ தேவன் தேவாதிதேவனுடைய | ஊர் போலும் திவ்யதேசமாகும்.

* * *— 'ஸ்ரீ மஹாவிஷ்ணுவான கண்ணபிரான் பாண்டவர்களுக்குப் பக்ஷபாதியா யிருக்கையாலே நாம் கனவிலும் வெற்றிபெற முடியாது' என்று தெரிந்துகொண்டு வணங்கி வாழ்ந்து போகலாமா யிருக்கச்செய்தேயும் அது செய்யாதே, 'அவர்கள் ஐந்துபேர், நாம் நூறுபேர்; நவகோடி நாராயணர்களும் நம் பக்ஷத்திலே உண்டு; நமக்கே வெற்றியுண்டாகத் தக்கது' என்று ப்ரமித்துப் பரபரப்புடன் போர்செய்யவந்த துரியோதனாதியரைப் பாரதப் போரில் முடித்து மண்ணின்பாரம் நீக்குதற்காக அர்ஜுநனுக்கு ஸாரதியாய்த் தேரை நடத்தின பெருமான் வாழுமிடம் திருவழுந்தூர்.

பின்னடிகளில் அவ்விடத்து வயல்வளஞ் சொல்லுகிறது. குருகுகளானவை திரள்திரளாக மீன்களைப் பிடிக்க நீர் நிலங்களில் வந்து இழிந்து தம் வாய்க்கு அடங்கக்கூடிய சிறுமீனைப் பிடித்துக் கதுப்பிலே அடக்கிக்கொண்டிருக்கச் செய்தே வேறேயொரு பெரியமீன் வந்து தோற்ற, அதைப்பிடிக்க அஞ்சி ஓடிப்போய், பின்னையும் ஆசையினால் வந்து கிட்டாநிற்கு மென்கை. இந்த வர்ணனையின் உட்கருத்தைப் பெரியவாச்சான்பிள்ளை வெளியிடுகிறார் காண்மின்:— "பாரத ஸமரத்தில் பீஷ்மாதிகள் 'அதிரதர், மஹாரதர் என்றிங்ஙனே பேர்பெற்று ஜீவித்திருந்தோம், இப்போதாகப் பூசல்கோழைகளாக வொண்ணாது' என்று ஸாரதி பக்கலிலே வந்து கிட்டுவது, தேர்க்காலிலே உழக்குண்டு போகவொண்ணாதென்று அகலுவதாய்க்கொண்டு அவர்கள் படுவனவற்றைப் படாநின்றனவாய்த்துக் குருகினங்களும்" என்று. .... (உ)

செம்பொன்மதில்சூழ் தென்னிலங்கைக்கிறைவன் சிரங்க ளைமிரண்டும் *
உம்பர்வாளிக் கிலக்காக உதிர்த்தவரவோ னூர்போலும் *
கொம்பிலார்ந்த மாதவிமேல் கோதிமேய்ந்த வண்டினங்கள் *
அம்பராவுங் கண்மடவார் ஐம்பாலணையு மழுந்தூரே. (ங)

கொம்பில் ஆர்ந்த } கிளைகளினால் நிறைந்திருக்கிற
மாதவி மேல் — குருக்கத்திமரத்தின் மேலே
கோதி — (தளிர்களைக்) கீறி
மேய்ந்த — மதுபானம் பண்ணின
வண்டு இனங்கள் } வண்டுத்திரள்கள்
அம்பு அராவும் கண் மடவார் { அம்புபோன்ற கண்களையுடையரான மாதர்களினுடைய
ஐம்பால் — கூந்தலின்மீது
அணையும் — வந்துசேரப் பெற்ற
அழுந்தூர் — திருவழுந்தூர்,—

செம் பொன் மதிள் சூழ் { செம்பொன் மயமான மதிள்களாலே சூழப்பட்ட
தென் இலங்கைக்கு } தென்னிலங்காபுரிக்கு
இறைவன் — நாயகனான இராவணனது
சிரங்கள் ஐ இரண்டும் } பத்துத்தலைகளையும்
உம்பர்வாளிக்கு — ப்ரஹ்மாஸ்திரத்திற்கு
இலக்கு ஆக — லக்ஷியமாக்கி
உதிர்த்த — அறுத்தொழித்த
உரவோன் { பெருமிடுக்கனான பெருமானுடைய
ஊர் போலும் — திவ்யதேசமாகும்.

* * *— 'அரண்மிக்க ஊரிலேயன்றோ நாம் வாழ்கிறோம்; இப்படிப்பட்ட ஊருக்கன்றோ நாம் கடவோம், நம்மை வெல்வாருண்டோ?' என்று மார்பு நெறித்துக்கிடந்த இராவணனுடைய தலைகள் பத்தையும் ப்ரஹ்மாஸ்த்ரத்துக்கு இலக்காக்கி உதிர்த்தொழித்த பெருமிடுக்கன் வாழுமிடம் திருவழுந்தூர். இந்திரன் முதலானாருடைய வஜ்ராயுதம் முதலிய பெரும்படைகட்கும் அழியாத அவன் தலைகளை ஸாதாரண மநுஷ்ய ஜந்மத்திற் பிறந்து அழித்த மிடுக்கை நோக்கி உரவோன் என்கிறார். உரம்—வலிமை; அதனையுடையவன் உரவோன்.

திருவழுந்தூரிலுள்ள மாதர்கள் தேனொழுகுங் கூந்தலையுடையார் என்கிறது பின்னடிகளில். மதுமிக்க பூக்களை எப்போதும் கூந்தலி லணிந்திருப்பவர்களென்கை. இதுவும் நகர்ச் சிறப்புகளுள் ஒன்றாம். கொம்புகள் செறிந்திருந்துள்ள குருக்கத்தியின் மேலே செருக்காலே தளிரையும் பூக்களையும் கோதி அவற்றில் நின்றும் மதுபானம் பண்ணின வண்டினங்கள், அவற்றிற் காட்டிலும் போக்யதையும் இருட்சியும் மிக்கதொரு இடந் தேடிப்போய் இராத் தங்கவேணும் என்று பார்த்து அங்குள்ள ஸ்த்ரீகளின் கூந்தற்கற்றையி லேறுகின்றனவாம். குருக்கத்தியி விருப்பதிற் காட்டிலும் அங்குற்ற மாதர்களின் தலையிலிருப்பது போக்யமென்னும் முகத்தால் அவர்களது சிறப்புச் சொல்லிற்றாயிற்று.

ஐம்பால்— ஐவகைப் பான்மைகளை யுடையதென்று கூந்தலுக்குக் காரணப் பெயர். சுருண்டிருத்தல், நீண்டிருத்தல், அடர்ந்திருத்தல், கறுத்திருத்தல், நறுமணங் கொண்டிருத்தல் ஆகிய இவ்வைந்து தன்மைகள் உத்தம கேச லக்ஷணம் என்க. .... (ங)

வெள்ளத்துள்ளோராலிலைமேல் மேவியடியேன் மனம்புகுந்து * என்
உள்ளத்துள்ளுங் கண்ணுள்ளும் நின்றார்நின்றவூர்போலும் *
புள்ளுப்பிள்ளைக்கிரைதேடிப் போனகாதற் பெடையோடும் *
அள்ளற்சேறுவில் கயல்நாடும் அணியார்வயல்சூழழுந்தூரே. (ச)

காதல் பெடையோடும் — அன்பார்ந்த பெடையோடு கூடி

பிள்ளைக்கு இரை தேடி போன — குட்டிக்காக இரைதேடிக் கொண்டு சென்ற

புள்ளு — பறவையானது

அள்ளல் சேறுவில் — சேறு மிக்க விளை நிலங்களிலே

கயல் — மீன்களை

நாடும் — தேடப்பெற்ற

அணி ஆர் வயல் சூழ் அழுந்தூர்—;

வெள்ளத்துள் — பிரளய வெள்ளம் நேர்ந்த காலத்தில்

ஓர் ஆல் இலை மேல் மேவி — ஒப்பற்றவொரு ஆலந்தளிரின் மீது பொருந்தியிருந்து

அடியேன் மனம் புகுந்து — (அந்த நிலைமையுடனே) அடியேனது நெஞ்சினுட் புகுந்து

என் உள்ளத்துள்ளும் — எனது அந்த நெஞ்சினுள்ளும்

கண்ணுள்ளும் — கண்களினுள்ளும்

நின்றார் — நிலைத்து நின்ற பெருமான்

நின்ற — நித்யவாஸம் பண்ணுகிற

ஊர் போலும் — திவ்யதேசமாகும்.

* * *— ப்ரளயப் பெருவெள்ளத்திலே ஒரு ஆலந்தளிரிலே கண்வளர்ந்தருளினவனாய், ' அந்தோ ! சிறு குழவியாய்ப் ப்ரளயத்திலே கண்வளர்ந்தருளா நின்றானே, பரிகைக்கு ஒருவருமில்லையே ; க்ருஷ்ணாவதாரம் முதலியவற்றில் யசோதை முதலானவர்களாகிலு மிருந்தார்கள், இங்கு ஒருவரும் பரிவாரில்லையே ; என்ன தீங்கு நேருமோ ?' என்று எனக்கு ஆராய்ச்சி பிறக்கும்படி பண்ணி, அந்த ஆராய்ச்சியே ஹேதுவாக என்னுள்ளத்தே வந்து புகுந்தவனாய், மாநஸாநுபவ மாத்திரமேயன்றியே கண்ணுக்கும் தானே விஷயமாய் ஹ்ருதயமும் வேறொன்றிலே போகாதபடி தானே விஷயமாகு மெம்பெருமான் எழுந்தருளி யிருக்குமிடம் திருவழுந்தூர்.

வயல்வளங் கூறுவன பின்னடிகள். குட்டிக்கு இரைதேடிப் போகிற புள்ளானது தனியேபோகாதே தனது காதற்பெடையோடேபோய், சேறு என்றால் பின்வாங்கவேண்டியதா யிருந்தும் அங்குள்ள போக்யதையின் மிகுதியினால் இறாயாது புகுந்து இரைதேடித் திரியுமாம்.

இங்கே ஒரு சங்கை பிறக்கும் ;— அவ்விடத்து வயல்களிலே மீன்கள் நிரம்பிக் கிடக்கின்றனவாகக் கீழும் மேலும் சொல்லாநிற்க, இங்கு ' இரைதேடும் ' என்றது எங்ஙனே ? மீன் அருமைப்பட் டிருந்தாலன்றோ இரைதேட வேண்டும் ; கொள்வார் தேட்டமாம்படி குறைபற்றுக் கிடக்கும்போது தேடிப் பிடிப்பதாகச் சொல்வது பொருந்ாதன்றோ ? என்று. இங்கே " புள்ளுப் பிள்ளைக்கு இரைதேடி " என்றுள்ள சொற்போக்கைக் குறிக்கொண்டால் இந்த சங்கை பிறவாது. அங்குள்ள மீன்கள் நிலமிதியாலே தூணும் துலாமும் போலே தடித்திருக்கும் ; அவை பறவைக் குட்டிகளின் வாய்க்குப் பிடிக்க மாட்டாவாகையால் உரிய சிறிய மீன்கள் தேடிப்பிடிக்க வேண்டுமத்தனையன்றோ. (௪)

பகலுமிரவுந் தானேயாய்ப் பாரும்விண்ணுந்தானேயாய் *
நிகரில்சுடரா யிருளாகி நின்றார்நின்ற வூர்போலும் *
துகிலின்கோடியும் தேர்த்துகளும் துன்னிமாதர்கூந்தல்வாய் *
அகிலின்புகையால் முகிலேய்க்கும் அணியார்வீதி யழுந்தூரே. (௫)

துகிலின் கொடியும் { துணிகளோடு கூடின த்வஜங்களும்
தேர் துகளும் { தேர் கடத்தும்போது உண்டாகும் தூள்களும்
துன்னி நெருங்கி
மாதர் ஸ்திரீகளுடைய
கூந்தல் வாய் கூந்தலிலே (ஊட்டப்பட்ட)
அகிலின் புகையால் { அகிற்புகையுமாகிய இவற்றால்
முகில் ஏய்க்கும் { வர்ஷாகாலத்தை ஒத்திருக்கின்ற
அணி ஆர் வீதி { அழகிய திருவீதிகளை யுடைத்தான

அழுந்தூர்—;
பகலும் இரவும் தானே ஆய் { பகற்போதுக்கும் இராப் போதுக்கும் நியாமகனாய்
பாரும் விண்ணும் தானே ஆய் { லீலா விபூதிக்கும் நித்யவிபூதிக்கும் நியாமகனாய்
நிகர் இல் சுடர் ஆய் { ஒப்பில்லாத தேஜஸ் பதார்த்தங்களுக்கும் ப்ரகாரியாய்
இருள் ஆகி நின்றார் { இருளையும் ப்ரகாரமாக வுடையரான பெருமாள்
நின்ற நித்யவாஸம் பண்ணப்பெற்ற
வூர் போலும் திவ்யதேசமாகும்.

* * *—பகலுமிரவுந் தானேயாய்=“ஸீக்ஷாஸ்மாத் வாத: பவதே। ஸீக்ஷோதேதி ஸூர்ய:। ஸீக்ஷாஸ்மாதக்நிச்சேந்த்ரச்ச” என்ற உபநிஷத்தின்படியே பகற்போதுக்கு இறைவனான ஸூர்யனும் இராப்போதுக்கு இறைவனான சந்திரனும் தனது கட்டளைக்குக் கீழ்ப்பட்டு நடக்கும்படியான நிர்வாஹ சக்தி வாய்ந்தவன் திருமால் என்றபடி. தன் ஸங்கல்பத்தாலே பகலை இரவாக்கவும் இரவைப்பகலாக்கவும் வல்லவன் என்றுமாம்; பாரதப்போரில் ஜயத்ரதவத வ்ருத்தாந்தத்தை நினைப்பது.

பாரும் விண்ணும் தானேயாய்=உபயவிபூதிக்கும் நிர்வாஹகனென்கை. நிகரில் சுடராய் இருளாகி நின்றார்=நக்ஷத்ரம் முதலிய சுடர்ப் பொருள்களையும் அவற்றுக்கு எதிர்த்தட்டான இருட்டையும் வடிவாகவுடையவன். ஸாத்விகர்களாய் ஜாயமாநகால கடாக்ஷம் பெற்றவர்களுக்கு ப்ரகாசமாக ஸேவைஸாதிப்பவன்; ராஜஸர்க்கும் தாமஸர்க்கும் தோன்றாதே இருள்மூடிக் கிடப்பவன் என்றவாறு. ஆகவிப்படி ஜகத்ரூபியாயிருந்தாலும் அஸாதாரண திவ்யமங்கள விக்ரஹ விசிஷ்டனாய் ஸேவை ஸாதிக்குமிடம் திருவழுந்தூர்.

[துகிலின் கொடியும் இத்யாதி.] அவ்வூரில் எப்போதும் கார்காலமாகவேயிருக்குமென்கிறது. காற்றும் தூள்களும் மேகப்படலங்களும் விசேஷமாகக் கார்காலத்தில் காணப்படும்; அவை இங்குமுண்டு; அங்குள்ள மாளிகைகளெல்லாம் செல்வம் மிக்கனவாதலால் ஒவ்வொன்றிலும் கொடி கட்டியிருக்கும்; அவற்றின் முனையிற் கட்டப்பட்டுள்ள துணிகளின் அலைச்சலினாலுண்டாகும் காற்று; செல்வத் திருவீதிகளில் தேர்கள் ஸஞ்சரிப்பதனால் கிளப்பப்படும் தூள்; மாதர்கள் தங்கள் கூந்தலுக்குப் பரிமள மூட்டுதற்காகச் செய்து கொள்ளும் அகிற்புகை (மேகத்திரள் போன்றது) ஆக இவற்றால் நித்தியமும் வர்ஷாகாலமாகவே தோற்றியிருக்கும். .... (ரு)

ஏடிலங்கு தாமரைபோல் செவ்வாய்முறுவல் செய்தருளி *
மாடுவந்தென்மனம்புகுந்து நின்றார்நின்ற வூர்போலும் *
நீடுமாடத் தனிச்சூலம்போழ்கக் கொண்டல் துளிதூவ *
ஆடலரவத் தார்ப்போவா அணியார்வீதி யழுந்தூரே. (சு)

நீடு மாடம்	உயர்ந்த மாடங்களில் (காட்டப்பட்ட)
தனி சூலம்	ஒப்பற்ற சூலமானது
போழ்க	(மேகத்தின் வயிற்றைக்) கீண்ட வளவிலே
கொண்டல்	மேகமானது
துளி தூவ	மழைபொழியப் பெற்றதும்
ஆடல் அரவத்து ஆர்ப்பு ஓவா	கூத்தாட்டவொலிகளினாலுண்டான கோலாஹலம் ஓயாமலிருக்கப்பெற்றதுமான
அணி ஆர் வீதி அழுந்தூர்—;	

ஏடு இலங்கு தாமரை போல்	இதழ்விளங்குகின்ற தாமரைப்பூ மலர்ந்தாலொப்ப
செம் வாய் முறுவல் செய்தருளி	சிவந்த திருப்பவளத்தினால் புன்முறுவல் செய்து கொண்டு
மாடு வந்து	என்பக்கலிலே வந்து
என் மனம் புகுந்து நின்றார்	என்மனத்திலே புகுந்து நின்ற பெருமான்
நின்ற	நித்யவாஸம் பண்ணப்பெற்ற
ஊர் போலும்	திவ்யதேசமாகும்.

* * *—என்னைப் பெறுதற்கு நெடுநாள் ஸமயம் பார்த்திருந்து பெறுகையால் அலப்யலாபம் பெற்றவர்போல ஸந்தோஷித்து அந்த ஸந்தோஷம் விளங்குமாறு, தாமரைப்பூ மலர்ந்தாற்போலே திருப்பவளத்தைத் திறந்து புன்முறுவல் செய்து அதிலே என்னை யீடுபடுத்தி ஹ்ருதயத்திலே வந்து புகுந்து 'இனி இவர்க்கொரு போக்கில்லை' என்று தோற்ற நின்றவர் கண்ணுக்கு இலக்காக வந்து நிற்கிற திவ்யதேசம் திருவழுந்தூர்.

அத்திருப்பதி எப்படிப்பட்டது?; அங்குள்ள மாடமாளிகைகள் மேகமண்டலத்தளவும் ஓங்கியிருக்கின்றன. மாளிகைகளின் முனையிலே பாதுகாப்புக் குறிப்பாகச் சூலங்கள் நாட்டப்படும். ("சிலையிலங்கு மணிமாடத் துச்சிமிசைச் சூலம் செழுங் கொண்டலகடிரிய" (3-9-4.) என்றார் வைகுந்த விண்ணகரத் திருப்பதிகத்திலும்.) அந்த சூலங்கள் மேகங்களினுடைய கீழ்வயிற்றை யிடித்துப் பிளக்க, மழை சொரிகின்றதாம். (இவ்வதிசயோக்தியினால் மாடமாளிகைகளின் ஓக்கம் உணர்த்தப்பட்டதாம்.) இன்னமும், மாதர்கள் ஆடுகிறபோதுண்டான ஆரவாரம் இடையறாதே செல்லுகின்றதாம். .... (சு)

மாலைப்புகுந்து மலரணைமேல்வைகி யடியேன்மனம்புகுந்து * என்
நீலக்கண்கள் பனிமல்க நின்றார்நின்ற வூர்போலும் *
வேலைக்கடல் போல்நெடுவீதி விண்டோய்சுதை வெண்மணிமாடத்து *
ஆலைப் புகையாலழற்கதிரை மறைக்கும் வீதி யழுந்தூரே. (எ)

வேலை கடல் போல்	கரையையுடைய ஸமுத்ரம் போல
நெடு	நீண்டிருக்கின்ற
வீதி	வீதிகளினுண்டான
விண் தோய்	ஆகாசத்தளவு மோங்கியிருக்கிற
சுதை வெண் மணி மாடத்து	சாந்திட்டு வெளுத்திருக்கின்ற திருமாளிகைகளின்மேல்
அழல் கதிரை	ஸூர்யகிரணங்களை
ஆலைப் புகையால்	ஆலையாடிக்கிளர்ந்த புகையினால்
மறைக்கும்	மறைக்கப்பெற்ற
வீதி	தெருக்களையுடைத்தான அழுந்தூர்—;
மாலை புகுந்து	மாலைப்பொழுதிலே வந்து
மலர் அணை மேல் வைகி	பூம்படுக்கையில் தங்கியிருந்து
அடியேன் மனம் புகுந்து	அடியேனுடைய மனத்திற் ப்ரவேசித்து
	(பின்பு பிரிவதாகப் ப்ரஸங்கித்து)
என் நீலம் கண்கள்	எனது நீலோற்பலம் போன்ற கண்கள்
பனி மல்க	நீர் ததும்பும்படி
நின்றார்	நின்று கொண்டிருந்தவர்
நின்ற	நித்யவாஸம் பண்ணுகிற
ஊர் போலும்	திவ்யதேசமாகும்.

* * *—இதுமுதல் மேல் மூன்று பாசுரங்களிலும் ஆழ்வார்க்கு நாயகி பாவனை நிகழ்வதாகக் கொள்ளத்தகும்.

என்னோடு கலவிசெய்ய விருப்பங்கொண்டு அதற்கு உரிய மாலைப் பொழுதிலே வந்து சேர்ந்து மென்மலர்ப் பள்ளியிலே தங்கி, அவ்விருப்பில் த்ருப்தி பெறாதே என்னுடைய ஹ்ருதயத்தினுள்ளே ஏகதத்துவமாகப் புகுந்து, கலவி

யானது பிரிவோடே சேர்ந்தல்லது இருக்கமாட்டாதாகையாலே உடனே பிரிந்து போவதாகப் பிரஸ்தாவித்து, அவ்வளவிலே எனது கண்களில் நின்றும் நீர் பெருக, அதைக்கண்டு 'இவ்வளவு ஆற்றாமையிலே இந்த நாயகியை எங்ஙனம் விட்டுப் பிரிவது?' என்று கலங்கிக் கால் பெயர்ந்து போகமாட்டாதே நின்றவர் நித்யவாஸம் பண்ணுகிற திவ்யதேசம் திருவழுந்தூர்.

அவ்விடத்தில் ஒவ்வொரு திருவீதியும் கடல்போன்று பெருமை பொருந்தியிருக்கும். சாந்திட்டு வெண்ணிறமாயிருக்கின்ற மணிமாடங்கள் விண்ணுலகத்தளவும் ஓங்கியிருக்கும். ஸூர்ய கிரணங்களைக் கருப்பாலைப்புகை வந்து மறைத்து எங்கும் நிழல் செய்யும். இதுவாயிற்று அவ்வூர்ப் பெருமை.

சுதை—'ஸுதா' என்னும் வடசொல் விகாரம். .... (எ)

வஞ்சிமருங்கு லிடைகோவ மணந்துநின்ற கனவகத்து * என்
நெஞ்சுநிறையக்கைகூப்பி நின்றார் நின்றவூர்போலும் *
பஞ்சியன்னமெல்லடி நற்பாவைமார்களாடகத்தின் *
அஞ்சிலம்பினார்ப்போவா அணியார்வீதி யழுந்தூரே. (அ)

பஞ்சி அன்ன மெல் அடி — பஞ்சுபோன்று மிருதுவான பாதங்களையுடைய
நல் பாவைமார்கள் — நல்ல ஸ்திரீகளினுடைய
ஆடகத்தின் அம் சிலம்பின் — பொன்மயமான அழகிய சிலம்புகளினின்று முண்டான
ஆர்ப்பு — ஆரவாரமானது
ஓவா — இடைவிடாதிருக்கிற

அணி ஆர் வீதி அழுந்தூர்—,

வஞ்சி — வஞ்சிக்கொடிபோன்ற
மருங்குல் இடை — இடுப்பானது
கோவ — கோரும்படியாக
மணந்துநின்ற — ஸம்ச்லேஷித்துநின்ற
கனவகத்து — கனவிலே
என் நெஞ்சு நிறைய — எனது நெஞ்சு நிறையுமாறு
கை கூப்பி — நான் அஞ்ஜலி செய்யப் பெற்று
நின்றார் — நின்று கொண்டிருந்தவர்
நின்ற — நித்யவாஸம் பண்ணுகிற
ஊர் போலும் — திவ்ய தேசமாகும்.

* * *—இதுவும் ஆழ்வார் நாயகி ஸமாதியால் பேசும் பாசுரம். கனவிலே வந்து கலந்து பிரிந்து போனவர் மற்றுள்ள அன்பரோடும் § நனவிலே கலவி செய்ய வந்து நிற்கிற விடம் திருவழுந்தூர்.

வஞ்சிமருங்குலிடைநோவ—பெண்டிருடைய இடைக்கு வஞ்சிக்கொடியை உவமை சொல்வது கவிமரபு. இடை நோவ மணந்து நின்றானென்றதனால் பூர்ண ஸம்ச்லேஷம் நடந்தமை தோன்றும். 'மருங்குல்' என்றும் 'இடை' என்றும் இடுப்புக்கே பெயர்; இரண்டு சொற்களையும் சேரப் பிரயோகித்தது தமிழ் வழக்கு. கை கூப்பி—எச்சத்திரிபு.

§ நனவு—கனவுக்கு எதிர்த்தட்டு; ப்ரத்யக்ஷம்.

அங்குள்ள மாதர்கள் பொன்மயமான நூபுரங்களைக் காலிலணிந்து கொண்டு நர்த்தனம் பண்ணா நிற்பர்கள்; அதனாலுண்டான ஆரவாரம் ஓயாதிருக்குமென்கிறது பின்னடிகளில்.

பஞ்சி—பஞ்சு; போலி. பாவைமார்—பதுமைபோல அழகியவர்கள்; உவமையாகுபெயர். 'ஹாடகம்' என்னும் வடசொல் ஆடகமெனத்திரிந்தது. (அ)

என்னைம்புலனுமெழிலுங்கொண்டு இங்கேநெருநலெழுந்தருளி *
பொன்னங்கலைகள் மெலிவெய்தப் போனபுனிதரூர்போலும் *
மன்னுமுதுநீரரவிந்தமலர்மேல் வரிவண்டிசைபாட *
அன்னம்பெடையோடுடனாடும் அணியார்வயல்சூழழுந்தூரே. (௯)

மன்னு முது நீர்	ஒருநாளும் தண்ணீர் வற்றாத ஆழ்ந்த நீர் நிலைகளிலுள்ள
அரவிந்தம் மலர் மேல்	தாமரைப் பூக்களிலே
வரி வண்டு	வரி வண்டுகள்
இசை பாட	இசைகளைப் பாடா நிற்க
	(அந்த இசைப்பாட்டுக்குச் சேர)
அன்னம்	அன்னப்பறவை
பெடை யோடு உடன்	தன் பேடையோடுகூட
ஆடும்	நர்த்தனம் பண்ணப்பெற்ற
அணி ஆர் வயல் சூழ் அழுந்தூர்—,	
நெருநல்	நேற்று
இங்கே	நானிருக்குமிடத்து
எழுந்தருளி	எழுந்தருளி
என் ஐம்புலனும்	எனது பஞ்சேந்திரிய அறிவையும்
எழிலும்	அழகையும்
கொண்டு	கொள்ளை கொண்டு
பொன் அம் கலைகள்	மிக அழகிய (எனது) வஸ்திரங்கள்
மெலிவு எய்த	தளரும்படியாகச் செய்து
போன	பிரிந்துபோன
புனிதர்	பரமபவித்திருடைய
ஊர் போலும்	திவ்யதேசமாகும்.

* * *—இப்பாசுரமும் நாயகி ஸமாதியாற் பேசுவதாம். என்னுடைய செவி வாய் கண் மூக்கு உடல் என்னும் பஞ்சேந்திரியங்களினுடையவும் வ்ருத்திகளைத் தன்வசமாக்கிக் கொண்டவரும், எனது மேனியழகைக் கொள்ளை கொண்டவரும், அரையில் பரியட்டம் தங்காதபடி பண்ணிவிட்டுப் போனவருமான தலைவர் வாழுமிடம் திருவழுந்தூர்.

ஐம்புலனையுங் கொள்கையாவது—லௌகிக பதார்த்தங்களில் ஒரு உறுப்புஞ் செல்லவொண்ணாமல் "ஜிஹ்வே! கீர்த்தய கேசவம் முராரிபும் சேதோ பஜ ஸ்ரீதரம் பாணித்வந்த்வ! ஸமர்ச்சயாச்யுதகதா: ச்ரோத்ரத்வய! த்வம் ச்ருணு-க்ருஷ்ணம் லோகய லோசநத்வய! ஹரே: கச்சாங்க்ரியுக்மாலயம் ஜிக்ர க்ராண! முகுந்த பாத துலஸீம் மூர்த்தந்! நமாதோக்ஷஜம்" (முகுந்தமாலை) என்றச்லோகத்தின் படியே ஸகல கரணவ்ருத்திகளையும் தன்வசப் படுத்திக்கொள்ளுதலாம். எழில் கொள்ளுகை—பிரிவுத்துயரத்தினால் மேனிநிறமழியச்செய்கை.

போன புனிதர் ஊர் போலும்=இங்கே 'புனிதர்' என்றது எதிர்மறையிலக்கணை யென்னலாம்; இப்படி என்னைப் படுகொலை செய்பவர் எங்ஙனே பரிசுத்த

ராவர்? பெண்கொலைப்பாதகியன்றோ இவர் என்று ப்ரணயரோஷந்தோற்றச் சொல்லுகிறதாகலாம்.

வயல்களிலுங்கூடப் பாட்டுங் கூத்தும் நடை பெறுகின்றன வென்கிறார் பின்னடிகளில்.

அரவிந்தம்—தற்சம வடசொல். .... (கூ)

நெல்லிற்குவளை கண்காட்ட நீரிற்குமுதம்வாய்காட்ட *
அல்லிக்கமலமுகங்காட்டும் கழனியழுந்தூர் நின்றானை *
வல்லிப்போதும்பில் குயில்கூவும் மங்கைவேந்தன் பரகாலன் *
சொல்லிற்பொலிந்த தமிழ்மாலை சொல்லப்பாவம்நில்லாவே. (க0)

நெல்லில்	நெற்பயிரினிடையே (முளைத்த)
குவளை	கருநெய்தற் பூக்கள்
கண் காட்ட	(அவ்வூர்ப்பெண்களது) கண்கள் போன்று விளங்கவும்
நீரில்	நீரிலே முளைத்த
குமுதம்	ஆம்பல் பூக்கள்
வாய் காட்ட	(அவர்களது) வாய் போன்று விளங்கவும்
அல்லி கமலம்	இதழ்மிக்க தாமரைப் பூக்கள்
முகம் காட்டும்	(அவர்களது) முகம்போன்று விளங்கவும் பெற்ற
கழனி	கழனிகளையுடைய
அழுந்தூர்	திருவழுந்தூரிலே
நின்றானை	எழுந்தருளியிருக்கு மெம்பிரான் விஷயமாக,—
வல்லி பொதும்பில்	பூங்கொடிகள் மிக்க முழுஞ்சுகளிலே
குயில் கூவும்	குயில்கள் கூவப்பெற்ற
மங்கை	திருமங்கைநாட்டுக்கு
வேந்தன்	தலைவரான
பரகாலன்	ஆழ்வார் (அருளிச்செய்த)
சொல்லில் பொலிந்த	நல்ல சொற்களினால் விளங்குகின்ற
தமிழ் மாலை	இத்தமிழ்ப் பாசுரங்களை
சொல்ல	ஓதவே
பாவம்	பாவங்கள்
நில்லா	இல்லையாய்விடும்.

* * *—நெல்லுக்குக் களையாக முளைத்த குவளைப்பூக்கள் அவ்வூரிலுள்ள மாதர்களின் கண்போலவும், நீர்நிலங்களிலுண்டான அரக்காம்பல்கள் அவர்களின் அதரம் போலவும், தாமரைப்பூக்கள் அவர்களது முகமண்டலம் போலவும் தோன்றப் பெற்ற வயல்களாற் சூழப்பட்ட திருவழுந்தூரில் நித்யவாஸஞ் செய்தருளா நின்ற ஆமருவியப்பன் விஷயமாகத் திருமங்கையாழ்வா ரருளிச் செய்த இத்திருப்பதிகத்தை ஓதவல்லவர்களுக்குப் பாவங்களெல்லாம் தொலைந்து போமென்று பயனுரைத்தாராயிற்று. .... (க0)

அடிவரவு:—தந்தை பாரித்து செம்பொன் வெள்ளத்துள் பகல் ஏடு மாலை வஞ்சி என் நெல்லில் சிங்கம்.

ஐந்தாந்திருமொழி உரை முற்றிற்று.

ஜீயர் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஏழாம்பத்து—ஆறாந்திருமொழி,

சிங்கமதாயவுணன்.

[இதுவும் திருவழுந்தூர்த் திருப்பதிகம்.]

சிங்கமதாயவுணன் திறலாகமுன்கீண்டுகந்த *
சங்கமிடத்தானைத் தழலாழிவலத்தானை *
செங்கமலத் தயனனையார் தென்னழுந்தையில் மன்னிநின்ற *
அங்கமலக்கண்ணனை அடியேன்கண்டுகொண்டேனே. (க)

முன்	முன்னொருகால்,	செம் கமலத்து அயன் அனையார்	செவ்விய (திருநாபிக்) கமலத்திற் பிறந்த பிரமனைப்போன்ற பிராமணர்கள் (வாழ்கிற)
சிங்கம் அது ஆய்	நரஸிம்ஹ ரூபியாய்க் கொண்டு	தென் அழுந்தையில்	அழகிய திருவழுந்தூரிலே
அவுணன்	இரணியாசுரனுடைய	மன்னி நின்ற	நித்யவாஸம் செய்பவனும்
திறல் ஆகம்	வலிமிக்க மார்பை	அம் கமலம் கண்ணனை	அழகிய தாமரை மலர் போன்ற திருக்கண்களை யுடையனுமான ஆமருவியப்பனை
கீண்டு	இருபிளவாக்கி	அடியேன் கண்டு கொண்டேன்	அடியேன் ஸேவிக்கப் பெற்றேன்.
உகந்த	திருவுள்ளமுவந்தவனும்		
சங்கம் இடத்தானை	சங்கை இடத்திருக்கையி லுடையவனும்		
தழல் ஆழி வலத்தானை	தீக்ஷ்ணமான திருவாழியை வலத்திருக்கையி லுடையவனும்		

* * * தன்னிடத்துப் பரமபக்தி கொண்டு தனது திருநாமங்களையே அநுஸந்தித்துக் கொண்டிருந்தது காரணமாகச் சிறுக்கனான ப்ரஹ்லாதாழ்வானைப் பலவகைகளிலும் நலிந்து கொண்டிருந்த இரணியனைத் தொலைப்பதற்குத் தூணில் நின்றும் நரசிங்கமூர்த்தியாய்த் தோன்றி அவனது மார்பைப் பிளந்து 'ஆச்ரிதனுடைய விரோதி தொலையப் பெற்றோம்' என்று திருவுள்ள முவந்தவனும், அவ்விரணியனது உடல் திருநகங்களுக்கே இரை போராமையாலே திருவாழி திருச்சங்குகள் வலவருகிலும் இடவருகிலும் இருந்தபடியே திகழப் பெற்றவனும், நாபிக்கமலத்தில் தோன்றிய நான்முகக்கடவுளைப்போல ஸ்ருஷ்டி செய்யவும் வல்லர்களான அந்தணர்கள் வாழப்பெற்ற தென்னழுந்தையில் நித்ய வாஸம் செய்தருளா நின்றவனுமான புண்டரீகாக்ஷனை அடியேன் ஸேவிக்கப் பெற்றேனென்றாராயிற்று.

"நரசிங்கமாய்" என்னாமல் 'சிங்கமதாய்' என்றது என்னென்னில்; முகமே முக்கிய மாதலால், அதுதான் சிங்கவுருவமாதலால் சொல்லிற்று.

செங்கமலத்தயனனையார்—அவ்வூரிலுள்ளவர்கள் நான்முகனை யொத்திருக்கின்றார்கள் என்றால் 'எந்த விஷயத்தில்?' என்று கேள்வி பிறக்கும்; ஓயாது வேதமோதும் விஷயத்தில் என்றாவது, ஸ்ருஷ்டியை நடத்தும் விஷயத்தில் என்றாவது கொள்க. "த்ருஷ்டாந்தா நாம் ஜகதேகத்ருஷ்டி: ப்ரணாமஸம்வாதவிஶேஷ நாதய: । ஸவந்தி வீராः" என்ற ஸ்தோத்ரரத்ந ஸ்ரீஸூக்தி காண்க. (௩)

கோவாணர்மடியக் கொலையார் மழுக்கொண்டருளும் *
மூவாவானவனை முழுநீர்வண்ணனை * அடியார்க்கு
ஆவா வென்றிரங்கித் தென்னழுந்தையில் மன்னிநின்ற *
தேவாதிதேவனை யான்கண்டுகொண்டு திளைத்தேனே. (௨)

கோ ஆனர்	க்ஷத்ரியாகளென்று பேர் பெற்றவரடங்கலும்
மடிய	மடிந்தொழியும்படி
கொலை ஆர் மழு	கொலைத்தொழில் வல்ல மழுப்படையை
கொண்டருளும்	(திருக்கையில்) ஏந்தியுள்ளவனும்
மூவா வானவனை	கிழத்தனம் முதலிய விகாரங்களில்லாத தேவாதி தேவனும்

முழுநீர் வண்ணனை	கடல்போன்ற திருநிறத்தையுடையவனும்
அடியார்க்கு	அடியார் விஷயத்திலே
ஆ ஆ என்று இரங்கி	ஐயோ வென்று கிருபை பண்ணி
தென் அழுந்தையில் மன்னி நின்ற—;	
தேவாதி தேவனை	தேவர்கட்கும் சிறந்த தேவனுமான பெருமானை
யான் கண்டு கொண்டு	அடியேன் ஸேவித்து
திளைத்தேன்	களிக்கப்பெற்றேன்.

* * *—கார்த்த வீரியார்ஜுநன் செய்த குற்றங்காரணமாக, உலகில் க்ஷத்திரிய ரென்று பேர்பெற்ற ரெல்லாரும் முடியும்படி இருபத்தொருபடிகால் க்ஷத்ரிய குலத்தை அறுத்தொழித்த கோடாலிப் படையைக்கையிலேந்தின பரசுராமனாகத் திருவவதரித்தவனும், நரை திரை மூப்பு என்னப்படுகிற விகாரங்களொன்றுமின்றியே எப்போதும் ஒருபடிப்பட்டிருப்பவனும், கடல்போன்ற நிறத்தையுடையவனும், அடியார்கட்கு ஏதேனும் துன்பமுண்டானால் அவர்களுக்கு முன்னே தான் ஐயோவென்று இரங்கும் நீர்மையையுடையவனும் தென்னழுந்தையில் நித்யவாஸஞ் செய்தருள்பவனுமான தேவாதிதேவனை அடியேன் ஸேவிக்கப்பெற்று அதனாலுண்டான களிப்புக்குப் போக்குவீடாக நர்த்தனஞ் செய்கிறேனென்கிறார்.

அடியார்க்கு ஆ! ஆ!! என்றிரங்கி—எம்பெருமானுடைய திருக்கல்யாண குணங்களுள் தயை என்பதும் ஒன்று. பிறர்படும் துயரத்தை ஸஹித்திருக்க மாட்டாமையும், பிறர் துயரப்படக்கண்டு தானும் துயரப்படுகையும் தயையென்று பூருவாசாரியர்கள் திருவுள்ளம் பற்றுகிறார்கள். பிறர் படும் துயரத்தை நீக்க வேணுமென்கிற விருப்பமே தயை என்று ஸ்ரீமத் வேதாந்த தேசிகன் திருவுள்ளம் பற்றுகிறார். "யா து:காபாதிநீஷா ஸா ஹிதகநஸ: ஶௌஸ

தயஸ்யாநுகம்பா" என்று அதிகரண ஸாராவளியிலும், "காருண்யம்—பரது:க்க நிராகரணேச்சா" என்று சரணாகதி கத்ய பாஷ்யத்திலும் அருளிச்செய்தார். 'பிறர் படும் துக்கத்தைக்கண்டு தானும் துக்கப்படுகை தயை' என்பது பொருந்தாதென்றும் தேசிகன் கருதுகின்றார். பரது:க்காஸஹிஷ்ணுத்வமும் பரது:க்க நிராசிகீர்ஷையும் பர்யாயமென்று மயங்கிக்கிடக்கும் சிலர் "பரது:க்காஸஹிஷ்ணுத்வம்—தயா" என்று ஸ்ரீபாஷ்யகாரர்கள் அருளிச்செய்ததில் எமக்கு விவாதமில்லையென்கிறார்கள்.

'பிறர்படும் துக்கத்தைக் கண்டு தானும் துக்கப்படுகை தயை' என்பதில் விப்ரதிபத்தி பண்ணுமவர்களை ஒன்று கேட்கிறோம்; உலகத்தில் ஸாமாந்யமாகப் பரது:க்கது:க்கித்வமென்பது குணமா? தோஷமா? ஸ்ரீராமபிரானுடைய திருக்கல்யாண குணங்களைச் சொல்லிக்கொண்டுவரும் ப்ரகரணத்திலே "வ்யஸநேஷு மநுஷ்யாணாம் ப்ருசம் பவதி து:கித: = வ்யஸநேஷு மநுஷ்யாணாம் ப்ருசம் பவதி து:கித:" என்று நின்றதென்பது ஒருபுறம் நிற்க. உலகத்தில் ஒருவன் துக்கப்படும்போது அந்த துக்கத்தைக் கண்டுகொண்டிரா நின்ற மற்றொருவன் தானும் துக்கப்படாதொழியில் அவனைக் கல்நெஞ்சனென்றும் நிர்க்ருணனென்றும் வசை கூறுவதும், பிறர் துக்கிப்பதைக்கண்டு பரவசமாக ஒருவன் துக்கிப்பனேல் அவனை ஈரநெஞ்சன் என்றும் இரக்கமுள்ளவனென்றும் பரமதயாளுவென்றும் சொல்லிப்புகழ்வதும் இன்றாக ஒருவராலும் அபலாபம் செய்ய வொண்ணாதவை. ஆகவே பரது:க்க து:க்கித்வமென்பது சிறந்த குணங்களில் முதன்மையாகக் கணக்கிடக் கூடியதே யன்றி, துர்க்குணமாக ஒருவராலும் கூறவொண்ணாதது. இப்படிப்பட்டவொரு சிறந்த குணம் எம்பெருமானுக்கு இல்லையென்று ஸ்ரீராமாநுஜ ஸம்ப்ரதாயமுடையார் சொல்லத் தகுமோ?

பரது:க்கது:க்கித்வம் எம்பெருமானுக்குக் கூடாதென்று கூறுமவர்கள் முக்கியமாகச் சொல்லும் யுக்தி யாதென்னில்; பிறர்படும் துக்கத்தைப் பரிஹரிக்க வல்ல சக்தி நமக்கில்லாமையாலே நாம் பரது:க்கது:க்கிகளாயிருக்கலாம்; பரிபூர்ண சக்தி யுக்தனான எம்பெருமான் எலியெலும்பரான நம்மைப் போலன்றிக்கே பிறருடைய துயரத்தை எளிதிற் போக்கவல்லவனாகையாலே அவன் பிறர்படும் துக்கத்தைக்கண்டு தானும் துக்கப்படக் காரணமேயில்லையென்கிறார்கள். பரது:க்கது:க்கித்வமும் பரது:க்க நிராகரண ஸாமர்த்யமும் பரஸ்பரவிருத்தமென்று இவர்களுடைய நினைவுபோலும். உண்மையில் இவை ஒன்றோடொன்று விரோதமுடையனவல்ல; தன் குழந்தைக்கு ஒரு துன்பம் நேர்ந்துவிட்டால் அதனை உடனே பரிஹரிக்கவல்ல சக்தி மாதாவுக்கு இருக்கச்செய்தேயும், அப்படியே அத்துன்பத்தை அவள் பரிஹரித்துவிடச் செய்தேயும் 'குழந்தைக்குத் துன்பம் நேராமல் காக்க வேண்டியது நம் கடமையாயிருந்தும் ஏமாந்து போனோமே!, அந்தோ! அநியாயமாய்க் குழந்தையைத் துடிக்க

விட்டோமே!' என்றிப்படி பலவாறாகக் கதறி வருந்தும்படியைக் காணாதாருண்டோ?

துச்சாஸநன் கையிலே த்ரௌபதி பரிபவப்பட்டுக் கூவினபோது கண்ணபிரான் ஒருவாறு அவளது துயரைத் தீர்த்திருக்கச் செய்தேயும் 'ஐயோ! அவள் கூவினபோது நான் நேரில் சென்றிருந்து உதவாதொழிந்தேனே!' என்றும் 'ஐயோ! அவளுக்குப் பரிபவம் நேர்ந்து அவள் கதறின பின்பு நான் அதைப் போக்கினேனேயன்றி முதல் தன்னிலே பரிபவமே உண்டாகாதபடி ஜாகரூகனையிருக்கை தவிர்ந்தேனே! அவளுக்கு நான் பெரிய கடனாளியாய் விட்டேனே! என் பிறவி என்னாயிற்று!' என்றும் தன் காவற்சோர்வை நினைத்துத் திருவுள்ளம் வேவுண்டு பலவாறு கதறின படியைக் கேட்டறியீர்களோ?

"த்ரௌபதி 'சரணம்' என்ற உக்தியைத்தனையும் திருவுள்ளத்திலே கிடந்து, ஸதஸ்ஸில் அவன் பரிபவித்த பரிபவத்தையும் பரிஹரித்து துர்யோதநாதிகளையும் நிரஸித்து தர்மபுத்ரன் தலையிலே முடியையும் வைத்து இவள் குழலையும் முடிப்பித்துப் பின்பும் "கோவிந்தேதி யதாக்ரந்தத் க்ருஷ்ணா மாம் தூரவாஸிநம்। ருணம் ப்ரவ்ருத்தமிவ மே ஹ்ருதயாந்நாபஸர்பதி" என்று குறைவாளனாய், பரமபதத்துக்கெழுந்தருளுகிற போதும் 'நாதிஸம்ஸிதோ யயௌ' என்னும்படி திருவுள்ளத்தில் புண்ணோடேயிறே எழுந்தருளிற்று" என்று நம் ஆசார்யர்கள் ஈடுபட்டருளிச்செய்யும் வார்த்தை.

மடுவின் கரையிலே முதலைதன்னாலடர்ப்புண்ட ஸ்ரீகஜேந்த்ராழ்வானுடைய இடரை எம்பெருமான் தீர்த்தருளினானேலும் அவன்றான் பட்டபரிதாபம் பேச்சுக்கு நிலமன்றே; "ஸ்ரக்பூஷாம்பரயாநாயுதம் அபிநோ க்ராஹீத்ருத்ய ஹஸ்தகஜகர்ஜ மாஜகந்த = ஸ்ரக் பூஷாம்பர மயதாயதம் ததாநோ திக்மாமித்ய நுகஜகர்ஜ மாஜகந்த" என்று ஸ்ரீ ரங்கராஜஸ்தவத்திலே பட்டர் அருளிச்செய்தமை கண்டதே. 'ஹாஹந்த, ஹாஹந்த' [கெட்டேன் கெட்டேன்] என்று நொந்து கொண்டே எம்பெருமான் அரைகுலையத் தலைகுலைய ஓடிவந்தானென்றால் இது என்சொல்!. ஸஹஸ்ரநாமத்தில் 'ஈக்ஷ:' என்னுந் திருநாமத்தின் பாஷ்யத்திலும் இதனை விளக்கியருளினார்பட்டர். ஆழ்வானும் ஸ்ரீவைகுண்டஸ்தவத்தில்— "விஸ்ரம்ய விதேவ விரஹய்ய கிராய்ய ஹஸ்தே: ஸம்ஜஹ்ருஷே ஸஹஸாஸ்ரிதவத்ஸலேந। கஜேந்த்ரரக்ஷண மஹோத்ஸவஸம்ப்ரமேண வாஹம் யாதேஸ்வரஸ்ய கரஷேக்ஷிதா?" என்றருளிச்செய்தார். எம்பெருமான் தான் சாத்தியருளின திருப்பரிவட்டத் தலைப்பைச் சுருட்டித் திருப்பவளத்திலே வைத்து ஊதி கஜேந்த்ராழ்வானுடைய புண்வாயை வெதுப்பிக்கொண்டு திருக்கையாலே குளிரத்தடவிக் கொடுத்தானென்றால் அந்த ஸமயத்திலே எம்பெருமான் திருவுள்ளத்திற் கொதிப்பு வாசாமகோசரமன்றோ?

இப்படி எம்பெருமான் நெஞ்சாறல்பட்ட ப்ரகரணங்கள் பல்லாயிரமுண்டு. இவ்விடங்களுக்குத் தூப்புல்பிள்ளை பேசுவதென்னென்னில், எம்பெருமான் அகில ஹேய ப்ரத்யநீக கல்யாணைகதானனாகையாலே அவனுக்கு மெய்யே துக்க முண்டாக ப்ரஸக்தியில்லை; துக்கப்படுபவன்போல அபிநயிக்குமளவேயன்றி உண்மையான விகாரங்கள் அவனுக்கில்லை யென்று திருவுள்ளம் பற்றுகிறார்.

பகவதவதாரங்களிலே து:க்கானுபவம் அபிநயமாத்திர மென்பது ச்ருத ப்ரகாசிகை முதலியவற்றிலு முள்ளது. ஆனால், ராவணாதிகளோடு போர்புரிந்த காலத்தில் பெருமான் அஸ்த்ரங்களால் கட்டுண்டு மூர்ச்சித்துக் கிடந்தாரென்றும் ஆய்ச்சியர்தாம்பினால் கட்டுண்டு அடியுண்டு அழுதேங்கினனென்றும் இப்படியாகச் சொல்லும் துக்கங்கள் ஒரு காரியப்பாடாக அபிநயிக்கப்பட்டவை என்று சொல்லிற்றத்தனை யொழிய தயாளுத்வத்திற்கு ஐகாந்திகமான து:க்கம் அபிநயரூபமாகச் சொல்லப்படவில்லை. ராமக்ருஷ்ணாத்யவதாரங்களொன்றும் மெய்யே கிடையாதென்றும் 'ராமாதிகளைப்போலே யிருக்கவேணும், ராவணாதிகளைப்போலே யிருந்தால் கேடுவிளையும்' என்று இதமுணர்த்துதற்காகவே கதைகள் தொடுக்கப்பட்டனவென்றும் சொல்லுமவர்களைக் காணுநின்றேமுக்கு இதில் வியப்பொன்றுமில்லை.

" அவிகாராய ஶுத்தாய — அவிகாராய சுத்தாய" என்ற ஸாமாந்ய வார்த்தையொன்றையே பற்றிநின்று விசேஷ குணங்களை இல்லை செய்கை ஸமஞ்ஜஸமன்று. ஆச்ரித ஸம்ச்லேஷ விச்லேஷங்களில் எம்பெருமானுக்கு விகார முண்டாவதில்லை யென்று சொல்லுதல் எம்பெருமானை காஷ்ட லோஷ்ட ப்ராயனாக இசைந்தமைக்குப் பர்யாயமாமத்தனை. * ஏறனை பிறையோனு மென்கிற திருவாய் மொழியில் மூன்றும் பாட்டில், "படநாகத் தணைக்கிடந்த பருவரைத்தோள் பரம்புருடன்" என்றவிடத்து ஈடு முப்பத்தாறாயிரத்திலே—"திருவனந்தாழ்வானோட்டை ஸ்பர்சத்தாலே ஏகரூபமான விக்ரஹத்துக்குப் பிறக்கும் விகாரத்தைச் சொல்லுகிறது. கர்ம நிபந்தநமான விகாராதிகள் இல்லை யென்ற வித்தனை போக்கி ஆச்ரித ஸம்ச்லேஷத்தில் விகாரமில்லை யென்னில் அவ்வஸ்துவை அணைய ஆசைப்பட வேண்டாவே" என்றருளிச் செய்யப்பட்டுள்ளது. இங்ஙனே விரிப்பிற் பெருகும். அடியார்க்கு ஆவாவென்று இரங்குகை எம்பெருமான் பக்கலிலே யதார்த்தமே யென்றும் அதுதான் சிறந்த குணமே யென்றும் கொள்க. 'ஹா ஹா' என்னும் வடமொழி அவ்யயங்கள் ஆவா வெனத்திரிந்தன. (௨)

உடையானை யொலிநீருலகங்கள் படைத்தானை *
விடையானோடவன்று விறலாழி விசைத்தானை *
அடையார் தென்னிலங்கை யழித்தானை யணியழுந்தூர்
உடையானை * அடியேனடைந் துய்ந்துபோனேனே. (௫)

உடையானை	ஸர்வஸ்வாமியானவனும்
ஒலி நீர் உலகங்கள் படைத் தானை	கடல் சூழ்ந்த உலகங்களைப் படைத்தவனும்
அன்று	பாணாஸுர யுத்தத்தின்று
விடையான் ஓட	பரமசிவன் தோற்று ஓடும்படி
விறல் ஆழி	வலிமிக்க திருவாழியை
விசைத்தானை	வேகமாகப் பிரயோகித்தவனும்

அடையார் தென் இலங்கை அழித்தானை	பகைவர் நிறைந்திருக்கிற தென்னிலங்கையை அழியச் செய்தவனும்
அணி அழுந்தூர் உடையானை	அழகிய திருவழுந்தூரை இருப்பிடமாக வுடையனுமான பெருமானை

அடியேன் அடைந்து—;

உய்ந்து போனேன்	உஜ்ஜீவித்து விட்டேன்.

* * *—"வதிம் விஶ்வஸ்யாத்மேஶ்வரம்" என்று ச்ருதி சொன்னபடியே ஸகலத்தையும் தன் உடைமையாகக் கொண்டிருப்பவனும், எல்லாம் உபஸம்ஹரிக்கப் பட்டுக் கரண களேபரங்களை யிழந்து இறகொடிந்த பறவை போலிருக்குமளவில் அவற்றை மீண்டும் ப்ரவ்ருத்திக்கு ஸமர்த்தமாம்படி செய்தருள்பவனும் தன்னால் நாட்டுக்கு ரக்ஷகராக நிறுத்தப்பட்டவர்கள் தாங்களே ஆஸுரப்ரக்ருதிகளோடே கூடித் தீங்கு செய்ய வருமளவிலும் அவர்களைச் சிக்ஷித்து நாட்டை ரக்ஷித்தருள்பவனும், பிரதிகூலர்களைக் குடியோடே களைந்தொழிப்பவனுமான பெருமானைத் திருவழுந்தூரிலே ஸேவிக்கப் பெற்று க்ருதார்த்தனானேனென்கிறார்.

உடையான்—ஸ்வாமி. ஒலிநீர்—ஒலிக்கின்ற நீரையுடையது, கடல். விடையான்—எருதை வாஹநமாக வுடையவன், சிவன். இரண்டாமடியில் பாணாஸுர யுத்த சரித்திரம் அறியத்தக்கது. அடையார்—தன்னை வந்து அடையாதவர்கள், பகைவர் என்றபடி. அவர்களுடைய தென்னிலங்கை யென்றது—அவர்கட்கு இருப்பிடமான இலங்கை என்றபடி. .... (ரு)

குன்றால்மாரிதடுத்தவனைக் குலவேழமன்று
பொன்றாமை * அதனுக்கருள்செய்த போரேற்றை *
அன்றாவின் நறுநெய்யமர்ந்துண்ண அணியழுந்தூர்
நின்றானை * அடியேன் கண்டுகொண்டு நிறைந்தேனே. (சா)

குன்றால்	கோவர்த்தந கிரியைக் கொண்டு
மாரி	பெருமழையை
தடுத்தவனை	தடை செய்தவனும்
குலம் வேழம்	சிறந்தகுலத்துப் பிறந்த கஜேந்திராழ்வான்
பொன்றாமை	(முதலைவாய்ப்பட்டு) முடிந்து போகாமல்
அன்று	அக்காலத்து
அதனுக்கு அருள்செய்த	அதற்கு அருள்புரிந்தவனும்

போர் ஏற்றை	போர் செய்யவல்ல காளை போன்றவனும்
ஆவின் நறு நெய்	பசுவின் மண நெய்யை
அமர்ந்து உண்ண	விரும்பியமுது செய்ய
அன்று	அன்றேபிடித்து
அணி அழுந்தூர் நின்றானை	அழகிய திருவழுந்தூரில் நிற்பவனுமான பெருமானை

அடியேன் கண்டுகொண்டு—;

நிறைந்தேன்	குறையற்றவனானேன்.

* * *—தலைக்காவலாக வைக்கப்பட்டிருந்த இந்திரன் பசிக்கோபத்தினால் பெருமழையை ஏழுநாள் பெய்வித்தவன்று கோவர்த்தன மலையைக் குடையாக எடுத்துப் பிடித்து ஆய்ப்பாடியைக் காத்தருளினவனும், நற்குலத்திற் பிறந்து பகவானை அர்ச்சிப்பதையே போதுபோக்காகக் கொண்டிருந்த கஜேந்திராழ்வானுக்கு மடுவின் கரையிலே புள்ளேறி வந்து அருள் செய்தவனும், இன்னமும் இப்படிப்பட்ட ஆபத்துக்களைப் போக்கவல்ல ஆண் புலியும், பசு நெய்யை விரும்பி அமுது செய்ய ஆமருவியப்பனாய்த் திருவழுந்தூரில் நித்ய ஸந்நிதி பண்ணி யிருப்பவனுமான பெருமானைக்கண்டு குறைகளெல்லாம் தீர்ந்து நிறைந்தேனென்கிறார்.

பொன்றாமை—பொன்றுதல்—அழிதல். அதனுக்கு அருள்செய்த—அது தன் கையிற் பறித்து வைத்துக்கொண்டிருந்த தாமரைப்பூவைத் திருவடிகளிலே ஸமர்ப்பிக்கப் பெற்றுக் கொள்வதாகிற அருளைச் செய்தவனென்க. திருவாய்ப்பாடியின் ஸ்தானத்திலே திருவழுந்தூரைத் திருவுள்ளம் பற்றினானென்பது மூன்றாமடியின் கருத்து .... (ச)

கஞ்சனைக் காய்ந்தானைக் கண்ணமங்கையுள் நின்றானை *
வஞ்சனப்பேய்முலையூடுயிர் வாய்மடுத் துண்டானை *
செஞ்சொல்நான்மறையோர் தென்னழுந்தையில் மன்னிநின்ற *
அஞ்சனக்குன்றந்தன்னை யடியேன் கண்டுகொண்டேனே. (ரு)

கஞ்சனை	கம்ஸனை
காய்ந்தானை	சீறித் தொலைத்தவனும்
கண்ண மங்கையுள் நின்றானை	திருக்கண்ணமங்கையில் நிற்பவனும்
வஞ்சனம்	வஞ்சனையையுடையளான
பேய்	பேய்ச்சியினுடைய
முலையூடு	முலைவழியே
வாய் மடுத்து	வாய்வைத்து
உயிர்	(அவளது) பிராணனை
உண்டானை	அபஹரித்தவனும்,
செம் சொல் நால் மறையோர்	அழகிய சொற்கள்நிறைந்த நான்குவேதங்களையும் வல்ல வைதிகர்கள் வாழ்கிற
தென் அழுந்தையில் மன்னி நின்ற—;	
அஞ்சனம் குன்றம் தன்னை	மைமலைபோன்ற வடிவழகையுடையனுமான பெருமானை
அடியேன் கண்டுகொண்டேன்—.	

* * *—தன் திறத்தில் கொடிய தீங்குகளை யிழைத்த கம்ஸனைச் சீறி முடித்தவனும், அக்கஞ்சனால் ஏவப்பட்டு முலைகொடுத்துக் கொல்லவந்த பூதனையை முலையுண்கிற பாவனையில் முடித்தவனும், பரமவைதிகர்கள் வாழ்கிற திருவழுந்தூரில் ஒரு அஞ்சனமலை நிற்குமாபோலே நிற்பவனுமான பெருமானை அடியேன் ஸேவிக்கப்பெற்றேனென்றாராயிற்று.

ஆழ்வார் திருவழுந்தூரெம்பெருமான் திறத்தில் மிக்க ஈடுபாடு கொண்டிருப்பதைக் கண்ட திருகண்ணமங்கையெம்பெருமான் 'இவ்வாழ்வார் நம்மை மறந்தொழிவரோ என்னவோ' என்று திடுக்கிட்டுச் சடக்கென ஓடிவந்து எதிரே

நிற்க, 'கண்ணமங்கையுள் நின்றானை' என்கிறார் என்று அழகிய மணவாளச் சீயருடைய ரஸோக்தி. .... (௫)

பெரியானை யமரர்தலைவற்கும் பிரமனுக்கும் *
உரியானையுகந்தானவனுக்கும் உணர்வதனுக்
கரியானை * அழுந்தூர்மறையோர்கள் அடிபணியும்
கரியானை * அடியேன் கண்டுகொண்டுகளித்தேனே. (௬)

பெரியானை — எல்லாரிலும் மேம்பட்டவனும்
அமரர் தலைவற்கும் — தேவேந்திரனுக்கும்
பிரமனுக்கும் — ப்ரஹ்மாவுக்கும்
யானை உரி உகந்தானவனுக்கும் — யானைத்தோலை உரித்து தரிக்கின்ற சிவபிரானுக்கும்
உணர்வதனுக்கு அரியானை — உள்ளபடி அறியக்கூடாதவனும்
அழுந்தூர் — திருவழுந்தூரிலே
மறையோர்கள் — வைதிகர்கள்
அடி பணியும் — திருவடிதொழப்பெற்ற
கரியானை — நீலநிறத்தனுமான பெருமானை
அடியேன் கண்டுகொண்டு களித்தேன்—.

* * *—1. "யாங்கடவுளென்றிருக்கு மெவ்வுலகிற் கடவுளர்க்கு மாங்கடவுள் நீ" என்கிறபடியே தெய்வங்களுட் பெரிய தெய்வமாயிருப்பவனும், இந்திரன் பிரமன் சிவன் என்னப்படுகிற மேலை விண்ணோர்களாலும் உள்ளபடி யறியக்கூடாத ஸ்வரூபஸ்வபாவங்களை யுடையவனும், திருவழுந்தூரில் வைதிகர்கள் அடிபணிய நிற்பவனுமான நீலமலி வண்ணனை அடியேன் ஸேவிக்கப் பெற்றுப் பரமானந்தமடைந்தே னென்கிறார்.

இப்பாட்டை ஓதும் முறைமையில் நெடுநாளாகவே ஒரு விபரீதம் நேர்ந்திருக்கின்றது; "பெரியானை, அமரர் தலைவற்கும் பிரமனுக்கு முரியானை" என்றே பலரும் ஓதுவர்கள்: பெரியானை, உரியானை, அரியானை, கரியானை, என்று ப்ராஸமாக நிறுத்துவது அழகு என்று நினைத்தனர் போலும். இது அர்த்தத்திற்குச் சேராது. பெரியானை, அரியானை. கரியானை, என்னும் பதங்கள் போல் 'உரியானை' என்பது எம்பெருமானுக்கு விசேஷண மாவதன்று. 'உரியானை யுகந்தானவன்' என்று ஒரு சொல்லாய், வட மொழியில் க்ருத்திவாஸா:' என்னப்படுகிற சிவனைச் சொல்லுகிறது; ஆகவே, "பெரியானை, அமரர் தலைவற்கும் பிரமனுக்கும், உரியானை யுகந்தானவனுக்கும் உணர்வதனுக் கரியானை" என்று ஓதுதல் தகுதி.

உரியானை—யானை உரி என்று மொழி மாற்றுக. சிவபிரான் நடன மாடும்போது யானையுரியைப் போர்த்துக் கொண்டு நடன மாடுவனென்ப.

கரியான்—'கருமை' என்னும் பண்படியாப் பிறந்த பெயர். (௬)

1. திருவரங்கக் கலம்பகம். 1.

திருவாழ்மார்வன்றன்னைத் திசைமண்ணீரெரி முதலா *
உருவாய்நின்றவனை ஒலிசேரும்மாருதத்தை *
அருவாய்நின்றவனைத் தென்னழுந்தையில்மன்னிநின்ற *
கருவார் கற்பகத்தைக் கண்டுகொண்டுகளித்தேனே. (எ)

திரு வாழ் மார்வன் தன்னை	பிராட்டிவாழ்கிற திருமார்பை யுடையவனும்
திசை	திக்குக்களென்ன
மண்	பூமியென்ன
நீர்	ஜலமென்ன
எரி	அக்நியென்ன
முதலா	ஆகிய இவைமுதலான
உரு ஆய் நின்றவனை	பதார்த்தங்களாய் நிற்பவனும்
ஒலி சேரும் மாருதத்தை	சப்தத்தையும் குணமாக வுடைய வாயுவுக்கு நிர்வாஹகனும்
அரு ஆய் நின்றவனை	அரூபியாயிருப்பவனும்
தென் அழுந்தையில் மன்னி நின்ற—;	
கரு ஆர் கற்பகத்தை	வேர்ப்பற்றையுடைத்தான கல்பவ்ருக்ஷம் போன்றவனுமான பெருமானை
கண்டுகொண்டு களித்தேன்—.	

* * *—"அகலகில்லே னிறையுமென்று அலர்மேல் மங்கை யுறைமார்பா" என்கிறபடியே எப்போதும் பெரியபிராட்டியா ரிருந்து வாழப்பெற்ற திருமார்பை யுடையவனும், பஞ்ச பூதங்களுக்கும் அந்தர்யாமியா யிருந்து உலக வாழ்க்கையை நிர்வஹிப்பவனும், திருவழுந்தூரிலே ஸந்நிதி பண்ணிக் கல்பவ்ருக்ஷம்போலே ஸர்வாபேக்ஷிதங்களையும் தலைக்கட்டிக் கொடுத்தருள்பவனுமான பெருமானைக் கண்டு களித்தே னென்கிறார்.

ஒலிசேரும் மாருதத்தை = "ஆகாஶாத்வாயு:। வாயோரக்நி:। அக்நேராப:। அத்ப்ய: ப்ருதிவீ" என்ற உபநிஷத் க்ரமத்திலே வாயுவானது ஆகாசத்தில் நின்றும் பிறந்ததாதலால் பூர்வ பூர்வ பூதங்களின் குணமும் உத்தரோத்தர பூதங்களில் தொடர்ந்துவரும் கணக்கிலே வாயுவுக்குத் தன் குணமான ஸ்பர்சமும், தனக்குக் காரணமான ஆகாசத்தின் குணமாகிய சப்தமும் உண்டென்க. "பூநிலாய வைந்துமாய்" என்ற திருச்சந்த விருத்த முதற்பாசுரத்தில் 'சிறந்தகாலிரண்டுமோய்" என்றதுங்காண்க.

கருவார்கற்பகத்தை — 'கரு' என்று கர்ப்பத்தைச் சொல்லுகிறது; அடியுடைத்தான கல்பவ்ருக்ஷமென்கை. ஸ்வர்க்கலோகத்தில் ஆலம்பனமொன்றுமின்றியே நிற்கிற கற்பகத்தருபோலல்லாமல் பூமியிலே வேர்ப்பற்றுடைத்தான கற்பகமாம் எம்பெருமான். .... (எ)

நிலையாளாக என்னையுகந்தானை * நிலமகள்தன்
முலையாள்வித்தகனை முதுநான்மறை வீதிதோறும் *
அலையாருங்கடல்போல் முழங்கும் தென்னழுந்தையில் மன்னிநின்ற *
கலையார்சொற்பொருளைக் கண்டுகொண்டு களித்தேனே. (அ)

என்னை	என்னை
நிலை ஆள் ஆக	நிலைநின்ற அடியவனாக
உகந்தானை	உகந்து திருவுள்ளம் பற்றினவனும்
நிலம் மகள் தன்	பூமிப்பிராட்டியினுடைய
முலை	திருமுலைத்தடங்களை
ஆள்	ஆளவல்ல
வித்தகனை	ஸமர்த்தனும்,
வீதி தொறும்	தெருக்கள் தோறும்

முது நால் மறை	புராதனமான நால் வேதங்களும்
அலை ஆரும் கடல் போல் முழங்கும்	அலைகள்நிரம்பிய கடல் போலப் பெருமுழக்கம் செய்யப்பெற்ற
தென் அழுந்தையில் மன்னி நின்ற—;	
கலை ஆர் சொல் பொருளை	சாஸ்த்ரங்களில் நிறைந்துள்ள சொற்களுக்குப் பொருளாயிருப்பவனுமான பெருமானை
கண்டு கொண்டு களித்தேன்—.	

* * *—நிலையாளாக என்னை உகந்தானை = ஐச்வரியம் முதலிய க்ஷுத்ர பலன்களை விரும்புமவர்கள் அப்பலன் கைபுகுமளவும் ஆட்பட்டிருந்து பலன் கைபுகுந்தவாறே அகன்று போவர்கள்; அடியேன் அப்படியன்றியே எம்பெருமானையே உபாயமும் உபேயமுமாகப் பற்றினவனாதலால் என்னுடைய அடிமைக்கு ஒருநாளும் குலைதல் இல்லை; ஒழிவில் காலமெல்லாம் உடனாய்மன்னி வழுவிலா வடிமை செய்யும் நித்யகிங்கரனாக என்னைத் திருவுள்ளம்பற்றினானென்கிறார்.

நிலமகள்தன் முலையாள் வித்தகனை = "ஸ்ரீபூமிப்பிராட்டியினுடைய திருமுலைத் தடத்துக்கு ஆனைக்குக் குதிரை வைக்கவல்ல ஆச்சர்யபூதனை" என்பது பெரியவாச்சான்பிள்ளை வியாக்கியான ஸ்ரீஸூக்தி. இதில், ஆனைக்குக் குதிரை வைக்கை யென்பது சதுரங்க ஆட்டத்தின் முறைமைப் பேச்சு. அவ்வாட்டத்தில் அரசன், மந்திரி, ஆனை, குதிரை இத்யாதி நாமங்கள் காய்களுக்கு வழங்கும். ஆனை துர்ப்பலமென்றும் குதிரை பிரபலமென்றும் அதிற்கொள்வர்; அதுபோல, இங்கு ச்ருங்காரவிலாஸ சேஷ்டிதங்களில் பூமிப் பிராட்டியை ஆனையின்ஸ்தானத்திலே நிறுத்தி எம்பெருமான் குதிரையின் ஸ்தானத்திலே நிற்பனென்றால் ஹோரூகேளிகளில் பூமிப்பிராட்டிக்குத் தோலாதவன் என்றவாறு. "முலை ஆள் வித்தகனை" என்ற சொல்நயத்தில் கிடைத்த பொருளாமிது.

[முதுநான்மறை யித்யாதி.] திருவழுந்தூர்த் திருவீதிகள்தோறும் வேதகோஷம் கடலோசைபோல் முழங்குமாம். இப்படிப்பட்ட திருப்பதியிலெழுந்தருளியிருக்கு மெம்பிரானைக் கண்டுகளித்தே னென்றாராயிற்று.

கலையார்சொற்பொருளை = ஸகலசாஸ்த்ரங்களிலுமுள்ள ஸகல சப்தங்களுக்கும் எம்பெருமானேயிறே பொருள். ஸகல கலைகளாலும் புருஷார்த்தமாகப் பிரதிபாதிக்கப்படுபவன் என்றுமாம். மூன்றாமடியில் "அலையார்கடல்" என்றும் பாடமுண்டு. .... (அ)

பேரானைக் குடந்தைப்பெருமானை * இலங்கொளிசேர்
வாரார்வனமுலையாள் மலர்மங்கைநாயகனை *
ஆராவின்னமுதைத் தென்னழுந்தையில் மன்னிநின்ற *
காரார்கருமுகிலைக் கண்டுகொண்டு களித்தேனே. (கூ)

பேரானை — திருப்பேர்நகரில் பள்ளி கொண்டிருப்பவனும்
குடந்தை பெருமானை — திருக்குடந்தையில் தன் பெருமைகளெல்லாம் தோற்ற சயனித்திருப்பவனும்
இலங்கு ஒளி சேர் — விளங்குகின்ற காந்தியோடு கூடின
வார் ஆர் — கச்சுகிடைந்த
வனம் முலையாள் — அழகிய முலைகளையுடையவளான
மலர் மங்கை — பெரியபிராட்டியார்க்கு
நாயகனை — வல்லபனும்
ஆரா இன் அமுதை — எவ்வளவு அநுபவித்தாலும் த்ருப்தி பெறமுடியாத இனிய அமுதம் போன்றவனும்
தென் அழுந்தையில் மன்னி நின்ற—;
கார் ஆர் கரு முகிலை — மழைகாலத்துக் காளமேகம் போன்றவனுமான பெருமானை
கண்டுகொண்டு களித்தேன்—.

* * *—திருப்பேர் நகரிலும் திருக்குடந்தையிலும் அரவணையின்மீது பள்ளிகொண்டிருப்பவனும், நித்யயுவதியான பெரியபிராட்டியார்க்கு நாயகனும், "எப்பொழுதும் நாள் திங்களாண்டூழியூழி தோறும், அப்பொழுதைக்கப் பொழுதென்னாராவமுதமே" என்னுமாபோலே எவ்வளவு அனுபவித்தாலும் திருப்தியுண்டாகாத அமுதமாயிருப்பவனும், கார்காலத்துக் காளமேகம் போலத் திருவழுந்தூரில் ஸேவை ஸாதிப்பவனுமான பெருமானைக்கண்டு களித்தேன்.

பேரான் = அப்பக்குடத்தான். .... (௯)

திறல்முருகனனையார் தென்னழுந்தையில் மன்னிநின்ற *
அறமுதல்வனவனை யணியாலியர்கோன் * மருவார்
கறைநெடுவேல்வலவன் கலிகன்றிசோல் ஐயிரண்டும் *
முறைவழுவாமைவல்லார் முழுதாள்வர் வானுலகே. (௧௦)

திறல் முருகன் அனையார் — வலிமையில் ஸுப்ரஹ்மண்யன் போன்றவர்கள் நிறைந்த
தென் அழுந்தையில், மன்னி நின்ற—;
அறம் முதல்வன் அவனை — ஸகலதர்மங்களுக்கும் மூலகாரணமான பெருமான் விஷயமாக,
அணி ஆலியர் கோன் — அழகிய திருவாலிப்பதியிலுள்ளார்க்குத் தலைவராய்
மருவார் — பகைவருடைய
கறை — ரக்தக்கறையையுடைத்தான
நெடு வேல் — நீண்ட வேற்படையை
வலவன் — ஆளவல்லவரான
கலிகன்றி — ஆழ்வார்
சொல் — அருளிச்செய்த
ஐ இரண்டும் — இப்பத்துப்பாசுரங்களையும்
முறை வழுவாமை — முறைதப்பாமல்
வல்லார் — ஓதவல்லவர்கள்
வான் உலகு — பரமபதத்தை
முழுது — பூர்ணமாக
ஆள்வர் — ஆளப்பெறுவர்.

* * *—மிடுக்கில் தேவஸேநாபதியான ஸுப்ரஹ்மண்யனிற் குறையாதவர்கள் வாழுமிடமான திருவழுந்தூரில் தர்ம ஸம்ஸ்தாபகத்திற்கு வேர்ப்பற்றாக எழுந்தருளியிராநின்ற ஆமருவியப்பன் விஷயமாகத் திருமங்கையாழ்வாரருளிச்

செய்த இத்திருமொழியை முறை தவறாது ஓதிபுணருமவர்கள் பரமபதத்தைத் தாங்களிட்ட வழக்காக நிர்வஹிக்கப் பெறுவர்களென்று பயனுரைத்துத் தலைக்கட்டினாராயிற்று.

கறை நெடு வேல்- பகைவர்களைக் கொன்று ஏறின ரத்தக்கறையோடு கூடின வேற்படை. “தானுகந்த ஊரெல்லாம் தன்தாள்பாடி.” என்கிறபடியே திவ்ய தேசானுபவமே போதுபோக்கா யிருக்குமிவர்க்கு வேற்படையில் ரத்தக்கறை கழுவுவதற்கு அவகாசமில்லையாம். .... (௧௦)

அடிவரவு:—சிக்கமது கோ உடையானை குன்றால் கஞ்சனை பெரியானை திருநீலை போரானை திறல் திரு.

ஆறாந்திருமொழிஉரை முற்றிற்று.
ஜீயர் திருவடிகளே சரணம்

ஸ்ரீ:
ஆழ்வார் திருவடிகளே சரணம்.
ஏழாம்பத்து—ஏழாந்திருமொழி,

திருவுக்குந் திருவாகிய செல்வா.

உரையவதாரிகை:- கீழ்த்திருமொழியில் “கண்டுகொண்டு நிறைந்தேனே” என்றும் “கண்டு கொண்டு களித்தேனே” என்றும் பரமானந்தம் பொலியப் பேசினார்; இவ்வானந்தம் நமக்கு நித்யமாய்ச் செல்லுமோ வென்று ஆராய்ந்து பார்த்தார்; பஞ்சேந்திரியங்களுடனே கூடத் தம்மை இந்நிலத்திலே நிறுத்தி யிருக்கக்காண்கையாலும், இவ்விந்திரியங்கள் தாம் விஷயாந்தரங்களிலேருசியைப் பிறப்பித்து ஹிம்ஸிக்கக் காண்கையாலும் இவற்றோடே கூடிவாழ்வது ஒரு வாழ்ச்சியோவென்று திருவுள்ளம் நொந்து இவ்விந்திரியங்களால் படும்பாட்டைப் போக்கியருளவேணுமென்று ஆமருவியப்பன் திருவடிகளிலே வேரற்றமரம் போலே விழுந்து சரணம் புகுகிறார் இத்திருமொழியில்.

நம்மாழ்வாரும் திருவாய்மொழியின் ஏழாம்பத்திலே “உண்ணிலாவிய ஐவரால் குமைதீற்றி யென்னையுன் பாதபங்கயம், நண்ணிலா வகையே நலிவா னின்னமெண்ணுகின்றாய்” என்று தொடங்கி ஒரு திருவாய்மொழியாலே, இந்திரியங்கள் படுத்தும் பாடு பொறுமே வருந்திக் கூப்பிட்டார்; இவ்வாழ்வாரும் ஏழாம்பத்திலே யாயிற்று அங்ஙனம் கூப்பிடுவது. .... *

திருவுக்குந் திருவாகியசெல்வா !
தெய்வத்துக்கரசே ! செய்யகண்ணா ! *
உருவச்செஞ்சுடராழி வல்லானே !
உலகுண்டவொருவா ! திருமார்பா ! *

ஒருவற்காற்றி யுய்யும்வகையன்றால்
உடனின்றைவ ரென்னுள்புகுந்து * ஒழியாது
அருவித்தின்றிட அஞ்சி நின்னடைந்தேன்
அழுந்தூர்மேல்திசைநின்ற வம்மானே! (க)

திருவுக்கும்	ஸ்ரீ மஹாலக்ஷ்மிக்கும்
திரு ஆகிய	லக்ஷ்மீகாந்தனை
செல்வா	செல்வனே !
தெய்வத்தக்கு அரசே	நித்யஸூரிகட்குத் தலைவனே !
செய்ய கண்ணா	புண்டரீகாக்ஷனே !
உருவம்	அழகிய வடிவையுடைத்தாய்
செம் சுடர்	செவ்விய சுடர்மயமான
ஆழி	திருவாழியை (ப் பிரயோகிப்பதில்)
வல்லானே	ஸமர்த்தனே !
உலகு உண்ட ஒருவா	(பிரளயத்தில்) உலகங்களை யமுதுசெய்த அத்விதீயனே !
திரு மார்பா	பிராட்டியைத் திருமார்பி லுடையவனே !
அழுந்தூர்	திருவழுந்தூரில்

மேல் திசை நின்ற அம்மானே	மேலைத்திசையில் எழுந்தருளியிருக்கும் பெருமானே !,
ஒருவற்கு ஆற்றி உய்யும் வகை அன்று	ஒரு இந்திரியத்துக்கும் தப்பிப்பிழைக்கும்வழி இல்லை ;
ஆல்	அந்தோ !;
ஐவர்	ஐந்து இந்திரியங்கள்
உடன் நின்று	நெருங்கியிருந்து
என்னுள் புகுந்து	என பக்கலிலே வந்து புகுந்து
ஒழியாது	ஓயாமல் [எப்போதும்]
அருவி	அலைத்து
தின்றிட	நெருக்க
அஞ்சி	(அதற்கு) அஞ்சி
நின் அடைந்தேன்	உன்னைச் சரணம் புகுந்தேன்.

* * *—முன்னடிகளில் எம்பெருமானுடைய பெருமைகளைச் சொல்லி யேத்தி, இப்படிப்பட்ட நீ அடியேனைப் பஞ்சமஹா பாதகர் கையிலே காட்டிக் கொடுத்துக் கொலைசெய்விக்கை தகுதியோ? பிரானே! உன்னைச் சரணம் புகுகின்றேன், கிருபை செய்தருளாய் என்கிறார் பின்னடிகளில்.

திருவுக்கும் திருவாகிய செல்வா != எம்பெருமான் ஸ்ரீக்கும் ஸ்ரீயாயிருப்ப னென்றால் என்ன கருத்தென்னில்; ஸ்ரீ என்றாலும் திரு என்றாலும் 'அதிசயத்தை விளைப்பவள்' என்று பொருள் கொள்ளத் தக்கது; எல்லார்க்கும் அதிசயத்தை விளைப்பவளான அவள்தனக்கும் அதிசயத்தை விளைப்பவன் எம்பெருமான் என்றவாறு. இவ்வருளிச்செயலை அடியொற்றியே ஆளவந்தார் ஸ்தோத்ர ரத்நத்தில் "க: ஸ்ரீ: ஸ்ரிய:" என்றும், ஆழ்வான் ஸ்ரீவைகுண்ட ஸ்தவத்தில் "ஸ்வாமிநி ஸ்ரிய: ஸ்ரிய பரமாஹார வாஹ:" என்றும், பட்டர் ஸ்ரீகுணரத்நகோசத்தில் "ஸ்ரிய: ஸ்ரீ: ஸ்ரீரங்கேசய' என்று மருளிச்செய்தது. பிராட்டிக்கு எம்பெருமானுடைய ஸம்பந்தத்தினால் அதிசயம்; எம்பெருமானுக்குப் பிராட்டியின் ஸம்பந்தத்தினால் அதிசயம் என்றுணர்க. பிராட்டிக்கு எம்பெருமானுடைய ஸம்பந்தத்தினால் அதிசயம் என்பதற்கு மேலுதாஹரிக்கப்

பட்ட ஸ்ரீஸூக்திகள் ப்ரமாணம்; எம்பெருமானுக்குப் பிராட்டியின் ஸம்பந்தத்தினால் அதிசயம் என்பதற்கு. 1. "அப்ரமேயம் ஹி தத்தேஜோ யஸ்ய ஸா ஜநகாத்மஜா" என்னும் ஸ்ரீராமாயண வசநம் ப்ரமாணம்.

தெய்வத்துக்கு அரசே=தெய்வமென்றது ஜாத்யேக வசநம்; தெய்வங்கட்கு என்றபடி; அயர்வறுமமரர்களதிபதியே என்கை.

[ஒருவற்கு இத்யாதி.] பஞ்சேந்திரியங்களுள் தனித்தனி ஒவ்வொரு இந்திரியத்திற்கே ஆடல் கொடுப்பது அரிது; அப்படியிருக்க ஐந்து இந்திரியங்களையும் உடனிருத்தினால், அவை நாம் 'எனக்கு வேண்டிய விஷயத்தைக் காட்டு, எனக்கு வேண்டிய விஷயத்தைக் காட்டு' என்று மூலையடியே இழுத்துக் கொலை செய்தால் நான் எங்ஙனே வாழ்வது? இவை இன்னமும் என்னை எவ்வாறு நலியத் தேடுகின்றனவோவென்று சாலவும் அஞ்சி, அஞ்சினார்க்குப் புகலிடமான உன் திருவடிகளை வந்து பற்றினேன்; நீயோ தெய்வத்துக்கரசு;— இந்திரியங்களுக்கு வசப்படாத ஒரு நாட்டை ஆள்பவன்; என்னையும் அந்நாட்டிலே புகுவிக்க வல்லையல்லையோ? செய்ய கண்ணனான வுனக்கு அத்திருக்கண்களாலே குளிரக் கடாக்ஷித்தருளி "அங்கணிரண்டுங் கொண்டு எங்கள் மேல் நோக்குதியேல், எங்கள்மேற்சாப மிழிந்து" என்கிறபடியே இத்துன்பத்தைத் தீர்க்க வல்லையல்லையோ? செஞ்சுடராழி வல்லானான நீ இவ்வைவர் மேல் ஆழி விடுத்துக் காரியஞ் செய்ய மாட்டிற்றிலையோ? அன்றொருகால் உலகுண்டு நோக்கினையென்று ஏட்டுப் புறத்திலே கேட்டுப் போகாமே இன்று என்னைக் காத்தருளாய். திருமார்பனான நீ அத்திருவின் பரிகரமான அடியேனுக்கு இத்தனை யருள் செய்கை மிகையோ என்றாராயிற்று.

மூன்றாமடியில் "உய்யும் வகை யென்றால்" என்றே எங்கும் பாடம் வழங்கி வருகின்றது; இப்பாடத்திற்கு ஒரு பொருளும் சொல்லப் போகாது; வியாக்கியானத்திற்கும் இணங்காது: "ஒருவற்கு ஆடல் கொடுத்து உஜ்ஜீவிக்கும் படியாயிருக்கிறதில்லை" என்பது பெரியவாச்சான்பிள்ளை ஸ்ரீஸூக்தி. ஆகவே, "ஒருவற்காற்றி உய்யும் வகை அன்றால்" என்னும் பாடமே பொருந்தத் தக்கது என்று அழகிய மணவாளச்சீயரருளிச் செய்யும்படி. 'அன்று ஆல்' என்று பிரிக்க: ஆல்—ஐயோ வென்றபடி.

ஐவர்—அஃறிணையான பஞ்சேந்திரியங்களை 'ஐவர்' என்று உயர்த்திக் கூறியது, அவற்றின் மேல் தமக்குள்ள சீற்றமிகுதியையும், அவற்றின் கொடுமைக் கனத்தையும் காட்டுதற்கென்க: திணைவழுவமைதி. .... (க)

பந்தார்மெல்விரல் நல்வளைத்தோளி
பாவைபூமகள் தன்னொடுமுடனே
வந்தாய் * என்மனத்தே மன்னிநின்றாய்
மால்வண்ணா! மழைபோலொளிவண்ணா! *

1. ஆரண்யகாண்டம்—இராவணனை நோக்கி மாரீசன் சொன்னது.

சங்தோகா ! பௌழியா ! தைத்திரியா !
சாமவேதியனே ! நெடுமாலே ! *
அங்தோ ! நின்னடியன்றி மற்றறியேன்
அழுந்தூர்மேல்திசைநின்ற வம்மானே ! (உ)

பந்து ஆர் மெல் விரல் { பந்துபொருந்திய மெல்லிய கைவிரல்களை யுடையளும்
நல் வளை தோளி { நல்ல வளைகளையணிந்த தோள்களை யுடையளும்
பாவை — பதுமைபோன்றவளுமான
பூ மகள் தன்னொடும் உடனே வந்தாய் } பெரியபிராட்டியாரோடு கூட எழுந்தருளினவனாய்
என் மனத்தே மன்னி நின்றாய் { என்னெஞ்சிலே பொருந்தி யெழுந்தருளியிருக்குமவனே !
மால் வண்ணா { கறுத்தநிறத்தை யுடையவனே !
மழை போல் ஒளி வண்ணா { மேகம்போன்று குளிர்ந்த அழகிய வடிவையுடையவனே !

சந்தோகா { சாந்தோக்ய உபநிஷத்தை உணர்ந்தவனே !
பௌழியா { கௌஷீதகிப்ராஹ்மண முணர்ந்தவனே !
தைத்திரியா { தைத்திரீய உபநிஷத்தை உணர்ந்தவனே !
சாம வேதியனே } ஸாமவேத முணர்ந்தவனே !
நெடு மாலே — ஸர்வஸ்மாத்பரனே !
அழுந்தூர் மேல்திசை நின்ற அம்மானே !—;
நின் அடி அன்றி } உனது திருவடிகளையன்றி
மற்று அறியேன் } வேறொருபுகல் அறிகிறேனில்லை.

* * *—1. “அரவத் தமளியினோடு மழகிய பாற்கடலோடும், அரவிந்தப் பாவையுந்தானும் அகம்படி வந்துபுகுந்து....பள்ளிகொள்கின்ற பிரானை” என்னுமா போலே பிராட்டியையும் உடனழைத்துக்கொண்டுவந்து அடியேனுடைய மனத்திலே மன்னி நிற்பவனே !, ஆர்த்தர்களை ரக்ஷிக்கைக்குப் பாங் கான ஸர்வஜ்ஞத்வத்தை யுடையவனே !, ஸர்வஸ்மாத்பரனே ! அடியேன் உன்னுடைய திருவடிகளன்றி வேறொரு புகலிருப்பதாகக் கனவிலுங் கருதுகின் றிலேன் ; அடியேன் போல்வாரைக் காத்தருள்வதற்கென்றே திருவழுந்தூரில் நித்ய ஸந்நிதி பண்ணியிருக்கின்ற வுனக்கு, பஞ்சேந்திரியங்களின் கையிலே படுகொலைப் படாதபடி என்னைக் காத்தருள்கை மிகையன்றுகாண் என்றாராயிற்று.

“பந்தார் மெல்விரல்” என்ற அடைமொழி மடந்தையர்க்கு இயற்கையாக இடுவதாம். சேலைகள் ஆபரணங்கள் முதலியவற்றை வருணித்துச் சொல்வது போல விளையாட்டுக் கருவிகளையிட்டு விசேஷிப்பதும் கவிமரபு. .... (உ)

செய்யாராழியுஞ் சங்கமுமேந்தும்
நீண்டதோளுடையாய் ! * அடியேனைச்
செய்யாதவுலகத்திடைச் செய்தாய்
சிறுமைக்கும் பெருமைக்கு முள்புகுந்து *

1. பெரியாழ்வார் திருமொழி 5—2—10.

பொய்யால்ஐவரென் மெய்குடியேறிப்
போற்றிவாழ்வதற்கஞ்சி நின்னடைந்தேன் *
ஐயா ! நின்னடியன்றி மற்றறியேன்
அழுந்தூர்மேல்திசைநின்ற வம்மானே ! (௫)

ஐயா	ஸ்வாமீ !
அழுந்தூர் மேல்திசை நின்ற அம்மானே !—;	
செய் ஆர் ஆழியும்	செய்யிட்டிருக்கிற சக்கரத்தையும்
சங்கமும்	ஸ்ரீபாஞ்சஜந்யத்தையும்
ஏந்தும்	தரித்திருக்கின்ற
நீண்ட தோள் உடையாய்	பெரிய திருக்கைகளை யுடையவனே !
அடியேனை	உனக்கே உரியவனான என்திறத்தில்
உலகத்திடை	இவ்வுலகத்திலே
செய்யாத செய்தாய்	செய்யத்தகாதவற்றை யெல்லாம் செய்தாய் ;
ஐவர்	பஞ்சேந்திரியங்கள்
பொய்யால்	க்ருத்ரிமத்தோடேகூடி
சிறுமைக்கும் பெருமைக்கும் உள் புகுந்து	சிற்றின்பவாழ்வுக்கும் பேரின்பவாழ்வுக்கும் பொதுவாக என்னுள்ளே புகுந்து
என் மெய் குடி ஏறி	என் சரீரத்திலே குடியேறியிருக்க
போற்றி வாழ்வதற்கு அஞ்சி	அவற்றை த்ருப்தியடையச் செய்து வாழ்வதற்குப் பயப்பட்டு
நின் அடைந்தேன்—;	
நின் அடி அன்றி மற்று அறியேன்—.	

* * *—திருவாழி திருச்சங்குகளைப் பூவேந்துமா போலே ஏந்தி நிற்பவனே ! அடியேன் திறத்தில் இவ்வுலகத்துச் செய்யத் தகாதவற்றைச் செய்து வைத்தாய் ; (அதாவது—) உண்டியே உடையே உகந்தோடுமிம் மண்டலத்தவர்களைப் போலே என்னையுமாக்கியிருந்தால் இவ்விருள்தருமா ஞாலத்திலே இந்திரியங்களுடனேகூட என்னை வைத்திருப்பது தகுதியாகும்; என்னையோ அடியவனென்று பேர் சுமக்கும்படி பண்ணிவைத்து அடிமைத் தொழிலுக்கு இடையூறான இந்திரியங்களுடனே நிறுத்தி வைத்திருக்கின்றாய் ; இதுவோ செய்யத் தக்கது ; இந்திரியங்களுடனேகூட வைப்பதாயிருந்தால் அடியவனாக்காதே ஸம்ஸாரியாக்கி வைக்க வேணும் ; அடியவனாக வைப்பதானால் இந்திரியங்களை யொழித்து வைக்கவேணும் ; அடியவனாகவும் ஆக்கி இந்திரியங்களையும் உடன் நிறுத்தினால் இஃது என் கொல் ?.

‘ இந்திரியங்களுடன் வைத்ததால் என்ன கெடுதி ? நல்லகதைகளைக் கேட்கச் செவி வேண்டாவோ ? நல்ல துதிகளை வாயாரச் சொல்ல வாய் வேண்டாவோ ? ; “ கண்டோங் கண்டோங் கண்டோங் கண்ணுக் கினியன கண்டோம் ” என்று காண்பதற்குக் கண் வேண்டாவோ ? , திவ்ய தேசங்களுக்கு நடந்து செல்லக் கரணகளேபரங்கள் வேண்டாவோ ; இவை யெல்லாம் நன்மைக்கு வேணுமென்று தானே உமக்கு இந்திரியங்களைத் தந்தது ; “ விசித்ரா தேஹஸம்பத்திரீச்வராய நிவேதிதும் ” என்றது அறியீரோ ? ” என்று எம்பெருமான் திருவுள்ளமாக. அதற்கு மறுமொழியாகக் கூறுகின்றார் சிறுமைக்கும் பெருமைக்கு முள்புகுந்தென்று தொடங்கி. இந்திரியங்களோ வென்னில், சிற்றின்பத்தைப் பெறுத்து

தற்கும் பேரின்பத்தைப் பெறுத்துதற்கும் பொதுவாயிரா நின்றன; வமித்து வெட்டுதற்குந் தந்த வாள்தானே சிலர்க்குக் கண்ணைக் கலக்கிக்கொள்ள உறுப்பாகின்றதில்லையோ? ஸாதகத்வம் பாதகத்வம் என்ற இரண்டு தன்மைகளும் வாளுக்கு இருப்பது போல, இந்திரியங்கட்கும் அத்தன்மைகள் உள்ளனவன்றோ? 1. "அன்பாழியானை யணுகென்னும் நா அவன்றன், பண்பாழித் தோள்பரவி யேத்தென்னும், முன்பூழி காணானைக் காணென்னுங்கண் செவி கேளென்னும், பூணாரம்பூண்டான் புகழ்" என்கிறபடியே பகவத் விஷயத்திற் படிந்து பேரின்பம் பெறுவிக்கவும் இவை வல்லன; விஷயாந்தரங்களில் கொண்டு மூட்டிச் சிற்றின்பம் பெறுவிக்கவும் இவை வல்லன. [சிறுமைக்கும் பெருமைக்கு முள் புகுந்து என்றதன் உட்கருத்து இது.] இப்படிப்பட்ட இந்திரியங்கள் நல்லெண்ணமின்றியே வஞ்சகத்தோடு என்னுட் புகுந்திருப்பதனால், அவை இழுத்துக் கொண்டு போகும் வழிகளிலெல்லாஞ் சென்று அவற்றுக்கு வேண்டிய இரைகளைத் தந்து ஆராதிப்பதற்கு அடியேன் அசக்தனாதலால் அவற்றால் நலிவுபடா நின்றேன்; அந்நலிவு தீர உன்னை வந்து சரணம் புகுந்தேனென்றாராயிற்று.

'நெய்யாராழியும்' என்ற விடத்துப் பெரியவாச்சான்பிள்ளை வியாக்கியானத்தில்—"கடைந்து பற்றற நெய்யிட்டிருக்கிற திவ்யாயுதங்களை யுடையவனே!" என்ற வாக்கியங்கட்குப் பின் காணப்படுகிற "நெய்—கூர்மை; ஆர்தல்—மிகுதி; கூர்மைமிக்கதிருவாழி." என்ற வாக்கியம் இடைச் செருகலாய் வந்த தென்பர் பெரியோர்.

செய்யாத உலகத்திடைச் செய்தாய்= 'செய்யாத' என்பது உலகத்துக்கு விசேஷண மென்று பலரும் மயங்குவர்; அங்ஙனன்று; 'உலகத்திடைச் செய்யாத செய்தாய்' என்று அந்வயம். இரண்டனுருபு தொக்க எதிர்மறைவினையாலணையும் பெயர்.

குடியேறி—ஏறி—எச்சத்திரிபு. .... (௩)

பரனே! பஞ்சவன்பௌழியன்சோழன்
பார்மன்னர்மன்னர்தாம் பணிந்தேத்து
வரனே! * மாதவனே! மதுசூதா!
மற்றோர்நல்துணை நின்னலாலிலேன்காண் *
நரனே! நாரணனே! திருநறையூர்நம்பீ!
எம்பெருமான்! உம்பராளும்
அரனே! * ஆதிவராகமுன்னாய்!
அழுந்தூர்மேல்திசைநின்ற வம்மானே! (௪)

1. முதல் திருவந்தாதி.

பரனே — பரமபுருஷனே!
பஞ்சவன் பௌழியன் சோழன் — பஞ்சவனென்றும் பௌழியனென்றும் சோழனென்றும் பெயர் கொண்ட
பார் மன்னர் மன்னர் தாம் — பூமிக்கு ராஜாதிராஜர்களானவர்கள்
பணிந்து ஏத்தும் — பணிந்து துதிக்கும் படியான
வரனே — சிறந்தவனே!
மாதவனே — திருமாலே!
மதுசூதா — மதுவென்னு மசுரனைக் கொன்றவனே!
நரனே நாரணனே — நரநாராயணாவதாரம் செய்தருளினவனே!
திரு நறையூர் நம்பீ — திருநறையூரி லெழுந்தருளி யிருக்கின்ற பரிபூர்ணனே!
எம் பெருமான் — எமக்குத் தலைவனே!
உம்பர் ஆளும் அரனே — தேவதைகளை ஆளவல்ல ருத்ரனுக்கு அந்தர்யாமியானவனே!
முன் — முன்பொருகாலத்தில்
ஆதி வராகம் ஆனாய் — ஆதிவராஹ மூர்த்தியாய் அவதரித்தவனே!
அழுந்தூர் மேல்திசை நின்ற அம்மானே!—;
நின் அலால் — உன்னையொழிய
மற்று ஓர் நல் துணை — வேறொரு நல்ல ரக்ஷகனை
இலேன் — உடையேனல்லேன்.

* * *—ஒத்தார் மிக்காரை யுடைய னாகாதவனே!, பஞ்சவ னென்றும் பௌழிய னென்றும் சோழ னென்றும் சொல்லப்படுகிற ராஜாதி ராஜர்கள் பணிந்தேத்தும் படியாக வுள்ளவனே!, திருமாலே, வேதவிளக்கைக் கொள்ளை கொண்டு உலகமெங்கு மிருள்மூட்ச்செய்த மதுகைடபர்களைக் கொன்றொழித்தவனே!, ஸ்ரீ பதரிகாச்ரமத்தில் நரனென்னுஞ் சிஷ்யனாகவும் நாராயண னென்னும் ஆசார்யனாகவும் வடிவெடுத்து ஆசார்ய சிஷ்யக்ரமத்தை யுணர்த்தித் திருமந்திரத்தை வெளியிட்ட ருளினவனே! உன்னையன்றி மற்றொரு நற்றுணை யுடையேனல்லே னென்கிறார்.

முதலடியில் 'மன்னர் மன்னர்' என்றது—மன்னர்க்கும் மன்னர் என்றபடி. பரன், வரன்—வடசொற்கள்.

இவ்வாழ்வார் வாக்கினின்று திருநறையூர் நம்பி நூறுபாசுரங்கள் பெற்றுக் கொண்டிருந்தும் திருப்தி பெறாதவனாய் மீண்டும் வந்து முகங்காட்டினன் போலும், திருநறையூர் நம்பீ! என்கிறார். ஆழ்வார் திருநறையூர்க்கு எழுந்தருள் வதற்கு முன்பும் எதிர்கொண்டு சென்றான் நம்பி; திருவிண்ணகரில் ஆழ்வார் எழுந்தருளி யிருக்கும்போது நம்பி எதிர்கொண்டு செல்லவேயன்றோ "திருநறை யூர்த்தேனே வருபுனல் சூழ்திரு விண்ணகரானே!" என்று திருவிண்ணகர்ப்பதிகத்திற் பேசலாயிற்று; ஆழ்வார் திருநறை யூரினின்று மீண்டு திருவழுந்தூர் செல்லுமளவும் கூடவந்து வழிவிட்டுத் திரும்புகை யாலன்றோ இங்கு "திருநறையூர் நம்பீ!........அழுந்தூர் மேல்திசை நின்ற அம்மானே!" என்று பேசலாயிற்று என்று அழகிய மணவாளச் சீயர் ரஸமாக உபந்யஸிக்கக் கேட்டிருக்கை. .... (௪)

விண்டான் விண்புக வெஞ்சமத்தரியாய்ப்
பரியோன்மார்வகம் பற்றிப்பிளந்து *
பண்டானுய்ய வோர்மால்வரையேந்தும்
பண்பாளா! பரனே! பவித்திரனே! *
கண்டேன்நான் கலியுகத்ததன் தன்மை
கருமமாவது மென்றனக்கறிந்தேன் *
அண்டா! நின்னடியன்றிமற்றறியேன்
அழுந்தூர்மேல்திசைநின்ற வம்மானே! (ரு)

விண்டான்	பகைவனான இரணியன்
விண் புக	வீரஸ்வர்க்கம் சென்று சேரும்படி
வெம் சமத்து	வெவ்விய போர்க்களத்திலே
அரி ஆய்	நரசிங்கமாய்த்தோன்றி
பரியோன்	பருத்தவடிவையுடையவனான அவ்விரணியனுடைய
மார்வகம்	மார்பை
பற்றி பிளந்து	பிடித்துக்கிழித்தவனும்,
பண்டு	முன்பு [க்ருஷ்ணாவதாரத்தில்]
ஆன் உய்ய	பசுக்கள் ஜீவிக்கும்படி
ஓர் மால் வரை	ஒரு பெரிய மலையை
ஏந்தும்	எடுத்துப்பிடித்த

பண்பாளா	நீர்மையையுடையவனே!
பரனே	சிறந்தவனே!
பவித்திரனே	பரிசுத்தனே!
அண்டா	அண்டங்கட்கு இறைவனே!
அழுந்தூர் மேல்திசை நின்ற அம்மானே!—;	
கலியுகத்த தன் தன்மை	இக்கலியுகத்தின் ஸ்வபாவத்தை
நான் கண்டேன்	நான் தெரிந்து கொண்டேன்;
என் தனக்கு	எனக்கு
கருமம் ஆவதும்	செய்யத்தக்கதையும்
அறிந்தேன்	அறிந்து கொண்டேன்;
நின் அடி அன்றி மற்று அறியேன்—.	

* * *—ப்ரஹ்லாதாழ்வானுக்கு இரணியனால் நேர்ந்த நலிவுகளைத் தவிர்த்தருளினது போலவும், திருவாய்ப் பாடிக்கு இந்திரன் விடுத்த பெரு மழைத் தீங்கை மலையெடுத்துக் காத்தது போலவும் அடியேனுக்கு இந்திரியங்களால் நேர்ந்த துயரத்தைத் தொலைத்தருளவேணு மென்கிறார்.

விண்டான்—தன்னை விட்டு நீங்கினவன் என்று பொருள் பட்டுப் பகைவனை உணர்த்தும் சொல் இது. அமர்க்களத்தில் மாண்டொழிந்தவர்கள் வீரஸ்வர்க்கம் புகுவர்களென்பது நூற்கொள்கை யாதலால் 'விண்புக' எனப்பட்டது.

கண்டேன் நான் கலியுகத்ததன் தன்மை—மஹாபாரதத்தில் மோக்ஷதர்மத்தில் "ததஃ கலியுகே ப்ராப்தே......பவிஷ்யத்யபோத்தரம்" என்று சொல்லியிருக்கிறபடியே தலைகீழாக நடக்கும் கலியுகத் தன்மைகளைக் கண்டு கொண்டேன்; இப்படிப்பட்ட நிலைமையில் நமக்குச் செய்யத்தக்கதேது என்று ஆராய்ந்து பார்த்தவளவில் உன் திருவடிகளை ஆச்ரயிப்பதே கருமம் என்று துணிந்து கொண்டேன்; அத்துணிவுக்கிடாக உனது திருவடிகளை யன்றி வேறொன்றையு மறியாதவனா யிருக்கின்றேனென்றாராயிற்று,

விண்டான், பரியோன் என்ற சொற்கள் இரணியனைக் குறிப்பன.

கலியுகத்ததன்தன்மை கண்டேன் = பகவத் விஷயத்தில் வெறுப்பைப் பிறப்பித்து ஆத்மஹாநியை விளைப்பதே இக்கலியுகத்தின் தன்மையென்று தெரிந்து கொண்டேனென்கை. கருமம்—வடசொல்; கஉ-ம். அண்டா= அண்டங்கட்கு அதிபதியே! என்றும், இடையனாகப் பிறந்தவனே! என்றும் பொருள்படும். .... (௫)

தோயாவின்தயிர் நெய்யமுதுண்ணச்
சொன்னார்சொல்லி நகும்பரிசே * பெற்ற
தாயால்ஆப்புண்டிருந் தழுதேங்கும்
தாடாளா! தரையோர்க்கும் விண்ணோர்க்கும்
சேயாய்! * கிரேதத்ரேதத்வாபர
கலியுகமிவைநான்கு முன்னானாய்! *
ஆயா! நின்னடியன்றி மற்றறியேன்
அழுந்தூர்மேல்திசைநின்ற வம்மானே! (௬)

சொன்னார்	ஏதையும் வாய்வந்தபடி சொல்லுகிறவர்கள்
சொல்லி	வசைகூறி
நகும் பரிசே	சிரிக்கும்படியாக
தோயா இன் தயிர் நெய் அமுது உண்ண	நன்றாகத்தோயாத இனிய தயிரையும் நெய்யையும் அமுது செய்ய (அப்பொழுது) *
பெற்ற தாயால்	தாயாகிய யசோதையினால்
ஆப்புண்டு	கட்டுண்டு
இருந்து	போகமாட்டாதே நின்று
அழுது ஏங்கும்	விக்கிவிக்கியழுத
தாடாளா	பெரியோனே!
தரையோர்க்கும்	பூமியிலுள்ளவர்களுக்கும்
விண்ணோர்க்கும்	விண்ணுலகத்திலுள்ளவர்களுக்கும்
சேயாய்	கிட்டக்கூடாதவனே!
முன்	முன்னமே
கிரேத திரேத த்வாபர கலியுகமே இவை நான்கும் ஆனாய்	கிருதயுகம் த்ரேதாயுகம் த்வாபரயுகம் கலியுகம் என்னுமிந்த நான்கு யுகங்களுக்கும் நிர்வாஹகனானவனே!
ஆயா	கோபாலக்ருஷ்ணனே!

அழுந்தூர் மேல்திசை நின்ற அம்மானே!—; நின் அடி அன்றி மற்று அறியேன்—.

* * *—உன்மேல் ஏதாகிலும் பழிசொல்லியே பொழுதைப் போக்க நினைத்திருப்பாருடைய வாய்க்கு நல்ல இரை கிடைக்கும்படி தோயாத தயிரையும் நெய்யையும் களவாடியுண்டு யசோதை கையிலே பிடியுண்டு தாம்பினால் கட்டுண்டு 'நம்முடைய ஸௌலப்ய குணம் நன்கு வெளியாகப் பெற்றது' என்று நெஞ்சினுள்ளே பெருமகிழ்ச்சி கிடக்கச் செய்தேயும் வருந்தினவன்போல அபிநயித்து விக்கிவிக்கியழுத பெருமானே!, இந்நிலத்திலுள்ளா ராகவுமாம், விண்ணுலகத்திலுள்ளாராகவுமாம், யாராயினும் தம்முயற்சியாலே உன்னைப்பெற

நினைப்பாராயின் அவர்கட்கு எட்டாதபடி தூரஸ்தனாயுள்ளவனே! க்ருதத்ரேதா த்வாபர கலியுகங்களென்கிற நான்கு யுகங்களையும் தானிட்ட வழக்காக நிர்வஹிக்குமவனே! திருவழுந்தூர்ப் பெருமானே! உன் திருவடிகளையன்றி மற்றொன்றும் நானறியேனென்றாயிற்று.

‘தோயா இன் தயிர்’ என்றும், ‘தோய் ஆவின் தயிர்’ என்றும் பிரிக்கலாம்; இரட்டுறமொழிதலாகக் கொண்டு, சிலவிடங்களில் தோயாதபசுவின் தயிரை யுண்பனென்றும், சிலவிடங்களில்தோய்ந்த பசுவின்தயிரை யுண்பனென்றுங் கொள்ளலாம். சொன்னார்=வாய்வந்தபடி சொல்லித்திரிகின்றவர்கள் என்றவாறு. யசோதைப் பிராட்டியைப் பெற்றதாயென்றது—பெற்ற தாய்போலப் பரிவுடன் வளர்த்தமைபற்றி யென்க.

‘க்ருத’ என்னும் வடசொல் ‘கிரேத’ என விகாரப் பட்டது. ‘யுகமிவை நான்கும் முன்னானாய்’ என்று விளிப்பதன் கருத்தாவது—கலியுகத்திலும் கிருதயுக ரீதியை நடை பெறுத்தவல்ல சக்தி உனக்கு இருக்கச் செய்தேயும் என்னைக் கலிநலிவுக்கு ஆளாக்கித் துன்பப்படுத்துவதேன்? என்பதாம். .... (௬)

கறுத்துக்கஞ்சனை யஞ்சமுனிந்தாய்!
கார்வண்ணா! கடல்போலொளிவண்ணா! *
இறுத்திட் டான்விடையேழு முன்வென்றாய்!
எந்தாய்! அந்தரமேழுமுனானாய்! *
பொறுத்துக்கொண்டிருந்தாற் பொறுக்கொணாப்
போகமேநுகர்வான்புகுந்து * ஐவர்
அறுத்துத்தின்றிடவஞ்சி நின்னடைந்தேன்
அழுந்தூர்மேல்திசைநின்ற வம்மானே! (௭)

கஞ்சனை	கம்ஸனை
அஞ்ச	அவன் பயப்படும்படி
கறுத்து	கோபித்து
முனிந்தாய்	சிக்ஷித்தவனே!
கார் வண்ணா	மேகம் போல் குளிர்ந்த வடிவையுடையவனே!
கடல் போல் ஒளி வண்ணா	கடல்போன்று அழகிய வடிவையுடையவனே!
முன்	முன்பொருகால்
ஆன் விடை ஏழும் இறுத்திட்டு வென்றாய்	ஏழெருதுகளையும் முறித்து வென்றவனே!
எந்தாய்	எம்பெருமானே!
முன்	முற்காலமே தொடங்கி
அந்தரம் ஏழும் ஆனாய்	மேலுலகங்களேழுக்கும் நியாமகனானவனே!,

அழுந்தூர் மேல்திசை நின்ற அம்மானே!—;

பொறுத்துக் கொண்டு இருந்தால் பொறுக்க ஒணா	(வருந்தி) ஸஹித்துக் கொண்டிருப்போமென்றாலும் ஸஹிக்க முடியாதபடியான
போகமே	துக்காநுபவங்களையே
நுகர்வான்	பெறுவிப்பதற்காக
ஐவர்	பஞ்சேந்திரியங்கள்
புகுந்து	என்னிடம் வந்து சேர்ந்து
அறுத்து தின்றிட	ஹிம்ஸித்து ஆத்மநாசத்தைப்பண்ண
அஞ்சி	(அதற்குப்) பயப்பட்டு
நின் அடைந்தேன்	உன்னை ஆச்ரயித்தேன்.

* * *—உன்பக்கலில் நல்லெண்ணங் கொண்டு வாழ்ந்து போகலாமாயிருக்க அது செய்யாதே தீயபுத்தியைக் கொண்ட கம்ஸன் அஞ்சி யொழியும்படி அவனைச் சினந்து நிக்ரஹித்தவனே ; நப்பின்னைப் பிராட்டியோடு கலவிசெய்ய இடையூறாயிருந்த எழு விருஷபங்களையும் வலியடக்கி அப்பிராட்டியைத் தழுவிக்கொண்டவனே !, பூலோகம் புவர்லோகம் ஸுவர்லோகம் ஸத்யலோகம் மஹாலோகம் ஜநலோகம் தபோலோகம் ஸத்யலோகம் ஆகிய மேலேழுலகங்களையும் நிர்வஹித்து நடத்துமவனே !, பல்லைக்கடித்துக்கொண்டு பொறுத்திருப்போமென்றாலும் பொறுத்திருக்கமுடியாத துக்காநுபவங்களை நான் அடைந்திடும்படி பஞ்சேந்திரியங்கள் என்னுள்புகுந்து ஹிம்ஸிக்க, அந்த ஹிம்ஸைகளுக்கு அஞ்சி உன் திருவடிகளிலே வந்து புகுந்தேனென்றதாயிற்று.

போகம்—ஜோம மென்ற வட சொல்விகாரம் ; அநுபவம் ; துன்பங்களின் அநுபவமென்பது அர்த்தாத் ஸித்தம். நுகர்வான்—நான் அநுபவிக்கும்படி செய்வதற்காக. .... (எ)

நெடியானே ! கடியார்கலிநம்பீ !
நின்னையே நினைந்திங்கிருப்பேனை *
கடியார்காளைய ரைவர்புகுந்து
காவல்செய்த வக்காவலைப்பிழைத்து *
குடிபோந்துன்னடிக்கீழ் வந்துபுகுந்தேன்
கூறைசோறிவை தந்தெனக்கருளி *
அடியேனைப் பணியாண்டுகொளெந்தாய் !
அழுந்தூர்மேல்திசைநின்ற வம்மானே ! (அ)

நெடியானே	எல்லார்க்கும் மேற்பட்டவனே !
கடி	(பூமிக்கு) அரணாகிய
ஆர்கலி	ஸமுத்ரத்தில் (பள்ளி கொண்டிருக்கிற)
நம்பீ	பூர்ணனே !
எந்தாய்	எம்பெருமானே !
அழுந்தூர் மேல்திசை நின்ற அம்மானே !—;	
நின்னையே நினைந்து	உன்னையே தியானித்துக் கொண்டு
இங்கு இருப்பேனை	இங்கு இருக்கிற என்னை
கடியார்	க்ரூரர்களாயும்
காளையர்	(ஹிம்ஸிப்பதில்) யௌவன பருவ முள்ளவராயு மிருக்கிற
ஐவர்	பஞ்சேந்திரியங்கள்
புகுந்து	என்னிடம் நெருங்கி
காவல் செய்த அக் காவலை பிழைத்து	(என்னை உன்னிடம் வரவொட்டாதபடி) தடை செய்த அந்தச் சிறைக்குத் தப்பிவந்து
உன் அடி கீழ்	உன் திருவடிகளின் கீழே
குடி போந்து	குடியிருக்கக் கருதி
வந்து புகுந்தேன்	வந்து சேர்ந்தேன் ;
எனக்கு	அடியேனுக்கு
கூறை சோறு இவை தந்தருளி	அணியும் சோறுமாகிய இத்திருவடிகளைத் தந்தருளி
அடியேனை பணி ஆண்டு கொள்	அடியேனை நித்ய கிங்கரனாக்கிக் கொள்ள வேணும்.

* * *—ஆர்கலி என்று கடலுக்குப் பெயர்; திருப்பாற்கடலை நினைக்கிறது. ஆர்த்தர்களுடைய கூக்குரல் கேட்டுப் பதறி யெழுந்து வந்து ரக்ஷிப்பதற்காக நீ திருப்பாற்கடலில் உறங்குவான்போல் யோகு செய்யும் பெருமானு யிருக்கிற படியை அநுஸந்தித்து அந்திருக்குணத்தி லீடுபட்டிருக்கின்ற அடியேனைப் பஞ்சேந்திரியங்கள் சிறைப்படுத்தி நலிந்த நலிவுக்குத் தப்பிப் பிழைத்து உன் திருவடிகளிலே வந்து சேர்ந்தேன்; இனி அடியேனுக்கு வேண்டிய கூறை சோறு களைக் கொடுத்தருளி நித்யகைங்கரியங் கொண்டருள வேணுமென்கிறார்.

பஞ்சேந்திரியங்களுக்குக் கொடுத்த 'காளையர்' என்னும் விசேஷண த்தின் கருத்தைப் பெரியவாச்சான்பிள்ளை வெளியிட்டருளுகிறார் காண்மின்;— "நெஞ்சில் நன்மையின்றிக்கே பிறரை நலியநலிய இளகிப்பதியாநின்றபருவத்தை யுடைய ஐவர்" என்பது வியாக்கியான ஸ்ரீஸூக்தி. "காளையே எருது பாலைக் கதிபன் நல்லிளையோன் பேராம்" என்பது நிகண்டு; நல்லிளையோனென்ற பொருள் இங்குக்கொள்ளப்பட்டது; ஹிம்ஸிக்குந்திறத்தில் மூப்பு இன்றியே யௌவனங்கொண்டிருக்கிற இந்திரியங்களென்றபடி.

கூறைசோறிவைதந்தெனக்கருளி=1. "உண்ணுஞ்சோறு பருகுநீர் தின்னும் வெற்றிலையுமெல்லாங்கண்ணன்" என்றும் 2. "கூறைசோறிவைவேண்டுவதில்லை" என்றும் சொல்லுமாபோலே கூறை சோறு முதலிய போக்ய போகோபகரணங்களில் விருப்பமற்றிருக்கின்ற இவ்வாழ்வார் கூறை சோறுகளை விரும்ப ப்ரஸக்தி யில்லாமையாலே 'எனக்குக் கூறையும் சோறுமாயிருக்கிற இத்திருவடிகளைத் தந்தருளி' என்று உரைக்கப்பட்டது. "வாஸுதேவஸ்ஸர்வமிதி ஸ மஹாத்மா ஸுதுர்லப:"—வாஸுதேவஸ் ஸர்வமிதி ஸ மஹாத்மா ஸுதுர்லப:" [எல்லாப்பொருளும் எம்பெருமானே யென்றிருக்கும் மஹாத்மா கிடைப்பதரிது] என்ற கீதாசார்யனுடைய குறைதீரவிறே ஆழ்வார்கள் திருவவதரித்தருளிற்று.

அடியேனைப் பணியாண்டுகொள்=ராஜகுமாரனாய்ப் பிறந்து முடியிழந்து போகும் தௌர்ப்பாக்ய சாலிகளைப் போலாகாமே அடியேனை நான் அடிமைத் தொழில் செய்து ஸ்வரூபம் நிறம் பெறுமாறு செய்தருளா யென்கிறது. ஸ்ரீவிபீஷணாழ்வானுக்கு வந்து புகுரலாம்படி கடற்கரை வெளியிலே வந்து நின்றாப்போலே எனக்கு உறவு முறையார் கைவிட்டவன்று வந்து கிட்டலாம் படியன்றோ நீ திருவழுந்தூரில் வந்து நிற்கிறது, இந்நிலையிலும் அடியேன் இழந்து போகலாமோ வென்கிறது ஈற்றடியினால். .... (அ)

> கோவாயைவரென் மெய்குடியேறிக்
>
> கூறைசோறிவை தாவென்றுகுமைத்துப்
>
> போகார் * நானவரைப்பொறுக்ககிலேன்
>
> புனிதா! புட்கொடியாய்! நெடுமாலே! *

1. திருவாய்மொழி 6—7—1. 2. பெரியாழ்வார் திருமொழி 5—1—4.

தீவாய்நாகணையில் துயில்வானே!
திருமாலே! இனிச்செய்வதொன்றறியேன் *
ஆவாவென்றடியேற் கிறையிரங்காய்
அழுந்தூர்மேல்திசைநின்ற வம்மானே! (கூ)

புனிதா	பரிசுத்தனே!
புள் கொடியாய்	கருடத்வஜனே!
நெடுமாலே	ஸர்வாதிகனே!
தீ வாய் நாக அணையில் துயில்வானே	(பகைவர்மேலே) நெருப்பை உமிழ்கிற ஸர்ப்பமாகிய படுக்கையில் சயனித்திருப்பவனே!
திருமாலே!, அழுந்தூர் மேல்திசை நின்ற அம்மானே!—;	
ஐவர்	பஞ்சேந்திரியங்கள்
கோ ஆய்	என்னை நியமிப்பனவாய்க் கொண்டு
என் மெய்	என் சரீரத்தில்
குடி ஏறி	குடிபுகுந்து
கூறை சோறு இவை தா என்று	துணியையும் சோற்றையும கொடு என்று
குமைத்து	அடர்த்துக் கொண்டிருந்து
போகார்	விட்டுப்போகின்றனவில்லை;
நான்	அடியேன்
அவரை	அவ்விந்திரியங்களின் கொடுமைகளை
பொறுக்ககிலேன்	ஸஹிக்கமாட்டுகின்றிலேன்;
இனி செய்வது ஒன்று அறியேன்	உன்னையே புகலாக நான் அடைந்தேனான பின்பு (என்னுடைய ஹிதத்துக்காக) நான் செய்து கொள்ளத்தக்கது ஒன்றுமறிகின்றிலேன்;
அடியேற்கு	அடியேன் விஷயத்தில்
ஆ ஆ என்று	ஐயோவென்று
இறை இரங்காய்	சிறிது கிருபைசெய்தருள வேணும்.

* * *—இப்பாட்டில் "ஐவர் புகுந்து காவல்செய்த வக்காவலைப் பிழைத்
துக் குடிபோந்துன்னடிக்கீழ் வந்து புகுந்தேன்" என்று இந்திரியங்களுக்கு
ஒருவாறு தப்பிப்பிழைத்துத் திருவடிவாரத்திலே வந்து சேர்ந்ததாகச் சொன்
னார்; அதுதான் இந்நிலத்திலேயாகையாலே இந்திரியங்களின் நலிவு தொடர்ந்தே
வருவதாயிருக்கிறபடியைக்கண்டு மீண்டும் கதறுகிறார். அடியேன் உன்னொரு
வனையே ஸ்வாமியாகக் கொண்டவனே யன்றி ஐவரை ஸ்வாமியாகக்கொண்டவ
னல்லேன்; அப்படியிருந்தும் ஐவர் என்னை அடக்கியாள்பவராகநின்று என்னுட
லிலே குடிபுகுந்து தங்களுக்கு வேண்டிய இரைகளைப் பெறவேண்டிக் குமைத்து
ஒரு நொடிப்பொழுதுங் கால்வாங்குகின்றிலர்; நான் அவர்களுடைய நலிவைப்
பொறுக்கமாட்டுகின்றிலேன்; அழுந்தூர் மேற்றிசை நின்றவம்மானே! நீயோ
விரோதிகளைப் போக்கி ஆச்ரிதரை ரக்ஷிப்பதைத் தன்பேறாக நினைக்கும்படியான
பரிசுத்தியை யுடையையாயிருக்கின்றாய்; இந்த நிலைமைக்குக் கொடிகட்டி வாழ்
கின்றாய்; அடியவர்களோடு நித்ய ஸம்ச்லேஷம் பண்ணியிருப்பதே உனக்குத்
தொழில் என்பது விளங்க அடியவர்களில் தலைவனான திருவனந்தாழ்வானை
விட்டுப் பிரியாதிருக்கின்றாய்; அடியவர்கட்குப் புருஷகாரம் செய்யவல்ல பிராட்
டியிடத்தில் மால் கொண்டிருக்கின்றாய்; நீ இப்படிப்பட்டவனான பின்பு என்
னுடைய காரியம் நீ செய்யவேண்டுமத்தனையல்லது நான் செய்வதொன்றறி
யேன்; நீ தானும் மிகையாகச் செய்யவேண்டுவதொன்றுமில்லை; ஐயோ
வென்று திருவுள்ளத்திலே சிறிது இரங்கியருளினாற் போதுமானது என்கிறார்.

தீவாய் நாகணை=1. "ஆங்கார வாரமது கேட்டு அழலுமிழும் பூங்காரரவு" என்கிறபடியே பகவத் விரோதிகள் யாரேனும் வந்து புகுந்தார்களோ வென்று அஸ்தாநே பயசங்கை பண்ணி விஷாக்நியைக் கக்குவதே தொழிலாயிருப்பனும் ஆதிசேஷன்.

நாக+அணை, 'நாகவணை' என்றாக வேண்டுவது 'நாகணை' என்றானது தொகுத்தல் விகாரம். .... (௯)

அன்னமன்னு பைம்பூம்பொழில் சூழ்ந்த
அழுந்தூர் மேல்திசைநின்ற வம்மானை *
கன்னிமன்னு திண்டோள் கலிகன்றி
ஆலிநாடன் மங்கைக்குலவேந்தன் *
சொன்னவின்தமிழ் நன்மணிக்கோவை
தூயமாலை யிவைபத்தும்வல்லார் *
மன்னிமன்னவரா யுலகாண்டு
மானவெண்குடைக்கீழ் மகிழ்வாரே. (௧௦)

அன்னம் மன்னு	அன்னப்பறவைகள் பொருந்திவாழ்கிற
பைம்பூ பொழில் சூழ்ந்த	பரந்த பூஞ்சோலைகளாற் சூழப்பட்ட
அழுந்தூர்	திருவழுந்தூரில்
மேல் திசை நின்ற	மேலைத்திக்கில் எழுந்தருளியிருக்கின்ற
அம்மானை	எம்பெருமானைக்குறித்து,—
கன்னி மன்னு திண் தோள்	ஒருநாளு மழியாத மிடுக்கையுடைய தோள்களையுடையராய்
ஆலி நாடன்	திருவாலிநாட்டுக்குத் தலைவராய்
மங்கை	திருமங்கையிலுள்ளார்க்கு
குலம் வேந்தன்	குலக்கிரமமாகவந்த ராஜாவான

கலிகன்றி	ஆழ்வார்
சொன்ன	அருளிச்செய்த
இன் தமிழ்	மதுரமான தமிழ்ப்பாஷையி லாகிய
நல் மணி கோவை	நல்ல ரத்னமாலை போலச் சிறந்த
தூய மாலை இவை பத்தும்	பரிசுத்தமான இந்தச் சொல்மாலைகள் பத்தையும்
வல்லார்	ஓதியுணருமவர்
மன்னவர் ஆய்	பிரபுக்களாய்
மன்னி	நெடுகாள் வாழ்ந்து
உலகு ஆண்டு	லோகங்களை அரசாட்சி செய்து கொண்டு
மானம்	பெரிய
வெண் குடை கீழ்	வெண்குடை நிழலிலே இருந்து
மகிழ்வார்	மகிழப்பெறுவர்.

* * *—அன்னப்பறவைகள் நித்யவாஸம் பண்ணுகிற பூக்கள் நிறைந்த சோலைகளாற் சூழப்பட்ட திருவழுந்தூரில் மேலைத் திசையில் நின்றதிருக் கோலமாக ஸந்நிதி பண்ணியிருக்கும் ஆமருவியப்பன் விஷயமாகத் திருமங்கையாழ்வா ரருளிச்செய்த இத்திருமொழியை ஓதி யுணரவல்லவர்கள் இஹலோக

1. நான்முகன் திருவந்தாதி.

ஸம்பத்திலும் குறைவற்றிருப்பர்களென்று பயனுரைத்துத் தலைக்கட்டினாராயிற்று. .... (௧௦)

அடிவரவு:—திருவுக்கும் பந்தார் நெய் பானே விண்டான் தோயா கறத்த நெடியானே கோவாய் அன்னம் செங்கமலம்.

ஏழாந்திருமொழி உரை முற்றிற்று.

ஜீயர் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஏழாம்பத்து—எட்டாந்திருமொழி,

செங்கமலத்திருமகளும்.

உரையவதாரிகை:—பஞ்சேந்திரியங்களின் வலிமையை நினைந்து அஞ்சிக் கலங்கிய ஆழ்வார் கீழ்த்திருமொழியில் எம்பெருமானைக் குறித்து ஓலமிட, அவன் 'நீர் இங்ஙனே கூப்பிடுகிறதென்? பிரமன் முதலியோரும் தமது ஆபத்தை அறிவிக்கும்போது அக்கரையில் நின்று கூப்பிடுமாறு அவர்கட்கும் கிட்டவொண்ணாதபடி பாற்கடலிற் பள்ளிகொள்ளுகின்ற நாம் உமது குறையைத் தீர்க்கைக்காகவன்றோ திருவழுந்தூரில் வந்து நின்றோம்' என்று தனது நிலையைக் காட்டிக்கொடுக்க; அதனை யநுஸந்தித்து த்ருப்தராய்ப் பிறரைப்பார்த்து 'இவனல்லது ஆச்ரயணீயனில்லை; எல்லாரும் இவனையே ஆச்ரயித்து உய்யப்பாருங்கோள்' என்று உபதேசிக்கிறார் இத்திருமொழியில். (பாசுரந்தோறும் 'காண்மின்' என்றது உபதேச ஸூசகம்.) .... *

செங்கமலத் திருமகளும் புவியும் செம்பொன்
திருவடியி னிணைவருட முனிவரேத்த *
வங்கமலி தடங்கடலு ளனந்தனென்னும்
வரியரவி னணைத்துயின்ற மாயோன் காண்மின் *
எங்குமலி நிறைபுகழ் நால்வேதமைந்து
வேள்விகளும் கேள்விகளு மியன்றதன்மை *
அங்கமலத்தயனனையார் பயிலுஞ்செல்வத்து
அணியழுந்தூர் நின்றுகந்த வமரர்கோவே. (௧)

	(உலகத்தவர்களே !)
எங்கும் மலி நிறை புகழ் நால் வேதம்	எவ்விடத்திலும் நிறைந்து பரவிய கீர்த்தியை யுடைய நான்கு வேதங்களும்
ஐந்து வேள்விகளும்	பஞ்சமஹாயஜ்ஞங்களும்
கேள்விகளும்	(மற்றும் இன்றியமையாத) நூற்கேள்விகளும் (ஆகிய இவற்றை)
இயன்ற	இயற்கையாகவே அறிந்துள்ள
தன்மை	குணத்தை யுடையராய்
அம் கமலத்து அயன் அனையார்	(எம்பெருமானுடைய) அழகிய நாபீகமலத்தில் தோன்றியவனாகிய பிரமனையொத்தவரான அந்தணர்கள்
பயிலும்	நித்யவாஸஞ் செய்கிற
செல்வத்து	சிறப்பையுடைய
அணி	அழகிய
அழுந்தூர்	திருவழுந்தூரில்
நின்ற	வந்துநின்ற
உகந்த	(அத்தலத்தில் வாழ்க்கையையே பெரும் பேறாக நினைத்து) அகமகிழ்கின்ற
அமரர் கோ	நித்யஸூரிகளுக்குத் தலைவனான எம்பெருமான் (யாவனென்னில்,)
செம் கமலம் திரு மகளும்	செந்தாமரைமலரில் வாழ்கின்ற ஸ்ரீதேவியும்
புவியும்	பூமிதேவியும்
செம் பொன் திரு அடியின் இணை வருட	(தனது) சிவந்தபொன்மயமான இரண்டுதிருவடிகளையும் தடவவும்
முனிவர் ஏத்த	மஹர்ஷிகள் புகழ்ந்து துதிக்கவும்
வங்கம் மலி தட கடலுள்	அலைகள்நிரம்பிய பெரிய திருப்பாற்கடலில்
அனந்தன் என்னும் வரி அரவின் அணை	திருவனந்தாழ்வானென்கிற–புள்ளிகளை யுடைய ஸர்ப்பசயனத்தில்
துயின்ற	(பள்ளிகொண்டு) யோகநித்திரைசெய்கின்ற
மாயோன்	ஆச்சரியமான குணமுடையவன் ;
காண்மின்	காணுங்கள்.

* * *—திருப்பாற்கடலிற் பாம்பணையிற் பள்ளிகொள்ளுகின்ற வ்யூஹ மூர்த்தியே திருவழுந்தூரில் அர்ச்சாவதார ரூபியாய் எழுந்தருளியுள்ள தேவாதி தேவனவன் என்கிறார். ஸ்ரீதேவியும் பூதேவியுமான இரண்டு மனைவியரும் திருவடிவருடவும் ஸநகர் முதலிய தேவரிஷிகள் துதிக்கவும் எம்பெருமான் பாற்கடலில் யோகநித்திரை யமர்கின்றனனென்க.

திரு மகள்—செல்வத்திற்கு உரிய மகள்; லக்ஷ்மி. வங்கம்—‘[illegible]’ என்ற வடசொல்லின் சிதைவு: “[illegible]” என்பது அமர கோசம். இனி, வங்கம் என்பதற்கு மரக்கலம் என்ற பொருளு முண்டு. அநந்தன் = எக்காலத்தும் அழிவில்லாதவன். இப்பெயர் ஆதிசேஷனுக்கு முண்டு, திருமாலுக்கு முண்டு; ‘‘அநந்தனென்னும் மாயோன்’’ என்று அந்வயித்துப் பொருள் கொண்டால் திருமாலைக் குறித்ததாகும். தேசம் காலம் வஸ்து என்ற மூவகையாலும் எல்லையில்லாதவன் என்பது இத்திருநாமத்தின் பொருள்; அதாவது—‘இன்னதேசத்திலுள்ளான், இன்னதேசத்திலில்லை’ என்கிற பரிச்சேத மில்லாமையாலே தேச பரிச்சேத மற்றவன்; ‘இன்ன காலத்திலுள்ளான்,

இன்ன காலத்திலில்லை' என்கிற பரிச்சேத மில்லாமையாலே கால பரிச்சேத மற்றவன் ; 'இன்ன வஸ்துவைப் போலுள்ளான்' என்பதில்லாமையாலே வஸ்து பரிச்சேத மற்றவன். ('இன்ன வஸ்துவாக உள்ளான், இன்ன வஸ்துவாக இல்லை' என்பதில்லாமையாலே வஸ்து பரிச்சேத மற்றவன் என்பது முண்டு.)

மாயோன்—மாயையை யுடையவன் ; மாயையாவது—கூடாததையுங் கூட்டுவிக்குந் திறம்.

வேதங்கள் வேறொரு பிராமாணத்தை வேண்டாது ஸ்வயம் ப்ரமாணமாக நிற்குஞ் சிறப்பையுடையனவாதல்பற்றி 'எங்குமலி நிறைபுகழ் நால்வேதம்' என்றார். "எங்குமலி நிறைபுகழ்" என்ற தொடரை அயனையார்க்கு விசேஷணமாக்கி யுரைப்பது மொக்கும்.

ஐந்து வேள்விகளாவன—ப்ரஹ்மயஜ்ஞும், தேவயஜ்ஞும், பூதயஜ்ஞும், பித்ருயஜ்ஞும், மநுஷ்யயஜ்ஞும், என்பனவாம். வேத மோதுதல் பிரமயஜ்ஞும்; யாகஞ்செய்தல் தேவயஜ்ஞும்; பலியீதல் பூதயஜ்ஞும் ; பித்ருக்களையுத்தேசித்துத் தர்ப்பணம் விடுதல் பித்ருயஜ்ஞும் ; விருந்தினர்க்கு உணவளித்தல் மநுஷ்ய யஜ்ஞும்.

கேள்வியாவது—கேட்கப்படும் நூற்பொருள்களைக் கற்றறிந்தார் கூறக்கேட்டல் ; இது, கற்றவர்க்கு அக்கற்றதனாலாகிய அறிவை உறுதிப்படுத்தவும் கல்லாதவர்க்கு அவ்வறிவை உண்டாக்கவும் வல்லது. வேதம் முதலியன அவ்வூரிலுள்ள அந்தணர்களிடம் இயற்கையில் நிறைந்திருத்தலால் அவர் ஒவ்வொருவரும் பிரமனை யொத்திருப்பரென்கிறது. அன்றியே, தமது தவ வலிமையால் அவ்வூரிலுள்ள அந்தணர் ஒவ்வொருவரும் பிரமனைப் போல ஸ்ருஷ்டிக்க வல்லவரெனினுமாம். பயிலுதல்—எப்பொழுதும் நெருங்கி வஸித்தல். **அணி**—இந்நிலவுலகத்திற்கு ஆபரணம் போன்ற, அழுந்தூர் எனினுமாம். (க)

முன்னிவ்வுலகேழு மிருள்மண்டியுண்ண
முனிவரோடு தானவர்கள் திசைப்ப * வந்து
பன்னுகலை நால்வேதப் பொருளையெல்லாம்
பரிமுகமாயருளியவென்பரமன் காண்மின் *
செந்நெல்மலி கதிர்க்கவரிவீசச்
சங்கமலைமுரலச் செங்கமலமலரையேறி*
அன்னமலி பெடையோடு மமருஞ்செல்வத்து
அணியழுந்தூர்நின்றுகந்த வமரர்கோவே* (உ)

செந்நெல் மலி கதிர்	செந்நெற்பயிரினது (நெல்) நிரம்பிய கதிர்கள்
கவரி வீச	சாமரங்கள்போல் அசைந்தாடா நிற்கவும்
சங்கம் அலை முரல	சங்கங்கள் ஒலியாநிற்கவும்
அன்னம்	அன்னங்கள்
மலி பெடையோடும்	(தம்மிடத்தில் அன்பு) மிக்குள்ள பெண் அன்னங்களுடனே

செம் கமலம் மலரை ஏறி அமரும்	செந்தாமரைமலர்களின்மீது ஏறிவீற்றிருக்கப் பெற்ற
செல்வத்த	சிறப்பையுடைய

அணி அழுந்தூர் நின்று உகந்த அமரர் கோ—;

(யாவனென்னில் ;)

முன்	முற்காலத்தில்
இ ஏழ் உலகும்	இந்த ஏழுலகங்களையும்
இருள்	(அஜ்ஞானமாகிற) அந்தகாரமானது
மண்டி உண்ண	மிகுந்து தன்வசமாக்கிக் கொள்ள

(அதனால்)

முனிவரொடு தானவர்கள் திசைப்ப	முனிவர்களும் அசுரர்களும் அறிவுகெட்டுக்கலங்க,

(அப்பொழுது)

வந்து	திருப்பாற்கடலினின்று திருவவதரித்து
பன்னு	பரவிய
கலை	(அங்கங்களாகிய) சாஸ்திரங்களையுடைய
நால் வேதம்	நான்குவேதங்களினது
பொருளை எல்லாம்	அர்த்தங்களையெல்லாம்
பரி முகம் ஆய்	ஹயக்ரீவமூர்த்தியாய்
அருளிய	மீட்டுக்கொணர்ந்தருளிய
எம் பரமன்	நமது சிறந்த கடவுளாவர்.

* * *—திருவழுந்தூரி லெழுந்தருளியுள்ள எம்பெருமானைப் பாற்கடலிற் பள்ளி கொண்டிருக்கின்ற பரமனாகக் கீழ்ப்பாசுரத்தில் அநுஸந்தித்த ஆழ்வார், இப்பாசுரத்தில், அத்திருப்பாற்கடலினின்று அவதரித்து வேதப்ரதாநம் பண்ணின ஹயக்ரீவனாக அநுஸந்திக்கிறார்.

ஞானதீபத்திற்கு முதல் துணையான வேதங்களை யிழந்ததனால் எல்லாவுலகங்களும் அஜ்ஞாநாந்தகாரத்தால் மழுங்கவும், அவற்றிலுள்ள முனிவர் முதலியோர் திகைக்கவும் நேர்ந்த தென்க. வேதங்கள்—சீக்ஷை வியாகரணம் சந்தஸ் நிருக்தம் ஜ்யோதிஷம் கல்பம் என்னும் ஆறு அங்கங்களை யுடைமையால் 'பன்னு கலை நால்வேதம்' எனப்பட்டது. குதிரையின் முகத்தைபுடைய எம்பெருமானை 'பரிமுகம்' என்றார்; இலக்கணை. ராஜசிஹ்நமாகிய வெண்சாமரை வீசவும் வாத்தியங்கள் ஒலிக்கவும் ஓரரசன் தனது பட்டமஹிஷியுடனே சிங்காசனத்தின் மீது வீற்றிருத்தல் போல, இத்திருப்பதியில், செந்நெற் கதிர்களாகிய சாமரைகள் வீசவும் சங்கங்கள் முழங்கவும் அன்னப்பறவைகள் தமது பேடைகளுடனே செந்தாமரை மலர்களில் ஏறி வீற்றிருக்கு மென்பது பின்னடிகளிற் கூறிய வருணனையின் கருத்து.

ஏழுலகு—பூலோகம் புவர்லோகம் சுவர்லோகம் மஹாலோகம் ஜநலோகம் தபோலோகம் ஸத்யலோகம் என்னும் மேலேழுலகங்கள். திசைத்தல் எனினும் திகைத்தல் எனினும் ஒக்கும். மூன்றாமடியில் "கதிர்கவரி" என்று பாடமின்றியே "கதிர்க்க வரி" என்று பாடமாயின், 'செந்நெற் பயிர்களானவை தமது கதிர்களாகிய கவரியை வீச' என்று பொருள் காண்க. சங்கம்—நீர்வாழுயிர்களிலொன்று. .... (உ)

குலத்தலைய மதவேழம் பொய்கைபுக்குக்
கோள்முதலை பிடிக்கவதற் கனுங்கிநின்று *
நிலத்திகழும் மலர்ச்சுடரேய் சோதீ! என்ன
நெஞ்சிடர் தீர்த்தருளியவென் நிமலன்காண்மின் *
மலைத்திகழ்சந்தகில் கனகமணியுங்கொண்டு
வந்துந்தி வயல்கள்தோறும் மடைகள்பாய *
அலைத்துவரும் பொன்னிவளம் பெருகுஞ்செல்வத்து
அணியழுந்தூர்நின்றுகந்த வமரர்கோவே. (௫)

மலை	ஸஹ்யமலையினிடத்து
திகழ்	பொருந்தி விளங்குகின்ற
சந்து	சந்தன மரங்களையும்
அகில்	அகிற்கட்டைகளையும்
கனகம்	பொன்னையும்
மணியும்	ரத்னங்களையும்
கொண்டு வந்து	திரட்டிக்கொணர்ந்து
உந்தி	தள்ளி
வயல்கள் தோறும்	கழனிகளிலெல்லாம்
மடைகள்	நீர்பாயும் வழிகளிலே
பாய	பாய்ந்து செல்லும்படி
அலைத்து வரும்	அலையெறிந்து கொண்டு வாராநின்றுள்ள
பொன்னி	காவேரியினால்
வளம் பெருகும்	செழிப்பு மிகப்பெற்ற
செல்வத்து	சிறப்பையுடைய

அணி அழுந்தூர் நின்று உகந்த அமரர் கோ—; (யாவனெனில்;)

குலம் தலைய மதம் வேழம்	நல்லசாதியிற்பிறந்த யானைகட்குள்ளே தலைமையையுடைய மதங்கொண்ட கஜேந்திராழ்வான்
பொய்கைபுக்கு	தடாகத்திலிறங்கினபோது
கோள் முதலை பிடிக்க	வலிமையையுடைய முதலையானது (தன்னைப்) பிடித்திழுத்ததனால்
அதற்கு அனுங்கி நின்று	அம்முதலைக்கு அஞ்சிநின்று
நில திகழும்	நிலாவிளங்குகின்ற
மலர்	பரவுதலையுடைய
சுடர்	சந்திரனை
ஏய்	ஒத்த
சோதீ	குளிர்ந்த ஒளியை [தண்ணொளியை] யுடையவனே!
என்ன	என்று ஓலமிட்டுத் துதிக்க,
நெஞ்சு இடர் தீர்த்து அருளிய	(அந்தக்கஜேந்திரனது) மனத்துன்பத்தை நீக்கியருளிய
எம் நிமலன்	எமது குற்றமற்ற கடவுளானவன்.

* * *—இப்பாசுரத்தில் அஜ்ஞாநம்போம்படி வேதப்ரதாநம் பண்ணிய படியை அருளிச்செய்த ஆழ்வார், அந்த வேதத்தின் முக்கிய தாத்பர்யமான கைங்கரியத்தைச் செய்கையில் அதற்கு நேரும் இடையூறுகளை யொழித்து அக் கைங்கரியத்தைத் தானே கைக்கொண்டருளுமவன் எம்பெருமானென்பதை உணர்த்துமாறு ஸ்ரீ கஜேந்திராழ்வானது வரலாற்றை இப்பாசுரத்தில் உபதேசிக்கின்றாரென்க.

"குலத்தலைய மத வேழம்" "நிலத்திகழும்" மலர்ச்சுடரேய்" என்ற பாடங்களே வியாக்யானத்திற்கு மிகப்பொருத்தமான பழைய பாடங்கள். "கோலைத்தலைய"

என்றும் "நிலைத்திகழும் மலர்ச்சுடரே" என்றும் சிலர் ஓதுவர்; நான்கு அடிகளிலும் எதுகையில் லகாரம் வருதல் நன்று என்பர். இப்பாடத்திற்கு, கொலைதலைய—கொல்லுதல் தொழிலைத் தன்னிடத்தே யுடைய என்று பொருள்: "கோடு கைம் முதலா வொன்பதுறுப்பினுங் கோறல் வல்ல, நீடுயர் மா" என்றபடி யானை கால்கள் நான்கு துதிக்கை யொன்று தந்தம் இரண்டு மஸ்தகம் ஒன்று வால் ஒன்று என்னும் ஒன்பது உறுப்புக்களினாலும் கொல்லுந் தன்மையதாதல் அறிக. நிலை திகழும் மலர் சுடரே = நிலையாக விளங்குகின்ற பரவுதலையுடைய ஒளிவடிவ மானவனே! என்றபடி.

கோள் முதலை-மலையொத்த யானையையும் தன்னிலமான நீரிலே யிழுத்துச் செல்லும் பேராற்றலமைந்த முதலை என்கை. நிமலன்—ஒரு குற்றமும் தன்னிடத்தில் பற்றப் பெறாதவன்.

நில—நிலா; "குறியதன்கீழ் ஆக்குறுகலும்" என்பது நன்னூல்.

[மலைத்திகழ் இத்யாதி.] ஸஹ்ய பர்வதத்தினின்று உத்பத்தியாகிப் பெரு வெள்ளமாய்ப் பெருகிவரும் விசையில் குறிஞ்சிநிலக் கருப்பொருளாகிய சந்தனம் முதலியவற்றைப் புரட்டி யடித்துக் கொண்டுவருங் காவேரி தான் கொணர்ந்து வரும் சந்தனம் முதலியவைகள் கழனிகளில் நீர்மடை வழியாகப் பாய்தலினால் மிக்க வளத்தை யுண்டாக்கிப் பெருஞ்சிறப்பை இத் திருவழுந்தூர்க்கு விளைக்குமென்க. "மலைத்தலைய கடற்காவிரி, புனல் பரந்து பொன் கொழிக்கும்" என்கிறபடியே தான் பெருகும் பொழுது பொன்னைக் கொழித்துக் கொண்டு வருதலால் காவேரிக்குப் பொன்னியென்று பெயர். இ—உடைமைப் பொருள் காட்டும் பெண்பால் விகுதி. எம்பெருமான் தான் பெருந்துயரத்தினால் வருந்துகின்ற அன்பருள்ள விடங்களிற் சென்று பாதுகாப்பது போலவே இக்காவேரியின் வெள்ளமும் வேண்டுமிடங்களிலெல்லாம் வந்து பாயுமென நயந்தோன்றுமாறு இங்கு அருளிச் செய்யப்பட்டுள்ளமை ஊய்த்துணரத் தக்கது. .... (ரு)

சிலம்புமுதல் கலனணிந்தோர் செங்கண்குன்றம்
திகழ்ந்ததெனத் திருவுருவம் பன்றியாகி *
இலங்குபுவி மடந்தைதனை யிடந்துபுல்கி
எயிற்றிடை வைத்தருளியவெம் மீசன் காண்மின் *
புலம்புசிறை வண்டொலிப்பப் பூகம்தொக்க
பொழில்கள்தோறும் குயில்கூவ மயில்களால *
அலம்புதிரை புனல்புடைசூழ்ந்தழகார்செல்வத்து
அணியழுந்தூர்நின் றுகந்த வமரர்கோவே. (௬)

பூகம் தொக்க — பாக்குமரங்கள் நிறைந்துள்ள
பொழில்கள் தோறும் — சோலைகளிலெங்கும்
சிறை புலம்பு வண்டு ஒலிப்ப — சிறகுகளையுடையனவாய் ரீங்காரஞ்செய்யுந்தன்மை யனவான வண்டுகள் ஒலிக்கவும்

குயில் கூவ	குயில்கள் கூவவும்
மயில்கள் ஆல	மயில்கள் கூத்தாடவும்
அலம்பு திரை புனல் புடை சூழ்ந்து	அலைகின்ற அலைகளையுடைய காவிரியின் நீரானது பக்கங்களிலே சுற்றிப்பாய்தலினால்
அழகு ஆர்	அழகு மிக்கிருக்கின்ற
செல்வத்து	சிறப்பையுடைய
அணி அழுந்தூர் நின்று உகந்த அமரர் கோ—; (யாவனெனில் ;)	
செம் கண் ஓர் குன்றம்	சிவந்த கண்களையுடையதொரு மலை
சிலம்பு முதல் கலன் அணிந்து	தண்டை முதலிய ஆபரணங்களைப் பூண்டு
திகழ்ந்தது என	விளங்குவதுபோல
திரு உருவம் பன்றி ஆகி	மஹாவராஹரூபியாய்,
இலங்கு புவி மடந்தை தனை	விளங்குகின்ற பூமிப்பிராட்டியை
இடந்து	(அண்டபித்தியினின்றுங் கோட்டாற்) குத்தியெடுத்து
புல்கி	அணைந்து
எயிற்றிடை	(தனது) கோரதந்தத்தினிடத்தில்
வைத்து அருளிய	வைத்தருளினவனை
எம் ஈசன்	எமது தலைவனுமவன்.

* * *—இப்பாட்டில் "நிலத்திகழும் மலர்ச்சுடரேய் சோதீ!" என்று பெருமிடறு செய்து கூப்பிட வந்து உபகரித்தவனென்றீர்; ஸம்ஸார ப்ரளயங் கொண்டிருக்கிற எங்களுக்கு அங்ஙன் கூப்பிடக் கூடுமோ? என்னும் சங்கையிலே, 'பிரளயத்திலகப்பட்டுக் கூப்பிடவறியாத பூமியை யெடுத்தாற்போலே நம்மையும் எடுக்கவல்லவன் இவர்' என்று வராஹ வ்ருத்தாந்தத்தை அருளிச்செய்கிறார் இப்பாசுரத்தில்.

"சிலம்பு முதற்கலனணிந்தோர் செங்கட் குறதம்" என்றது மஹா வராஹத்துக்கு அபூதோபமை [இல்பொருளுவமை]யாம். "செங்கற்குன்றம்" என்றபாடமே வ்யாக்யானத்திற்கு இணங்கியது. சிவந்த ரத்னங்களையுடைய மேருமலையென்று பொருள். கலன்—கலம் என்பதன் ஈற்றுப்போலி.

பின்னடிகள் இத்தலத்தின் நிலவள நீர்வளங்களைக் காட்டும். ஆலுதல்—ஆரவாரித்தலுமாம். .... (௪)

சினமேவு மடலரியி னுருவமாகித்
திறல்மேவு மிரணியன தாகங்கீண்டு *
மனமேவு வஞ்சனையால் வந்தபேய்ச்சி
மாளவுயிர்வெளவியவெம்மாயோன் காண்மின் *
இனமேவு வரிவளைக் கையேந்துங்கோவை
யேய்வாய மரகதம்போல் கிளியினின்சொல் *
அனமேவு நடைமடவார் பயிலும்செல்வத்து
அணியழுந்தூர்நின்றுகந்த வமரர்கோவே. (௫)

இனம் மேவு வரி வளை கை ஏந்தும்	கூட்டமாக அணியப்பெற்ற கோடுகளையுடைய வளையல்களை யணிந்த (தமது) கைகளிலே ஏந்தப் பெற்றதும்
கோவை வாய்	கொவ்வைக்கனியை யொத்த வாயையுடையதும்
மரகதம் போல்	மரகதரத்னம் போலப் பச்சை நிறமுடையதுமான
கிளியின்	கிளியைப்போன்ற
இன் சொல்	மதுரமான சொற்களையும்
அன்னம் மேவும் நடை	அன்னப்பேடை போன்ற நடையழகையுமுடைய
மடவார்	இளமகளிர்
பயிலும்	மிகுதியாகப் பொருந்தப் பெற்ற
செல்வத்து	சிறப்பையுடைய

அணி அழுந்தூர் நின்று உகந்த அமரர் கோ—;

(யாவனெனில்;)

சினம் மேவும் அடல் அரியின் உருவம் ஆகி	மிக்க சீற்றங்கொண்டுள்ள வலிய நரசிங்க மூர்த்தியாய்
திறல் மேவும் இரணியனது ஆகம் கீண்டு	மிக்க பராக்ரமமமைந்த ஹிரண்யாஸுரனது மார்பைப் பிளந்து
மனம் மேவு வஞ்சனையால் வந்த	மனத்திற்கொண்டுள்ள வஞ்சகக்குணத்தோடு (தன்னைக்கொல்ல) வந்த
பேய்ச்சி	பூதனையென்னும் பேய்மகள்
மாள	இறக்கும்படி
உயிர் வௌவிய	(அவளது) உயிரைக் கவர்ந்த

எம் மாயோன் காண்மின்—.

* * *—கஜேந்திராழ்வானைப் போல அநுகூலராகாமலும் ஸ்ரீ பூமிப்பிராட்டியைப்போல ஒருவகையான நெருங்கிய உறவுமுறையில்லாமலு மிருத்தலோடு அவனை அணுகுதற்குக் கூடாதபடி விரோதியான தீவினையு மிருக்கின்ற எங்களை அவ் வெம்பெருமான் எவ்வாறு பாதுகாப்பன்? என்று ஒரு ஆசங்கை தோன்ற, ஹிரண்யாஸுரனது வரலாற்றைக் கூறும் முகத்தால் இந்தப் பாசுரத்தில் விரோதி நிரஸநசீலன் அவ் வெம்பெருமான் என்று எடுத்துக்காட்டுகின்றாரென்க.

ஸர்வரக்ஷகனும் பரமதயாளுவுமான எம்பெருமான் தனது அடியவனான ப்ரஹ்லாதன் பக்கலிலே இரணியன் செய்த கொடுமைகளைக் கண்டு பொறுக்க மாட்டாமல் பெருஞ்சீற்றத்தையும் அதற்கு ஏற்றவாறு பெருவலிமையையுங் கொண்டு நரசிங்கமாகத் திருவவதரித்தனனென்பார் "சினமேவு மடலரியி னுருவமாகி" என்றும், அந்த நரசிங்கத்தின் வெருவத்தக்க வுருவத்தைக் கண்டும் பிற்காலியாத மிடுக்கை யுடையவன் இரணியனென்பார் "திறல் மேவு மிரணியன்" என்று மருளிச் செய்தார். அரி—ஹரி என்ற வடசொற் சிதைவு. (யானை முதலிய பெரிய பிராணிகளையும்) அழிக்கவல்லதென்று சிங்கத்திற்கு காரணப்பெயர். "ஸர்வஸ்ய காத்ரஸ்ய சிர: ப்ரதாநம்" என்றபடி உறுப்புக்களெல்லாவற்றினுஞ் சிறந்ததான தலை சிங்கத்தின் தலையாக அமைந்திருத்தல் பற்றி நரசிங்கத்தை 'அரி' என்றே கூறினார்.

பூதனை, தன் கொடுமையை வெளிக்காட்டாது மனத்திலே கொண்டு அன்பு மிக்க தாய் வடிவத்தோடு வந்தவளாதலால் "மனமேவு வஞ்சனையால் வந்த பேய்ச்சி" என்றார்.

கிளியைப்போன்ற இன் சொல்லையும் அன்னப்பேடை போன்ற மென்னடையையுமுடைய மடவார் நிறைந்துள்ளது திருவழுந்தூரென்பது பின்னடிகளிற் கூறியது. கிளியின் சிவந்த வாய்க்குக் கொவ்வைப்பழமும், மேனியின் பசு நிறத்துக்கு மரகத ரத்னமும் உவமையாம். அனம்—அன்னம் என்பதன் தொகுத்தல். மடவார்—மடப்பத்தை யுடையவர்; மடப்பமாவது—அறிந்தும் அறியாதது போலிருத்தல். .... (ரு)

வானவர்தம் துயர்தீர வந்துதோன்றி
    மாணுருவாய் மூவடி மாவலியைவேண்டி*
தானமர வேழுலகு மளந்தவென்றித்
    தனிமுதல் சக்கரப்படையென் தலைவன்காண்மின்*
தேனமரும் பொழில்தழுவு மெழில்கொள்வீதிச்
    செழுமாட மாளிகைகள் கூடந்தோறும்*
ஆனதொல்சீர் மறையாளர் பயிலுஞ்செல்வத்து
    அணியழுந்தூர் நின்றுகந்த வமரர்கோவே. (சு)

தேன் அமரும் — தேன் எப்போதும் பொருந்தியுள்ள
பொழில் தழுவும் — சோலைகளாற்சூழப்பட்ட
எழில் கொள் — அழகைக்கொண்ட
வீதி — தெருக்களிலேயுள்ள
செழு மாடம் மாளிகைகள் — செழித்த உபரிகை வீடுகளிலும் சிறந்த வீடுகளிலும்
கூடம் தோறும் — மற்றுமுள்ள இடங்களிலும்
ஆன தொல் சீர் மறையாளர் பயிலும் — கல்வி யொழுக்கங்களாற் சிறப்புப் பொருந்திப் பழமையான கீர்த்தியை யுடைய வேதம்வல்ல அந்தணர்கள் நெருங்கி வசிக்கப்பெற்ற
செல்வத்து — சிறப்பையுடைய
அணி அழுந்தூர் நின்று உகந்தஅமரர் கோ—; (யாவனென்னில் ;)
வானவர் தம் — தேவர்களுடைய

துயர் தீர — வருத்தம் நீங்கும்படி
வந்து தோன்றி — (வாமனனாய்) வந்து அவதரித்து
மாண் உரு ஆய் — பிரமசாரியாய்
மா வலியை மூ அடி வேண்டி — மஹாபலியினிடத்தில் மூன்றடி நிலத்தை வேண்டிப்பெற்று (அவனாற் கொடுக்கப்பட்டவுடனே)
தான் — தானே
அமர — (தனது காலடியின் கீழ்) அடங்கும்படி
ஏழ் உலகும் அளந்த — கீழேழ் மேலேழ் என்னும் எல்லா வுலகங்களையும் அளந்து தனதாக்கிக்கொண்ட
வென்றி தனி முதல் சக்கரம் படை — வெற்றியையுடையதும் ஒப்பற்றதும் (ஆயுதங்களிற்) பிரதானமுமான சக்கராயுதத்தைக் கையிலேந்திய
எம் தலைவன் — எமது ஸ்வாமியாவன்.

* * *—கீழ்ப்பாட்டினால் எம்பெருமான் விரோதி நிரஸந சீலனென்று ஏற்படினும், அந்த எம்பெருமானைத் தவிர வேறு விஷயங்களிற் பற்றுக் கொண்டுள்ள எங்களை அவன் பாதுகாத்தருள்வனோ? என்று ஒரு ஆசங்கை தோன்ற,

ப்ரயோஜநாந்தரபரரான தேவர்களின் காரியத்தைத் தலைக்கட்டுகைக்காகத் தன்னை இரப்பாள [யாசக]னுக்கிய சிறந்த சிலகுணமுடையவனுகையால் அவன் ப்ரயோஜநாந்தரபரரான உங்களையும் பாதுகாப்பனென்று தெரிவித்தற்காக வாமநாவதாரவ்ருத்தாந்தத்தைக் கூறுகின்றுர் இப்பாட்டில்.

வானவர்க்கு நேர்ந்த துயராவது—மூவுலகங்களையும் மஹாபலி சக்ரவர்த்தி கையிற் பறி கொடுத்து அரசிழந்தமையாலானது. மாணுரு—'மாணியுரு' என்பதன் விகாரம். அன்றியே, மாணுரு—மாட்சிமை தங்கிய உரு என்றுமாம்; இவ்வுருவத்துக்கு மாட்சிமையாவது—"ஆலமர்வித்தினருங் குறளானுன்" என்கிறபடியே மூவுலகத்தையும் ஈரடியிலே அடக்கவல்ல பேருருவத்தைத் தன்னுள் அடக்கிக் கொண்டிருந்தல்; தானறிந்த ஸம்பந்தமே ஹேதுவாக எல்லா வுயிர்களின் முடியிலும் அவைகளறியாதே கிடக்கையிலும் தானுக அடிவைத்து அவற்றை ஆட்கொண்டருளும் உதாரகுணமுமாம்.

'மூவடி' என்பதற்கு மூவடி நிலம் என்று பொருள்கொட்ட வேண்டுதலால் நீட்டலளவையாகு பெயர். தானளந்த என்றதில்—அவாப்த ஸமஸ்தகாமனுன தான் தனக்கென்று ஒன்றும் வேண்டாதிருக்கையிலும் துரபிமானிகளாய் ப்ரயோஜநாந்தரபரர்களான தேவர்களின் துயரத்தைக் கண்டு பொறுக்கமாட்டாமையாலே தானே நேரிற் சென்று இரந்து அளந்த எம்பெருமானது கருணைத்திறமும் பரத்வமும் ஸௌலப்யமும் விளங்கும்.

மண்டபம் முதலிய எல்லா விடங்களிலும் வேதமோதிய அந்தணர் நிறைந்து பழகுஞ் சிறப்பு வாய்ந்தது திருவழுந்தூரென்பன பின்னடிகள். (௬)

பந்தணைந்த மெல்விரலாள் சீதைக்காகிப்
பகலவன்மீ தியங்காத விலங்கைவேந்தன் *
அந்தமில்திண் கரஞ்சிரங்கள் புரண்டுவீழ
அடுகணையா லெய்துகந்த வம்மான்காண்மின் *
செந்தமிழும் வடகலையும் திகழ்ந்தநாவர்
திசைமுகனை யனையவர்கள் * செம்மைமிக்க
அந்தணர்த மாகுதியின் புகையார்செல்வத்
தணியழுந்தூர் நின்றுகந்த வமரர்கோவே. (எ)

செம் தமிழும்	செவ்விய தமிழ்ப் பாஷையும்
வட கலையும்	ஸம்ஸ்க்ருத பாஷையும்
திகழ்ந்த	விளங்குகின்ற
நாவர்	நாக்கையுடையவர்களும்
திசைமுகனை அனையவர்கள்	(தனித்தனி) பிரமனை யொத்தவர்களுமான
செம்மைமிக்க அந்தணர் தம்	நற்குணங்கள் நிறைந்த ப்ராஹ்மணர்களது
ஆகுதியின் புகை ஆர்	ஹோமஞ் செய்வதனுல் தோன்றுகின்ற புகை நிரம்பப்பெற்றனை
செல்வத்து	சிறப்பையுடைய
அணி அழுந்தூர் நின்று உகந்த அமரர் கோ—; (யாவனென்னில்;)	
பந்து அணைந்த மெல் விரலாள் சீதைக்கு ஆகி	பந்து பொருந்திய மெல்லிய கைவிரல்களையுடைய சீதையின் நிமித்தம்,

மீது பகலவன் இயங்காத இலங்கை வேந்தன்	(தனக்கு நேராக) மேலிடத்திலே (அச்சத்தினால்) ஸூர்யனும் ஸஞ்சரிக்கமாட்டாத இலங்கைக்கு அரசனான இராவணனது	புரண்டு வீழ	(அறுபட்டுக்) கீழ் விழுந்து புரளும்படி
		அடு கணையால்	கொல்லுந்தன்மையுள்ள அம்பினால்
		எய்து	பிரயோகித்து
அந்தம் இல் திண் கரம் சிரங்கள்	அழிவில்லாத வலிய தோள்களும் தலைகளும்	உகந்த	மகிழ்ந்த
		அம்மான்	தலைவனானவன்.

* * *—எம்பெருமான் ப்ரயோஜநாந்தரபரர்களிடத்து அன்புகொண்டு தன்னை யாசகனாக்கியும் அவர்கள் தொழிலைச்செய்து முடிக்கைக்கு ஹேது எதென்ன, பிராட்டியினிடத்தில் மிக்க அன்புகொண்டிருத்தல் போலவே சேதநரெல்லாரிடத்திலும் மிக்க அன்புகொண்டிருப்பதே ஹேது என்று தெரிவித்தற்காக, அப்பிரான் பிராட்டியைச் சிறையினின்று மீட்பதன் நிமித்தம் ராவணஸம்ஹாரஞ் செய்தவரலாற்றைக் கூறுகின்றார் இப்பாசுரத்தில்.

சீதை—'ஸீதா' என்ற வடசொல்லின் விகாரம்; அச்சொல்லுக்கு—கலப்பையுழுபடைச்சால் என்று முதலிற் பொருள். ஜநகமஹாராஜன் யாகஞ் செய்தற்குச் சாலையமைத்தற்பொருட்டு நிலத்தையுழுதபொழுது அப்படைச்சாலினின்று தோன்றியவளாதலால் பிராட்டிக்குச் சீதையென்று பேராயிற்று; இடவாகு பெயராகிய காரணக்குறி. இத்திருநாமம்—இவள் மற்றையோர் போல ஒரு தாயின்வயிற்றினின்று பிறந்தவளல்லளெனப் பிராட்டியினது அயோநிஜத்வமாகிய திருவவதாரச்சிறப்புத் தோன்றநின்றது. சீதைக்காகி என்றது—சீதையைச்சிறையினின்று மீட்பதற்காக என்றபடி.

இராவணனிடத்து அச்சத்தால் மற்றையிடங்களிற்போலச் சூரியன் தனது வெப்பத்தோடு செல்லுதற்கு அஞ்சி ஒடுங்கிச் செல்வனென்னுங்கருத்தால் "பகலவன் மீதியங்காத விலங்கை" எனப்பட்டது: "இருசுடர் மீதினிலியங்கா மும்மதிளிலங்கை" என்பர் திருவெழுகூற்றிருக்கையிலும். இராமபிரானது திருவவதாரத்திற்கு முந்தித் தம்மை யெதிர்த்தொழிப்பவரில்லாமையால் இராவணனது கரங்கள், 'அந்தமில்திண்கரம்' என்றும், பிரமாஸ்த்ரத்தினாலன்றி மற்றைப்படி இராமபிரானே அறுக்குந்தனையும் மீண்டும் மீண்டும் முளைத்தனவாதலால் அவனது சிரங்கள் 'அந்தமில் திண்சிரங்கள்' என்றும் கூறப்பட்டன. புரண்டு வீழ—வீழ்ந்து புரள; விகுதி பிரித்துக்கூட்டல். எய்து உகந்த—பாகவதவிரோதி ஒழிந்ததனாலும், தண்டகாரணியம் புகுகையில் தன்னிடத்து முறையிட்ட முனிவர்க்குத் தான்வாக்களித்திருந்தபடி விரோதிநிரஸநஞ்செய்து அவர்கட்குக் குடியிருப்பைச்செய்து கொடுத்ததனாலும் இராமபிரான் திருவுள்ள முவந்தனனென்க.

'செந்தமிழும் வடகலையுந் திகழ்ந்த நாவர்' என்றதனால் அத்திருப்பதியிலுள்ள அந்தணர்கள் திராவிடவேதம் ஸம்ஸ்க்ருத வேதம் என்னும் இரண்டு வேதங்களிலும் வல்லவராவரென்பது தோன்றும். தமிழுக்குச் செம்மை—செவிக்கினிய

செஞ்சொல்லாயிருத்தலோடு அர்த்தத்தை நேராகக் காட்டவல்லதாயிருத்தல். ஆதிகாலத்தில் ஸம்ஸ்க்ருதம் வடதிசையில் இமயமலைப்ப்ராந்தத்தில் கங்காதீரத்தில் காசி முதலிய இடங்களில் விசேஷமாய் வழங்கி வந்ததனால் வடமொழியென்றும் வடகலையென்றும் வழங்கப்படுமென்ப.

ஆஹுதி—வடசொல்; அக்நியில் மந்த்ரபூர்வமாக ஹோமஞ்செய்யப்படும் நெய் முதலிய ஹவிஸ்ஸுக்கள். .... (எ)

கும்பமிகு மதவேழம் குலையக் கோம்பு
பறித்து மழவிடையடர்த்துக் குரவை கோத்து *
வம்பவிழும் மலர்க்குழலா ளாய்ச்சி வைத்த
தயிர்வெண்ணெ யுண்டுகந்த மாயோன் காண்மின் *
செம்பவள மரதகம் நன்முத்தம் காட்டத்
திகழ்பூகம் கதலிபல வளமிக்கெங்கும் *
அம்பொன்மதிள் பொழில் புடைசூழ்ந் தழகார் செல்வத்
தணியழுந்தூர் நின்றுகந்த வமரர் கோவே. (அ)

செம் பவளம் மரதகம் நல் முத்தம் காட்ட திகழ் பூகம் — செந்நிறமான பவழத்தையும் (பசுநிறமான) மரகத ரத்னத்தையும் (வெண்ணிறமான) முத்தையும் தம்மிடத்தில் தோற்றும்படி விளங்குகின்ற பாக்குமரங்களும்
பல கதலி — பல வாழைமரங்களும்
வளம் மிக்கு — செழிப்புமிகுந்து,
எங்கும் — எல்லாப்பக்கங்களிலும்
அம் பொன் மதிள் பொழில் புடை சூழ்ந்து — அழகிய பொன்மயமான மதிள்களாலும் சோலைகளாலும் சுற்றிலும் சூழப்பெற்று
அழகு ஆர் — அதனால் அழகுநிறைந்த
செல்வத்து — சிறப்பையுடைய
அணி அழுந்தூர் நின்று உகந்த அமரர் கோ—; (யாவனெனில் ;)
கும்பம் மிகு — மஸ்தகம் பருத்திருக்கப் பெற்றதாய்
மதம் — மதத்தையுடைத்தான
வேழம் — (குவலயாபீடமென்னும்) யானை
குலைய — அழியும்படி
கொம்பு பறித்து — (அதன்) தந்தங்களைப் பறித்தும்
மழ விடை அடர்த்து — இளமையான ஏழு எருதுகளை வலியடக்கியும்
குரவை கோத்து — (ஆய்ச்சியரோடு) குரவைக் கூத்தாடியும்
வம்பு அவிழும் — நறுமணம் வீசுகின்ற
மலர் — மலர்களைச் சூடியுள்ள
குழலாள் — கூந்தலையுடையவளாகிய
ஆய்ச்சி — யசோதையென்னும் இடைச்சி
வைத்த — (உறிகளில் சேமித்து) வைத்திருந்த
தயிர் — தயிரையும்
வெண்ணெய் — வெண்ணெயையும்
உண்டு — புஜித்தும்
உகந்த — மனமகிழ்ந்திருந்த
மாயோன் — விசித்ரசக்தியையுடையவன்.

* * *—எம்பெருமான் பிராட்டியிடத்திற்போலவே எல்லாரிடத்திலும் அன்பு கொள்கைக்குத்தான் யாது காரணம்? என்று ஒரு சங்கை தோன்ற, ஆச்ரிதருடைய ஸம்பந்தமுள்ள பொருளையொழியப் பொழுது போக்கமாட்டாத

அவனுடைய தன்மையே அவ்வாறு அன்பு செலுத்தக்காரணமென்று தெரிவிக்க, அப்பிரான் யசோதை வைத்திருந்த தயிர் வெண்ணெய்களைக் களவுகண்டு தனது ஜீவனத்தைக்கொண்ட சரிதங்கூறுகின்றார் இப்பாசுரத்தில்.

கும்பம்—வடசொல்; யானையின் தலைமீதுள்ள குடம்போன்ற உருப்பு. குரவையாவது—கைகோத்தாடுங்கூத்து. "குரவைக்கூத்தே கைகோத்தாடல்" என்பது திவாகரம். இதற்கு வடமொழியில் ராஸக்ரீடை என்று வ்யவஹாரம். ஒவ்வொரு ஆய்ச்சியின் பக்கத்தில் ஒவ்வொருகண்ணனாக உருவெடுத்து நின்று ஆடுதல் என்பர். "[illegible]" என்றது காண்க. பல நாட்டியப்பெண்கள் வட்டமாய் நின்று சித்திரமான தாளலயங்களுடன் மெதுவாகவும் உந்நதமாகவும் கூத்தாடுதல் குரவைக்கூத்தின் இலக்கணமென்பர் தமிழர். "குரவையென்பது—காமமும் வென்றியும் பொருளாகக் குரவைச்செய்யுள் பாட்டாக எழுவரேனும் எண்மரேனும் ஒன்பதின்மரேனும் கைபிணைந்து ஆடுவது; 'குரவையென்பது கூறுங் காலைச், செய்தோர் செய்தகாமமும் விறலும், எய்தக்கூறு மியல்பிற்றென்ப' எனவும், 'குரவையென்பதெழுவர் மங்கையர், செந்நிலை மண்டலக் கடகக்கை கோத்து, அந்நிலை கொட்ப நின்றாடலாகும்' எனவுஞ் சொன்னாராதலின்" என்பது சிலப்பதிகாரத்து அடியார்க்கு நல்லாருரை.

[சேம்பவள மித்யாதி.] பாக்குமரங்களில் முதிர்ந்தபழங்கள்-பவழத்தையும், பசுங்காய்கள்—மரகதரத்னத்தையும், விரிந்தபாளைகள் வெண்முத்துக்களையும் நினைப்பூட்டுமென்க. .... (அ)

ஊடேறு கஞ்சனொடு மல்லும் வில்லும்
ஒண்கரியு முருள்சகடு முடையச் செற்ற *
நீடேறு பெருவலித்தோ ளுடைய வென்றி
நிலவுபுகழ் நேமியங்கை நெடியோன் காண்மின் *
சேடேறு பொழில்தழுவு மெழில்கொள் வீதித்
திருவிழவில் மணியணிந்த திண்ணைதோறும் *
ஆடேறு மலர்க்குழலார் பயிலுஞ் செல்வத்
தணியழுந்தூர் நின்றுகந்த வமரர் கோவே. (கூ)

சேடு ஏறு	இளமைமிக்குத் தோன்றுகின்ற	ஆடு ஏறு	கூத்தாடுந்தொழிலில் வல்லவர்களான
பொழில்	சோலைகளால்	மலர் குழலார்	மலர்களையணிந்த கூந்தலையுடையமகளிர்
தழுவும்	அணையப்பெற்ற	பயிலும்	நெருங்கியிருக்கப்பெற்ற
எழில் கொள் வீதி	அழகிய தெருக்களிலே நடக்கின்ற	செல்வத்து	சிறப்பையுடைய
திரு விழவில்	திருவிழாக்களிலே	அணி அழுந்தூர் நின்று உகந்த அமரர் கோ—;	
மணி அணிந்த திண்ணை தோறும்	ரத்னங்கள் பதிக்கப்பெற்ற திண்ணைகளிலெல்லாம்	(யாவனெனில்;)	

ஆடு ஏறு கஞ்சனொடு	(மஞ்சத்தின்) மத்தியில் ஏறியுள்ள கம்ஸனும்
மல்லும்	மல்லர்களும்
வில்லும்	(தநுர்யாகத்தில் வைக்கப்பட்டிருந்த) வில்லும்
ஒண் கரியும்	அழகிய (குவலயாபீடமென்னும்) யானையும்
உருள் சகடும்	உருண்டு செல்லுந் தன்மையதான சகடமும்
உடைய	அழிந்தொழியும்படி
செற்ற	அழித்திட்ட
நீடு ஏறு பெரு வலி தோள் உடைய	நீண்டு உயர்ந்துள்ள மிக்க வலிமைகொண்ட தோள்களை யுடையவனும்
வென்றி நிலவு புகழ் நேமி அம் கை	வெற்றியினால் விளங்குகின்ற புகழையும் சக்கரமேந்திய அழகிய கைகளையுமுடையனுமான
நெடியோன்	பரமபுருஷனவன்.

* * *—ஆச்ரிதருடைய விரோதிகளைப் போக்குந்தன்மையைப் பல படியாகக்கூறிய ஆழ்வார் திருவாழியைப்போலவே உங்களையும் ஒருபோதுங் கைவிடாதே கொள்வனெம்பெருமானென்று இப்பாசுரத்தாற் கூறுகின்றார்.

கண்ணபிரான், கம்ஸனையும் அவனேவலவப்பட்ட மல்லர்களையும் அவனுடைய வில்லையும் அவனது ப்ரேரணையினால் வந்த அஸுரர்களினால் ஆவேசிக்கப்பட்ட குவலயாபீட யானையையும் சகடத்தையும் தொலைத்தொழித்தமை ப்ரஸித்தம்.

செற்ற=செறு--பகுதி. நெடியோன்=த்ரிவிக்ரமாவதாரஞ் செய்தவனென்றும் விச்வரூபங்கொள்ளுமியல்புடையவனென்றும், திருக்கல்யாண குணங்களால் யாவரினும் பெரியோனென்றும், அடியார் பக்கல் ஆதரம் மிக்கவனென்றும் பொருள் கொள்ளலாம்.

சேடு—அழகு, இளமை, பெருமை. திருவிழாக்காலங்களில் வீதியில் நடக்கும் அத்திருவிழாவைக் காணும்பொருட்டு வீதியின் இருபுறங்களிலுமுள்ள மாளிகைகளின் திண்ணைகளில் ஆடலில்வல்ல மடவார் ஏறியிருக்கப்பெற்ற திருவழுந்தூரென்பன பின்னடிகள். "ஆடு ஏறும் மலர்க்குழலார்"—'நறுமணம் மிக்க மலர்களைச்சூடிய கூந்தலையுடைய மடவார்' என்று வியாக்கியானத்தி லுரைக்கப்பட்டுள்ளது. .... (௯)

பன்றியாய் மீனாகி யரியாய்ப்பாரைப்
படைத்துக்காத் துண்டுமிழ்ந்த பரமன்றன்னை *
அன்றமரர்க் கதிபதியு மயனுஞ்சேயு
மடிபணிய வணியழுந்தூர்நின்ற கோவை *
கன்றிநெடு வேல்வலவ னாலிநாடன்
கலிகன்றி யொலிசெய்த வின்பப்பாடல் *
ஒன்றினொடு நான்குமோரைந்தும் வல்லார்
ஒலிகடல்சூ ழுலகாளு மும்பர்தாமே. (௰)

அன்று	முன்பொருகாலத்தில்
பன்றி ஆய்	வாராஹாவதாரமாகியும்
மீன் ஆகி	மத்ஸ்யாவதாரமாகியும்
அரி ஆய்	நாஸிம்ஹாவதாரமாகியும்
பாரை	நிலவுலகத்தை
படைத்து	ஸ்ருஷ்டித்தும்
காத்து	ரக்ஷித்தும்
உண்டு	ப்ரளயகாலத்தில் உட்கொண்டும்
உமிழ்ந்த	(அந்தப்பிரளயம் நீங்கினவாறே வெளிநாடுகாண) உமிழ்ந்துமருளிய
பரமன் தன்னை	பரம்பொருளானவனும்
அமரர்க்கு அதிபதியும்	தேவர்கட்குத் தலைவனான இந்திரனென்ன
அயனும்	பிரமதேவனென்ன
சேயும்	அவனது மகனான சிவபிரானென்ன ஆகிய இவர்கள்
அடி பணிய	தனது திருவடிகளை வணங்கும்படி

அணி அழுந்தூர் நின்ற	திருவழுந்தூரில் நின்றதிருக்கோலமாக எழுந்தருளியிருக்கிற
கோவை	தேவாதிதேவனுமான எம்பெருமானைப்பற்றி
கன்றி நெடு வேல் வலவன்	சினங்கொண்டு நீண்டுள்ள வேற்படையில்வல்லவரும்
ஆலி நாடன்	திருவாலிநாட்டுக்குத் தலைவரும்
கலிகன்றி	கலிகன்றியென்னுந் திருநாமமுடையவருமான திருமங்கையாழ்வார்
ஒலி செய்த	இன்னோசையுடையனவாம்படி பாடியருளிய
இன்பம் பாடல்	மதுரமான பாடல்களான
ஒன்றினொடு நான்கும் ஓர் ஐந்தும்	இப் பத்துப் பாசுரங்களையும்
வல்லார்	ஓதியுணர்ந்தவர்கள்
ஒலிகடல் சூழ்	ஒலிக்கின்ற கடலாற் சூழப்பட்ட
உலகு	இவ்வுலகங்களை
ஆளும்	ஆளவல்ல
உம்பர் தாம்	தேவர்களாவர்.

* * *—திருமங்கையாழ்வார் திருவழுந்தூர் ஆமருவியப்பனைப்பாடிய இப் பதிகத்தின் பாசுரங்களை ஓதியுணர்ந்தவர் அவ்வெம்பெருமானருளால் எல்லாவுலகங்கட்கும் தலைவராவரென்று பயன் கூறினாராயிற்று. எம்பெருமானருளால் மயர்வற மதிநலமருளப்பெற்ற இவ்வாழ்வார் இத்திருமொழிக்குப்பலனாக நச்வரமான உலகாளுஞ் செல்வத்தைக்கூறியது என்னையோ? எனின்; பகவத் கைங்கர்யத்துக்கு எல்லை நிலமான பாகவத கைங்கர்யத்தை நன்றாகச்செய்வதற்கு உறுப்பாயிருக்கையாலே கூறினரென்க.

திருமால் நான்முகக்கடவுளாகி நின்று ஜங்கமஸ்தாவரங்களான உயிர்களையெல்லாம் படைத்துத் தானான தன்மையில் காப்பனென்பதும், யாவும் அழியும் பிரளயகாலத்தில் ஸ்ரீம்ஹாவிஷ்ணு அண்டங்களையெல்லாம் தனது திருவயிற்றில் வைத்து அப்பிரளயம் நீங்கி ஸ்ருஷ்டிகாலம் வந்தவாறே வெளிநாடுகாண உமிழ்வனென்பதும் நூற்கொள்கை.

செம்மைநிறமுடைமைபற்றி முருகக்கடவுளுக்குப் பெயரான சேய் என்ற சொல் இலக்கணையால் இங்கே பலபராக்ரம ஸௌந்தர்யங்களையுடைய மகனென்ற பொருளில் வந்தது.

அவதாரங்கட்கு மூலமான பாற்கடலிற் பள்ளிகொள்ளும் வ்யூஹமூர்த்தியை ஒரு பாசுரத்திலும், அங்கு நின்று விலங்காகித் திருவவதரித்தமையை உ. ச. நி. ௧௦. ஆம் பாசுரங்களாகிய நான்கு பாடல்களிலும், கஜேந்திர ரக்ஷணத்தின் பொருட்டாகவும் வாமந ராமக்ருஷ்ண ரூபமாகவும் வந்து அவதரித்தமையை மற்றை ஐந்து பாடல்களிலுமாக இவ்வாறு தாம் பாடி அநுபவித்தமை தோற்ற 'ஒன்றினோடு நான்கும் ஓரைந்தும்' என்று பிரித்தருளிச் செய்தாரென்னலாம்.(௧௦)

அடிவரவு:—செங்கமலம் முன் குலம் சிலம்பு சினம் வானவர் பந்து கும்பம் ஊடேறு பன்றி கள்ளம்.

எட்டாந்திருமொழி உரை முற்றிற்று.

ஜீயர் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஏழாம்பத்து—ஒன்பதாந்திருமொழி,

கள்ளம் மனம் விள்ளும் வகை.

[சிறுபுலியூர்ச் சலசயனத் திருப்பதிகம்.]

அவதாரிகை:—திருவழுந்தூரில் நின்றும் திருச்சிறுபுலியூர்த் திருப்பதியில் ஈடுபட்ட ஆழ்வார், பலரையும் நோக்கி 'நீங்கள் பாஹ்ய குத்ருஷ்டிகளின் திரளிற் புகாமே சிறுபுலியூர்ப் பெருமானடிகளை யடைந்து வாழ்ந்து போங்கள்' என்று உபதேசிப்பதும் அதனைத்தாம் அநுஷ்டித்துக் காட்டுவதுமாய்ச் செல்லுகிறார் இத்திருமொழியில்.

கள்ளம்மனம் விள்ளும்வகை கருதிக்கழல் தொழுவீர்! *
வெள்ளம்முது பரவைத்திரை விரிய * கரையெங்கும்
தெள்ளும்மணி திகழும் சிறுபுலியூர்ச் சலசயனத்
துள்ளும் * என துள்ளத்துளு முறைவாரையுள்ளீரே. (௧)

மனம்	மனத்தில் நின்றும்	தெள்ளும்	(அவ்வலைகளினால்) கொழிக்கப்பட்ட
கள்ளம்	க்ருத்ரிமச்செயல்	மணி	ரத்னங்கள்
விள்ளும் வகை கருதி	விட்டு நீங்கவேண்டும் வகையை விரும்பி	திகழும்	விளங்கப்பெற்ற
கழல் தொழுவீர்	(எம்பெருமானுடைய) திருவடிகளை ஆச்ரயிக்க வேண்டி யிருக்கிறவர்களே!,	சிறுபுலியூர்	சிறுபுலியூரில்
முது பரவை	பழையதான கடலினுடைய	சலசயனத்துள்ளும்	சலசயனமென்கிற ஸந்நிதியினுள்ளும்
திரை	அலைகளினாலுண்டான	எனது உள்ளத்துள்ளும்	என்னுடைய ஹ்ருதயத்தினுள்ளும்
வெள்ளம்	ப்ரவாஹமானது	உறைவாரை	நித்யவாஸம் பண்ணுகிற பெருமானை
கரை எங்கும் விரிய	கரைகளிலெல்லாம் பரவாநிற்க,	உள்ளீர்	சிந்தனைசெய்யுங்கள்.

* * *—முதல்தன்னிலே ஒருவர்க்கு அடிமைப் பட்டிருப்பதற்கே இசையாதவர்களை நோக்கி 'ஸ்வாதந்திரியம் கூடாது, சேஷத்வமே ஸ்வரூபம்' என்று உரைக்கவேணும்; இந்த உபதேசத்தினால் சேஷத்வத்துக்கு இசைந்தவர்கள் எம்பெருமானல்லாத பிறர்க்கு ஆத்மாவை சேஷப்படுத்தத் தொடங்கினால் அவர்களை நோக்கி 'அந்யசேஷத்வம் கூடாது, ஸ்ரீமந்நாராயணனுக்கு சேஷப்பட்டிருப்பதே ஸ்வரூபம்' என்று உரைக்கவேணும்; இதுவாயிற்று உபதேச முறைமை. இப் பாட்டில், கள்ளம்மனம் விள்ளும்வகை கருதிக்கழல் தொழுவீர்!' என்றது—ஸ்வ ஸ்வாதந்திரியத்திற்கு இசையாதே பாரதந்திரியத்திற்கு இசைந்திருப்பவர்களை நோக்கி 'அந்யசேஷத்வப் படுகுழியிற்புகாமே ஸ்ரீமந்நாராயண சேஷத்வத்திலே ஊன்றுங்கோள்' என்று உபதேசிக்கிறபடி. மனம் கள்ளம் விள்ளும்வகை கருதி—ஆத்மாவுக்கு ஸ்வரூபமான சேஷத்வத்தை இல்லை செய்வது பெரிய கள்ளத்தனமாகையாலே அந்தக் கள்ளத்தனத்தையொழிக்கக் கருதிப் பிறர்தாளிலே தலைசாய்க்க விரும்புவீராயின் சிறுபுலியூர்ச் சலசயனத்துறையும் பெருமானைப் பணிமின் என்கிறார். இங்ஙனன்றியே, ஸ்வாதந்திரியத்தையும் விட்டு அந்ய சேஷத்வத்தையும் விட்டு ஸ்ரீமந்நாராயண சேஷத்வமே ஸ்வரூபம் என்னுமளவிலே வந்து நின்றவர்களையே நோக்கி, அந்த ஸ்ரீமந்நாராயணனுடைய நிலைமைகளுக்குள்ளே சிறுபுலியூர்ச் சலசயனத்துறையும் நிலைமையைப் பற்றுங்கோள் என்று உபதேசிக்கிறாரென்றுங் கொள்ளலாம். இவ்விரண்டு யோஜனைகட்கும் இணங்க, கள்ளம், கழல் என்ற பதங்களுக்குப்பொருளில் வாசியுண்டு. முதல் யோஜனையில், கள்ளம்—தன்னைத் தனக்கே சேஷமென்று கொண்டிருக்கையாகிற கள்ளம். கழல்—யாரேனுமொருவருடைய பாதம். இனி இரண்டாவது யோஜனையில், கள்ளம்—எம்பெருமானுக்கே உரித்தான ஆத்மவஸ்துவைத் தேவதாந்தரங்கட்கு உரிமைப்படுத்துகையாகிற கள்ளம். கழல்—எம்பெருமானுடைய திருவடிகள்.

கடல்வெள்ளம் அலையெறிந்த நவரத்னங்களைக் கொண்டு கொழிக்கும் நீர்க்கரைகளையுடைய சிறுபுலியூரென்னுந் திருப்பதியில் சலசயனமென்னும் ஸந்நிதியிலும் அடியேனுடைய நெஞ்சகத்திலும் பொருந்திவாழ்கின்ற பெருமானைச் சிந்தனை செய்யுங்களென்றாராயிற்று.

எம்பெருமான் வ்யாக்ரபாதர் என்னும் மாமுனிக்கு ஸேவைஸாதித்த தலமாதல் பற்றி இவ்வூர் சிறுபுலியூ ரெனப்படுமென்ப. சலசயனம்=ஜலஶயந' மென்ற வடசொல் விகாரம். சலம்—மாயை; உறங்குவான்போல் யோகு செய்வதற்குக்கொண்ட சயனமாதலால் மாயப்படுக்கையென்கிறது. வ்யாக்ரபாத மஹர்ஷிக்குப் பாலசயனமாய் ஸேவை ஸாதித்தானென்க.

சிறுபுலியூரென்பது க்ஷேத்ரத்தின் திருநாமம். சலசயன மென்பது திருக்கோயிலின் திருநாமம். திருக்கடன் மல்லையில் தலசயனப்பெருமாள் கிடக்குமிடம் தலசயன மென்றதுபோல, இங்குச் சலசயனப்பெருமாள் கிடக்குமிடம் சலசயன மென்னப்படும்.

நம்மாழ்வார் "திருக்கடித்தானமும் என்னுடைச்சிந்தையும், ஒருக்கடுத்து உள்ளேயுறையும் பிரான் கண்டீர்" என்றருளிச் செய்ததுபோல இவரும் "சிறுபுலியூர்ச் சலசயனத்துள்ளும் எனதுள்ளத்துள்ளு முறைவாரை" என்றார்.

உள்ளீர்—ஏவற்பன்மை வினைமுற்று; உள்ளுதல்—த்யானம் பண்ணுதல்.

தெருவில்திரி சிறுநோன்பியர் செஞ்சோற்றொடு கஞ்சி
மருவி * பிரிந்தவர் வாய்மொழி மதியாது வந்தடைவீர்! *
திருவிற்பொலி மறையோர் சிறுபுலியூர்ச் சலசயனத்து *
உருவக்குற ளடிகளடி யுணர்மின் னுணர்வீரே. (௨)

உணர்வீர் — விவேகிகளே!,
தெருவில் திரி — (வேலையற்றுத்) தெருக்கள் தோறும் திரிகின்றவர்களாய்
சிறு நோன்பியர் — அற்பங்களான விரதங்களைக் கைக்கொண்டவர்களாய்
செஞ்சோற்றொடு கஞ்சி மருவி — செஞ்சோற்றையும் கஞ்சியையுமுண்ண விரும்பி
பிரிந்தவர் — வைதிககோஷ்டியிற் சேராதே தனிப்பட்டுப் பிரிந்தவர்களான ஜைநர் முதலானோருடைய
வாய் மொழி — வாய்ப்பேச்சுகளை
மதியாது — திரஸ்கரித்துவிட்டு
வந்து அடைவீர் — (எம்பெருமானளவிலே) வந்து சேருங்கள்;
திருவின் — செல்வத்தினால்
பொலி — விளங்குகின்ற
மறையோர் — வைதிகர்கள்வாழ்கிற
சிறுபுலியூர், சலசயனத்து—;
உருவம் — அழகிய
குறள் — வாமநாவதாரஞ்செய்தருளிய
அடிகள் — ஸ்வாமியினுடைய
அடி — திருவடிகளை
உணர்மின் — சிந்தியுங்கள்.

* * *—சமண மதத்தவர்களுடைய சொற்களை மதியாமல் (அவமதித்துவிட்டுச்) சிறுபுலியூர்ச் சலசயனப்பெருமானுடைய திருவடிகளைச் சிந்தை செய்மின் என்று விவேகிகளை நோக்கி உபதேசிக்கின்றார். சமணமதத்தில் ப்ரஸித்தமாக ஒரு விரதமுண்டு; அதாவது—பெருஞ்சோறுண்ணுதல். (இது வெஞ்சோறுண்ணுதல் எனவும் வேகு சோறுண்ணுதல் எனவும் வ்யவஹரிக்கப்படுமாம்.) தயிர்ச்சோறு, செஞ்சோறு, கஞ்சிச்சோறு, என்றிப்படி சில சோறுகளைத்தின்று கொண்டு தெருக்களில் திரிந்து கொண்டிருப்பர்களாம்; "தருக்கினால் சமண் செய்து சோறு தண் தயிரினால் திரளை, மிடற்றிடை நெருக்குவார்" என்று கீழ் இரண்டாம்பத்திலும் முதற்றிருமொழியி லருளிச்செய்யப்பட்டது காண்க. இப்படி, ஏதோ விரதஞ்செய்வதாகப் பேரிட்டுக்கொண்டு செஞ்சோற்றையும் கஞ்சியையும் உட்கொண்டு தெருத்திரிகின்ற வைதிககோஷ்டீ பஹிஷ்டர்களின் வாய்மொழிகளைத் திரஸ்கரித்து விட்டு வந்து உற்றது பற்றுங்கள் என்றதாயிற்று.

திருவிற்பொலிமறையோர்=திருஎன்றது ஐச்வர்யத்தையாகவுமாம், ஸ்ரீவைஷ்ணவலக்ஷ்மியையாகவுமாம். உருவக்குறளடிகள்=பண்டு வாமநாவதாரஞ் செய்தருளின பெருமானே இங்கு அர்ச்சையா யெழுந்தருளியிருக்கிறானென்கை. அடிகள்—ஸ்வாமி. .... (௨)

பறையும்வினை தொழுதுய்ம்மினீர் பணியுஞ்சிறுதொண்டீர்! *
அறையும்புன லொருபால்வய லொருபாற்பொழி லொருபால் *
சிறைவண்டின மறையுஞ்சிறுபுலியூர்ச் சலசயனத்
துறையும் * இறையடியல்லதொன் றிறையுமறியேனே. (௬)

பணியும் சிறு தொண்டீர்	(க்ஷுத்ரவிஷயங்களில்) பணிவுள்ள சிறுதொண்டர்களே!
நீர்	நீங்கள்
தொழுது	(சிறுபுலியூர்ச் சலசயனத்தைத்) தொழுது
உய்ம்மின்	உஜ்ஜீவியுங்கள்; (தொழுதால்)
வினை	பாவங்கள்
பறையும்	தொலைந்துபோம்;
ஒருபால்	ஒருபக்கத்திலுள்ள
அறையும் புனல்	ஒலிக்கின்ற ஜலத்திலும்
ஒருபால்	மற்றொருபக்கத்திலுள்ள
வயல்	கழனிகளிலும்
ஒருபால்	மற்றுமொருபக்கத்திலுள்ள
பொழில்	சோலைகளிலும்
சிறை வண்டு இனம் அறையும்	சிறகுகளையுடைய வண்டுத் திரள்கள் ரீங்காரஞ் செய்யப்பெற்ற
	சிறுபுலியூர், சலசயனத்து—;
உறையும்	பொருந்திவாழ்கின்ற
இறை	பெருமானுடைய
அடி அல்லது	திருவடிகளையன்றி
ஒன்று	வேறொன்றை
இறையும்	சிறிதும்
அறியேன்	அறியமாட்டேன்.

* * *—க்ஷுத்ரவிஷயங்களிலே தொண்டுபட்டுத் திரிகின்றவர்களை யழைத்து ‘நீங்கள் இப்படியிராமே வகுத்த விஷயத்தில் தொண்டுபடுங்கள்’ என்று முதலடியால் உபதேசித்து மற்ற மூன்றடிகளால் தமது உறுதியை அவர்கட்கு வெளியிடுகிறார். நான் இருக்கிறபடியைக் கண்டீர்களன்றோ, நீங்களும் இப்படியிருந்து வாழ வேண்டாவோவென்கை.

பணியுஞ்சிறுதொண்டீர்=‘பணியும்’ என்பதைச் சிறுதொண்டர்க்கு விசேஷணமாக்கி யுரைத்தல் ஒன்று; (தகுதியற்றவர்களைப் பணிகின்ற நீசர்களே! என்றபடி.) அன்றியே, ‘பணியும்’ என்பதை ஏவற்பன்மைவினைமுற்றாகக்கொண்டு எம்பெருமானைப் பணியுங்கள் என்னவுமாம். ‘பணிமின்’ என்றும் பாடமுரைப்பர்.

தீர்த்தங்களிலும் வயல்களிலும் பொழில்களிலும் வண்டுகள் ரீங்காரஞ் செய்யப்பெற்ற சிறுபுலியூரில் சலசயனக்கோயிலில் உறைகின்ற பெருமானுடைய திருவடிகளை யொழிய மற்றொன்றும் நானறியேனென்றாராயிற்று. தீர்த்தங்களில் வண்டுகள் அறையுமோ வென்னில்; தீர்த்தங்கள் மதுவோடு கூடிப் பெருகுமாதலால் மதுவில் நசையாலே வண்டுகள் வந்து மொய்க்குமென்க: “ஈக்கள் வண்டோடு மொய்ப்ப வரம்பிகந்து, ஊக்கமே மிகுந்து உள்தெளிவின்றியே, தேக்கெறிந்து வருதலிற் றீம்புனல், வாக்கு தேனுகர் மாக்களைமானுமே.” (கம்பராமாயணம்—ஆற்றுப்படலம்—21.) என்றது காண்க. .... (௬)

வானார்மதி பொதியுஞ்சடை மழுவாளியொ டொருபால் *
தானாகிய தலைவன்னவ னமரர்க்கதி பதியாம் *
தேனார்பொழில் தழுவும்சிறு புலியூர்ச்சல சயனத்
தானாயனது * அடியல்லதொன் றறியே னடியேனே. (௪)

ஒருபால்	திருமேனியி னொருபக்கத்தில்	தேன் ஆர் பொழில் தழுவும்	தேன்நிறைந்த சோலைகள் தழுவப்பெற்ற
வான் ஆர் மதி பொதியும் சடை	ஆகாசத்திலே பொருந்தி யிருக்கிற சந்திரன் அடங்கிய ஜடையை யுடையனாய்	சிறுபுலியூர்	திருச்சிறுபுலியூரிலே
மழுவாளியொடு	மழுவேந்தியான சிவனோடு கூடி	சலசயனத்து	சலசயனமென்னும் திருக்கோயிலில் எழுந்தருளி யிருப்பவனுமான
தான் ஆகிய தலைவன் அவன்	தான் என்று சொல்லப்படும் தலைவனாயிருப்பவனும்,	ஆன் ஆயனது	கோபாலக்ருஷ்ணனுடைய
அமரர்க்கு அதிபதி ஆம்	தேவர்கட்கு இறைவனான இந்திரனும் தானா யிருப்பவனும்,	அடி அல்லது	திருவடிகளையன்றி
		ஒன்று	மற்றொன்றையும்
			அடியேன் அறியேன்—.

* * *—சிறு தொண்டர்களிடத்தில் நம்முடைய உபதேசம் பலிப்பது அரிது என்று துணிந்து உபதேசத்தை நிறுத்தித் தமது உறுதியையே இனி வெளியிட்டருளுகிறார். நம்முடைய உறுதியை வெளியிட்டுக் கொண்டோமாகில் இது கேட்டு இவர்கள் திருந்தக்கூடும் என்று நினைத்து அருளிச் செய்கிறாராகவு மாம்.

"ஏறாளுமிறையோனுந் திசைமுகனுந் திருமகளுங், கூறாளுந்தனியுடம்பன்" என்கிறபடியே சிவனுக்குத் தன் திருமேனியிலே ஒரு கூறு கொடுத்திருப்பவனும் தேவேந்திரனுக்கு அந்தர்யாமியாயிருந்து ஸ்வர்க்க லோகத்தை யாள்பவனுமான சிறுபுலியூர்ச் சலசயனப்பெருமானது திருவடிகளையன்றி மற்றொன்று மறிகின்றிலே னென்றாராயிற்று.

எம்பெருமானுடைய ஸௌசீல்ய குணத்தை யநுபவிக்கிறார் முதலொன்றரை யடியால். தாமஸ தேவதையான ருத்ரனுக்கும் தனது திருமேனியின் வலப்பக்கத்தில் இடங்கொடுத்து ஆதரிக்குமவனும் எம்பெருமான். திருவாய்மொழியில் "வலத்தனன் திரிபுரமெரித்தவன்" (1-3-9) என்ற பாசுரத்தின் வியாக்கியானத்தில் "[illegible]।" என்ற மோக்ஷதர்மவசநத்தை யெடுத்துக்காட்டி யிருப்பது இங்கு அநுஸந்திக்கத் தக்கது. "[illegible] = தபஸா தோஷிதஸ் தேந விஷ்ணுநா ப்ரபவிஷ்ணுநா—ஸ்வபார்ச்வே தக்ஷிணே சம்போ: நிவாஸ: பரிகல்பித:." என்றொரு வசநமும் இருபத்திநாலாயிரப் படியிற் காண்பதுண்டு.

[சிவன் பண்ணின தவத்தினால் திருவுள்ளமுவந்த திருமால் அவனுக்குத் தனது வலவருகிலே வாஸஸ்தாநம் அமைத்துக் கொடுத்தருளினன்—என்பது இதன் பொருள்.]

மழுவாளி யென்றவிடத்துப் பெரியவாச்சான் பிள்ளை வியாக்கியானம்:—"தமப்பன் பிறரென்று பாராதே கொல்லுகைக்குப் பரிகரமான மழுவையுடைய ருத்ரன்."

ஈற்றடியை "சிறுபுலியூர்ச் சலசயனத்தானைப்! உனதடி யல்லது" என்று சிலர் ஓதுவர்; அப்பாடம் வியாக்கியானத்திற்குச் சிறிதும் பொருந்தாது; "க்ருஷ்ணாவதாரம் தீர்த்தம் ப்ரஸாதித்ததென்று வெறுக்க வேண்டாதபடி பிற்பாடர்க்கும் அநுபவிக்கலாம்படி அவ்வவதாரத்தின்படியே வந்து சாய்ந்தவன்" என்பது வியாக்கியான ஸ்ரீஸூக்தியாதலால் "சலசயனத்து ஆனையனது" என்றே ஓதப்பொருந்தும். .... (௪)

நந்தாநெடு நரகத்திடை நணுகாவகை * நாளும்
எந்தாயென விமையோர் தொழுதேத்துமிடம் * எரிநீர்ச்
செந்தாமரைமலரும் சிறுபுலியூர்ச் சலசயனத்து *
அந்தாமரையடியாய்! உனதடியேற் கருள்புரியே. (௫)

இமையோர்	தேவர்கள்
நாளும்	நாள்தோறும்
எந்தாய் என	எம்பெருமானே! என்று சொல்லி
தொழுது	அடிபணிந்து
ஏத்தும்	துதிக்கப்பெற்ற
இடம்	திவ்யதேசமாய்
எரி நீர் செந்தாமரை மலரும் சிறுபுலியூர்	அலைமோதும் நீர் நிலைகளிலே செந்தாமரைப் பூக்கள்மலரப்பெற்றதான சிறுபுலியூரிலுள்ளதான

சலசயனத்து	சலசயனக்கோயிலிலே (எழுந்தருளியிருக்கிற)
அம் தாமரை அடியாய்	அழகிய தாமரைப் பூப்போன்ற திருவடிகளையுடையவனே!
நந்தா நெடு நரகத்திடை	அழிவில்லாத பெரிய நரகத்திலே
நணுகாவகை	(நான்) சேராதபடி
உனது அடியேற்கு அருள் புரி	உன் அடியவனான என் திறத்தில் க்ருபை பண்ணவேணும்.

* * *—"மாறி மாறிப் பல பிறப்பும் பிறந்து" என்னுமாபோலே பிறப்பதும் இறப்பதுமாய் ஓய்வின்றிச் செல்லுகிற ஸம்ஸாரமாகிற நரகத்திலே அடியேன் புகாதபடி உன்னடியேனான என் விஷயத்திலே அருள்புரியவேணு மென்கிறார். "நந்தாநெடு நரகத்திடை நணுகாவகை உனதடியேற்கு அருள்புரியே" என்று அந்வயிப்பது. பிரமன் முதலிய தேவர்கள் எப்போதும் வந்து கிட்டி 'எந்தாய்!' என்றிறைஞ்சித் துதிக்குமிடமாயும், நீர்நிலைகளிலே செந்தாமரைப் பூக்கள் மலரப்பெற்ற சிறுபுலியூரிலுள்ளதாயுமிருக்கிற சலசயனத்திலே யெழுந்தருளியிருக்கின்ற கமலபாதனே! நான் இனி ஸம்ஸாரியாகாதபடி எனக்கு அருள் செய்யவேணு மென்றாராயிற்று.

எந்தாய்—'எந்தை' என்பதன் விளி. .... (௬)

முழுநீலமு மலராம்பலு மரவிந்தமும் விரவி *
கழுநீரோடு மடவாரவர் கண்வாய் முகமலரும் *
செழுநீர்வயல் தழுவுஞ் சிறுபுலியூர்ச் சலசயனம் *
தொழுநீர்மைய துடையாரடி தொழுவார் துயரிலரே. (கூ)

முழு நீலமும்	பூர்த்தியாகக் கறுத்திருக்கிற நீலோத்பலமும்
ஆம்பல்மலரும்	ஆம்பல் மலர்களும்
அரவிந்தமும்	தாமரைகளும்
கழுநீரொடு	செங்கழுநீர்ப் பூக்களும்
விரவி	சேர்ந்து
மடவாரவர்	(அங்குள்ள) மாதர்களினுடைய
கண்	கண்கள் போலவும்
வாய்	அதரம் போலவும்
முகம்	முகம்போலவும்
அலரும்	விகஸிக்கப்பெற்ற
செழு நீர் வயல்	செழித்த நீர்நிறைந்த வயல்களினால்
தழுவும்	சுற்றுஞ் சூழப்பட்ட
	சிறுபுலியூர், சலசயனத்தை—,
தொழும் நீர்மையது உடையார்	தொழுகையையே ஸ்வபாவமாகவுடையவர்களினுடைய
அடி	திருவடிகளை
தொழுவார்	தொழுமவர்கள்
துயர் இலர்	துக்கமற்றவராவர்.

* * *—சிறுபுலியூரும் வேண்டா; அங்குள்ள சலசயனத் திருக்கோயிலும் வேண்டா; அதிலுள்ள பெருமாளும் வேண்டா; அத்திருக்கோயிலைத் தொழுவதையே இயற்கையாகவுடைய ஸ்ரீவைஷ்ணவர்கள் யாவருளர், அவர் திருவடிகளை சரணமென்றிருப்பார்க்குத் துயரெல்லாம் தொலைந்திடுமென்கிறார்.

சிறுபுலியூரில் ஊர்க்கும் வயலுக்கும் வாசி தெரிந்து கொள்ள வொண்ணாதபடி யிருக்குமென்கிறார் முன்னடிகளில்; நீலோற்பலங்களைப் பார்த்தால் அவ்வூர்ப் பெண்களினுடைய கண்களாகவும், அரக்காம்பல்களைப் பார்த்தால் அப்பெண்களது அதரமாகவும், தாமரைப்பூக்களைப்பார்த்தால் அவர்களது முகங்களாகவும் விளங்குகின்றமையால் உள் வீதிகளுக்கும் வெளி நிலங்களுக்கும் வாசி தெரிவரிதாம். .... (கூ)

சேயோங்குதண் திருமாலிருஞ்சோலை மலையுறையு
மாயா! * எனக்குரையாயிது மறைநான்கினு ளாயோ? *
தீயோம்பு கைமறையோர் சிறுபுலியூர்ச் சலசயனத்
தாயோ? * உனதடியார் மனத்தாயோ வறியேனே. (எ)

சேய் ஓங்கு	மிகவும் உயர்ந்ததாய்
தண்	குளிர்ந்ததான
திருமாலிருஞ் சோலைமலை	திருமாலிருஞ்சோலை மலையிலே
உறையும்	நித்யவாஸஞ்செய்கிற
மாயா	ஆச்சரியனே !
மறை நான்கினுளாயோ	நால் வேதங்களினுள்ளே இருக்கின்றாயோ ?
தீ ஓம்பு	ஹோமத்தீயை வளர்க்கின்ற
கை	கையையுடையரான
மறையோர்	வைதிகர்கள் வாழ்கிற
சிறு புலியூர் சலசயனத்தாயோ	சிறுபுலியூரில் சலசயனக் கோயிலிலுள்ளாயோ ?

(தீ)

உனது அடியார் மனத்தாயோ — உனது அன்பர்களின் நெஞ்சிலுள்ளாயோ ?
அறியேன் — அறிகின்றிலேன் ;
எனக்கு இது உரையாய் — எனக்கு இதை(த் தெரிய) அருளிச் செய்யவேணும்.

* * *—ஆழ்வார் தமக்குண்டான ஒரு ஸந்தேஹத்தை விண்ணப்பஞ்செய்கிறார். திருமாலே! நீ வேதங்களிலிருக்கின்றாயா? சிறுபுலியூர்ச் சலசயனக் கோயிலில் இருக்கின்றாயா? அன்பர்தம் உள்ளத்திலிருக்கின்றாயா? இன்னவிடத்திலிருக்கின்றாயென்று தெரியவில்லை; அடியேனுக்குத் தெரியவருளிச்செய்ய வேணுமென்கிறார்.

சிறுபுலியூர் விஷயமான இத்திருமொழியில் இத்தலத்துப் பெருமானை விளிக்கவேண்டியிருக்க ‘திருமாலிருஞ்சோலைமலையுறையும் மாயா!’ என்று அழகரை விளித்தது என்னெனின் ; நால்வேதங்கள், சிறுபுலியூர்ச் சலசயனம், அடியார் மனம் என்னுமிடங்களிலெல்லாமுள்ள எம்பெருமான் ஒருவனே என்று உண்மையை விளக்குதல் இப்பாட்டின் உள்ளுறையாதலால் திருமாலிருஞ்சோலை மலையில் உறைபவனும் இவனே யென்பது விளியினால் பெறப்படும்.

எம்பெருமானே! வேதமும் வைதிகருடைய ஹ்ருதயமும் உனக்கு இருப்பிடமென்று சாஸ்த்ரங்களிலே கேட்கலாயிருந்தாலும் இப்போது ப்ரத்யக்ஷத்தில் சிறுபுலியூர்ச் சலசயனத்திலிருப்புத்தான் காணலாயிருக்கின்றது; ஆகிலும் ப்ரத்யக்ஷப்ரமாணத்தையே ப்ரதாநமாகக்கொண்டு சாஸ்த்ரப்ரமாணங்களை உபமர்த்திக்கும்படியான ஸாஹஸம் அடியேனுக்கு இல்லாமையால் உன் இருப்பிடம் இன்னதென்னுமிடத்தை நீயே சோதிவாய் திறந்து அருளிச் செய்தருளாயென்கிறார் என்று சிலர் நிர்வஹிப்பர்கள்.

இவ்விடத்துப் பெரியவாச்சான் பிள்ளை வியாக்கியானம்—“இத்தால் சொல்லிற்றாய்த்து—ஸௌபரி பல வடிவு கொண்டாப்போலே இவ்வோவிடங்கள் தோறும் இனி அவ்வருகில்லை யென்னும்படி குறையற வர்த்திக்கிறபடியைக் காட்டிக்கொடுத்தான்.” என்பதாம். சாஸ்த்ரங்களைக்கொண்டே அறியவேண்டிய அப்ராக்ருத திவ்யமங்கள விக்ரஹங்களையும், கண்ணால் கண்டு அநுபவிக்கலாம்படியான அர்ச்சாரூபங்களையும், நெஞ்சாலே அநுபவிக்கலாம்படி அந்தர்யாமியாயிருக்கும் வடிவுகளையும் ஒருகாலே ஸேவை ஸாதிப்பித்த படியாலே கண்டு ஆச்சரியப்படுகிறாரென்றவாறு.

இப்பாசுரத்தைச் சிறுபான்மை அடியொற்றி ஆழ்வான் வரதராஜஸ்தவத்தில். “ஸ்தாநம் பதவாதி தஹாம் வஹிதம் வாணீகம் பசூதாநம் வரத வததாயந்ராஸநாதாஸநாஜ்ஜு। ஸ்தாநாநாம் பதவிவ ஶரா பஶு ஐகயகா ஶரரேஃ ஹஸ்த்யத்ரவகா கிதிவாவஹம் தேதஷா வாதாஜ்ஜு யோஜ்ஜே?” (59.) என்றருளிச்செய்த ச்லோகம் இங்கு ஸ்மரிக்கத்தகும்.

எம்பெருமான் நால் வேதங்களுக்கும் ப்ரதிபாத்ய வஸ்துவாயிருப்பதே மறை நான்கினுள்ளானகை. .... (எ)

மையார்வரிநீலம் மலர்க்கண்ணார் மனம் விட்டிட்டு *
உய்வானுன கழலேதொழு தெழுவேன் * கிளிமடவார்
செவ்வாய்மொழி பயிலுஞ் சிறுபுலியூர்ச் சலசயனத்து *
ஐவாயரவணைமேலுறை யமலா ! அருளாயே. (௯)

கிளி	கிளிகளானவை
மடவார்	ஸ்த்ரீகளினுடைய
செவ் வாய்	சிவந்த வாயில் நின்று முண்டான
மொழி	சொற்களை
பயிலும்	ஆவ்ருத்திபண்ணுகின்ற
சிறுபுலியூர், சலசயனத்து—;	
ஐ வாய்	ஐந்து வாயையுடைய
அரவு அணை மேல்	ஆதிசேஷனாகிற சயனத்தின்மீது
உறை	உறைகின்ற
அமலா	நின்மலனே !
மை ஆர்	மையணிந்ததாய்
வரி	ரேகைகளை யுடைத்தாய்
நீலம் மலர்	கரு நெய்தல் பூப்போன்றதான
கண்ணார்	கண்ணையுடையரான மாதர்களிடத்திலே
மனம்	மனத்தை
விட்டிட்டு	விட்டொழித்து
உய்வான்	உஜ்ஜீவிப்பதற்காக
உன கழலே	உனது திருவடிகளையே
தொழுது எழுவேன்	வணங்கியெழுகின்றேன் ;
அருளாய்	(அடியேன் மீது) க்ருபை செய்தருள்.

* * *—மாதர்களின் கண்ணழகிலீடுபட்டு அழிந்து போகாமே உன் திறத்திலீடுபட்டு உய்வு பெறவேண்டி, சிறுபுலியூர்ச் சலசயனத்தெம்பிரானே! உன்னைத் தொழுகின்றேன் ; உபேக்ஷியாமல் அருள்புரிய வேணுமென்கிறார்.

கிளி மடவார் செவ்வாய்மொழிபயிலும்=இரண்டுவகையாகப்பொருள் கொள்ளலாம் ; கிளிபோன்ற மடவாருடைய சிவந்தவாயில் நின்று முண்டான இன்சொற்களானவை, பயிலும்—நிரம்பியிருக்கப்பெற்ற சிறுபுலியூர் என்றும் ; கிளிகளானவை மடவாருடைய செவ்வாய்மொழிகளை அநுவாதம் செய்யப்பெற்ற சிறுபுலியூர் என்றும். .... (அ)

கருமா முகிலுருவா ! கனலுருவா ! புனலுருவா ! *
பெருமால் வரையுருவா ! பிறவுருவா ! நினதுருவா ! *
திருமாமகள் மருவுஞ் சிறுபுலியூர்ச் சலசயனத்து *
அருமா கடலமுதே ! யுனதடியே சரணமே. (௧௦)

கரு மா முகில் உருவா	கறுத்துப் பெருத்த மேகம் போன்ற வடிவை யுடையவனே !
கனல் உருவா	(அன்பில்லாதார்க்கு அணுகவொண்ணாதபடி) நெருப்பைப்போலும் உருவமுடையவனே !
புனல் உருவா	நீர்போலே குளிர்ந்த வடிவையுடையவனே!
பெரு மால் வரை உருவா	மிகவும் பெரியமலைபோன்ற உருவத்தையுடையவனே!
பிற உருவா	மற்றுமுள்ள பொருள்களையும் வடிவாக வுடையவனே!
நினது உருவா	உனக்கு அஸாதாரணமான திவ்யமங்கள்விக்ரஹத்தை புடையவனே!

திரு மா மகள் மருவும்	பெரிய பிராட்டியார் பொருந்தி வாழ்கிற
சிறுபுலியூர் சலசயனத்து—;	
அரு மா கடல் அமுதே	பெறுதற்கரிய சிறந்த கடலமுதம் போன்றவனே !
உனது அடியே	உன்னுடைய திருவடிகளே
சரண் ஆம்	(அடியேனுக்குப்) புகலிடமாம்.

* * *—இப்பாசுரத்தின் இனிமை கனிந்த நெஞ்சினரால் நன்கு அநுபவிக்கத்தக்கது. ஆழ்வார் தமது உள்ளன்பு நன்கு விளங்க எம்பெருமானை வாயார விளிக்கின்றார். காணும்போதே ஸகலதாபமும் தீரும்படி பெரிய காளமேகம் போன்ற திருவுருவத்தை யுடையவனே !, தீயபுத்தியையுடைய கம்ஸன் போல்வார்க்குக் கிட்டவொண்ணாதபடி நெருப்புப் போன்றிருப்பவனே !, அக்ரூரர், விதுரர், மாலாகாரர் போல்வாரான மெய்யன்பர்க்குத் தண்ணீர்போலே விரும்பத்தக்க ரூபத்தை யுடையவனே !, மலைபோல் எல்லைகாண வொண்ணாத ப்ரகாரத்தை யுடையவனே !, "நீராய் நிலனாய்த் தீயாய்க் காலாய் நெடுவானாய், சீரார் சுடர்களிரண்டாய் சிவனாயயனாய்" "தாயாய்த் தந்தையாய் மக்களாய் மற்றுமாய் முற்றுமாய்" இத்யாதிப்படியே எல்லாவடிவுமானவனே !, இப்படி ஜகதாகாரனாயிருப்பதுந்தவிர "சூராராழி வெண்சங்கேந்தி" என்கிற அஸாதாரண வடிவுகளையுமுடையவனே !, பெரிய பிராட்டியார் நித்யவாஸம் பண்ணப்பெற்ற சிறுபுலியூர்ச் சலசயனத்துப் பரமபோக்யனே! உன் திருவடிகளே சரணம் என்றாராயிற்று. (கூ)

சீரார் நெடுமறுகில் சிறுபுலியூர்ச் சலசயனத்து *
ஏரார்முகில் வண்ணன்றன்னை யிமையோர் பெருமானை *
காரார்வயல் மங்கைக்கிறை கலியனொலி மாலை *
பாராரிவை பரவித்தொழப் பாவம் பயிலாவே. (கம)

சீர் ஆர் நெடு மறுகில்	சீர்மைபொருந்திய நீண்ட திருவீதிகளை யுடைத்தான
சிறுபுலியூர்	சிறுபுலியூரில்
சலசயனத்து	சலசயனக்கோயிலிலே (எழுந்தருளியிருக்கின்ற)
ஏர் ஆர்	அழகுமிக்க
முகில் வண்ணன் தன்னை	மேகம்போன்ற திருநிறத்தையுடையனாய்
இமையோர் பெருமானை	நித்யஸூரிகட்குத் தலைவனான திருமாலைக் குறித்து,—
கார் ஆர் வயல் மங்கைக்கு	கருமைபொருந்திய கழனிகளை யுடைய திருமங்கை நாட்டுக்கு
இறை	தலைவரான
கலியன்	ஆழ்வார்
ஒலி	அருளிச்செய்த
மாலை இவை	இச்சொல் மாலைகளை
பாரார்	பூமியிலுள்ளவர்கள்
பரவி	சொல்லி
தொழ	(அப்பெருமானைத்) தொழுமளவில்
பாவம்	பாவங்கள்
பயிலா	நிற்கமாட்டா [தொலைந்துபோம்].

* * *—செல்வம் மிக்க திருவீதிகளையுடைய சிறுபுலியூரில் சலசயனக் கோயிலினுறையும் பெருமான் விஷயமாகத் திருமங்கையாழ்வார் திருவாய் மலர்ந்தருளிய இத்திருமொழியை வாயாலே சொல்லி ஆச்ரயிக்கவே, பாபங்கள் தாமே 'நமக்கு இவ்விடம் இருப்பல்ல' என்று விட்டுப்போம் என்று பயனுரைத்ததாயிற்று.

'பாரார்' என்கையாலே பூமியிற் பிறந்தாரெல்லாரும் இது கற்க அதிகாரிகள் என்றதாகும். .... (௧0)

அடிவரவு:—கள்ளம், மெத்ருவில், பறை, வான், நந்தா, முழு, சேயோங்கு, மையார், கரு, சீரார், பெரும்புறம்.

ஒன்பதாந்திருமொழி உரை முற்றிற்று.

ஜீயர் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஏழாம்பத்து—பத்தாந்திருமொழி,

பெரும்புறக்கடலே.

[திருக்கண்ணமங்கைத் திருப்பதிகம்.]

அவதாரிகை:—கீழ்த்திருமொழியில், சிறுபுலியூர்ச் சலசயனத்தெம்பெருமான் பக்கலிற் சென்று 'அருளாயே' என்றும் 'அருள்புரியே' என்றும் கிருபை பண்ணுமாறு ப்ரார்த்திக்க ஆழ்வார்க்கு எம்பெருமான் தன்னுடைய படிகளையெல்லாம் விசதமாகக் காட்டிக்கொடுத்து 'ஆழ்வீர்! திருக்கண்ணமங்கையிலே வாரும், பூர்ணாநுபவம் பண்ணலாம்' என்று நியமிக்க, அப்படியே அத்திருப்பதியிற் போந்து பரமாநந்தம் பொலியப் பேசுகிறார்.

இத்திருமொழியின் இனிமை அநுபவரஸிகர்கட்கே அநுபவயோக்யமாகும்.

பெரும்புறக்கடலே யடலேற்றினைப் பெண்ணை
யானை * எண்ணில் முனிவர்க்
கருள்தருந் தவத்தை முத்தின் திரட்கோவையைப்
பத்தராவியை நித்திலத்தொத்தினை *,
அரும்பினை யலரை யடியேன் மனத்தாசையை
அமுதம்பொதி யின்சுவை * கரும்பினைக்
கனியைச் சென்றுநாடிக் கண்ண
மங்கையுட் கண்டுகொண்டேனே, (௧)

பெரு புறம் கடலை	விசாலமான இடத்தை யுடைத்தான கடல் போலே அளவிட முடியாத ஸ்வரூப ஸ்வபாவங்களை யுடையவனும்
அடல் ஏற்றினை	செருக்குடைய ரிஷபம் போல மேனாணிப் புள்ளவனும்
பெண்ணை	ஸ்திரீயைப்போல் பாரதந்திரியமே வடிவா யிருப்பவனும்
ஆணை	ஸ்வதந்த்ரனாயிருப்பவனும்
எண் இல் முனிவர்க்கு	எண்ணிறந்த யோகிகளுக்கு
அருள் தரும் தவத்தை	அருள் தந்திடும் தவப்பயனா யுள்ளவனும்
முத்தின் திரள் கோவையை	முத்துத்திரளினாலாகிய மாலை போன்றவனும்
பத்தர் ஆவியை	பக்தர்களுக்கு உயிர்நிலையா யிருப்பவனும்
நித்திலம் தொத்தினை	முத்துக்குவியல் போன்றிருப்பவனும்
அரும்பினை	அரும்புபோலே குமாரத் தன்மையுள்ளவனும்
அலரை	மலர்ந்த புஷ்பம்போலே யௌவன பருவ முள்ளவனும்
அடியேன் மனத்து ஆசையை	அடியேனுடைய மனத்திலே புதிதுபுதிதாகத் தோன்றுகிற ஆசைக்கு இலக்கானவனும்
அமுதம் பொதி இன் சுவை கரும்பினை	அமுதத்தை நீராகப் பாய்ச்சி அதனால் வளர்ந்த இனிய சுவையை யுடைய கரும்புபோல் மதுரமானவனும்
கனியை	கனிபோல் அப்போதே அநுபவிக்கத்தக்க போக்யனுமான எம்பெருமானை
சென்று நாடி	தேடித்திரிந்து
கண்ண மங்கையுள்	திருக்கண்ண மங்கையிலே
கண்டு கொண்டேன்	ஸேவிக்கப்பெற்றேன்.

* * *—அடியேன் தேடித்திரிந்து கண்ணமங்கையிற் கண்டுகொண்ட எம்பெருமானுடைய படிகளைச் சொல்லுகிறேன், கேண்மினென்கிறார்.

பெரும்புறக்கடலை—'புறம்' என்று இடத்துக்குப் பெயர்; எல்லையில்லாத இடத்தையுடைத்தான கடல்போன்றவன்: பல்லுயிர்கட்கும் உறைவிடமாயிருந்துகொண்டு கம்பீரத் தன்மையோடு கூடியிருக்கும் கடல்போன்றவன். இனி, புறம் என்பதற்கு 'வெளிப்பட்டது' என்கிற பொருளும் உண்டாதலால், பூமியைச் சூழ்ந்திருக்கும் கடல்களெல்லாவற்றிற் காட்டிலும் விலக்ஷணமான கடலாயிருப்பவன் என்று முரைப்ப. கடல்போன்றவன் என்னாதே கடல்தானாகவே சொன்னது உவமையாகுபெயர். இத்திருமொழி முழுதும் பெரும்பாலும் இங்ஙனேயாம்.

அடலேற்றினை—செருக்குக்கொண்ட விருஷபம்போலே ஒருவராலும் அடர்க்கவொண்ணாதவ னென்கை. பெண்ணை—கீழ் அடலேறு போன்றிருப்பவனென்றது எதிரம்பு கோப்பவர்கட்கேயன்றி அன்புடையார் திறத்திலேயன்றால் ஸ்த்ரீகளைப்போலே பாரதந்திரியமே வடிவாயிருப்பவனென்றவாறு. "ஸந்த்ராயீநஸ்ய தவகிஞ்ச ஜநஸேவிஷிகஸ்ரீ: வராயீநம் ஸ்வாந்த ப்ரணதவராணாம் ஸநாதநஹ" என்ற வரதராஜஸ்தவ ஸூக்தி காண்க.

ஆணை=அரசன் அந்தஃபுரத்திலே மனைவிக்கு விதேயனாயிருப்பினும் சீரிய சிங்காசனத்திலே வந்துவீற்றிருந்தால் ஆண்புலியாயிருப்பானன்றோ; அதுபோல. திருவாய்மொழியில் "ஆணல்லன் பெண்ணல்லன் அல்லா அலியுமல்லன்" என்றிருக்க, இங்கே 'பெண்ணை ஆணை' என்றல் பொருந்துமோ எனின்; பொருந்தும்; 'ஆணல்லன் பெண்ணல்லன்' என்பது திவ்யாத்மஸ்வரூபத்தின் உண்மைநிலையைப் பற்றினது; இங்குச் சொல்வது குணத்தைப்பற்றியது: ஸ்திரீலிங்க புல்லிங்கங்களை யுடையவனென்கிறதன்று.

எண்ணில் முனிவர்க்கு அருள்தருந் தவத்தை='முனிவர்' என்றது தன்னைச் சிந்திப்பவர்கள் என்றபடி; அவர்கள் விஷயத்திலே கிருபைபண்ணுமவன்; அவர்களின் தவப்பயனை வடிவெடுத்தது போன்றவன். [**முத்தின் திரள்கோவையை.**] முத்துவடம்போலே கண்ணுற்கண்டபோதே சிரமமெல்லாம் ஆறும்படியிருக்கிறவன். [**பத்தர் ஆவியை.**] தன் பக்கலில் பக்தியுள்ளவர்கட்குத் தன்னைவிட்டு ஜீவிக்கவொண்ணாதபடி யிருப்பவன். திருநின்றவூர்ப் பெருமாளுடைய திருநாமமும் திருக்கண்ணமங்கைப் பெருமாளுடைய திருநாமமும் **பத்தராவி** யென்பதாம். [**நித்திலத் தொத்தினை.**] ஒருவனுக்கு ஏராளமான முத்துக்குவியல் இருந்தால் 'நமக்கு நிதியுண்டு' என்று அவன் விசாரமற்றிருக்கலாமன்றோ; அது போல் எம்பெருமானும் அன்பர்கட்கு.

[**அரும்பினை அலரை.**] இவ்விடத்துப் பெரியவாச்சான் பிள்ளை வியாக்கியானம் வருமாறு:-"இரண்டு அவஸ்தையும் ஒருகாலே சூழ்த்துக் கொடுக்கலாம்படி யிருக்கிறவனை; 'யுவாகுமாரஃ.'" என்று. திருவாய்மொழியில் (3-1-8) "மலராது குவியாது" என்றவிடத்து ஈடு முப்பத்தாறாயிரப்படியில்—"'அரும்பினையலரை' என்னும்படியாயிருக்கும். 'யுவாகுமாரஃ' என்கிறபடியே ஏககாலத்திலே இரண்டவஸ்தையும் சொல்லலாயிருக்கை" என்றருளிச் செய்யப்பட்டுள்ளது. இவற்றால், யௌவநமும் கௌமாரமும் எம்பெருமானிடத்தில் குடிகொண்டிருப்பதாகப் பொருள் கூறுவர். அரும்பு என்றது கௌமார நிலைமையைச் சொன்னபடி; அலர் என்றது யௌவந நிலைமையைச் சொன்னபடி என்றும் கூறுவர். இங்கு உதாஹரிக்கப்பட்ட 'யுவாகுமாரஃ' என்றப்ரமாணம் ருக்வேதத்தில் (அஷ்ட. 2-8-25.) அத்யயநம் பண்ணப்பட்டு வரும் வாக்கியம். வைதிகபதபாடத்தில் 'யுவா அகுமாரஃ' என்று பதவிபாகமுள்ளது. ஸ்ரீதேசிகன் பரமபதஸோபாநத்தில் ஒன்பதாவது பர்வத்தின் தொடக்கத்தில் "அகுமார யுவாவாய்" என்றும் பாதுகாஸஹஸ்ரத்தில் 1."அகுமாரயுவா" என்றும் அருளிச்செய்யக் காண்கிறோம். இவற்றையெல்லாமடியொற்றி 'யுவா அகுமாரஃ' என்றே கொள்ளத் தகும்; நம்பிள்ளை முதலானோருடைய திருவுள்ளமும் இங்ஙனேத்ததே. இங்ஙனே பதவிபாகமாயின், 'கௌமாரமின்றியே யௌவனமாத்ரமே யுள்ளவன்' என்று பொருளாகுமே; நம்பிள்ளை முதலானோருடைய திருவுள்ளம் அப்படியில்லையே யென்று சங்கிக்கவேண்டா; 'அகுமாரஃ' என்பதற்கு ஈஷத்குமாரஃ [ஸ்வல்பம் கௌமாரமுள்ளவன்] என்று பொருள். ["[illegible]

1. பாதுகா பத்ததி—17.

தஜ்ஜு தா। ஸுப்ராஸஸ்யம் விரோயஸ்து நஷ்யஷ்டிஷ்டி வ்ருகீதிஷ்தாஃ." என்பர் வையாகரணர்.] கௌமாரம் கழியத்தக்கதாய் யௌவனம் வந்து குடிபுகத்தக்கதான நடுப்பருவத்தைச் சொன்னவாறு.

[அடியேன் மனத்தாசையை.] அடியேன் இடைவிடாது நித்யாநுபவம்பண்ணுகிறச்செய்தேயும் இதற்கு முன்பு அநுபவித்தறியாமல் அப்போது கண்டதொரு வஸ்துவிற் போல ஆசைப்பெருக்குக்கு விஷயமாயிருப்பவனென்கை.

[அமுதம்பொதி இன்சுவைக் கரும்பினை.] அமுதத்தையே தண்ணீராகப் பாய்ச்சி வளர்க்கப்பட்டு அதனால் சுவைமிக்கதான கரும்புபோல் ஆற்றஇனியன். [கனியை] அப்போதே நுகரலாம்படி பக்குவ பலமாயிருப்பவன். ஆக இப்படிப்பட்ட பெருமானைத் திருக்கண்ணமங்கையில் ஸேவிக்கப்பெற்றேனென்றாராயிற்று. .... (க)

மெய்ந்நலத் தவத்தைத் திவத்தைத்தரும் மெய்யைப்
பொய்யினைக் கையிலோர் சங்குடை *
மைந்நிறக் கடலைக் கடல்வண்ணனை மாலை
யாலிலைப் பள்ளிகொள் மாயனை *
நென்னலைப் பகலை யிற்றைநாளினை
நாளையாய்வரும் திங்களை யாண்டினை *
கன்னலைக் கரும்பின்னிடைத் தேறலைக்
கண்ணமங்கையுட் கண்டுகொண்டேனே. (உ)

மெய் நலம் தவத்தை — மெய்யாய் நன்றான பக்தியோகத்துக்கு ப்ரவர்த்தகனும்

திவத்தை தரும் மெய்யை — பரமபதமளிக்கவல்ல ப்ரபத்தியோகத்திற்கு ப்ரவர்த்தகனும்

பொய்யினை — (அன்பில்லாதார்க்குப்) பொய்யனாயிருப்பவனும்

கையில் ஓர் சங்கு உடை — திருக்கையில் ஒப்பற்ற ஸ்ரீபாஞ்சஜந்யத்தை யுடையவனும்

மை நிற கடலை — கறுத்த நிறத்தையுடைய கடல் போன்றவனும்

கடல் வண்ணனை — கடல்போல் கம்பீர ஸ்வபாவமுள்ளவனும்

மாலை — எல்லாரினும் மேம்பட்டவனும்

ஆலிலை பள்ளி கொள் மாயனை — ஆலந்தளிரில் பள்ளி கொண்ட ஆச்சரியனும்

நென்னலைப் பகலை — நேற்றைப்போதில் அநுபவிக்கப்பட்ட வஸ்து போல் நெஞ்சை விட்டகலாத போக்யதையை யுடையவனும்

இற்றை நாளினை — இன்று அநுபவிக்கப்படுகிற வஸ்து போன்றவனும்

நாளையாய் வரும் — மேலுள்ள காலமும் இப்படியே அநுபவிக்க வுரியனானவனும்

திங்களை — மாஸத்துக்கு நிர்வாஹகனும்

ஆண்டினை — ஸம்வத்ஸரத்துக்கு நிர்வாஹகனும்

கன்னலை — கன்னற்கட்டிபோன்றவனும்

கரும்பினிடை தேறலை — கரும்புத்தடியிலுண்டான சாறுபோன்றவனுமான பெருமானை

கண்ணமங்கையுள் கண்டுகொண்டேன் —,

* * *—அடியேன் திருக்கண்ணமங்கையில் ஸேவிக்கப்பெற்ற எம்பெருமான் எப்படிப்பட்டவன்?—உண்மையாய் விலக்ஷணமான பக்தியோகத்தை ப்ரவர்த்திப்பித்தவன்; (அல்லது) அப்படிப்பட்ட பக்தியோகத்திற்கு விஷயமாகக் கூடியவன்; பரமபதத்தைத் தரவல்ல ப்ரபத்தியோகத்தை ப்ரவர்த்திப்பித்தவன்; (அல்லது) அதற்கு இலக்கானவன்; கீழ்ச்சொன்ன பக்தியோகமும் ப்ரபத்தியோகமுமில்லாதவர்களுக்குந் தன்னுடைய ஸ்வரூபஸ்வபாவங்களொன்றும் அறியவொண்ணாதிருக்குமவன்; கீழ்ச்சொன்ன பக்தி ப்ரபத்திகளையுடையார்க்குக் காட்சிகொடுக்கும் வடிவையுடையவன்; கடல்போல் காம்பீர்யமுள்ளவன்; ஸர்வஸ்வதந்த்ரன்; சேராதவற்றையும் சேர்ப்பிக்கவல்லவ னென்று மிடத்தை ஆலிலையிற் பள்ளிகொண்ட வரலாற்றினால் காட்டித்தந்தவன்; இறந்தகாலம் நிகழ்காலம் எதிர்காலம் என்னும் முக்காலங்களிலும் போகப்படாது நின்றதேயிருந்து, மாஸம் ஸம்வத்ஸரம் என்று சொல்லப்படுகிற காலப்பகுதிகளுக்கு நிர்வாஹகனாயிருக்குமவன்; கன்னற்கட்டியும் கருப்பஞ்சாறும் போல இனிமைதானே வடிவெடுத்தவன்; இப்படிப்பட்டபெருமானையாயிற்று அடியேன் திருக்கண்ணமங்கையிற் கண்டதென்கிறார். .... (உ.)

எங்களுக்கருள் செய்கின்ற வீசனை
வாசவார் குழலாள் மலைமங்கை தன்
பங்கனை * பங்கில்வைத் துகந்தான்றனைப்
பான்மையைப் பனிமாமதியந் தவழ் *
மங்குலைச் சுடரை வடமாமலை
யுச்சியை நச்சி நாம் வணங்கப்படும்
கங்குலை * பகலைச் சென்று நாடிக்
கண்ணமங்கையுட் கண்டுகொண்டேனே. (௩.)

எங்களுக்கு	எங்கள் விஷயத்தில்
அருள் செய்கின்ற	கிருபைபண்ணுகிற
ஈசனை	ஸர்வேச்வரனும்
வாசம் வார் குழலாள்	பரிமளம் வீசாநின்றுள்ள கூந்தலையுடையளான
மலைமங்கை தன் பங்கனை	பார்வதியைத் தனக்குப் பாதிபாகமாக வுடையனான ருத்ரனை
பங்கில் வைத்து உகந்தான் தன்னை	தனது ஒருபக்கத்திலே (இடங்கொடுத்து) வைத்து உகந்திருப்பவனும்
பான்மையை	இப்படிப்பட்ட சீலகுணமே ஸ்வபாவமாயுள்ளவனும்

பனி மா மதியம் தவழ் மங்குலை	குளிர்ந்த பூர்ணசந்திரன் தவழப்பெற்ற ஆகாசமாய் நிற்பவனும்
சுடரை	ஸூர்யனுக்கு அந்தர்யாமியாயிருப்பவனும்
வட மா மலை உச்சியை	வடவேங்கடமலையின் சிகரந்தானாயிருப்பவனும்
நச்சி நாம் வணங்கப்படும்	நம்மால் விரும்பி வணங்கப்படுபவனும்
கங்குலை	இராப்பொழுதுக்கு ப்ரவர்த்தகனும்
பகலை	பகற்பொழுதுக்கு ப்ரவர்த்தகனுமான பெருமானை

சென்று நாடி கண்ணமங்கையுள் கண்டு கொண்டேன்—.

* * *—திருக்கண்ணமங்கையெம்பெருமான் எப்படிப்பட்டவன் ?;— வேறு புகலற்ற அடியேன் போல்வார் திறத்திலே நிர்ஹேதுகமாக க்ருபைபண்ண வல்ல ஸ்வாமி; எங்களைப்போலன்றியே ஈச்வராபிமாநம் கொண்டாடியிருக்கிற ருத்ரனைத் தன் திருமேனியிலொருபுறத்திலே வைத்து அதுதன்னைத் தன்பேறாக நினைத்து உகந்திருக்கும்படியான சில குணத்தாற் சிறந்தவன்; இந்த சிலகுணங்கள் தான் ஏதோவொரு காலத்தளவில் லன்றிக்கே எப்போதும் இதுவே இயல்வாயிருப்பவன் ; குளிர்ந்த பூர்ண சந்திரனுடைய ஸஞ்சாரத்தை யுடைத்தான ஆகாசத்துக்கும் ஸூர்யனுக்கும் நியாமகன்; வடதிருவேங்கடமலையின் னுச்சியை இருப்பிடமாகவுடையவன்; நம்மால் விரும்பி வணங்கப்படுபவன்; போகமநுபவிப்பதற்குறுப்பான இராப் பொழுதென்ன, அதற்குப் பொருளீட்டுதற்குறுப்பான பகற்பொழுதென்ன இவ்விரண்டுக்கும் நிர்வாஹகன். இப்படிப்பட்ட பெருமானைத் திருக்கண்ணமங்கையிற் காணப்பெற்றேன். .... (௫)

பேய்முலைத்தலை நஞ்சுண்ட பிள்ளையைத்
தெள்ளியார் வணங்கப்படுந் தேவனை *
மாயனை மதிட்கோவலிடைகழி
மைந்தனை அன்றி யந்தணர் சிந்தையு
ளீசனை * இலங்குஞ்சுடர்ச் சோதியை
யெந்தையை யெனக்கெய்ப்பினில் வைப்பினை *
காசினை மணியைச்சென்று நாடிக்
கண்ணமங்கையுட் கண்டுகொண்டேனே. (௬)

பேய்	பேய்ச்சியாகிய பூதனையினுடைய
முலைத்தலை	முலையிடத்துண்டான
நஞ்சு	விஷத்தை
உண்ட	அமுது செய்த
பிள்ளையை	சிறுவனும்,
தெள்ளியார்	தெளிந்த ஞானிகளால்
வணங்கப்படும்	ஆச்ரயிக்கப்படுகின்ற
தேவனை	தெய்வமாயிருப்பவனும்
மாயனை	ஆச்சரியனும்
மதிள் கோவல் இடைகழி மைந்தனை	திருமதிளையுடைய திருக்கோவலூரிலே இடைகழியிலுறைகின்ற யுவாவானவனும்
அன்றி	தவிரவும்
அந்தணர்	அந்தணர்களினுடைய
சிந்தையுள்	மனத்திலேயிருந்துகொண்டு
ஈசனை	அவர்களை நியமிப்பவனும்
இலங்கும்	ஒளிபெற்று விளங்குகின்ற
சுடர் சோதியை	பெருஞ் சோதிமயமாயிருப்பவனும்
எந்தையை	எனக்கு ஸ்வாமியும்
எனக்கு	எனக்கு
எய்ப்பினில்	தளர்ந்தி வருங்காலத்தில் (உதவக்கூடிய)
வைப்பினை	நிதி போன்றவனும்
காசினை	பொன்போன்றவனும்
மணியை	ரத்னம் போன்றவனுமான எம்பெருமானை

சென்று நாடி கண்ணமங்கையுள் கண்டுகொண்டேன்—.

* * *—பூதனையினுடைய முலைத்தடத்தூண்டான விஷத்தை அமுது செய்த சிறு குழந்தையெனினும் தெள்ளியார் பலர் கைதொழுந்தேவனாயிருப்பவன்; திருக்கோவலிடைகழியில் முதலாழ்வார்களோடு நெருக்கிக் கலந்து நித்யவாஸமாயிருக்குமவன்; அந்தணர்களின் சிந்தையிற் புகுந்து அவர்களைத் தன் வழியே நியமித்துக் கொண்டிருக்கிறவன்; இவர்களுடைய சரீரத்தில் உறைந்திருக்கச் செய்தேயும் அதிலுள்ள தோஷங்கள் தன் பக்கலில் தட்டாமல் ஔஜ்ஜ்வல்யமே வடிவாயிருப்பவன்; இப்படிப்பட்ட தன்மையைக் காட்டி என்னை ஆட்படுத்திக் கொண்டவன்; தளர்ந்த காலத்து உதவும் நிதிபோலே ஆபத்பந்துவாயிருக்குமவன்; பொன்னும் மணியும் போலே விரும்பத்தக்கவன்; ஆக இப்படிப்பட்ட பெருமானைத் திருக்கண்ணமங்கையிற் காணப் பெற்றேனென்றதாயிற்று.

"பேய்முலைத்தலை" = தலை-ஏழனுருபு. "முலைத்தலம்" என்றும் பாடமுண்டு; தெள்ளியார்—தெளிவான அறிவு பெற்றவர்கள். தேவன்—"திவு—க்ரீடாவிஜிகீஷாவ்யவஹாரத்யுதிஸ்துதிமோதமதஸ்வப்நகாந்திகதிஷு" என்னும் வடநூலாருடைய தாது பாடத்தின்படியே பத்துப் பொருள்களுள்ளன. எய்ப்பினில் = எய்ப்பு—தளர்ச்சி; இன்—இடைச்சாரியை; இல்—ஏழாம் வேற்றுமையுருபு. வைப்பு—பூமியில் புதைத்து வைக்கப்படுமது என்று நிதிக்குக் காரணப் பெயர். காசு—பொன். .... (௪)

ஏற்றினை யிமயத்துளெம் மீசனை
யிம்மையைமறுமைக்கு மருந்தினை *
ஆற்றலை யண்டத்தப்புறத் துய்த்திடு
மையனைக் கையிலாழியொன்றேந்திய
கூற்றினை * குருமாமணிக் குன்றினை
நின்றவூர் நின்ற நித்திலத்தொத்தினை *
காற்றினைப் புனலைச்சென்று நாடிக்
கண்ணமங்கையுட் கண்டுகொண்டேனே. (௫)

ஏற்றினை	காளைபோல் செருக்குடையவனும்	ஆற்றலை	பரிபூர்ணசக்தியே வடிவெடுத்தது போலிருப்பவனும்
இமயத்துள் எம் ஈசனை	இமயமலைத் திருப்பிரிதியிலெழுந்தருளியிருக்கின்ற ஸ்வாமியும்	அண்டத்து அப்புறத்து	அண்டங்களுக்கு அப்பாலுள்ள பரமபதத்தில்
இம்மையை	இஹலோகத்துப் பலன்களை யளிப்பவனும்	உய்த்திடும்	(அன்பர்களைச்) செலுத்தவல்ல
		ஐயனை	ஸ்வாமியும்,
மறுமைக்கு மருந்தினை	பரலோகபுருஷார்த்தத்திற்கு ஸாதகமாயிருப்பவனும்	கையில்	திருக்கையில்
		ஒன்று ஆழி	ஒப்பற்ற திருவாழியை
		ஏந்திய	தரித்துக் கொண்டுள்ளவனும்

கூற்றினை	(எதிரிகட்கு) யமன் போன்றவனும்,
குரு மா மணி குன்றினை	சிறந்த நீலமணிமயமான மலைபோன்றவனும்
நின்றவூர் நின்ற தித்திலம் தொத்தினை	திருநின்றவூரி லெழுந்தருளியிருக்கிற முத்துத்திரள் போன்றவனும்
காற்றினை	காற்றுப்போல் ஸுகமளிப்பவனும்
புனலை	தண்ணீர்போல் உயிர் தரிக்கச் செய்பவனுமான பெருமானை

சென்று நாடி கண்ணமங்கையுள் கண்டுகொண்டேன்—.

* * *—நித்யாநந்தத்தினால் காளைபோல் மேனாணித்திருக்குமவன்; இமய மலையில் திருப்பிரிதி யென்னுந் திருப்பதியிலிருக்கு மிருப்பைக்காட்டி என்னை வசப்படுத்திக் கொண்டவன்; இஹலோகத்துப் பலன்களாகிய க்ஷேத்ரபுத்ர களத்ராதிகளையும் ஸ்வர்க்க லோகத்துப் பலன்களையும் விரும்புவார்க்கு அளிக்க வல்லவன்; இதற்குறுப்பாக ஸர்வ சக்தியுக்தன்; தான் விரும்பின வ்யக்திகளைப் பரமபதத்திலே கொண்டு வைக்க வல்லவன்; கையிலே திருவாழி கொண்டு வியாபரிக்குந் திறத்தினால் எதிரிகட்கு யமன் போன்றவன்; சிறந்த நீலமணி மயமான பர்வதம்போன்ற வடிவையுடையவன்; திருநின்றவூரிலே முத்துத் திரள் போலே தாபஹரமான வடிவுகொண் டெழுந்தருளியிருப்பவன்; ஸ்பர்சத்தாலே பரமஸுகமளிக்குங் காற்றுப்போலே விரும்பத் தகுந்தவன்; தண்ணீர்போலே உயிர்தரிப்பதற்கு ஹேதுவாயுள்ளவன்; ஆக இப்படிப்பட்ட பெருமானைத் திருக் கண்ணமங்கையிற் காணப்பெற்றே னென்றவாயிற்று.

இமயத்து ளெம்பீசனை—கீழ் முதற்பத்தில் இரண்டாந் திருமொழியில் மங்களாசாஸநஞ் செய்யப்பெற்ற எம்பெருமான். ஆற்றல்—சக்தி. கூற்று—யமன். குருமாமணி—'குரு' என்னும் வடசொல் குரு எனத்திரிந்தது. 'குருமாமணி' யென்று ஸ்ரீகௌஸ்துப மணியை வ்யவஹரிப்பது முண்டு; "குருமாமணிப் பூண்குலாவித்திகழுந் திருமார்வு" என்றார் பெரியாழ்வார்.

காற்றினை, புனலை—பஞ்சபூதங்களுள் காற்றையும் நீரையுஞ் சொன்னது மற்ற பூதங்களுக்கும் உபலக்ஷணமாகி, பஞ்ச பூதங்களுக்கும் அந்தர்யாமியா யிருக்கும்படியைச் சொல்லிற்றாகவுமாம். .... (௫)

துப்பனைத் துரங்கம்படச் சீறிய
தோன்றலைச் சுடர்வான்கலன் பெய்ததோர்
செப்பினை * திருமங்கை மணாளனைத் தேவனைத்
திகழும் பவளத்தொளி
யொப்பனை* உலகேழினை யூழியை
ஆழியேந்திய கையனை அந்தணர்
கற்பினை * கழுநீர்மலரும்வயல்
கண்ணமங்கையுட் கண்டுகொண்டேனே. (௬)

துப்பனை	ஸாமர்த்யமுடையவனும்
துரங்கம்	குதிரைவடிவாய்வந்த அஸுரனை
பட	அழியும்படி
சீறிய	சீற்றங்கொண்ட
தோன்றலை	பெருமையிற்சிறந்தவனும்
சுடர் வான கலன் பெய்தது	ஒளி பொருந்திய சிறந்த ஆபரணங்களை இட்டு வைப்பதற்கு உரிய
ஓர் செப்பினை	ஒரு கரண்டகம் போன்றவனும்
திருமங்கை மணாளனை	திருமகள் கொழுநனும்
தேவனை	அத்திருமகளுடைய சேர்த்தியால் விளங்குபவனும்
திகழும் பவளத்து ஒளி ஒப்பனை	விளங்குகின்ற பவழங்களின் ஒளியை ஒத்திருப்பவனும்
உலகு ஏழினை	ஏழுலகங்கட்கும் நியாமகனும்
ஊழியை	காலமாய் நிற்பவனும்
ஆழி ஏந்திய கையனை	சக்கரமேந்திய திருக்கையை யுடையவனும்
அந்தணர் கற்பினை	அந்தணர்களின் கல்விக்கு விஷயமாயிருப்பவனுமான எம்பிரானை
கழுநீர் மலரும் வயல்	செங்கழுநீர்ப்பூக்கள் மலரப்பெற்ற வயல்களையுடைத்தான

கண்ணமங்கையுள் கண்டுகொண்டேன்—.

* * *—[துப்பன்.] துப்பு உடையவன் துப்பன்; துப்பாவது நினைத்தபடி செய்து தலைக்கட்டிக் கொள்ளவல்ல ஸாமர்த்தியம்; எம்பெருமானுடைய ஸத்யஸங்கல்பத்வத்தைச் சொன்னபடி. துரங்கம்—வடசொல்; விசையாக நடப்பதென்று குதிரைக்குக் காரணப்பெயர். கம்ஸனா லேவப்பட்ட அசுரர்களில் ஒருவனான கேசியென்பவன் குதிரை யுருவங் கொண்டு ஆயர்களுக்கெல்லாம் மிக்க பயங்கரனாய்க் கனைத்துக் கொண்டு கண்ணபிரான்மேற் பாய்ந்துவர, அப்பெருமான் தன் திருக்கையை நன்றாகப் பெருக்கி நீட்டி அதன் வாயிற் கொடுத்துத் தாக்கிப் பற்களை யுதிர்த்து உதட்டைப் பிளந்து அதனுடம்பையும் இருபிளவாக வகிர்ந்து தள்ளினனென்ற வரலாறு காண்க.

சுடர்வான் கலன்பெய்ததோர் செப்பினை = ஒளிமிக்க சிறந்த திருவாபரணமிட்டு வைக்கும் செப்பு என்னலாம் எம்பெருமானை. "செங்கமலக் கழலில் சிற்றிதழ்போல் விரலில் சேர்திகழாழிகளுங் கிண்கிணியும் அரையில், தங்கிய பொன்வடமும் தாள நன்மாதுளையின் பூவொடு பொன்மணியும் மோதிரமுங் கிறியும், மங்கல வைம்படையுந் தோள்வளையுங் குழையும் மகரமும் வாளிகளும் சுட்டியும்" என்னுந் திருவாபரணங்கள் சேர்மை பெறுமிடமென்கை. அன்றியே, 'சுடர்வான்கலன்' என்று பிராட்டியாகிற திருவாபரணத்தைச் சொல்லிற்றாகவுமாம்; இதற்கு விவரணம் 'திருமங்கை மணாளனை' என்றது. 'தேவனை' என்றதற்கு—"பிராட்டியுந் தானுமான சேர்த்தியிலே உண்டான ஒற்றுமஞ்சளும் செம்பஞ்சிக் குழம்பும் மாளிகைச் சாந்தின் நாற்றமுமாய்க் கொண்டு திருமேனியில் புகர்தோன்ற நின்ற நிலை" என்று பெரியவாச்சான் பிள்ளை அருளிச் செய்த வியாக்கியான வாக்கியம் ரஸிக்கத்தக்கது.

அந்தணர் கற்பினை = 'கற்பு' என்று நீதி நெறிக்கும் கல்விக்கும் பெயர்.

திருத்தனைத் திசைநான்முகன் தந்தையைத்
தேவதேவனை மூவரில் முன்னிய
விருத்தனை * விளங்குஞ் சுடர்ச்சோதியை
விண்ணை மண்ணினைக் கண்ணுதல் கூடிய
அருத்தனை * அரியைப் பரிகீறிய
வப்பனை அப்பி லாரழலாய்நின்ற
கருத்தனை * களிவண்டறையும் பொழில்
கண்ணமங்கையுட் கண்டுகொண்டேனே. (எ)

திருத்தனை	எப்போதும் பூர்ணத்ருப்தி யுள்ளவனும்
திசை நான்முகன் தந்தையை	சதுர்முகப்ரஹ்மாவுக்கு ஜநகனும்
தேவதேவனை	தேவாதி தேவனும்
மூவரில்	('அரி அயன் அரன்' என்று சொல்லப்படுகிற) மும்மூர்த்திகளுள்
முன்னிய	முற்பட்டிருக்கிற
விருத்தனை	தலைவனும்
விளங்கும் சுடர் சோதியை	விளங்குகின்ற தேஜோமயமான திவ்யமங்கள விக்ரஹத்தை யுடையவனும்
விண்ணை	மேலுலகங்கட்கு நியாமகனும்
மண்ணினை	மண்ணுலகுக்கு நியாமகனும்
கண்ணுதல் கூடிய அருத்தனை	நெற்றிக்கண்ணனான சிவன் கூடப்பெற்ற (தனது திருமேனியிற்) பாதி பாகத்தையுடையவனும்
அரியை	ஹரியென்னுந் திருநாமமுடையவனும்
பரி கீறிய அப்பனை	குதிரையாய்வந்த அஸுரனைக் கிழித்த உபகாரகனும்
அப்பில் ஆர் அழல் ஆய் நின்ற கருத்தனை	நீரிலுள்ள படபாக்நியானது ஜலமெல்லாம் தன்னிடத்தே வந்து கவரும்படியிருக்குமா போலே ஸகலபதார்த்தங்களும் தன்னிடத்தே வந்து லயிக்கும்படி யிருக்கிற முழுமுதற்கர்த்தாவுமான எம்பெருமானை
களி வண்டு அறையும் பொழில்	களித்த வண்டுகள் இசை பாடுஞ் சோலைகளையுடைய
கண்ணமங்கையுள், கண்டுகொண்டேன் —.	

* * *—'த்ருப்த:' என்னும் வடசொல் 'திருத்தன்' எனத் திரிந்தது. அவாப்த ஸமஸ்த காமனுகையாலே எப்போதும் திருப்தியையுடையவன் என்றபடி. திசை நான்முகன் தந்தையை = இவ்வருகுண்டான உலகங்களைப் படைப்பதற்காகப் பிரமனைத் தோன்றுவித்தவனென்கை. 'திசைமுகன்' என்றாவது 'நான்முகன்' என்றாவது பிரயோகிக்கவேண்டியிருக்க, 'திசை நான்முகன்' என்றது தமிழ் வழக்கு. 'வ்ருத்த:' என்னும் வடசொல் விருத்தன் எனத் திரிந்தது.

கண்ணுதல் கூடியவருத்தன் = நுதல்—நெற்றி; நெற்றியிற் கண்ணை

யுடையவன் ருத்ரன்; அவன் கூடிய அர்த்தசரீரத்தை யுடையவன். அரி—ஹரி. பரி—குதிரை; கேசி யென்னு மசுரன்.

அப்பில் ஆரழலாய் நின்ற=அப்பு—ஜலம்; (வடசொல்.) ஜலத்திலுள்ள ஆரழல்—படபாக்நி; அது ஜலாம்சமெல்லாம் தன்னிடத்திலே வந்து சுவறும் படி யிருக்குமாபோலே ஸகல பதார்த்தங்களும் தன் பக்கலிலே வந்து லயிக்கும் படி யிருக்கிறவன் என்கை. 'கர்த்தா' என்னும் வட சொல் 'கருத்தன்' எனத் திரிந்தது. .... (எ)

வெஞ்சினக்களிற்றை விளங்காய்வீழக்
கன்று வீசிய வீசனை * பேய்மகள்
துஞ்ச நஞ்சு சுவைத்துண்ட தோன்றலைத்
தோன்றல் வாளரக்கன் கெடத் தோன்றிய
நஞ்சினை * அமுதத்தினை நாதனை
நச்சுவாருச்சிமேல் நிற்கும் நம்பியை *
கஞ்சனைத்துஞ்ச வஞ்சித்த வஞ்சனைக்
கண்ணமங்கையுட் கண்டுகொண்டேனே. (அ)

வெம் சினம் களிற்றை	கொடிய கோபத்தையுடைய மதயானை போன்றவனும்	தோன்றல் வாள் அரக்கன் கெட	(இலங்கைக்கு) அரசனாய் வாட்படையையுடைய னான இராவணன் மாளும்படி
விளங்காய் வீழ	(அஸுரனாவேசித்த) விளா மரத்தின் காய்கள் உதிர்ந்து விழும்படி	தோன்றிய	திருவவதரித்த
கன்று	(அஸுரனானவொரு) கன்றை	நஞ்சினை	விஷம்போன்றவனும்,
வீசிய	தூக்கியெறிந்த	அமுதத்தினை	(அன்பர்க்கு) ஆராவமுதமாயிருப்பவனும்
ஈசனை	ஸ்வாமியும்	நாதனை	ஸர்வசேஷியாயிருப்பவனும்
பேய் மகள்	(பூதனையென்னும்) பேய்ச்சியானவள்	நச்சுவார் உச்சி மேல் நிற்கும் நம்பியை	தன்னை ஆசைப்படுமவர்களின் தலைமீது நிற்கின்ற பரிபூர்ணனும்
துஞ்ச	முடியும்படி	கஞ்சனை துஞ்ச வஞ்சித்த வஞ்சனை	கம்ஸன் முடியும்படி அவனை வஞ்சித்த வஞ்சகனுமான பெருமானை
நஞ்சு	(அவள் முலையில் தடவியிருந்த) விஷத்தை	கண்ணமங்கையுள் கண்டு கொண்டேன்—	
சுவைத்து உண்ட	ருசிபார்த்து (உயிருடன்) சுவர்ந்த		
தோன்றலை	இளமகனும்,		

* * *—வெஞ்சினக் களிற்றை=மிக்க கோபங்கொண்ட மதயானை போன்றவன் எம்பெருமான் என்கிறார்; அடியவர்கள் பக்கல் எம்பெருமானுக்கு அநுக்ரஹம் இருக்கவேண்டியது போல, எதிரிகள் பேரில் நிக்ரஹம் இருக்க வேண்டியதும் ஆவச்யகமாதலால் அதனை அநுஸந்திக்கிறபடி. ஆச்ரித விரோதிகள் திறத்தில் வெஞ்சினக்களிறு போன்றவனென்க.

[விளங்காய் இத்யாதி.] முள்ளைக்கொண்டே முள்ளைக்களைவது போல, வத்ஸாஸுரனைக் கொண்டு கபித்தாஸுரன்மேல் வீசியெறிந்து இருவரையும் ஒன்று சேர முடித்தவன்; பூதனையானவள் மாளும்படி அவளுடைய முலைத் தடத்து நஞ்சை உறிஞ்சியுண்ட மதலை; நானே அரசனென்று மார்பு நெறித்திருந்த இராவணனுக்கு விஷம்போல் தோன்றினவன்; விபீஷணாழ்வான் போல்வார்க்கு அமுதமாயிருப்பவன்; தன்னை விரும்பு மன்பர்க்குச் சென்னிக்கு மலர்ந்த பூவாயிருப்பவன்; கம்ஸனுடைய தீய புத்தியை அவன்றன்னோடே போக்கி, உகவாதாரோடு செவ்வை யழியப் பரிமாறுமவன்; ஆக இப்படிப் பட்டவனைத் திருக்கண்ணமங்கையிற் கண்டேனென்றதாயிற்று.

தோன்றல்—சிறுபிள்ளையும் பெருவீரனும். 'நச்சுவாருச்சிமேல்' என்றவிடத்து உச்சியைச் சொன்னது மற்றும் அவயவங்களெல்லாவற்றுக்கும் உபலக்ஷணம்; திருவாய்மொழியில் (I-9) "இவையுமவையு முவையும்" என்ற திருவாய்மொழியில் "என்னுடைச் சூழலுளானே—என்னருகலிலானே—என்னொக்கலையானே—என்னெஞ்சினுளானே—என்னுடைத் தோளிணையானே—என்னுடை நாவினுளானே—என் கண்ணினுளானே—என் னெற்றியுளானே—என்னுச்சியுளானே" என்றவை காண்க. .... (அ)

பண்ணினைப் பண்ணில்நின்றதோர் பான்மையைப்
பாலுள்நெய்யினை மாலுருவாய்நின்ற
விண்ணினை * விளங்குஞ்சுடர்ச் சோதியை
வேள்வியை விளக்கின் னொளிதன்னை *
மண்ணினை மலையை யலைநீரினை
மாலைமாமதியை மறையோர்தங்கள்
கண்ணினை * கண்களாரளவும்நின்று
கண்ணமங்கையுட் கண்டுகொண்டேனே. (கூ)

பண்ணினை	ஸங்கீதம்போல் இனியனானவனும்	விளக்கின் ஒளி தன்னை	விளக்கொளிபோலே ஸ்வயம் ப்ரகாசனும்
பண்ணில் நின்றது ஓர் பான்மையை	அந்த ஸங்கீதத்தின் ஸாரமான தன்மைபோன்ற தன்மையையுடையவனும்	மண்ணினை	பூமிபோலே எல்லாவற்றையும் பொறுத்திருப்பவனும்
பாலுள் நெய்யினை	பாலினுள்ளே நெய் மறைந்திருப்பது போல எங்கும் மறைந்துறைகின்றவனும்	மலையை	மலைபோல் ஒருவராலும் அசைக்கவொண்ணாதவனும்
மால் உரு ஆய் நின்ற விண்ணினை	மிக்க பரப்பையுடைத்தான நித்ய விபூதிக்கு நாதனும்	அலை நீரினை	தண்ணீர்போலே வேண்டுமிடங்களுக்கு வருவித்துக் கொள்ளவுரியவனும்
விளங்கும் சுடர் சோதியை	விளங்குகின்ற பரஞ்சோதிமயமான திருமேனியையுடையவனும்	மாலை	அடியவரிடத்து வ்யாமோஹமே வடிவு கொண்டிருப்பவனும்
வேள்வியை	யாகஸ்வரூபியும்		

மா மதியை	சிறந்த புத்தியை யளிப்பவனும்
மறையோர் தங்கள் கண்ணினை	வைதிகர்களுக்குக் கண் போன்றிருப்பவனுமான பெருமானை
கண்கள் ஆரளவும் நின்று	கண்கள் த்ருப்தி பெறுமளவும் நின்று
கண்ணமங்கையுள் கண்டு கொண்டேன்—.	

* * *—பண்ணினை = "पशुर्वेत्ति शिशुर्वेत्ति वेत्ति गानरसं फणी—பசுர் வேத்தி சிசுர் வேத்தி வேத்தி காநரஸம் பணீ" [ஸங்கீதத்தின் இனிமையை நாற்கால் விலங்கு அறியும், குழந்தை அறியும், பாம்பு அறியும்] என்கிறபடியே பண் அனைவர்க்கும் ஸ்ப்ருஹணீயமாயிருப்பது போல எம்பெருமானும் விரும்பத்தக்கவன் என்றபடி. **[பண்ணில் நின்றதோர் பான்மையை]** 'பண்ணினை' என்று கீழ்ச் சொன்னதன் கருத்தே இதற்குமாயினும் எம்பெருமானுடைய போக்யதையைப் பண்ணியுரைக்கிறபடி. இதில் புநருக்தி தோஷம் புகாது.

[பாலுள் நெய்யினை.] 1 "கறந்த பாலுள் நெய்யேபோல் இவற்றுளெங்கும்" என்கிறபடியே பாலினுள்ளே உறைந்திருக்கும் நெய்போலே * கரந்த சிலிடந்தொறுமிடந்திகழ் பொருடொறுங் கரந்தெங்கும் பரந்துளன் என்கை. **[மாவுருவாய் நின்ற விண்ணினை.]** நித்ய விபூதி நிர்வாஹகனாயிருக்குமவனென்கை. 'மாவுருவாய் நின்ற' என்றது விண்ணுக்கு விசேஷணம்; பரமபதமானது த்ரிபாத்விபூதி யென்னப்படும்; "पादोऽस्य विश्वा भूतानि त्रिपादस्यामृतं दिवि." என்கிற புருஷஸூக்தத்தின்படியே இந்த விபூதியில் எல்லா பூதங்களும் இவனுக்கு நாலத்தொன்று என்னும்படி அற்பமாயிருக்கும்; பரமாகாசத்தில் அவனுடைய நித்யமான விபூதி த்ரிபாத் என்னும்படி மும்மடங்காயிருக்கும்; ஆக இந்தப் பரப்பைத் தெரிவிக்கும் இவ்விசேஷணம். **[விளங்கும் சுடர்ச் சோதியை.]** அங்கே அளவற்ற தேஜோரூபமான திவ்யமங்கள விக்ரஹத்தையுடையனாய் நிற்பவன். **[வேள்வியை.]** யஜ்ஞஸ்வரூபி; ஸகல கருமங்களாலும் ஆராதிக்கப்படுமவனென்றவாறு. **[விளக்கினொளிதன்னை.]** விளக்கொளியானது தன்னைத்தானே பிரகாசிப்பித்துக் கொண்டு பிறவற்றையும் பிரகாசப்படுத்துமா போலே ஸ்வபர ப்ரகாசகன்.

[மண்ணினை.] பூமியானது 'ஸர்வம்ஸஹா' என்ற பெயர்க்கு ஏற்ப எல்லாவற்றையும் பொறுத்திருப்பது போல, செய்தார் செய்த குற்றங்களையெல்லாம் பொறுப்பவனென்கை.

[மலையை.] இப்படிப்பட்ட தன் ஸ்வபாவம் ஒருவரால் சலிப்பிக்கவொண்ணாமே உறுதிகொண்டிருப்பவனென்கை. **[அலைநீரினை.]** பள்ளமான விடங்களிலே பாயுமே தண்ணீர்; குஹப்பெருமாள், விதுரர், மாலாகாரர் போல்வாரிடத்தும் பாயுந்தண்ணீர் எம்பெருமான். **[மால்.]** அன்பரிடத்தில் வ்யாமோஹமே வடிவாயிருப்பவன்.

---

1. திருவாய்மொழி 8-5-10.

[மாமதியை.] "தேஷாம் ஸததயுக்தாநாம் பஜதாம் ப்ரீதிபூர்வகம் । ததாமி புத்தியோகம்தம் யேந மாமுபயாந்திதே" என்று கீதையில் தானேசோதி வாய்திறந் தருளிச்செய்தபடியே, தன்னைப் பெறுதற் குறுப்பான சிறந்த புத்தியைத் தந்தருள்பவனென்கை; மதி—புத்தி; வடசொல். [மறையோர் தங்கள் கண்ணினை.] வைதிகர்களுடைய கண் வேறெங்கும் பட்டி புகாமல் தன்னையே இலக்காகக் கொண்டிருக்கும்படி எப்போதும் அவர்களது கண்ணைவிட்டுப் பிரியாதவனென்றவாறு. இப்படிப்பட்ட பெருமானைக் கண்ணாரக்கண்டு கொண்டேன் கண்ணமங்கையி லென்கிறார். .... (கூ)

கண்ணமங்கையுட் கண்டுகொண்டேனென்று
காதலாற் கலிகன்றி யுரைசெய்த *
வண்ணவொண்டமி ழொன்பதோ டொன்றிவை
வல்லராயுரைப்பார் மதியந்தவழ் *
விண்ணில் விண்ணவராய மகிழ்வெய்துவர்
மெய்ம்மைசொல்லில் வெண்சங்கமொன்றேந்திய
கண்ண! * நின்றனக்குங் குறிப்பாகில்
கற்கலாங் கவியின்பொருள்தானே. (கூo)

கலிகன்றி	திருமங்கையாழ்வார்
கண்ணமங்கையுள் கண்டு கொண்டேன் என்று	'திருக்கண்ண மங்கையில் (எம்பெருமானை) ஸேவிக்கப்பெற்றேன்' என்று
காதலால் உரை செய்த	அன்புடனருளிச்செய்த
வண்ணம் ஒண் தமிழ் ஒன்பதோடு ஒன்று இவை	இசையையுடைத்தாய் அழகியதான இத்தமிழ்ப் பாசுரங்கள் பத்தையும்
வல்லர் ஆய் உரைப்பார்	நிபுணராய்ச் சொல்லுமவர்கள்
மதியம் தவழ் விண்ணில்	சந்திரன் தவழப்பெற்ற மேலுலகங்களில்
விண்ணவர் ஆய்	தேவர்களாகி
மகிழ்வு எய்துவர்	(போகங்களையநுபவித்து) ஆநந்தமடைவர்கள்;
மெய்ம்மை சொல்லில்	உண்மையாகச் சொல்லப் புகுந்தால்,
வெண் சங்கம் ஒன்று ஏந்திய கண்ண	வெண்ணிறமாய் விலக்ஷணமான ஸ்ரீபாஞ்சஜந்யத்தைத் தரித்துள்ள பெருமானே!
குறிப்பு ஆகில்	திருவுள்ளமாயின்
கவியின் பொருள்	இப்பாசுரங்களின் பொருள்
நின் தனக்கும் கற்கலாம்	(ஸர்வஜ்ஞனான) உனக்கும் கேட்டுணரத்தக்கதாகும்.

(சென்று)

* * *—நலமந்த மில்லதோர் நாடாகிய திருநாட்டிற் சென்று காண வேண்டிய பரம புருஷனை இந்நிலத்தில்தானே திருக்கண்ணமங்கையில் காணப்பெற்றேனென்று அபிநிவேசத்தோடே ஆழ்வாரருளிச்செய்த இத்திருமொழியை நன்கு ஓதியுணருமவர்கள் விண்ணுலகத்தில் தேவர்களாய் விளங்கி மகிழ்வர்கள் என்று பயனுரைத்து, அவ்வளவோடே தலைக்கட்ட மாட்டாமல் எம்பெருமானை நோக்கி ஒரு வார்த்தை யருளிச்செய்கிறார் ஈற்றடியில்; எம்பெரு

மானே! உனக்கும் இதிலே ஆதரமுண்டாகில் எனக்கு சிஷ்யனாயிருந்து கற்க வேண்டுங்காண் என்கிறார். இத்திருமொழியின் இனிமையைக் கண்டவாறே எம்பெருமானாரும் "கலயாமி கலித்வம்ஸம்" என்று தனியன் தொடங்கி அநுஸந்தித்து அதிகரிக்கப் புகுவன் என்று காட்டினவாறு. அவ்வளவு சீரிய பொருள் குடிகொண்டதாம் இத்திருமொழி. சொல்லின்பமும் பொருளின்பமும் எம்பெருமானையும் வணங்கப்பண்ணுமென்க.

"ஸ்வதஸ் ஸர்வஜ்ஞனென்று இருமாந்திருந்தால் போகாது; என்பாடே அதிகரிக்கில் அறியலாம்" என்றும், "ஒரு வஸிஷ்டன்பாடே ஸாந்தீபிநிபாடே தாழநின்று அதிகரிக்கக்கடவ அவனுக்குத் திருமங்கையாழ்வார்பாடே அதிகரிக்கை தாழ்வோ?" என்றுமுள்ள வியாக்கியான ஸ்ரீஸூக்திகள் இங்கு அறியத்தக்கன. ராமாவதாரத்தில் வஸிஷ்ட சிஷ்யனென்றும், க்ருஷ்ணாவதாரத்தில் ஸாந்தீபிநி சிஷ்யனென்றும் பேர் பெற்ற பெருமானுக்கு அர்ச்சாவதாரத்தில் பரகால சிஷ்யனென்று பெயர் பெறுகை பெருமையே யாமென்கை.

ஈற்றடியில் 'நீ கற்கலாம்' என்றும் பாடமுண்டு. .... (கo)

அடிவரவு:—பெரு, மெய், எங்கள், பேய், ஏற்றின், தப்பன், திருத்தன், வெஞ்சினப் பண், கண்ணமங்கை, சிலை.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

பெருமாள்கோயில் பிரதிவாதிபயங்கரம்
அண்ணங்கராசாரியர் ஸ்வாமி அருளிச்செய்த
திவ்யப்ரபந்த திவ்யார்த்த தீபிகையில்
பெரிய திருமொழி
ஏழாம்பத்து முற்றிற்று.

ஜீயர் திருவடிகளே சரணம்.